உ

சுந்தரகணேசர் துணை.

காமேந்திரன், ஞானலோசனி.

இஃது

மதுரைமாநகரம்

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ

கந்தசாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

முதற்பதிப்பு.

M. P. R. குருநாத நாயுடு அவர்களால்,

சென்னை:

கிச்சினர் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

Registered Copy Right.

இதன்விலை ரூ. 1.] [Price Rs. 1.

FIRST EDITION 1000 COPIES
Printed at The Kitchner Press, Madras.

இந்தப் புஸ்தகம் வேண்டுமானவர்கள் அடியிற் குறிப்பித்திருக்கும் எனது மேல்விலாசத்திற்கு எழுதினால் வி.பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

இப்படிக்கு:

M. P. R. குருநாத நாயுடு,

நெம்பர் 22, பெருமாமுதலி தெருவு, கொண்டிதோப்பு

தங்கசாலை போஸ்டு,

மதராஸ்.

உ

சுந்தரகணேஸர் துணை.

காமேந்திரன், ஞானவிலாசனி.

REGISTRAR OF ... 21 SEP 1909 MADRAS

முதல் வாலியம்.] [First Valum.

Act 1. **Scone 1.**

இடம். காஸ்மீகர் தேசம்.

கதாநாயகர்.

இராஜன்.	கமலாகரன்.
இராணி.	காந்திமதி.
மந்திரி.	கருணைகரன்.
இராஜகுமாரன்.	காமேந்திரன்.

குடிகள், சேவகர், வேடர், வில்லியர்.

சீருலாவிய பரதகண்டத்திற் சிறப்புற்றோங்கும் கனகமெனபொன்னகர்புரந்திரனும் வியப்புறுந் தன்மையாய் சித்ரவிசித்திரமயமாய்த்துலங்கும் மாடமாளிகை கூட கோபுரம் தேவாலயமும் நிறைந்து இந்திரலோகமும் இதுவோவென் றிமையோராதியர் சிந்தைகளித்து சந்ததமும் வந்து விளையாடும் நந்தவனத்திற் கலங்காரமாய் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி செண்பகம், அல்லி அசோகு. கொன்றை மருவு, மகிழம், தாழை, தவனம், ரோஜா, மனோரஞ்சிதம், நந்தியாவட்டை, நாகலிங்கமாமலர்கள் புஷ்பித்திலகும் பூங்காவிற்கலங்காரமாய் ககனத்துலாவும் கந்தர்வஸ்திரீகளனைவரும் சிந்தைகளித்து சந்ததம் வந்து ஸ்நானபான நேமநிஷ்டைபுரிந்து பகவத்பக்தியானந்தம் புரிதற்கிசைந்த தாமரைப்பொய்கையும் வசந்தமண்டபமும் பொருந்தியவற்றிற்கலங்காரமாய் விளங்கும், மா, பலா, ஆல், அரசு, வில்வம் சந்தனமரமுதலாகிய பலவித விருக்ஷங்களின் கிளைகளில் வசித்துலாவும், மயில், குயில், காடை, கவுதாரி, மயினா, மேகை, வல்லூறு, மணிப்புறா, மாடப்புறாமுதலாகிய பறவை இனங்கள் தத்தம்பேடுகளுடன் சுகித்துவிளையாடி மனோல்லாசமாய்க் களிகூர்ந்து தத்தம்

குரலொலி தொனிக்கிசைந்தபண் முதலாகிய பலவித ராகத்தாலும் பாடுமினிமையைச் செவிகுளிரக்கேட்டு மனமகிழும் நாயகனும் நாயகியும் சுகித்துவாழும் மாநகரெனமகிமையுறும் காஸ்மீகர் தேசத்தில் கமலாகர மஹாராஜனெனவன் அறிவிற்சிறந்தபெரியோர்சூழ்ந்து ஆசிகூறும் படியாய் கருணாகரமந்திரியுடனே நவரத்தின கசிதமயமாய்த்துலங்கும் சிம்மாசனத்தமர்ந்து காத்திற் செங்கோலேந்தி துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனனாய்க் குடிகண்மீது கருணைவாய்ந்து சிற்றரசர்திறை செலுத்த தீரவீரப்ராகாசமாய் அரசுரிமைபுரிந்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தனன்.

இங்ஙனம் நிற்க, மஹாராணியாகிய காந்திமதியானவள் தனக்கு மைந்தனில்லாமனக்கவலையால் சிந்தை மெலிந்து சந்ததமும் மனவிசாரமாயிருக்கையில் ஓர் நாள் அரசனாகிய கமலாகரன் கொலுகலைந்த பிறகு அரண்மனையைவிடுத்து மாளிகையிற் சென்றுமனைவியின் மனவிசாரத்தையுணர்ந்து விசாரிப்பதாயினன்.

கமலாகரன்:—காதலி! எத்ததியும் வாடாத தாமரை கமலம்போற் பிரகாசம் பொருந்திய நின் திருவதனமித்தகி யாது காரணத்தால்பருதியின் வெப்பத்தாற் தீய்த்துலர்ந்தசரமெனவாடியிருக்கின்றனவென்று எனதுளம்பலவிதமாய்ச் சிந்திப்பதாயின. ஆதலின் நின்மனக்குறையாதோ விவரமாய் புகல்வாய்.

காந்திமதி:—பிராணேஸா! நமக்கு பகவத்கிருபாவீக்ஷண்யத்தினால் யாதொருகுறைவுமிலதெனினும்நமது சந்ததி பெருகமைந்தனில்லாமனக்கவலையே சந்ததமும்மனதை வருத்துகின்றன.

என, மனவிசாரமாய்ப் புகன்றவையுணர்ந்த கமலாகரமஹாராஜன் யாதொன்றும் புகல்வதற்கு நாவெழாமல் மனைவியுடனே சமாதானமாய்ச்சற்றுநேரம் பாஷித்துக்கொண்டிருந்து அந்திப்பொழுதானவுடனே அந்திக்கடனாகிய, சந்தியாவந்தன ஜபதபமுதலியவை முடித்துக்கொண்டு போஜனசாலையிற்சென்று அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜன மருந்திதாதிகளாற் சிங்காரித்திருக்கும் மலரணை மஞ்சத்திற் சயனித்திருந்து அருணோதயமான பிறகு நித்திரை தெளிந்தெழுந்து காலைக்கடனைமுடித்து நந்தவனத்திற்சென்று தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானபானநேமநிஷ்டை முடித்துக்கொண்டு பலகாரபக்ஷணம் புசித்துக்கலைதெளிந்து ஆடைஆபரண சிங்காரலங்கிர்தனாய் நவரத்னகசிதமயமாய்த்துலங்கும சிரோரத்னமணி

மகுடம் சிரசிற்சூடி செங்கோற்கரத்தேந்தி மந்திரி பிரதானியருடன்
சிம்மாசனத்தமர்ந்து தேசவிசாரணைபுரியும்போது தனது மனையாள்
புகன்றவாக்கியத்தை மனதில் நினைந்து மஹாவருத்தத்துடன் சிம்
மாசனத்தின்மீது சாய்ந்தனன். அரசன் மனக்குறிப்புணர்ந்த அமை
ச்சனாகிய கருணாகரன் வியப்புற்று மன்னர்மன்னனாகிய நமது அரச
னுக்கு இக்கதி யாது மனவருத்த மெய்தியதோ விசாரிப்போமென
மனதிலெண்ணியவனாய் வினவுதலாயினன்.

கருணாகரன்:—அரசே! இதென்ன விபரீதம்? இருந்தாற் போலிருந்து
யாது காரணத்தினால் நிலைபிறழ்ந்து சிம்மாசனத்தின்மீது சாய்
ந்திடலாயினீர்?

கமலாகரன்:—மதியிற் சிறந்த மந்திரி மாநிலம்புரக்கும் மன்னருக்கு
யாதொருகுறைவுமில்லெனப் பூதலத்தோர் புகன்றிடினும் எத்
தகையோர்க்கும் ஒவ்வொருமனக்குறை நேர்ந்து சஞ்சலப்படு
த்துகின்றனவன்றோ?

கருணாகரன்;—ஆம்! அதற்கென்னசந்தேகமா அரசே! உலகில் ஜனி
த்திடில் சுகதுக்க மிரண்டும் சமமாயனுபவிப்பது உலகியல்
பதானென்றிடினும் தமக்குயாதுமனவருத்த மெய்தியதோ?
வென வியப்புறுவதாயினேன். அவற்றை யான் நன்குணர விபர
மாய்ப்புகல்வீர்.

கமலாகரன்:—மந்திரி! உலகிற் ஜனித்தமாந்தரில் யாதுமொரு மனித
னாய்ப் பிறந்து அவனியைப் புரக்கும் அரசனாயிருந்திடினும்
மைந்தனில்லா மனக்குறையே பெரிதாய் மனதை வருத்துகி
ன்றன. என்றாலும் எனக்குப்பின் இந்நகரினைப் பரிபாலனஞ்
செய்வதற்கு மகப்பேறிலாத காரணத்தைக் குறித்து விசனப்படு
கிறேன்.

கருணாகரன்:—அரசே இவ்விஷயத்திற்கு தாங்கள் விசனமுறாதீர்.
யாவும் சிவன்செயலாகையால் கானிற்சென்று தபம் புரிவீ
ரேல் பரமசிவத்தின் கிருபையால் மைந்தன்வரம்பெறுவீர். இவ்
விதமே மிருகண்டேயரும் மனையாளுடன் ஆரண்யமணுகி
அகோரதபம் புரிந்து சிவானுக்கிரகத்தினால் புத்திரசந்தான
வரப்பிரசாதம் பெற்றனர். அன்றியும் புத்திரபாக்கியமிலாதோர்
க்கு சொர்க்கபதவியில்லையென்றும் சாஸ்த்திரபுராணங்களிலும்
முறையிடுகின்றன. ஆதலின், தாங்களும் புத்திரசந்தான வரப்

பிரசாதம் பெறுவதற்கு முயற்சியெடுத்துக்கொள்வதே நலமாகும். என, அரசனும் மந்திரியும்பாஷித்துக்கொண்டிருக்கையில் அருகிலிருந்த சபாரஞ்சிதன் திடீரென்றெழுந்து அரசனையும் மந்திரியையும் பணிந்து சொல்வதாயினன்.

சபாரஞ்சிதன்:—ஐயா! [illegible]தன் மந்திரியே தாங்கள் சகல சாஸ்திரபுராண [illegible]நான் முறையனைத்தும் வாசித்துணர்ந்து முதன்மந்திரியாயிருப்பதினால் தமக்கு யாவும் நன்றாய்த் தெரிந்தவிஷயந்தானென்றிடினும் பிள்ளையில்லாதோர்க்கு சொர்க்கபதவிகிடையாதென்று புகன்றீரே இதை யோசித்திடில் எனக்குக் கிஞ்சிற்று சிரிப்புவருகிறது சரி! அவ்விதமானால் திருவண்ணாமலை யெனும் சிவஸ்தலதேசத்தைப் பரிபாலனஞ் செய்திருந்த வல்லாளமகாராஜனானவன் புண்ணியாத்மாவோ? அன்றி, அஸ்திநாபுரியைபரிபாலனஞ்செய்துக் கொண்டிருந்த திருதராஷ்ட்டிரன் புண்ணியாத்மாவோ?

கருணாகரன்:—அப்பா! சபாரஞ்சிதா? நீ சொல்வதெல்லாம் ஓர் விததமாஷாயிருந்திடினும் உன்னிடத்தில் சம்பாஷித்து ஜெயிப்பதற்குமுடியாதுதானென்றிடினும் நீ வினவியபடியே தெரிவிக்கிறேன் கவனிப்பீர். அஃதெவ்விதமெனின் வல்லாளமஹாராஜனே புண்ணியாத்மாவாகும். திருதராஷ்டிரனை மாத்திரம் புண்ணியாத்மாவெனசொல்வதற்கியலாது.

சபாரஞ்சிதன்:—அஃதேனையா? திருதராஷ்டிரனை அவ்விதமாய் இழிபடுத்தியும், வல்லாளமஹாராஜனை மாத்திரம் மிகவும் புண்ணியாத்மாவென உயர்த்தியும் பேசுகிறீர்.

கருணாகரன்:—ஏனையா! சபாரஞ்சிதரே இது தெரியாதா? அறியாதவர்போல்கேட்கின்றீரே.

சபாரஞ்சிதன்:—மந்திரியாரே! தாங்கள் தெரிவிப்பது ஒவ்வொன்றும் முரணாயிருக்கின்றதே. தெரியாத ஆசாமிகளின் சந்தேகம்நிவர்த்தியாவது எவ்விதம்?

கருணாகரன்:—ஐயா! சபாரஞ்சிதரேயான்சொல்வதில்முரணுண்டென மொழிகின்றீரே. யான் அவ்விதமாய் யாதுரைத்தேன்?

சபாரஞ்சிதன்:—முன்புதாங்கள் புகன்றவையின்படியே கவனித்திடில் யார் புண்யாத்மாவென்றிடின், புத்திரபாக்யம்பெற்றவர்தானெ

ன்றீரே அதை அவ்விதமே சாஸ்விதப்படுத்தவேறுமன்றி, மறுபடியும் மாற்றுதல், ஏமாற்றுந்தன்மையன்றோ? அஃதெவ்விதமெனின் யாதொன்றையும் புகல்வதெனின் ஆழ்ந்தரகஸ்யமனைத்துங்கவனித்து முன்பின்பிறழாமல் சாஸ்விதமாய்யாவரும்நம்புவதற்கிசைந்த விதமாயிருக்கவேண்டும், அஃதன்றி. இருவாய்க்கொள்ளியிலகப்பட்ட எறும்பைப்போன்ற சந்தேகத்தைத்துணைவகித்து முன்பின்யோசியாமல் முறட்டுதனமாய்ப்பேசி இருட்டுவழிவழியிற்செல்லும் குருட்டுபார்வையாய் பேசத்தகுமோ? முன்னம் தெரிவித்ததுபோற் பின்னை வல்லாளமகாராஜனே புண்ணியாத்மாவென்றும் திருதராஷ்டிரனைமாத்திரம் புண்ணியர்த்மா அல்லவென்றும் பாஷிப்பதுநீதிக்குவிரோதமன்றோ.

கருணாகரன்:— சபாரஞ்சிதரே வல்லாள மஹாராஜன்யாதொருபற்றுதலின்றியவனாய் சிவத்யானமாயிருந்தவராகையால் அவர்புண்ணியாத்மாவென விளங்கும். திருதராஷ்டிரனோவெனின் காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கையெனும் அஷ்டவிததுர்க்குணத்திலும் சிறந்துபொய், கொலை களவு, காமமெனும் பஞ்சமாபாதகங்களிற்சிக்கிபொறாமையே தாய், கோபமே தந்தை, மனோகர்வமே மனையாள் துர்க்குணமேபுத்திரர்களாய் அகம்பாவம்மேவிட்டு அநேகவிதபாபகிர்த்தியம் புரிந்து தனது சகோதரனாகிய பாண்டுராஜன் பிள்ளைகளாகிய தருமன் வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவனெனும், ஐவரையும் தகப்பனில்லாபிள்ளையென்றும்பரிதாபமெண்ணாமல்கெடுப்பதற்கு முயன்று பலவித கெடுதிவிளைத்த திருதராஷ்டிரனைபுண்ணியாத்மாவெனபுகல்வதற்காகுமா ஆகையால் வல்லாளமகாராஜனே புண்யாத்மாவாகும்,

சபாரஞ்சிதன்:—அரசே! நமது மந்திரிபுகல்வது தமது புத்திக்குச்சந்தேகமாயிருக்கின்றதல்லவா? யோசித்துரைப்பீர்.

கமலாகரன்:—ஆம்! இவற்றைக் கவனிக்கவோர்விதமுரணாகவே பிறக்கின்றன.

கருணாகரன்:—சபாரஞ்சிதரே நீர் சொல்வதென்ன விளையாட்டுவிஷயமாயிருக்கின்றனவே. உண்மையைப்புகன்றிடில்தானே விளங்கும், அஃதன்றி நின்மனதில் மறைந்து வைத்துக்கொண்டு பாஷிப்பது நீதிக்குவிரோதமன்றோ.

சபாரஞ்சிதன்:—மந்திரியாரே கோபித்துக்கொள்ளாதீர். முன்னம் தெரிவித்தது பிள்ளையில்லாதோர் பாவியென்றும் பிள்ளையையீன்றவர் புண்ணியாத்மாவென்றும் புகன்றீரே இவ்விரு வகுப்பார்களில், வல்லாளமஹாராஜனுக்கு ஓர்பிள்ளையும், ஜனித்திலர். திருதராஷ்டிரனுக்கு நூறுபிள்ளையும் ஓர் பெண்ணுமாய் பிறந்திருந்தனரே அவ்விதமிருக்க பிள்ளையில்லாதவல்லாளமஹாராஜனை புண்ணியாத்மாவென்றும் பிள்ளைகளைப்பெற்ற திருதராஷ்டிரனை பாபாத்மாவென்றும்புகல்வதெனின் ஆச்சரியகாரியமன்றோ? அவ்விதமே சம்மதித்திடினும் முன்னுரைத்ததற்கும் பின்னுரைத்தவை முரணாயிருக்கின்றதன்றோ?

என, சபாரஞ்சிதன் தமாஷாய்ப் புகன்றவையனைத்தும் வினவிய மந்திரிக்குயாதொன்றும் புகல்வதற்கும் நாவெழாமல் திகைத்திருக்கையில் சபாரஞ்சிதன் சிரித்துக்கொண்டு அரசே! நமதுமந்திரிசாஸ்திர புராணமனைத்தும்விசேஷமாய் வாசித்திருப்பவராகையால் அவருக்குத்தெரியாத ஆலோசனையாதொன்றுமில்லை என்றாலும் புத்திரரில்லாதோர்க்குச் சொர்க்கபதவியில்லையென்பது உண்மையே ஆயினும் வல்லாளமஹாராஜன் சிவ பக்தரானபடியால் பகவானே அவர்க்குப்பிள்ளையாய் ஜனித்து உற்றுரிமை செய்வதாயினர். ஆகையால் மாநிலத்திற் ஜனித்த மாந்தர்கள் மைந்தரைப்பெற்று மனோல்லாசமாய் மனையாளுடன் இல்லறநீதி வழுவாமல் வாழ்ந்திருப்பதுதான் நலமாகுமென்று பலவித நியாய சாஸ்த்திர மனைத்தும் தெள்ளிதாய்ப் புகன்றனன். அச்சமயம் கமலாகரன் ஆலோசித்துச்சொல்வதாயினன்.

கமலாகரன்:—சபாரஞ்சிதா! நூறு பிள்ளைகளைப்பெற்றதிருதராஷ்டிரன் யாதுகாரணத்தினால் பாபாத்மாவாயிருந்தனன்.

சபாரஞ்சிதன்:—அரசே! "புண்ணிய பயிரிற் புண்ணியந்தெரியு" மென்பதுபோல் பெற்றோர்களின்பாபபுண்ணியம் பிள்ளைகளால் தெரியும்! அவ்விதமே, திருதராஷ்டிரன் முன்ஜனனத்திற் செய்த புண்ணியவசத்தினால் பிள்ளைகளைப் பெற்றும்அவனுடைய சஞ்சிதகர்மானுசாரத்தின்படியே பொறாமை குணத்திற் கியன்ற பிள்ளைகளாய்ப் பிறந்து பலவிதபாபகிர்த்தியங்களைப் புரிந்து பழிதேடிக்கொண்டனர், ஆகையால்.

வெண்பா.

சந்தனத்தைச்சார்தருவும் தக்கமணங்கமழும்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனம்
தானுமங்கச்சந்தனமும் தன்னினமுமாள்வதன்றி
தானும் கெடச் சுடுமேதான்.

என்னுந்தன்மையாய் துஷ்டபிள்ளைகளினால்திருதராஷ்டிரனுக்கும் கஷ்டமேவிளைந்தது. ஆகையால் எத்தனையமாந்தரும் பிள்ளைகளைப் பெற்றால் அறிவானந்தம் விளங்கும்படியாய் வித்தியாப்பியாசஞ் செய்து பாபவழியிற் செல்லாமற் காப்பாற்றினால் தாய்தந்தையர்க்கு நற்பேர்கிடைக்கும்படியாய்ப் புண்யாத்மாவாயிருப்பார்கள். ஆகையால், மாநிலத்திற் ஜனித்தவர்கள் மைந்தர்களை ஈன்று மனோல்லாசமாய் இல்லறமார்க்கத்தியல்பினை யநுசரித்து நடப்பதுதான் சிலாக்கியமாகும்.

என, சபாரஞ்சிதனென்பவன்தனது சமர்த்திற்கியன்ற விதமாய் சாஸ்த்திரபுராணமனைத்தும் இழுத்துப்போட்டு அரசன் ம[illegible]ப் பலவிதமாய் சிக்குப்படுத்திவிட்டதினால்கமலாகரராஜனுக்கு யா[illegible]தொன்றும் தோற்றாமல் மனமயக்கமுற்றவனாய் மைந்தனில்லாமற் சிக்[illegible] வருந்தியிருப்பதிலும் கானிற்சென்று பரமனை நோக்கி தபம்புரிந்தாயினும் புத்திரசந்தான வரப்பிரசாதம் பெற்றுவருவதே சிலாக்கியமென, மனந்துணிந்து ஓர் நாள் தனது மந்திரியைநோக்கி அறிவிற்சிறந்த அமைச்சா! யான்மனையாளுடன் வனத்திற்சென்று தபம்புரிந்தாயினும் மைந்தன் வரம்பெற்றுவருகிறேன். நீ இந்த செங்கோலக்கரத்திலேந்தி யான் வருகிறவரையினும் இந்நகரிற் கோர்பழுதுமின்றி துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனனாய் அரசுரிமைசெய்துக்கொண்டிருப்பாயென்று ஆக்ஞாபித்து, மாளிகையில் வந்து தனது பத்தினியிடம் உற்றவையனைத்தும் முற்றிலும் புகன்று, மாதே நாம் புத்திர பாக்கியம்பெறுதற்கு வனத்திற்சென்று, பரமனைநோக்கி தபம் புரிந்து, அருள்பெற்றுவருவோம் வருவாயென்க; அந்த உத்தமியும் அவ்விதமேநன்றெனச்சம்மதித்தனள். அப்பால் இருவரும் கா[illegible]வஸ்த்திரமணிந்து சந்நியாசிவேஷமாய் சதிபதியும் அரண்மனையை விடுத்து ஆரண்யமார்க்கமாய்ச்செல்வதாயினர்.

———

Scene 2.

இடம். ஆரண்யம்.

கதா நாயகர்.

கமலாகரன், காந்திமதி, ஞானேஸ்வரமுனிவர்

இங்ஙனம் இவ்விதமாய் கமலாகரனும், காந்திமதியும் மைந்தன் வரம் பெறவேணுமெனும் ஆசையினால் மாவனமணுகி தபஞ்செய்வதற்குத் தகுதியான ஸ்தலமெங்கனமிருக்கின்றதென வென்று தேடிக்கொண்டு போகையில் அம்மார்க்கமாய் ஓர் கிளைவழி தோன்றியது அவ்வழியாகவேசெல்கையில் ஓர் குகையினுட்சென்று இருள் சூழ்ந்திருப்பதைக் கண்ணுற்று ஈதென்ன ஆச்சரியமென நாற்புறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் மேற்றிசையில் ஓர்வித ஜோதியாற் பிரகாசந்தோற்றக்கண்டு மனமகிழ்ந்தவராய் அம்மார்க்கமே போய்க்கொண்டிருக்கையில் வழியிலெதிருற்றநந்தவனத்தை கண்டு அங்கிருக்கும் தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானயான நேமநிஷ்டை முடித்துக்கொண்டு அவ்வனத்தின் அலங்காரத்தைச் சுற்றிப்பார்த்துக் கொண்டுவருகையில் கமலாகரமஹாராஜன் தனது பத்தினியைப்பார்த்து, ஹே! காதலி! யாம் இந்த வனத்தின் தென்திசையை நாடிச்செல்வோமாகில் மஹான்களின் தரிசனம் கிடைக்கும் அவர்களால் தபம் புரியும் மார்க்கமின்னதென்றுங் கவனித்துக் கொள்வோமென பாஷித்துக் கொண்டே செல்கையில் சில ரிஷீஸ்வரர்களின் பன்னகசாலை தோற்றுக்கண்ணுற்றனர்.

ஆனால், அவர்களனைவரும் மஹா யோகீஸ்வரர்களானபடியால் மூடியகண் திறவாத மவுனநிலையிற்சிறந்த நிஷ்டையாளர் "களாயிருந்தனர். காந்திமதி தனது காதலனை நோக்கி பிராணேசா! யாம் இம்மஹான்களின் தரிசனம் காணப்பெற்றிடினும் இவர்களுடன்சம்பாஷித்துக்கொண்டிருப்பதற்கு முடியுமோ? இவர்களோவெனின் மூடினகண் திறவாத மூழ்கூடிவராய்த் தன்னைமறந்து தன்வளிற்கலந்துய்யும் சத்தஞானியாயிருக்கின்றனரே நாம் நாடிவந்தகாரியம் நிறைவேறுவதெவ்விதமென்று சொல்லிக்கொண்டிருக்கையில், அம்மார்க்கத்தில் ஞானேஸ்வர முனிவரெனும் ஓர் யோகீஸ்வரர் வருகலாயினர்.

அவ்வேளை அரசனும் ராணியும் பணிந்து சுவாமி! எமது மாதவப்பேற்றால் தரிசனந் தந்த திருவருளே எமது மனசஞ்சல மகற்றும் மார்க்கத்தைப் போதித்தல் வேண்டுமென பிரார்த்தித்தனர், அம்மஹான் அவ்விருவரையும் விசாரிப்பதாயினர்.

ஞானேஸ்வரமுனிவர்:—ஐயா! நீங்கள் யாவர்? நீர்வசிப்பது எந்நகர்! உம்மைக்காணில் இராஜவம்சத்தினர்போற் காண்கிறதே இத்தகையபயங்கரமான இருள் சூழ்ந்த கானகத்தில் யாதுகாரணமாய் வருகலாயினீர்?

கமலாகரன்:—சுவாமி! யாங்கள் வசிப்பது வடதேசம். யான்காஸ்மீகர தேசத்தைப் பரிபாலனஞ் செய்யும் கமலாகரராஜனாகும், எனது சந்ததிபெருக மைந்தனில்லாமனக்குறையை முன்னிட்டு வருத்தமுற்றவனாய் தபம்புரிதற்கு சதிபதியும்வனவாசியாய் வருகலாயினேம்,

ஞானேஸ்வர முனிவர்:—அரசே! உலகின்மாக்க ளுய்யுமாறு பரமன் கிருபாவீக்ஷண்யத்தினால் பிரமன் சிருஷ்டிக்கவும் விஷ்ணு காப்பாற்றவும், ருத்திரன் சம்மாரஞ்செய்யவுமிருக்கின்றனரே. அவ்விதமிருக்க மனிதனாகிய நீ என் வீணெண்ணத்தினுழன்று பரிதவிக்கின்றனை? யாவும் ஆண்டவன் செயலாகும்.

கமலாகரன்:—சுவாமி! யாவும் ஆண்டவன் செயலெனப்புகன்றதுண்மையேயெனினும் பகவானுக்கு கருணாகரரென்றும், தயாநிதியெனவும் பெயரமைந்திருக்க அவர் வஞ்சனைசெய்வது நீதியோவெனசந்தேகிக்கின்றேன்.

ஞானேஸ்வர முனிவர்:—அரசே! நீர்பாஷிப்பது வேதரகஸ்யமுணராமல் தர்க்கபிரசங்கஞ்செய்யும் அறிவீனரைப்போன்றிருக்கின்றன. அஃதெவ்விதமெனின், பகவானுக்குத் தயாநிதியெனபெயரமைந்திருக்கின்றனவே. அவர் சகல ஆன்மாக்களையும் சமமாய்ப் பார்ப்பதன்றி வஞ்சனை செய்வாரோ?

கமலாகரன்:—சரி! அவ்விதமாயின் அசத்தமனத்தினராகிய துஷ்டரும், வயற்று சோற்றுக்கேவனவாசியாயினும் வறுமையாளரும், அநேகபிள்ளைகளையின்றுபலவிதகஷ்டமடைந்துழலவும் யான்

உலகமெல்லாம் ஒருகுடையிலாளும் மஹாராஜனைப் யாதொரு வறுமையிலும் சிக்காமல் சுகஜீவனைச் சத்தமனைப் பகவத் பக்தியானந்தமாயிருக்கும் எனது சந்ததி பெருகுதற்கு மைந் தனின்றியவனைப் மரம்போற் சஞ்சலமெய்தும்படியாய்ச் செய் திருக்கின்றனரே. இவையனைத்தும் வஞ்சனையன்றோ?

ஞானேஸ்வரமுனிவர்:—அரசே! மைந்தர்ஜனிப்பதும் மனையாள் வாய்ப் பதும் அவரவர் செய்த ஊழ்வினையின்படியன்றி ஆண்டவனால் வாய்ந்தனவையல்ல.

கமலாகரன்:—சுவாமி! ஆலதும், அழிவதும் ஆண்டவன் செயலாயிரு க்க ஊழ்வினையெவ்விதமாய் சேர்ந்தன.

ஞானேஸ்வரமுனிவர்:—அரசே! பகவான் உலகினைப்படைத்து ஜீவர் களையும் சிருஷ்டித்து அவரவர்கட்கிசைந்த அறிவையுங்கொடுத் திருக்கின்றனர். ஆனால்ஜீவர்கள்மமதையின்மேலீட்டால்அகம் பாவத்திலுழன்று பழிபாபத்தைத் தேடிக்கொள்கின்றனர். அதனை அனுபவிக்கும் பொருட்டு மறுஜனனத்திற் புரிந்தஊழ் வினைப்பயனாகிய பிராரத்வகர்மானுசாரத்தைச் சஞ்சிதத்திலனு பவிப்பதுமாயிருக்கின்றனர். அவற்றிற்கிசைந்தபடியேமுன்ஜன னத்தில்தம்மைப்போன்றமனிதரிடத்திற்கடன்பட்டுக்கொடுக்க ச்சக்தியற்றவராய்ஏமாற்றி இறப்பவரேமறுஜனனத்தில்சரீரமெ டுத்து தமக்குகொடுத்தவர்களாகிய கடனாளிகளையெல்லாம்மக வாய்ப்பெற்றுமனமகிழ்ந்திடினும் மர்மரகஸ்யமுணராமல் தாம் முன்ஜனனத்திற்பட்டகடனாகியதிரவியங்களையெல்லாம்சஞ்சித த்திற்கஷ்டப்பட்டுகொடுக்கின்றனர். ஆனால்முன்ஜனனத்தில்யா தொரு கடன்படாதவனிடம் எவனும் பிள்ளையாய்ப்பிறந்து வசூலித்துக்கொள்வதற்கியலாது. இதற்குத் திருஷ்டாந்தமெ வ்விதமெனின் ஒருவன் வாலிபத்தில் அநேகரிடத்தில் கடன் பட்டு கொடுக்கச்சக்தியற்றவனாயிருந்திடில் கடன்கொடுத்தவர் கள் அடிக்கடி அவன் வீட்டில் வந்து, கொஞ்சங்கொஞ்சமாய் வசூலித்துக் கொண்டுபோவாரல்லவோ? அத்தன்மையாகவே ஜீவர்கள் பிராரத்வகர்மானுசாரவிதிப்படியே கடன்படுவாரா கில் வசூலித்துக்கொள்வதற்காக மைந்தர்கள் ஜனித்து மர்மமு

ணராதவராய் கடனை வசூலித்துக்கொண்டு போவார்கள். ஆகையால் முன்ஜனனத்திற் பழிபாபத்திற்சிக்கியாதொருவரிடமும் கடன்படாதவர்களிடம் யாதொருவனும் மைந்தனுய் ஜனித்து கடனைவசூலிக்கமுடியாது, அவ்விதமிருந்திடினும் புத்திர பாக்கியம்பெறுவது சிலாக்கியமே யாகும், "மனைக்கழகு மக்கட்பெருமை" என்பதற்கிசைந்தவிதமாய் புத்திரசந்தானம் பெறுவதே இல்லறத்திற் கிசைந்த நன்மையாகும்.

என அவ்வனத்தில் படர்ந்திருக்கும் ஓர் மூலிகையைப்பிடுங்கி தமது உள்ளங்கையிற் கசக்கி அரசனையும் இராணியையும் அருந்தச்செய்து, இனி உமது தேசத்திற் சென்று மைந்தரையீன்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பீரென ஆசீர்வதித்துவிட்டுத் தமது வாசஸ்த்தானத்திற்குப்போய்விட்டனர், கமலாகராஜன் தபசியின் அனுக்கிரகம் பெற்றுமனையாளுடனே தமது தேசத்தைநாடிவருகையில் வழியிலெதிருற்ற ஓர் சந்தனச்சோலையிற் சென்று சற்றுநேரம் இளைப்பாறுதலாயிருந்தனர். அச்சமயம், அவர்கள் அமர்ந்திருக்கும் விருக்ஷத்தின் அருகிலிருக்கும் ஆலவிருக்ஷத்திலிருந்த காக்கைகூண்டில் ஓர் குயில் முட்டையிட்டுபோயிருந்ததனல் அந்த கூண்டிலிருந்த காகம் அதனைகவனியாமல் தனது முட்டைதானென்ன தீர்மானித்து தனது முட்டையுடனே குயில் முட்டையையும் அவயங்காத்து பொரித்துவிட்டு இரைதேட போனபோது குயிற்குஞ்சு ஜிவ்வென்றெகிரிபறந்துபோய்விட்டது. இதனைக்கண்ணுற்ற இராணிகலகலவென சிரித்தனள். அரசன்திகைத்து பெண்ணே ஈதென்ன ஆச்சரியம்? நீ இருந்தாற்போலிருந்து நகைத்ததைகவனிக்கில் எனக்கே கலவரமாயிருக்கின்றனவே இஃதுண்மையாதோ? யான்நன்குணர விபரமாய்ப்புகல்வாயெனவினவுதலும் மஹாராணிபுகல்வதாயினள்.

காந்திமதி:—பிராணேஸ்வரா! இந்தக் காக்கைகூண்டிலிருந்து பறந்து போயிற்றே அதென்ன பக்ஷிதெரியுமா?

கமலாகரன்:—இதுதானே ஓர் அதிசயம் குயிற்பறவைதனது முட்டையைக்காகத்தின் கூண்டில் வைத்துவிட்டுப் போனதினால் மர்ம

மூணாராதகாகம் தனது முட்டைதானென அவயங்காத்த்தினல் குயிற்பறவையின்குஞ்சுவெளியானது இது ஓர் ஆச்சரியமா?

காந்திமதி:—பிராணபதி ! உலகியல்பு இவ்விதமே இருக்கின்றன. அவற்றை கவனிக்கில் ஆச்சரியந்தானே.

கமலாகரன்:—பெண்ணே ! ஜீவர்களின்மனது பலவிதமேயாகும். அவரவர்களின்மனத்தோற்றத்தை அந்நியருணர்வதற் கியலாது தான், என்றாலும் நீயினைத்தவிசேஷத்தின் காரணமென்னமோ யான் நன்குணா விபரமாய்ப்புகல்வாய்? அன்றியும், குயிற்பறவைக்கும் மனிதர்கட்கும் என்னசம்மந்தம்?

காந்திமதி:—நாயகா ! காகம் தனது முட்டைதானென குயிற்பறவை குஞ்சைபொரித்து வெளியானவுடனே, அது ஜிவ்வென்றெகிறி தனது இனத்துடன் போய்ச் சேர்ந்துக்கொண்டது போலவே உலகின் மாந்தர் வெகுபிரயாசையுடன் புத்திரனையீன்று வளர்த்திடினும் அவர்கள் வாலிபதிசையில் தாய்தந்தையரை விட்டுப்பிரிந்து போகின்றார்களல்லவா? அவற்றைகவனித்த எனக்கு பெருநகைப்புண்டாகியது.

என, தனது மணாளனுடன் பாவித்து கொண்டு சதிபதி யிருவருமாய்ப்புறப்பட்டு தமது தேசத்தை நாடிவருகலாயினர். இங்ஙனம் இவர்கள்நிலை இவ்விதமாயிருக்கையில், காஸ்மீகர்தேசத்தில் மிருகங்களதிகரித்து குடிகளிட்ட பயிரை அழித்துக்கொண்டு பலவிததுன்பம் விளைவித்துக் கொண்டிருக்கையில் நகரவாசிகளனைவரும் மனமிரண்டு அரண்மனையிற் சென்று அங்ஙனமிருக்கும் மந்திரிபிரதானியரைப்பார்த்து ஐயா ! நமது அரசன் கானிற்கேகியநாள் முதலாய் வனவிலங்கினங்களாகிய புலி,சிறுத்தை, கரடி,முயல் மான் கடம்பை, ஏனம் முதலாகிய மிருகக் கூட்டங்களனைத்தும் விசேஷித்து யாங்களிட்ட பயிர்களனைத்தும் அழித்து விடுவதுமன்றி,சிலசமயம் நகரிற்பிரவேசித்து வழிப்போக்கரையும் அதஞ் செய்கின்றன

வென்று, முறையிடுவதைக்கேள்வியுற்ற மந்திரி,பிரதானியர் குடிகளனைவரையும் அஞ்சாதீரென, தைரியம்புகன்று அவ்ரவரிருப்பிடமனுப்பிவிட்டு,தலையாரிகளால் வேட வில்லியரைவரவழைத்து யாவரும் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டுவனத்திற் சென்று வேட வில்லியர்களால் காட்டைக்கலைத்து நாற்புறமும் அஸ்திரங்களை பிரயோகிப்பதாயினர். இந்த ஆரவாரத்தினால்மிருகங்களெல்லாம்வீறிட்டுக்கொண்டுகானகமெங்கணும்சிதறியோடின. அச்சயம்சேனாவீரர்களனைவரும் முனைந்து நின்று, மிருகங்களையெல்லாம் கொன்றுவிட்டு,யாவரும் மனோல்லாசமாய்ப் புறப்பட்டு அரண்மனைக்குவருகையில் வழியிலெதிருற்ற ஓர்க[illegible]த்தைக் கண்ணுற்று அங்ஙனம்கூடாரமடித்துசேனைகளனைவரும் தாம்வேட்டையாடிக்கொண்டுவந்த மான்,கடம்பை. முயல் முதலாகிய மிருகங்களின் இறைச்சிகளனைத்தும் சமைத்து நாவிற்கினிய நல்லுணவாதிகளுடன் வனபோஜனம்புசித்து யாவரும் சந்தோஷமாயிருக்கையில்,அம்மார்க்கமேவந்த கமலாகரராஜனும்,காந்திமதியும்பார்த்து இவர்கள்யாவரோவென சந்தேகித்தவராய்ச் செலவதாயினர். ஆனால் அந்தக்கூட்டத்திலிருந்த மந்திரிபிரதானியரனைவரும் தமது அரசன் வருகையைக்கவனித்து அவர்களருகிற் சென்று பணிந்தனர். அரசனும் ராணியும் அவர்களை ஆசீர்வதித்து வந்த காரியமென்னவென்று விசாரித்தனர். மந்திரி நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்புகன்றனர். அரசன்மனமகிழ்ந்து அன்றையதினம் தமது சேனாவீரருடனிருந்து மறுதினம் யாவரையும் அழைத்துக் கொண்டு தமதுதேசத்தை நாடிச் செல்வதாயினர்.

Scene 3.

இடம். அரண்மனை.

கதாநாயகர்.

கமலாகரன், மந்திரி, ஜோதிடன், தோழிகள், காமேந்திரன்,

கமலாகரமஹாராஜனானவன் தனது பத்தினிசகிதமாய் சேனாவீரருடனே அரண்மனையில் வந்தனன். நகரவாசிகளனைவரும் அன்றையதினத்தை பெருநாளாகிய திருநாளாய மதித்து வெகு ஆடம்பரத்துடன் நகரமுழுதும் சிங்காரித்து வீதி யெங்கணும் புராண ப்ரசங்கம், ஆட்டகச்சேரி, பாட்டகச்சேரி முதலாகியவை நடாத்தி அரசன் மனமகிழச்செய்தனர். இத்தியாதி வைபவக்கண்காக்ஷியனைத்துங் கவனித்த கமலாகர மஹாராஜன் சந்தோஷமடைந்தவனாயிருந்தனன், தபசியின் அனுக்கிரகத்தினால் தமது சந்ததிபெருக மைந்தன் வரம்கிடைத்தனவென இராஜனும் இராணியும் மனமகிழ்ந்திருக்கும் சமயத்தில் இராணியாகிய காந்திமதி கர்ப்பவதியாயினள். அரண்மனையிலுள்ளோரனைவரும் ஆனந்தசாகரத்தில் மூழ்கியவராய்ச் சந்தோஷமடைந்திருந்தனர். காந்திமதி தசமதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் பூர்ணச்சந்திரோதயம்போன்ற ஆண்குழந்தையை ஈன்றனள். இச்சுபசெய்தியை அருகிலிருந்த தாதியர்கள் கண்ணுற்று அரண்மனையிற்சென்று அரசனிடந் தெரிவித்தனர். மன்னன் மனக்களிப்புற்று மந்திரியினால் நகரவாசிகளுக்குச் சர்க்கரை வழங்கச்செய்து ஆதுலர், அந்தணர், யாசகர் முதலாகியவர்களனைவருக்கும் தான தர்மபரோபகாரம்புரிந்து மனோல்லாசமாயிருந்தனர்.

இராஜ ஸ்திரீகள் குழந்தைக்கும் தாய்க்கும் மங்களஸ்நானஞ் செய்வித்தனர். மஹாராணியாகிய காந்திமதிபுத்திரனை அரசன் கரத்திற்கொடுத்துப் பணிந்தனள். மன்னன் மனக்களிப்படைந்தவனாய்க் குழந்தையைக் கரத்திலேந்தி எனது சந்ததி பெருகவந்துதித்தசெல்வக்களஞ்சியமேயென சிந்தைமகிழ்ந்து அருகிலிருந்த மந்திரியினால் ஜோதிடகணிதவல்லோனை வரவழைத்து மைந்தன் ஜாதகங் கணிப்பியென்றுக்ஞாபித்தனன்.

ஜோதிடன்:—அரசே! உமது மைந்தன் ஜனித்தஜாதகவிலக்ஷண இரா
சிலக்கின குறிப்பின்படியே கவனிக்கில் காமேந்திரனெனபெய
ரமைந்தன. லக்கினபலன் வெகுமேன்மையுற்றவைதானென்றி
டினும் பலவிதமான கஷ்டக்லேசத்திற்சிக்கியவனுய்வெகுவித
துயருற்று கெட்டுப்பிழைத்த சங்கதியாய்த் தட்டுகெட்டுத்தடு
மாறி ஆரண்யவாசியாய்யலைந்தும் சகல தேசசஞ்சாரியாய் திரி
ந்து ஓர் அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த கன்னியுடனே
இந்நகரத்தில் வருவான். ஆனல், இவன் தனது இருபத்திரண்
டாம் வயதில் ஓர் மாயராக்ஷதனைவென்று ஜெயம்பெறுவான்.
இவனுக்கு வயது [illegible]றிருபது, பதினறுவயதிலிருந்து நித்ய
கண்டம் பூர்ணயுசைனும் வாழ்வானந்தமாயிருப்பான், என்
றாலும், யாதொரு வியாதியிலும் சிக்கித்துயருமல், வறுமையா
ற்கலைத் திளைத்து கஷ்டஜீவனயிருப்பான். இருபத்துமூன்றும்
வயதிலிருந்து இராஜராஜாக்கள் பூஜிதம்பெறும் மஹாராஜனு
யிருப்பான்.

கமலாகரன்:—ஐயா! [illegible]திடகணித வல்லோரே யாதொருகுறைவு
மில்லாத இந்தகாஸ்மீகர்தேசத்தைப் பரிபாலனஞ் செய்யும்
எனது மைந்தனுக்கு வறுமைபிடித்துத்துயருறச்செய்யு மெனி
ன்நம்பத்தக்கதோ? நீர்கணித்த ஜோதிடம் பொய்யென்றெண்
ணுகிறேன்,

ஜோதிடன்:—அ[illegible]! அவ்விதமாய் நினையாதீர்! யாதாமொருவருக்
கும் ஜாதகமும் பொய்யாது தலையெழுத்தும் தப்பாது என்
னும் தன்மையாய் ஜீவர்களின் பிராரத்வகர்மானுசாரத்தினல்
சஞ்சிதத்திற் சரீரமெடுத்து சுகதுக்கமனுபவிப்பது உலகியல்பா
யமையும். அன்றியும், நவக்கிரகங்களில் ஒருவராகிய வியாழ
னென்னும் குருவானவர் ஜநகர்கட்கு ஆகாத இடங்களில் இரு
ந்தபடியினல் வீராதிவீராகிய வெகுபேர் கஷ்டநிஷ்டூரமடை
ந்தனர். சிலர் பிராணனைவிடுத்தனர். உலகமெங்கும் படியளக்
கும் ஜகராக்ஷகனகிய ஈஸ்வரனும யாசித்துண்டனர். இவ்வித
மெல்லாம் சாஸ்திரபுராணங்களிலும் முறையிடுகின்றனவே. தா
ங்களிதைத்கவனிக்காமல் ஜோதிடத்தைப் பொய்யென்றுரைப்
பது தகுதியோ அஃதெவ்விதமெனின்.

ஜோதிடன்சொல்வது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஜென்மராமர் வனத்திலே சீதையைச்சிறைவைத்ததும்.
 தீதிலாதொருமூன்றிலே துரியோதனன் படைமாண்டதும்
தன்மபுத்திரர்நாலிலேவனவாசமப்படிபோனதும்
 சத்யமாபெலியாறிலே யிருக்கிலே தளைபூண்டதும்
இன்மையெட்டினில்வாலிபட்டமிழந்துபோம்படியானதும்
 ஈசனொருபத்திலே தலையோட்டிலே இரந்துண்டதும்
வன்மையற்றிட ராவணன்முடி பன்னிரெண்டினில் வீழ்ந்ததும்
 மன்னுமாகுருசாரிமாமனைவாழ்விலாததுமென்பதே.

என்னுந்தன்மையாய் நவக்கிரகங்களி லொருவராகியகுருவானவர் "ஸ்ரீராமருக்குஜென்மத்திலும் துரியோதிரனுக்கு மூன்றுமிடத்திலும், தர்மபுத்திரனுக்கு நாலாமிடத்திலும், மாபெலிச்சக்ரவர்த்திக்கு ஆறுமிடத்திலும், வாலிக்கு எட்டாமிடத்திலும், ஈஸ்வரனுக்கு பத்தாமிடத்திலும், இராவணனுக்கு பனிரண்டாமிடத்திலும்" இருந்தபடியினால் அநேகவிதகஷ்டநிஷ்டூரமடை[illegible]னர். அச்சமயம் அவர்கள் தமது சமர்த்தினால் தப்பித்துக்கொள்ளாமல் அனுபவித்தினரல்லவோ! அவர்களின் பெருமையைச்சொல்லும்போதேகேட்பவர் ஆனந்தமெய்தும் சாபானுக்கிரசாமார்த்திய முடையவர்களாச்சுதே. அவர்களேதமது தலையெழுத்தின் ஜாதகத்தையனுசரித்து தத்தளித்தனரே அவ்விதமிருக்க மனிதர்களால் ஜாதகத்தைமாற்றமுடியுமோ?

கமலாகரன்:—ஐயா ஜோதிடரே! தாங்கள் புகன்ற விதமேகவனிக்கில் ஆச்சரியமாகவே விளங்குகின்றன அதைவிபரமாய்ப்புகல்வீர்.

ஜோதிடன்:—மஹாப்ரபு தமது இஷ்டப்படியே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர். ஸ்ரீராமசந்திரர் சீதையை மணந்து மிதிலையைவிடுத்து அயோத்தியாபுரிக்குச் சென்றபிறகு இவருடைய ஜாதகபலனுக்கிசைந்த கோட்சாரத்திற்கிணங்க ஜன்மத்தில் குருவிருந்தபடியினால் மந்தரையென்னுங் கூனியானவள் கைகேசியின் மனதைக் கலைத்து வீண்கலகமூட்டி ஸ்ரீராமசந்திரன்மீது வீண்பழிசுமத்தியதால் தனது தாய் தந்தை சுற்றத்தாரையும் பிரிந்து மனைவியுடனே வனவாசியாய்ச்சென்றனர். அச்சமயம் சூர்ப்பநகையின் தூண்டுதலினால் இராவணனானவன் மாரீசனை மாயமானாக அனுப்பி இராமலக்ஷ்மணர் தனித்திருக்கும் தருணம் சீதை

யை எடுத்துக்கொண்டுபோய் இலங்கையிற் சிறைவைத்திருந்தனன். அச்சமயம் வானரவீரனாகிய வாலியின் ஜாதகபலனுக்கிசைந்த கோட்சாரத்திற்கிணங்க எட்டாமிடத்தில் குருவிருந்ததினால் சீதையைத்தேடிக் கொண்டுவந்த ஸ்ரீராமலக்ஷ்மணரை சுக்கிரீபன் துணைவகித்து வாலியினிடம் மல்யுத்தம்செய்யுந்தருணம் ஸ்ரீராமச்சந்திரன் அஸ்திரத்தினால் வாலி உயிர்விடுத்தனன், அப்பால் வானரவீரர்களனைவரும் ஸ்ரீராமக்குத்துணையாய்ச்சென்று கடலில் அணைகட்டி இலங்கையிற்போய் வளைத்துக்கொண்டனர். அச்சமயம் இராவணேஸ்வரனுடையஜாதகபலனுக்கிசைந்த கோட்சாரத்திற்கிணங்க பனிரெண்டாமிடத்தில் குருவிருந்தபடியினால் தனது புத்திர மித்திர களத்திராதியருடன் இராமபாணத்தாலிறந்தனன். அப்பால் ஸ்ரீராமர்தனது பத்தினியாகிய சீதையை அழைத்துக்கொண்டு அயோத்தியிற் சென்று சிம்மாசனத்திலமர்ந்து அரசுரிமைபுரிவதாயினர்.

கமலாகரராஜன்:—சரி! இவையனைத்தும் உண்மையே. தரும புத்திரனுக்கு துயர்நேர்ந்தகாரணமென்ன?

ஜோதிடன்:—அரசே! தருமபுத்திரனுடைய ஜாதகபலனுக்கிசைந்த கோட்சாரத்திற்கிணங்க நாலாமிடத்தில் குருவிருந்தபடியினால் தனது தம்பிமாருடனே பத்தினிசகிதமாய் அஸ்தினபுரியிற் சென்று சகுனியுடனே சூதாடி நாடுநகரமனைத்தும் தோற்று வனவாசியாய்ப் போயலைந்து வந்தனர். அச்சமயம் துரியோதிரனுக்கு மூன்றாமிடத்தில் குருவிருந்தபடியினால் தனது சேனை சைனியங்களுடன் தானும் பஞ்சபாண்டவருடன் சண்டை செய்துமடிந்தனர்.

கமலாகரன்:—ஐயா! ஜோதிடரே தாங்கள் புகன்றதை கவனிக்கில் விதியை விலக்க எவராலும் முடியாதென்பது உண்மையாகும், ஆனால் மாபெலிச்சக்கிரவர்த்திக்கு துயர்நேர்ந்தகாரணமென்னவிதமோ? தெரிவிப்பீர்.

ஜோதிடன்:—அரசே! மூன்று லோகத்திலும் தானொருவனே ஏகச்சக்ரேஸ்வரனாய் அரசாக்ஷிசெய்து வந்த மாபெலிச்சக்ரவர்த்தியின் ஜாதகபலனுக்கிசைந்த கோட்சாரபலனுக்கிணங்க குரு ஆறுமிடத்திலிருந்த சமயத்தில் மஹாவிஷ்ணுவானவர் வாமனனெனும் பெயரமைந்த பிராமணவேஷமாய்வந்து பிக்ஷாந்தேகி

யென தனதிருகாறுமேந்தி யாசித்தனர். அச்சமத்தில் மாபெலிச்சக்கிரவர்த்தியின் காலவித்தியாசத்திற்கிணங்கிய கிரகசாரபலனும் சரியாய்வந்தொத்துக்கொண்டமையால் "இரப்போர்க்கீவது உடையோர்கடனென" யாசித்த வாமன பிராமணனுக்கு மூன்றடி நிலம் தானமாய்த் தந்தேனென்று தாரைவார்த்துக் கொடுக்கவே அவர் விஸ்வரூபங்கொண்டு ஆகாயமளாவிநின்று ஓரடியால் பூமியையும் மற்றோரடியால் ஆகாயத்தையும் அளந்துகொண்டு, இன்னோரடி எங்கேயென்று கேட்கவே அடியேன் சிரசுதானென்று குனிந்தனன், அந்த அடியை மாபெலிச்சக்ரவர்த்தியின் சிரசின்மேல் வைத்து அழுத்தி பாதாளத்திலிறக்கி அங்ஙனமே சதா சுகோபாயிருக்கக்கடவதென்றுக்ஞாபித்தனர். இவ்விதமே அநேக வீராதிவீரர்களெல்லாம் கிரகசாரத்தின் கெடுதியால் பலவிததுன்பமநுபவித்தனரே தாங்கள் ஜோதிடத்தைப் பொய் யென்றெண்ணலாமோ?

என, ஜோதிடகணிதவல்லோன் சாஸ்திர புராணமனைத்தும் இழுத்துப்போட்டு அரசன் மனதைச்சிக்குப்படுத்தியதனால், பதிலொன்றும் புகல்வதற்கியலாமல் ஜோதிடனுக்கு தக்ஷிணை தாம்பூலம் கொடுத்தனுப்பிவிட்டு, புத்திரனுக்கு முத்தமிட்டு சித்தமகிழ்ந்து தனது பத்தினிகரத்திற்றந்தனன், அந்த உத்தம மைந்தன் மீது ஆவலுற்றவளாய்பாலூட்டிச்சீராட்டி வெகுமேன்மையாய் வளர்த்துக்கொண்டிருந்தனள்.

இங்ஙனம், நிற்க, காமேந்திரன் கவழ்ந்து, தவழ்ந்து நடந்து நாளுக்குநாள் வெகு மேன்மையாய் வளர்ந்து வருகையில் தாய்தந்தையர் மனமகிழ்ந்து நவரத்னகசிதமயமாய்த்துலங்கும் ஆடையாபரணங்களாற் சிங்காரித்து மைந்தனென்னும் பாசத்தை சிந்தையில் வகித்து சந்தோஷித்திருக்கையில் காமேந்திரன் பெற்றோர் மனக்களிப்பெய்தும்படியாய், மதலைச்சொற்கள் பாஷித்துச்சிறுவர்களுடன் கூடி விளையாடிக்கொண்டிருக்கையில், ஐந்துவயதானவுடனே கமலாகரமஹாராஜன் தனது மைந்தனை வித்யாசாலையில் விடுத்தனன், காமேந்திரனும் ஆசிரியன் அருள்வாக்கின்படியே எழுத்து, அசை, சீர், தளை, இலக்கண இலக்கிய சாராம்சத்திற் கிணங்கிய கல்விநுட்பமனைத்தும் கவனித்துணர்ந்ததுமன்றி நான்குவேத ஆறு சாஸ்திர பதினெண்புராணமனைத்தும் தெள்ளிதாய்க்கற்றுணர்ந்து, ஆனை ஏற்றங் குதிரை ஏற்றமும் அஸ்திரபயிற்சியும், வேழமீதமர்ந்து, வெஞ்சமர்

புரியும் மார்க்கமும், அஸ்வமீதமர்ந்து அருஞ்சமர் புரியும்வித்தையும் கற்றுணர்ந்து நிடச்சித்தனுயிருக்கையில், ஓர் நாள். இவனுடைய சிநேகிதரிற்சிலர் இவனை சந்திந்து நேயா! யாம் இத்தினம் மனைவரு சமாய் கானிற் சென்று மிருகவேட்டையாடிவருவோம். வருகுவீ ரென்றழைந்தனர், காமேந்திரனும் சம்மதித்து தந்தையிடம்புகன்று அவராக்ஞையைவகித்து அவர் அனுமதியின்மேல் வருகிறேனென்ற னன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற சிநேகிதர் அவனைமறுத்து, இராஜபுத்ரர் தாங்கள் புகல்வது எவ்வாறுளதெனின் படைமுகத்தி ற்கஞ்சுகிறவன் பஞ்சாங்கங்கேட்கப்போவதுபோலிருக்கின்றனவே யாம் இன்றையபகல் முழுதும் வேட்டையாடி சாயங்காலம் வீட்டு க்கு வருவதற்காகவா உமது தந்தையைக்கேட்பது ஈதென்ன ஆச்சரியமென்னறர். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற காமேந்திரன் சிரித்து, நேயர்காள்! யான் கற்றுணர்ந்த வில்வித்தைக்கு யாதொரு வரும் நிகராக மாட்டார்கள் என்றாலும் தந்தைசொன்மிக்கமந்திர மில்லை யென்னும் தன்மையாய் பெற்ற தகப்பனிடம் உற்றவைபுக ன்று வெளிபுறப்படுதல் சிலாக்கிய மன்றி எத்தகையசுத்தவீரனுயிரு ந்திடினும் பெற்றோர்க்குத் தெரியாமல் புறப்படுவது நீதிக்குவிரோத மல்லவோ வெனபுகன்று, அவர்களை நோக்கி! யாம் நாளையதினம் போகலாம்இன்றையதினம். அவரவரிருப்பிடம்போவீரென்று அனு ப்பி விட்டு அரண்மனையில் வந்தனன். அச்சமயம் அற்பநேயர்கள் போய்விட்டனர். காமேந்திரன் வருகையைக் கண்ணுற்ற கமலாகர ராஜன் மனமகிழ்ந்து விசாரிப்பதாயினன்.

கமலாகரன்:—மைந்தா! இத்தினம்யாது விசேஷம்? ஓர்வித சந்தோ ஷமாய் வருகலாயின.

காமேந்திரன்:—தந்தையே! யான் நாளையதினம் எனது சிநேகிதருட னே வனவேட்டையாடி வரவேணுமென்று ஆவலுற்றேன். ஆயினும், தமது உத்திரவை எதிர்பார்க்கின்றேன். அருள்புரி வீர்.

கமலாகரன்:—மைந்தா! நீ சகல சாஸ்திரபுராண நூன்முறையனைத் துங்கவனித்துணர்ந்தவனுகையால் உனக்குயான் சொல்லவே ண்டியது அனுவசியமென்றாலும் யானுனக்கு சிலநன்மதிபுகட்டு தும் கவனிப்பாய் அஃதென்ன வெனின் நீபிறந்த ஜாதக லக்ஷ ணம் அவலக்ஷணமாய்க்காண்கிறது அஃதென்னவெனின் வறு

மையாளனாய் அலைந்து திகைப்பா யென்றிருப்பதனால் நீ என்னைவிட்டுப் பிரிய வேண்டாம்.

காமேந்திரன்:—தந்தையே! தாங்களெனக்குப் பலவிதமதியுரைத்திடினும் யான்கேட்கத் தக்கதன்றி,மறுப்பதற்கியலுமோ? ஆனால் உலகின் மாக்களுய்யுமாறு பகவான் ஜீவர்களைசிருஷ்டிக்கும் போதே அறிவையும்படைத்திருக்கின்றாரென்றாலும், முன்ஜனனத்தின் பிராரத்வகர்மானுசாரத்திற் கிணங்கசஞ்சிதத்திற் சரீரமெடுத்து பாபபுண்ணியத்தியல்பிற்கிசைந்த விதமாய் சுகாசுகமனுபவிக்கவேண்டுமென்றி நம்மாற்றடுக்கவசமோ? அவ்வாறிருக்க, தாங்க ளென்பீதித்தகைய சந்தேகமுற்றவராய் எனை இழிவுபடுத்திப் பேசுகிறீர். ஈதென்ன ஆச்சரியம்? அன்றியும் முன்ஜனனத்திற் பாபம் புரிந்தவர்கள் "மிகவும் ஏழையாயும் வயற்று சோற்றுக்கே வனவாசியாயலையும்" பாபிகள் வயற்றிற் ஜனித்துக் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறந்துழல்வர். புண்ணியசாலிகள் மாத்திரம் "பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியு" மென்னுந் தன்மையாய் தாங்கள் முன் ஜனனத்திற் புரிந்த நல்வினைக்கிசைந்த விதமாய் உலகமனைத்தும் ஓர் குடையிலாளும் புண்யாத்மாவாகிய அரசர்களின் வம்ஸத்திற்பிறந்து யாதொரு வறுமையிலும் சிக்காமல் சுகானந்தமாயிருப்பார்களல்லவோ? அவற்றிற்கிசைந்த விதமாய் யானும் உமது புத்திரனாய் ஜனித்தேன் அவ்விதமிருக்க யான் வறுமையாளனாய் அலைச்சற்படுவேனென்றிடினும் நம்பத்தக்கதோ?

சபாரஞ்சிதன்:—அப்பா! இராஜகுமாரா! யாதாமொருவரும் உலகிற் ஜனித்தபோதே "ஆலின் விழுதில் ஒட்டிக்கொண்டிருக்கும் வீரசேனன் மேலெழும்பினால் யானை கொல்லும் கீழிறங்கினால் பாம்பு கொல்லுமென்று பயந்து நடுங்கும்போது பிடித்த விழுதைக் கத்தரிக்கும் எலியை ஓட்டிக்கொண்டு புஜத்தின மீது வீழ்ந்த தேனை நக்கி மஹா இனிமையானதென மனமகிழ்வது போற் பின்னால் நேரிடுங்கெடுதியை நினையாமற் பாவிப்பது உலகியல்பாயமைந்தனவன்றி. ஆலோசித்துணர்ந்திடில் ஆழ்ந்தரகஸ்யமின்னதென் றுணர்வாய்.

காமேந்திரன்:—ஐயா! சபாரஞ்சிதரே! தாங்கள் சமயோசிதமாய் பாவிப்பது எத்தகையோரும் கலகலவென்று சிரித்துக்கொண்டிருக்கும் விதூஷகவார்த்தையா யிருப்பதற் கிசைந்தனவாய்,

சுலோகம்.

ககனே நவரத்னானி, க்ரகரத்னானி பாலக:
சயனே ஸ்திரீரத்னானி, சபாரத்னானி பண்டித:

என, கல்வியிற் சிறந்த கவிஞர்களாற் புகழ்ந்துரைப்ப அருகிலிருக்கும் விதூஷகன் அச்சமயமே எழுந்து துடைதட்டிக் கொண்டு ஈதென்ன ஆச்சரிமென்று?

விகட சுலோகம்.

ககனே காகரத்னானி, கிரகரத்னானி மூஷிக:
சயகனே மட்குணரத்னானி, சபாரத்னானி விதூஷக:

என்னும் விகட ச்லோகத்தை விமரிசையாய் பாஷிப்பதுபோற் புகன்றீரே ஈதென்ன வேடிக்கை நல்லதிருக்கட்டும், ஓர் மனிதன் எத்தகைய ஆபத்திற் சிக்கியவனாயிருந்திடிற் கீழிறங்கினால்பாம்புகடிக்கும் மேலெழும்பினால் யானை கொல்லுமென்று பயந்திருப்பான் அச்சமயம் புகத்தின்மீது விழுந்ததேனைநக்கி சந்தோஷப்படுவதேனின்கேட்போர் வியப்புறுந்தன்மைதானென்றிடினும் அவற்றையான்கவனிக்க ஆவலுற்றேன். ஆகையால்விவரித்துக்கூறுமின். என, காமேந்திரன் வினவியதைக் கேள்வியுற்ற சபாரஞ்சிதன்புகலலாயினன். இராஜகுமாரா! யாதொன்றும் கவனித்தால் உண்மை விளங்குமன்றி யான் புகல உமக்கு ஒருவாறாகத்தான் தோன்றும். ஆகலின் அச்சரிதையை விவரித்துக் கூறுவாம், கவனித்துக்கேண்மின்.

சபாரஞ்சிதன் :—அரசபுத்ரா ஜெயசேன னென்னும் மஹாராஜாவின் புத்ரனாகிய வீரசேனன் தனக்கு யாதொருவரும் நிகரின்றி மனோகர்வியாயிருக்கையில் சில துஷ்டப்பிள்ளைகளாகிய அற்பநேயருடன் கூடி ஆருக்கும் அஞ்சாமல் கரத்திற் றனுசேந்தி கானகமெங்கணும் அலைந்து மிருகங்களை வதைத்து மஹா கொடுமைபுரிந்தும் யாவரேனும்சிற்றரசரெதிர்ப்படினும் அவர்களையும் மிரட்டிக் கொண்டு கட்டுக்கடங்கா காளையைப் போல திரிந்துக்கொண்டிருக்கையில், ஓர் நாள் தனது இஷ்டம் போற் காலையிலெழுந்து பலகாரபக்ஷணம் புசித்து அரண்மனையை விடுத்து அப்பாற்செல்லும்போது அவ்சகுணம் நேரிட்டதையும் அலக்ஷியஞ்செய்து அப்பாற் செல்லுகையில் துஷ்டசிநேகம் பிராண சங்கடமென்பதுபோல் அற்பசிநேகிதர் அவ

னருகில் நெருங்கி, மித்ரா! இத்தினம் வனவேட்டையாடுவோம் வருவீரென்றிசைப்ப வீரசேனனும்நன்றெனச்சம்மதித்து அதே போக்காய் ஆரண்யமார்க்கமாய்ச் சென்று மிருகவேட்டையாடிக்கொண்டிருக்கையில் வீரசேனன் தனது கரத்திற்றாங்கிய தனுசிற்கணைதொடுத்து ஓர் மதயானைமீது விளையாட்டாய் விடுத்தனன். அது மஹாகோபங்கொண்டு வீறிட்டுக்கொண்டு ஓடிவந்தமையால் துஷ்ட சிநேகிதரனைவரும் இஷ்டமானபடியே நாலாபக்கமுஞ் சிதறி ஓடிப்போயினர்.

அச்சமயம் வீரசேனன்சதி பெரிய ஆபத்தாய்விட்டது, யானையும் வில்லிற்கணை தொடுத்து விடுத்த வீரசேனனை உயிருடனே விடலாகாதென மனதில் பகைவகித்து துரத்திக்கொண்டுபோகையில் என்ன செய்வான்? விளையாட்டு வேலை வினையாய் முடிந்ததேயென விசனமடைந்து கையிலிருந்த தனுசையும் முதுகிலிருந்த அம்பறாத்தூணியையும் பூமியிலெறிந்துவிட்டு அருகிலிருக்கு விருக்ஷங்களிற்போயாகிலும் ஏறிக்கொள்வோமென்று ஓடி மரக்கிளைகளையெல்லாம் தாவிப்பிடித்து ஏறிக்கொண்டாலும் யானை விடாமுயற்சியுடன் பின்தொடர்ந்தோடி விருக்ஷங்களையெல்லாம் வேருடன் பிடுங்கி பூமியிலெறிவதுமாயிருக்கையில், வீரசேனன் மனமிரண்டு ஓடும்போது வழியிலெதிருற்ற பாழ்கிணற்றைக் கண்ணுற்று இனி பிழைத்தேனென திடமென குதித்தனன். அந்தக் கிணற்றில் நெடுநாளாய் வாசஞ்செய்திருக்கும் ஐந்துதலை நாகம் ஜிவ்வென்றெகிறி வீரசேனனைக் கடிக்கவந்தமையால் அவன் திகைத்து சிச்சீ ஈதென்ன ஈ நுழையாக் காட்டிலும் எமனிருக்குந்தன்மையாய் யானைக்குப்பயந்து கிணற்றில் குதித்தாலும் இங்கிருக்கும்சர்ப்பமும் புஸ்ஸெனச் சீறி கடிக்கவருகிறதேயென சுவற்றிமீது படர்ந்திருக்கும் ஆலின்விழுதைப்பிடித்துமேலெழும்புந்தருணம் யானையும் ஓடிவந்து தனது தும்பிக்கையை கிணற்றில் விடுத்து இவன் குடுமியையாகிலும் பிடித்திழுத்துப்போட்டுக் கொல்வோமென தும்பிக்கையைவிட்டுத் தடவும்போது வீரசேனன் திகைத்து ஈதென்ன பிராணபயமாயிற்றேயென காலைத் தூக்கிக்கொண்டும் தலையைக் குனிந்துக்கொண்டும் பிடித்த ஆலின்விழுதை விடாமல் "பல்லியைப்போல சுவற்றில் ஒட்டிக்கொண்டு மஹாபயங்கரமான ஆபத்திற்சிக்கிக்கொண்டோமே"யென்று அழுதுக்கொண்டிருந்தனன்.

இங்ஙனம் வீரசேனன் கதி எமதூதரிடம் சிக்கிய உயிர்போற் பாதகிக்கையில், அந்த சுவற்றில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கும் எலியானது இவனைக்கண்டு அடடா! மனிதர்கள் நமது இனத்தினர்கட்கெல்லாம் பகையாச்சுதே இனி இவனை உயிருடன்விட்டால் எவ்விதத்திலேனும் நம்மைக்கொன்றுவிடுவான், ஆகையால் வெள்ளம் வருமுன்னே அணை கோலிக்கொள்வதே உசிதமாகையால் நாமும் இவன் தப்பித்துக்கொள்வதற்குமுன் பூமியில்விழுந்து பாம்பாற் சாகும்படிசெய்வதே சிலாக்கியமென்று வீரசேனன் பிடித்திருக்கும் ஆலின்விழுதைத் தனது கூரான பற்களாற் கரகரவென கத்தரித்துக் கொண்டிருக்கையில் வீரசேனன் மனமிரண்டு அடடா! ஈதென்ன ஆச்சரியம்? அண்டின இடமும் அநியாயமானாற்போல உயிருக்கு பயந்து ஒண்டியிருக்கு மிடத்திலும் ஆபத்து நேரிடுந்தன்மையாய் இந்த பாழும் எலி நாம் பிடித்திருக்கும் விழுதைக் கடித்துக்கொண்டிருக்கிறதே இனி தாமதித்தால் விழுதறுந்து பூமியில் விழுந்தால் பாம்பால் கடியுண்டு பதைபதைத்து உயிர்விடவேண்டியதாகுமே யென பயந்தவனாய் ஒருகையினால் விழுதைப்பிடித்துக்கொண்டு மற்றொருகையினால் எலியை உஸ் உஸ்ஸென்று அதட்டிக்கொண்டிருந்தனன் அச்சமயம் அவன் மனமெவ்விதமிருக்கவேண்டுமென கேட்பவர்களே ஆலோசித்தால் அதிகபயங்கரமடைவரெனின் அவன் மனது எத்தகைய சஞ்சலத்திலாழ்ந்து அயருற்றதாயிருக்கும்?

இவ்விதமாய் இவன் தனதுவாழ்நாள் இன்றோடொழிந்ததென தீர்மானித்து யானைக்குபயந்து தலையைக்குனிந்துகொண்டும் பாம்புக்குபயந்து காலை தூக்கிக்கொண்டும் குண்டுகட்டாய் சுவற்றில் ஒட்டிக்கொண்டு எலிக்குபயந்து ஓர் கையினால் விழுதைப் பிடித்துக் கொண்டு மற்றொருகையினால் உஸ் உஸ்ஸென்று எலியை அதட்டிக் கொண்டிருக்கையில், அந்தக் கிணற்றின் அருகிலிருக்கும் விருக்ஷத்தின் கிளையிலுள்ள தேன்கூண்டிலிருக்கும் தேன்துளி வீரசேனன்புஜத்தின்மீது வீழ்ந்தமையால் ஈதென்னவென்று நக்கினன். அது மதுரமானதினால் தனக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தையும் மறந்து அம்மம்மா! யான் இத்தினம் விழித்த வேளை மெத்த உத்தமமானதினால் நமது நாவிற்கினிய தேன்துளி சுவைக்காயினேனென்று சந்தோஷ சாகரத்திலாழ்ந்தவனாய் மனக்களிப்படைந்திருந்தனன். அதைப் போலவே ஜீவர்களுக்கு இறப்பென்னும் பயங்கரமொன் றிருக்கினும் பிறக்கும்போது தாய் கர்ப்பத்தில் கட்டுப் பட்டுத்திகைத்திருக்

கும் ஆபத்துமிருக்க ஜீவனோடு உலாவுகையில் பலவிததுன்ப மனுபவித்து சஞ்சலப்படுவதுடன் மனோற்சாகமெனும் அற்பசுகம் கிஞ்சிற்று வந்தெய்திடின் தம்மைப்போற் சுகஜீவி இல்லையென்று பாவிப்ப துலகியற்கையன்றோ? அத்தன்மையாய்தாங்கள் புகல்வதெனின், விவேகிகள் நம்பத்தக்கதோ? வென் றுரைத்ததைக் கேள்வியுற்ற அரண்மனையிலுள்ளோரனைவரும் ஆற்றொணா ஆச்சரியமெய்தினர். ஆனால், அரசகுமாரனுக்குமாத்திரம் சபாரஞ்சிதன் சொன்ன சரிதையின்மீது பரிதாபமாகவே யிருந்ததினால் விசாரிப்பதாயினன்.

காமேந்திரன்:—ஐயா! சபாரஞ்சிதரே! அவ்வளவுபயங்கரமான நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்தவன் கதி எவ்விதமாயினவோ? வென எனதுளம் பலவிதமாய்ப் பரிதாபப்படுகின்றன அதையான் கவனித்துணர்க விவரித்துக்கூறுமின்.

சபாரஞ்சிதன்:—இராஜபுத்ரா! ஆலின்விழுதைப்பிடித்திருந்த வீரசேனன் தேன் துளி தின்றுவிட்டதினால் சீச்சீ ஈதென்ன கிஞ்சிற்று வீழ்ந்ததேயென்று மனவெறுப்படைந்தவனாய் பூமியைப்பார்க்கையில் சர்ப்பம் புஸ் புஸ்ஸெனச் சீறிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்று அப்பப்பா! இன்னுங் கொஞ்சநேரம் தாமதித்திடில் எலியின்கொடுமையால் விழுதறுபட்டு பூமியில் விழுந்து பாம்பால் கடியுண்டு நரகவேதனை யடையவேண்டியதாயிருக்கும் அவ்விதமாய்த் திகைத்திறப்பதிலும் ஆனையாலிறப்பதே உசிதமென்று நில்லென்று மேலெழும்பும்புந்தருணம் யானையானது சீச்சீ இவன் கெட்டான் நமக்கு பயந்து கிணற்றில் ஒளித்துக்கொண்ட இவனைநாம் கொல்லக்கூடாது உயிர்பிச்சையளித்தோமென் றெண்ணிக்கொண்டு போய்விட்டது. வீரசேனன் கிணற்றின்மீது வந்து பார்த்து யானையைக்காணாமையால் மஹா சந்தோஷமடைந்து அப்பப்பா வென்றேன் விதியையென்று கிணற்றிலிருந்து வெளிப்பட்டு ஆரண்யமார்க்கமாய் ஓடிப்போய் அரண்மனையிற் சேர்ந்தனன். அச்சமயம் அவனுடைய தாய்தந்தையர் மைந்தன்வருகையைக் கண்ணுற்று, மஹா சந்தோஷமடைந்தவராய் அப்பா! புத்திரசிகாமணி நீ இரண்டு நாளாய் என் வீட்டுக்கு வரவில்லையென்று வினவ வீரசேனன் பெருமூச்சுவிட்டு ஐயையோ யான் பட்ட கஷ்டம் நாயும் படாதேயென்று நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்று இனி எத்தநியும் அரண்மனையைவிடுத்து அப்பாற் போகே

யென்று வாக்குதத்தஞ் செய்துக்கொண்டனன். இப்படி இருக்கிறதே உலகியல்பு தாங்கள் அரசபுத்திரனாயிருந்தால் மாத்திரம் ஆபத்திற் சிக்கமாட்டீரோ?

என, சுப்ராஞ்சிதன் புகன்றவையனைத்தும் கவனித்த அரண்மனையிலுள்ளோரனைவரும் ஆச்சரியகரகூடியென சந்தோஷமடைந்திருந்தனர். அப்பால், கமலாகரமன்னவன் தனது புத்திரனைப்பார்த்து 'அப்பா! காமேந்திரா! நீயொரு காரியத்திலும் பிரவேசியாமல் அரண்மனையிற்றனே இருப்பாயாகில் உத்தமமென்று சொல்லி, காமேந்திரன் பிரயாணத்தைத் தடுத்தனன். அவனும் தந்தைசொன்மிக்க மந்திரமில்லை யென்னும் வாக்கியத்தையநுசரித்து மவுனமாயிருந்து விட்டனன்.

இவ்விதமாய்ச் சிலகாலஞ்சென்றபின்னர், காமேந்திரன் தனது காலவித்யாசத்தின் கிரகசாரபலனுக்கிசைந்த விதமாய் மதியமைந்த சில அற்பநேயருடன் கூடி ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருக்கையில் ஓர் நாள் மந்திரி குமாரனும் பிரதானிகுமாரனும் இன்னும் சில கூட்டாளிகளுமாய்ச் சேர்ந்து நாம் சிறிதுகாலம் வரையிலும் தேசசஞ்சாரியாய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருவோமென்று ஆலோசனைசெய்துக்கொண்டிருக்கையில் இராஜகுமாரன் சொல்லுகிறான்.

காமேந்திரன்:— எனதன்பிற்கினியநண்பர்காள்! யாம் தேசசஞ்சாரம் செய்வதற்குத் தகுதியானவாலிபதிசை இதுதான். அஃதெவ்விதமெனின் இன்னும் சில நாட்சென்றிடில் எனது தந்தை எனக்கு அரசுரிமைகொடுத்து இராஜரீகம் புரிவாயென்று மகுடாபிஷேகம் செய்து விட்டால் நகரைவிடுத்துவருவது அபூர்வமாகும், பிரமசாரியும், இராஜரீக மின்றிய அரசபுத்திரனும் தமக்கிஷ்டமான தேசத்திற் சென்றிருக்கலாம். அஃதன்றி, கலியாணமாகிய இல்லறவாசியும், அரசுரிமையேந்திய இராஜகுமாரனும் இருப்பிடம் விட்டுப் பெயருவது கஷ்டமேயாகும் ஆகையால், யாமனைவரும் இத்தருணமே தேசசஞ்சாரஞ் செய்து ஸ்தலயாத்திரை வாயிலாக பலதேசங்களிலும் திரிந்து ஆங்காங்கு நிகழும் அற்புதானேக ஆச்சரிய காக்ஷியனைத்தும் பார்த்து விட்டு வருவதே சிலாக்யமாகுமென்றெண்ணுகிறேன்.

என, நவின்றமைகினவிய கூட்டாளிகளும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து யாவரும் கூடி ஓர் தினத்தை ஏற்படுத்தி தமது பிரயாணம் யாதொருவருக்கும் தெரியாமல் தமதுவழிச் செலவுக்கு வேண்டியதிரவியங்களை சேகரித்து மூட்டைகட்டிக் கொண்டு காமேந்திரனுடனே புறப்பட்டு யாவரும் ஒன்றாய்ச்சேர்ந்து ஆரண்யமார்க்கமாய் கொக்குத்திரள்போற் கும்பலாய்ப்போய் விட்டார்கள்.

இவர்களனைவரும்யாருடனும் புகலாமல் காமேந்திரனுடனே ஊரைவிட்டு ஓடிப்போனதினால் அரண்மனைமுழுதும் அதிகவிசனமாயிருந்ததற்கிசைந்தவிதமாய் கமலாகரராஜனும் மந்திரிபிரதானி முதலானோ ரனைவரும் தமது மைந்தர்கள் பிரிந்துபோனகாரணமென்னவென்று நாற்றிசையும் தேடுதலாயினர், என்றாலும், அவர்கள் நகரிலிருந்தால்தானே அகப்படுவர், காமேந்திரனுடைய காலவித்தியாசத்திற்கிசைந்தவிதமாய் கானகமார்க்கமாய்ச் சென்றவரைக் குறித்து நகரில்தேடினால் அகப்படுவார்களா? வென்பதை யாவர் கவனிப்பர்? அரசன் தனது மைந்தன் பிரிந்தமனவிசாரத்தை முன்னிட்டு மந்திரி பிரதானியரைநோக்கிமஹாபரிதாபமாய்ப்புகல்வதாயினன்.

கமலாகரன்:—மந்திரிபிரதானியர்கள்! யான் உங்களைத் துணைவகித்தது சனியனை விலைக்குவாங்கி சஞ்சலமடைந்த தன்மையாயிற்று. இனியான் எவ்விதமாய் உலகிலுய்வேனென மனம்பதைக்கின்றனை. இவ்விதிவசத்திற்கு யாது செய்வேன்,

கருணாகரன்:—மஹாப்ரபு! யாங்களென்செய்வோம்? தாங்களெம்மால் சஞ்சலப்படுவானேன்?

கமலாகரன்:—மந்த்ரி! யான் உங்களை மந்திரிபிரதானியராய் அரண்மனையில் வைத்துக்கொண்டதினாலல்லவோ உமது மைந்தர்கள் என்புத்திரனை எங்ஙனமோ அழைத்துக் கொண்டு போய்விட்டனர்கள் அவன் எவ்விதமாய் இத்தேசத்தில் வருவான் ?

என, மனவிசாரமடைந்தவனாய்க்கண்ணீர்த்ததும்பக்கதறியழுது ஆ! எமதுபெருந்தவத்தவத்தால் வந்துதித்த செல்வக்களஞ்சியமே யென பதைத்துத் துடித்து மூர்ச்சையாய் வீழ்ந்தனன் அருகிலிருந்தவரனைவரும் அரசனைத்தேற்றி சமாதானஞ்செய்து அஞ்சாதீரென்று ஆறுதலான நன்மொழிபாலித்துக் கொண்டிருக்கையில் அரசனாகியகமலாகரன் மனஞ்சலித்து இனியாது செய்வது காமேந்திரனுடைய ஜாதக

லக்ஷணத்தை கவனித்தும் கைசோரவிடுத்திட்டோமே யெனதுயரப் படுவதாயினன்.

ஸுபாரஞ்சிதன்:—மஹாப்ரபு. ஜீவர்களின் நிலைமையனைத்து தெள்ளிதாய்க்கவனித்துணர்ந்தும் விசனப்படுவதெனின் ஆச்சரியமன்றோ? விதியை விலக்கயாவராலாகும் மனிதசஞ்சார மின்றியகானகத்தில் பூமியிற் பள்ளம் வெட்டி பாதாளத்தில் ஒளித்து வைத்திருந்த அரசகுமாரன் வயற்றுசோற்றுக்கு வனவாசியா யலைந்து வறுமையாளனா யிருந்த விர்த்தாப்பியனால் வெட்டுண்டிறந்ததை கவனித்திலீரோ?

கமலாகரன்:—ஆ! அப்படியா! விதியை மதியால் விலக்கலா மென்று சாஸ்திர புராணங்களினும் முறையிடுகின்றனவே. தற்சமயம் தாங்கள் புகல்வதைகவனிக்கில் ஆச்சரிய மாயிருக்கின்றனவே அதனையும் சற்று விவரித்துக் கூறுமின்.

ஸுபாரஞ்சிதன்:—அரசே! கலிங்கதேசத்தைப்பரிபாலனஞ் செய்திருந்த கீர்த்திசேன மஹாரா[illegible]ஜனெனவன் தனது மைந்தன் ஜாதகத்தை [illegible]ாக ஜோதிட கணித வல்லோரை வரவழைத்து விசாரித்தலும், அவன் தனது சமர்த்திற்கியன்ற விதமாய் இராஜபுத்திரனுடைய ஜனனராசியலனை கணித்துப் பார்த்து அரசனை நோக்கி ப்ரபு! உமது புத்திரன் ஜாதகலக்ஷணம்வெகு மேன்மையுற்றதாயும் இராஜரீகம் புரியும் சாமார்த்தியமுடையதாயிருந்திடினும் பனிரெண்டாவது வயதில் பகைஞனால்வெட்டுண்டிறப்பானென்று சொன்னவுடனே அரசன் வியப்புற்று இதற்கென்ன செய்யலாமென்று விசனமாயிருக்கையில் அருகிலிருந்த அமைச்சராதியோர் அரசனைத்தேற்றி இதற்காக விசனுறுதீர், விதியைமதியால்விலக்கிவிடலாம். அஃதெவ்விதமெனின் உமது புத்திரனுக்குபனிரெண்டாம்வயதில்தான் ஆபத்து வருமென்று ஜோதிடகணிதத்திலிருக்கின்றமையால் அச்சமயத்தில் மாத்திரம்மனிதசஞ்சாரமின்றிய கானகத்தில் பூமியிற்பள்ளம் வெட்டி அங்கு விசித்திரமாளமாளிகை யொன்று எற்படு

த்தி அங்ஙனம் இவனுக்கு ஒருவருஷத்திற்குவேண்டியசாமான்
களனைத்தும் சித்தப்படுத்திவைத்து அங்ஙனமே அவனையார்தொ
ருவர் கண்ணிற்கும் தோன்றாமல் ஒளித்து வைத்து மறைத்
திருக்கச்செய்து பனிரெண்டாவது வருஷத்தில் அழைத்துக்
கொண்டு வந்து விடுவோமென்று சொன்னவுடனே அரச
னும் அவ்விதமேநன்கெனசம்மதித்துபிள்ளையைப்பத்திரமாய்
க்காப்பாற்றி, அவனுக்குப் பதினோராவதுவயது நெருக்கமா
ய்விட்டபடியால் அத்ததியே சிலசிற்ப சாஸ்திரிகளினால் மனித
சஞ்சாரமின்றிய பயங்கரமான இருள் சூழ்ந்த கானகத்தில்
பள்ளம்தோண்டி மாளிகையொன்று ஏற்படுத்தி அங்ஙனம் அர
சகுமாரனை யனுப்பி வருஷத்திற்கியன்ற ஊணவாதிகளனைத்தும்
சித்தப்படுத்திவிட்டுவந்தனன். அச்சமயம் அரசகுமாரன் தனி
யாயிருக்கமனவருத்தமடைந்தவனாய் அரசனை நோக்கி! தந்தை
யே! யான் இன்னும் எத்தனை நாள் இங்ஙனம் சிறையிருக்க
வேணுமென்று வினவுதலும், மைந்தா உனது ஜாதகப்படி
யேபதினொருவருஷகாலமாகிறது இன்னும் ஒருவருஷமான
பிறகு உனது பீடை தொலைந்துபோகும். அச்சமயம் யானுன்
அழைத்துக் கொண்டு போகிறேனென்று தைரியம் சொல்லி
விட்டுப் போயினன். ஆனால் அரசன் மாத்திரம்மாதத்திற்கொ
ருதரம் வந்து மைந்தனைப்பார்த்து விட்டுப் போவது வழக்க
மா யிருக்கையில் தான் மாத்திரம் வருவதற்கு பூமியிற்
கதவுசெய்து திறப்பதற்கும் மூடுவதற்கும் தகுதியானதாய்ச்
செய்திருந்தனன். இவர்கள் இவ்விதவிடாமுயற்சியா யிருக்கை
யில் ஓர்வறுமையாளன் தனது வாலிபதிசையில் கஷ்டப்பட்டு
காசுசம்பாதித்து தனது பெண்சாதி பிள்ளைகளைக்காப்பாற்றிக்
கொண்டிருந்து விர்த்தாப்பியத்தில் வயற்று சோற்றுக்கேவன
வாசியா யலைந்து கானகமார்க்கமாய்ச் சென்று இராஜகுமா
ரனிருக்கும்மார்க்கமாய் வருகையில் அன்றையதினம் இராஜ
குமாரனுக்கு பனிரெண்டுவயது சரியாய் விட்டதினால் மெல்
லென நினைத்துமாளிகையின் மேற்கதவைத்தூக்கி அப்பால்வை

த்து விட்டு நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்கையில் இவனுடைய கு சாரத்தின் பகைகிரகமாயமைந்திருக்கும் கிழவனைக்கண்டுமர்மமுணராதவனாகையால் அவன் மீது பரிதாபமடைந்து ஐயா! நீர்யாவரென்றுவினவினன். வறுமையானனோபரிதாபமாயழுது ஐயா! யான் வாலிபத்தில் கஷ்டப்பட்டு பெண்சாதி பிள்ளைகளைக்காப்பாற்றினேன். இச்சமயம் யான் விர்த்தாப்பியனானபடியால் சம்பாதிக்கமுடியாமல் யான் தத்தளிக்கையில் என்னை அடித்துத் துரத்திவிட்டனர். யான் ஜீவிக்கச் சக்தியின்றியவனாய் வனவாசியாய் வந்துவிட்டேனென் றழுதனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற இராஜகுமாரன் பரிதாபமடைந்து, ஐயா! பெரியவரே தாங்கள் யாதும் வருத்தப்படவேண்டாம் என்னுடன் வந்திருப்பீராகில் உமக்கு வேண்டிய உணவாதியளித்து காப்பாற்றுகிறேனென்று தன்னுடனே அழைத்துக்கொண்டு மாளிகையுட்சென்று கதவை தாளிட்டுக்கொண்டு இருவரும் உட்கார்ந்து பலகாரபக்ஷணம் புசித்தானபிறகு இராஜகுமா ன் கட் லின்மீது சயனித்துக்கொண்டு கையில் [illegible]த்து ஐயா! பெரியவரே அதோ பார்த்தலைய இராப்பில் ஓர் கத்தி சொருகியிருக்கிறேன் பத்திரமாய் எடுப்பீரென்றனன், கிழவன் மஹாபாக்யமென்று அவன் மீது கால்படாமல் கட்டிலின்மீதில் ஏறி கத்தியை எடுக்கையில் தனது கால் இராஜகுமாரன்மீது பட்டதோவென்று குனிந்து பார்க்கையில் கிழவன்கைதவறி இராஜகுமாரன் கழுத்தின் மீது கத்திவீழ்ந்தது ஆ! விதிவசமே அண்டின இடத்திலும் ஆபத்து நேர்ந்ததோவென மனம் பதறி கத்தியைபிடுங்கினன். உடனே இராஜகுமாரன் அம்மாவென்றலறி ஆவிவிடுத்தனன். அன்றையதினம் சரியாய் ஒருவருஷமானபடியால் இராஜகுமாரனை அழைத்துக்கொண்டுபோவதற்காக இராஜனும் இராணியும் மந்திரி பிரதானியருடனே அரண்மனையிலுள்ளோரனைவரையும் அழைத்துக்கொண்டு கானகத்தில் வந்து கதவையெடுத்து அப்பால் வைத்துவிட்டு உள்சென்றவுடனே இராஜ

குமாரன் வெட்டுப்பட்டு செத்துக்கிடக்கவும் ஓர் கிழவன் கத்தியைப் பிடித்துக்கொண்டழுதிடவும் கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தவரா யிருந்தனர். இராஜனும் இராணியும் ஆ! மைந்தா! கானிற் பள்ளந்தோண்டி காப்பாற்றிடினும் விதியை விலக்க முடியாமல் வெட்டுண்டிறந்தாயேயென்று விசனப்பட்டழுதிடவும் கிழவனும் சகாயம் செய்த அரசபுத்திரனுக்கு அபாயம் வந்ததேயென்று பிரலாபித்துக்கொண்டழுதிடவும் இன்னும் இருக்கப்பட்டவர்களும் அழுதுக்கொண்டிருக்கையில் ஓர் மஹாரிஷி ஈதென்ன பூமியிற் கூச்சலென்று உட்சென்று பார்த்து விசாரிக்க அங்கிருப்போர் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்றனர். அம்மஹான் பரிதாபமடைந்து சஞ்சீவி மந்திரத்தை உச்சரித்து அரசகுமாரன்மீது ஜலந் தெளித்து உயிர்ப்பிக்கச்செய்தனர். அப்பால் யாவரும் ஒன்றாய்ச்சேர்ந்து அரண்மனையிற்சென்று, கிழவனுக்கு திரவியசகாயம் செய்து அவனிருப்பிட மனுப்பிவிட்டு அரசகுமாரனுக்கு ஓர் கன்னியை மணஞ்செய்துவைத்து மகுடாபிஷேகஞ் செய்தனர். அரசகுமாரன் வென்றோம் விதியை யென்று இராஜரீகஞ் செய்திருந்தனன். இவ்விதமாயிருக்கின்றதே கிரகசாரத்தின் வேடிக்கை இதை கவனியாமல் பலவிதமாய் யோசிப்பதாற் பயனென்ன?

என்று, சபாரஞ்சிதன் புகன்றவை யனைத்தும் கவனித்த அரண்மனையிலுள்ளோ ரனைவரும் ஆச்சரியமடைந்தவரா யிருந்தனர். ஆனால், கமலாகர மஹாராஜனுக்குமாத்திரம் மைந்தனென்றபாசம் மனதை வருத்தப்படுத்திக்கொண்டிருந்தன. சில சமயம் மஹாராணியும் மனந்திகைத்து புத்திரன் எத்திசையில் துயரமடைந்திருக்கின்றானோவென விசனமடைந்திடினும் அருகிலிருக்கும் தாதியர் பலவிதத்திலும் இராஜபத்தினிக்கு தைரியம்புகன்று விசனத்தை ஒருவிதமாய் தீர்ப்பதாயினர்.

Scene 3.

இடம். ஆரண்யம்.

கதாநாயகர்.

அரசகுமாரன்	காமேந்திரன்.
மந்திரிகுமாரன்	நியாயகேசரி.
பிரதானிகுமாரன்.	வீரப்பிரதாபன்.
சேனாதிபதிகுமாரன்.	ஜெயப்ரதாபன்.

வழிப்போக்கன். ரிஷீஸ்வரர்.

இங்ஙனம் நிற்க, காமேந்திரன் நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபனெனும் நால்வரும் ஒன்றாய்ச்சேர்ந்து "பஞ்சரத்திலிருக்கும் கிளிப்பிள்ளை பறந்தோடுவதுபோல" அன்னவஸ்திரக்குறையின்றி அன்னை தந்தையரால் போஷிக்கும் அரண்மனையை விடுத்து ஆறுமற்ற பரதேசிபோல ஆரண்யமார்க்கமாய்ச் சென்று வெகுதூரம்போய் அங்ஙனம் தமது மனதிற்கிசைந்தவிதமாய் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில், அங்ஙனம் யாவரும் உலாவிக்கொண்டிருக்கையில் மேற்குறிப்பித்த நால்வர் தவிர மற்றவரனைவரும் சிதறி பலவிதமாய் மறைந்து தமது தேசத்திற்குப் போயினர். அப்பால் ஓர் கிளைவழி தோன்றிற்று அம்மார்க்கமே செல்லுந்தருணம் வழியிலெதிருற்ற நந்தவனத்தைக் கண்ணுற்ற அந்நால்வரும் அங்குசென்று அருகிலிருக்கும் தாமரைப் பொய்கையிலிறங்கி ஸ்நானபானஞ்செய்து வருவோமென்று தடாகத்தி லிறங்கி ஜலத்தில் மூழ்கினவுடனே நால்வரும் ஸ்திரீரூபமாயினர். அச்சமயம் ஒருவரை யொருவர் பார்த்து ஈதென்ன விபரீதம் இருந்தாற்போலிருந்து யாமனைவரும் ஸ்திரீரூபமாய் விட்டோமேயென ஆச்சரியமெய்திடினும் இங்கு இன்னமென்னென்ன அதிசயம் நேரிடுமோவென சந்தேகித்து திகைத்துநின்று ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அம்மார்க்கமே போய்க்கொண்டிருந்த ஓர் வழிப்போக்கன் தடாகத்திலிருக்கும் நால்வரையும் பார்த்து மையலுற்றவனாய் இவர்கள் யாவர்களோ? இராஜஸ்திரீகளாய்க் காண்கிறது. அருகிற்சென்றால் ஆபத்து நேரிடும்போலிருக்கின்றன. அன்றியும், இவர்களை விட்டுப்போவதென்றால் மன

இன[illegible]லயே இனி இதற்கெப்படியென்று மனமயக்கமுற்றவ[illegible]கிலிருக்கும் விருக்ஷத்தின்மீதேறிக்கொண்டு அந்நால்வரின் முகதரி[illegible]த்தைக்கண்டு மோகானந்த மடைந்தவனாயிருந்தனன்.

இவன் நிலைவு இவ்விதமாயிருக்கையில், ஜலத்திலிருக்கும் அந்நால்வரில் அரசகுமரன் வியப்புற்றவனாய் மற்ற மூவருக்கும் சொல்வதாயினன்.

காமேந்திரன்:—நேயர்காள்! யாம் இத் தடாகத்தி லிறங்கின வுடனே ஆணாயிருந்த நமது சரீரம் பெண்ரூபமாய்விட்டதே. இனி இக்கோலத்துடன் சென்றால் நமது சிநேகிதரில் யாவரேனும் நம்மை மதிப்பார்களா?

நியாயகேசரி:—இராஜகுமாரா! உலகிற் ஜனித்த ஜீவர்களில் புருஷரூபமாயிருந்திடில் மனதிற் கிசைந்த தேசமெங்ஙனும் சுற்றித்திரிந்து சாமார்த்தியமாய் வருகலாம். அஃதன்றி பெண்ரூபமானதினால் எங்ஙனம் செல்வது, "பேதமையென்பது மாதர்க்கணிகலமென்னுந் தன்மையாய் அச்சமம், மடம் நாணமென்பதை துணைவகித்து ஐந்துவயதுபிள்ளையைக்கண்டாலும் ஐம்பது வயதுடைய கிழவியும் நாணமெய்துவளென்னும் தன்மையாயிருக்கிறதே. நாம் எவ்விதமாய் தேசசஞ்சாரம்செய்து வருவது. அஃதன்றி, நமது தேசத்திற்கு சென்றாலும் சரியொத்த சிநேகிதரனைவரும் சிரித்து பரிகாசிக்கும் தன்மையாயிற்றே,

வீரப்பிரதாபன்:—நண்பர்காள்! இனி வருந்துவதாற் பிரயோசனமில்லை. அன்றெழுதினவன் அழித்தெழுதப்போவதில்லை இனி வீண் விசாரப்படுவதினாற் பிரயோசனமாகாது ஜலத்திலிருந்து தவிப்பதிலும் கரைமீதேறி வஸ்திரமணிந்துக்கொண்டு வந்த வழியே திரும்பிப்போவதே நலமாகும்.

ஜெயப்ரதாபன்:—ஈதென்ன ஆச்சரியம்? குளிக்கப்போய்சேற்றைபூசிக்கொண்டது போல" யாம் தேசசஞ்சாரம் செய்யவந்துபெண் வேஷமாய் தேசத்திற் கேகினால் யாவரேனும் பரிகாசம் செய்யமாட்டார்களா? இதைக்காட்டிலும் யாம் நால்வரும் அந்நிய தேசத்திற் சென்று, நமக்கிஷ்டமான அரண்மனையிற்போய் இராணிகள் வசத்தில் தோழியாயிருப்பதே மேன்மையாகும்.

நியாயகேசரி:—நேயர்காள்! யாம் நால்வரும் ஆழமறியாமல் காலிட்டுக்கொண்டு அலைச்சற்படுகையில் அவரவர் அந்தஸ்த்திற்கிசைந்தவாய் ஆலோசனைசெய்வதாயினோம். அஃதெப்படியெனின் காமேந்திரன் அரசகுமாரனாகையால் அரசர்கட்கிசைந்தவிதமாய் தப்பித்துக்கொள்ளும் உபாயமின்னதென்றுங்கவனியாமல் அதிகவிசனமுடையவராய் நம்மிடம் ஆலோசனை கேட்பதாயினர். யான் மந்திரிகுமாரனாகையால் ஆழ்ந்தரகஸ்யத்தை எண்ணி ஆராய்ந்துணர்ந்தும் அவமானத்திற்கிடமாகலாகாதென விசனப்படுவதாயினேன், வீரப்பிரதாபன்பிரதானியின் குமாரனாகையால் வரும் விதியை விலக்கமுடியாது வீணிற்சஞ்சலப்படுவதிலும் வீட்டிற்குப்போய் பார்த்துக்கொள்ளுவோமென்றான். இந்த ஜெயப்பிரதாபன் சேனாதிபதியின் குமாரனாகையால் எங்ஙனமேனும்சேர்ந்து வயற்றைவளர்ப்பதே சிலாக்கியமென்றனன். ஆகையால், இவருடைய ஆலோசனையே சரியானதென்று யானும் சம்மதிக்கிறேன்.

என நவின்றமையுணர்ந்த மூவரும் "மந்திராலோசனை தந்திரமானதென கல்விற் சிறந்த கவிஞர்களாலும் வரைந்திருக்கும் நீதிசாஸ்திரத்திற்கிணங்க" சம்மதித்தவர்களாய் மனந்துணிந்து திடீரென ஜலத்தைவிடுத்துக் கரைமீது வந்தவுடனே பழையபடியே யாவரும் ஸ்திரீரூபமாறி ஆண்ரூபமாயினர். இவ்விபரீதத்தை கண்ணுற்ற நால்வரும் அதிசயித்து ஈதென்ன கண்காக்ஷி? யாம் முன்கண்டது ஸ்திரீரூபம். பின் கண்டது ஆண்ரூபமாயிருக்கின்றனவே இதை கவனிக்கில் நாம் கண்டது கனவோவென சிரித்துக்கொண்டிருக்கையில், மரத்தின்மீதிலேறி வேடிக்கைப்பார்த்திருந்த வழிப்போக்கன் மனமிரண்டு அட்டா! ஈதென்ன யாம் விழித்தகண் மூடாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கையில் இந்நால்வரும் முன்னம் ஜலத்திலிருக்கையில் ஸ்திரீரூபமாய் யாதோ ஓர் மனசஞ்சலமுடையவராயுமிருந்தனர். கரைமீது வந்தபிறகு ஆண்ரூபமாயிருக்கின்றனரே இதை கவனிக்கில் அற்புதானந்த ஆச்சரியகாக்ஷியாயமைந்தவையாகும், அன்றியும்; யாம் தூங்குகிறோமோ? விழித்திருக்கிறோமேவென்னும் சந்தேகமுடையவனாய்த் தன்னைத்தானே கிள்ளிக்கொண்டும், கடித்துக்கொண்டு பார்த்தாலும் வலியெடுக்கிறதாகவே காணப்பட்டன. ஆனால் முன்புகண்டது கனவோ? நினைவோவென்றிடினும், கண் விழித்தவிதமே மோகானந்தபார்வையாயிருந்தோமே. சரி! சரி!!

இவர்கள் தேவர்களோ? கந்தர்வர்களோ? மாயாராக்ஷகரோ தெரியவில்லை. அசுரர்களானால் கோரைப்பற்களும் கருத்த நிறமும், பருத்த சரீரமும், மனிதரைத் தின்னும் மிருகத்திற்கிணங்கிய குரூரமாயிருப்பாரென்றும் கேள்விப்பட்டிருக்கின்றோமே, இவர்களைப் பார்த்தால் சாதாரணமனிதர்களாகவும், சிறு பிள்ளைகளாகவும் காணப்படுகின்றனவே. இவர்களுடைய மகத்வம் இன்னதென்றுங் கவனித்திலோம், சரி! சரி!! இவர்கள் தேவர்களாகவே இருக்கக்கூடும், இனி நாம் விருக்ஷத்தை விட்டுக் கீழிறங்கி இவர்களிடம் வரம்பெறுவோமானால் தனதான்ய சம்பத்துடன் மஹாராஜனாயிருப்போமெனும் பேராசையை அனுசரித்து மரத்தைவிட்டுக் கீழிறங்கி குடுகுடுவென ஓடிவந்து அரசகுமாரனாகிய காமேந்திரன் காலைப்பிடித்துக்கொண்டு ஸ்துதி புரியலாயினன்.

வழிப்போக்கன்:—சுவாமி! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! அடியேன் வறுமைநோயாற்களைத்து இன்னும் கலியாணமாகாமல் கவலைப்படுகிறேன். யான் தனதான்ய சம்பத்துடன் மஹாராஜனாயிருக்கும்படி வரங்கொடுப்பதுடன் எந்த ஊர் இராஜபுத்திரியாகிலும் என்னை நேரில் வந்து கலியாணஞ்செய்துகொண்டு சுகானந்தமாய் வாழ்ந்திருக்கும்படி அனுக்கிரகம் புரியவேண்டும்.

என, வேண்டிக்கொள்ளவே! காமேந்திரன் திப்ரமையடைந்தவனாய் நீயாரப்பா! ஏன் எனதுகாலைப் பிடித்துக்கொண்டு ஏதேதோ உளருகிறாயென்று சொன்னாலும் அவன் விடாமுயற்சியாய்ப் பிதற்றிக்கொண்டிருப்பதைப்பார்த்த மூவரும் காமேந்திரனைப் பிடித்துக்கொண்டு என் சுவாமி எங்களுக்கும் வரம் கொடுக்கின்றீரா வென்று பரிகாசித்துக்கொண்டிருப்பதையும் கவனியாத வழிப்போக்கன் சுவாமிகளே நீங்கள் மாயாவதாரிகள் எங்களைப்போலொத்த மனிதர்களை இவ்விதமாய்ச் சோதிப்பது நன்கல்லவென்று நால்வரையும் ஸ்தோத்திரம் செய்கையில் மந்திரிகுமாரன் சொல்வதாயினன்.

நியாயகேசரி:—ஐயா! நீரென்ன முழுமூட சிகாமணியாயிருக்கின்றீர், யாங்கள் நால்வரும் தேசசஞ்சாரியாய் போய்க்கொண்டிருப்பவரை சுவாமியென்றும், வரம் கொடுப்பீரென்றும் தொந்தரை செய்கின்றீரே ஈதென்ன வேடிக்கை? நீரென்ன நாட்டுமனிதனோ அன்றி காட்டுமனிதனோ?

வழிப்போக்கன்:—சுவாமி! தேவரீர் என்னை இன்னும் சோதிக்கின்றீரோ, இவையனைத்தும் தமது திருவுளத்திற்குத் தகுதியோ? தேவரீர்களுடைய சுபாவமே இத்தகையதா யிருக்கின்றன. முற்காலத்தில் வால்மீகர் இராமருடையசரித்திரத்தை இராமாயணமாயெழுதினர். அப்பால், ஆஞ்சநேயரும் அனுமந்தாராமாயணமென ஓர்விதமாய் எழுதினர். இந்த ஆஞ்சநேயர்எழுதிய ராமாயணத்தில் எல்லாம் தற்புகழ்ச்சியா யிருந்தபடியால் ஸ்ரீராமர் நகைத்தனர். அச்சமயம் ஆஞ்சநேயர் மனம்பதறி வால்மீகர் மாத்திரம் இவ்வளவு சிரேஷ்டமானவரோவென கோபித்து தானெழுதியதைக் கிழித்தெறிந்து போட்டுவிட்டுப் போயினர். அப்பால், மறுபடியும் ஓர்நாள் ஸ்ரீராமச்சந்திரனிடம் வந்து, சுவாமி! இந்த வால்மீகர் மறுஜனனத்தில் அடியேனுக்கு சீடனாயிருக்கும்படி அருள் புரியவேண்டுமெனவே அப்படியே யாகுகவென வரமளித்தனர். அப்பால், இந்த கலியுகத்தில் வர்ணாசிரம தர்மந்தவறி பலவித கெடுதிகள் விளைந்துக்கொண்டிருக்கையில், சுகர், வியாசர், வதிஷ்டர் முதலாகிய மஹான்க ளனைவரும் மனிதரூபமாய் ஜனித்திருக்கையில் வால்மீகரும் துளசிதாஸ[illegible]ப் பிறந்து வளர்ந்து மனைவியினால் பக்திமார்க்கத்தைபுணர்ந்து ஹரிபக்தரான ஆஞ்சநேயரைக் காணவேணுமென்னும் [illegible]வலுடன் சுற்றித்திரிந்து தேடிக்கொண்டிருக்கையில், ஓர்[illegible]ள் இராமாயணப்பிரசங்கஞ் செய்யுமிடத்தில் ஆஞ்சந[illegible]பிராமணவேஷமாய் வந்துட்கார்ந்து பேரா[illegible]ந்த ம[illegible]தவராய் ஆ! ஹா! யாம் அந்தகாலத்தில் செய்த [illegible]யெல்லாம் இந்த காலத்தில் கேட்கலாயிற்றே யென தலையசைத்துக்கொண்டு மனோல்லாசமாய் இருப்பதை கவனித்த துளசிதாசரானவர் இவர்தான் ஆஞ்சநேயரென தீர்மானித்து அவருடைய பாதத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு எனக்கு ஸ்ரீராம தரிசனங் காண்பிக்கவேண்டுமென பிரார்த்தித்தபடியினால் அவர் கருணைகூர்ந்து துளசிதாஸர் இஷ்டப்படியே அநுக்கிரகஞ் செய்தனர். அதைப்போலவே யானும் உம்மைக் கண்டு எனக்கு வேண்டிய வரத்தைக் கொடுப்பீரெனபிரார்த்தித்துக்கொண்டேன், இனி நீங்கள் என்னை ஏமாற்ற முடியுமோ? ஜெகரக்ஷகரே,

என, மர்மமுணரா வழிப்போக்கன் பலவிதமா யுளறுகையில் அந்நால்வரும் ஆச்சரியமுற்றவராய் ஈதென்ன விபரீத கண்காட்சி யென சிரித்துக்கொண்டிருக்கையில், மந்திரி குமாரன் சொல்வதாயி னான்.

நியாயகேசரி:—நேயர்காள்! இவன் சாஸ்திர புராண நான்முறை யனைத்தும் வாசித்துணர்ந்தவனாயினும் லௌகிகமார்க்கத்தியல் பினை சிஞ்சிற்றும் கவனியாதவன்போ லிருக்கின்றான்.

காமேந்திரன்:—நேயா! யாம். எத்தனையோ மூடர்களையெல்லாம் பார்த்திருக்கிறேம். மனிதனை பகவானென மதித்துப் பல விதமாய் உளறுகிற முழுமூடனைப்போன்றவரைக் காண்கி லேன்,

நியாயகேசரி:—அரசபுத்ரா! அவ்விதமாய் நினையாதீர். இவனைப் போன்ற மூடர் பலபேரிருக்கின்றனர், அவர்களில் இவனொரு வனாகும்; ஆயினும், இவன் எட்டிலெழுதிய சக்கரை அக்ஷ ரத்தை நக்கிப்பார்த்து மனமகிழும் கற்றறிமோழையாகும். இவனிலும் முழுமூடனொருவன் கலியாண முகூர்த்தத்திற்கு செல்லும் வழிப்போக்கனை கடவுளென தீர்மானித்து மதி மயங்கவில்லையா?

வீரப்ரதாபன்:—ஆ! ஈதென்ன ஆச்சரியம்! இவனிலும் மூடன் இன் னொருவனிருக்கின்றானென்பது வியப்புறுந் தன்மையான வே டிக்கையன்றோ? ஆகலின் அவன் செய்கையைச் சற்று விவரித் துக் கூறுமின்.

நியாயகேசரி:—சரி! அவ்விதமே புகலுதும் கவனமாய்க் கேண்மின். ஓர் சிற்றூரில் வாசஞ்செய்யும் ஓர் குடியானவன் முன் ஜன்மத் திற் புரிந்த பாபமெல்லாம் திரண்டுருண்டு பேய்போன்ற குண மமைந்த மனைவி மைந்தருடன் மஹா துயரப்பட்டுக்கொண்டு சம்ஸாரம் சாகரமென்று மனமிரண்டவனாய் கஷ்ட ஜீவன மாய்க் காலங் கழித்துக்கொண்டு விர்த்தாப்பியனு மாயினன். அப்பால், அவனுக்குக் கஷ்டப்பட்டுக் காசு சம்பாதிக்க முடியாமல் எங்கெங்கேனும் சென்று இறந்தாம்போமென ஓடிப்போயினன், அவனுடைய மனைவி மைந்தர்க ளிவனைத் தேடிக்கொண்டு தாயொருபக்கமும் பிள்ளையொரு பக்கமு

மாய்த் தேடிக்கொண்டு போகையில், கிழவனுடைய மகனாகிய மூடன் வழியிலிருந்த விருக்ஷத்தின்மீ தேறி இந்தக்கிளையை ஒடித்துக்கொண்டுபோய் எவ்விதமாயினும் தகப்பனைத் தேடிப்பிடித்து இடுப்பொடிய அடித்து இழுத்து வருவோமென்று மேல்கிளையின் மீதிருந்து அடிக்கிளையை வெட்டிக்கொண்டிருக்கையில் வழிப்போக்கனொருவன் அவனைக் 'கண்ணுற்று நீர் யாரையா! மூடனாயிருக்கின்றாய் மேல்கிளையிலிருந்து அடிக்கிளையை வெட்டுகின்றனையே இன்னுங் கொஞ்சநேரத்திற்குள் கிளை முறிபட்டு விழுந்து விடுவாயே யென்றனன். அந்த மூடன் கிஞ்சிற்றும் கவனியாமல் அட போடாபோ! நீ யென்ன சுவாமியோவென்றான். சரி அவ்விதமானால் இன்னுங் கொஞ்சநேரத்திற்குள் பார்க்கலாமென்று போய்க்கொண்டிருக்கையில் கிளை முறிந்து மூடன் பூமியில் வீழ்ந்தனன். அச்சமயமே அவன் குடுகுடு வென வோடிப்போய் சுவாமி நீர் உண்மையான சுவாமிதானென்பதற்குச் சந்தேகமில்லை ஆகையால் என் தகப்பன் என்னைப்பெற்று, வளர்க்கமுடியாமல் ஏமாற்றிவிட்டு ஓடிப்போயினன், ஆகையால், அவனிருக்குமிடத்தை எனக்குக் காண்பிக்கவேணுமென்று வழிப்போக்கன் காலைப்பிடித்துக்கொண்டு விடாமலிருக்கும்போது அவன் மனமிரண்டு அடடா இதென்னபீடையென்று காலை உதறிக்கொண்டு போனாலும் இவன் பிடித்த பிடியை விடாமல் பற்றிக்கொண்டிருக்கையில் வழிப்போக்கன் கோபித்து தான் போகும் காரியம் கெட்டுப்போகுதேயென்று அந்த மூடனை அடித்து உதைத்துக் காலை உதறிக்கொண்டுபோனாலும் விடாமல் என் தகப்பனிருக்குமிடத்தைக் காண்பித்தாலாச்சுது இல்லாவிட்டால் உம்மை விடமாட்டேன் சுவாமி யென்று வம்புசெய்துக்கொண்டிருந்தனன். அச்சமயம் தலையாரிகள் ஓடிவந்து இவர்களைப் பிடித்துக்கொண்டு போய் அரசனிடம் விடுத்தனர். அரசன் முற்றிலும் உணர்ந்து மூடனைத் துரத்திவிட்டனன். அதைப்போல இவனும் நம்மை சுவாமியென மதித்து [illegible]ந்தனைசெய்கிறான். இவ்விபரீதத்திற்கு யாமென் செய்[illegible]

என, ஒருவரோடொருவர் பாஷித்துக்கொண் டிருக்கையில் மர்மமுணராத வழிப்போக்கன் கிஞ்சிற்றும் நம்பாமல் நீங்கள் சுவா

பிகளல்லது மனிதர்களல்ல. எனை ஏமாற்றிவிட்டு ஓடிப்போக நினைத்திடினும் யான் உம்மை விடேனென்று முறட்டுத்தனமாய் அவர்களைப்பிடித்த பிடியை விடாமல் தொடர்வழக் காடிக்கொண் டிருக்கையில் அம்மார்க்கத்தில் தமது சிஷ்யவர்க்கத்துடன் செல் லும் ஓர் தபசியானவர் கண்டு ஈதென்ன கூச்சலென்று அவர்களரு கிற் சென்று விசாரிப்பதாயினர்.

ரிஷி:—நீங்கள் யாரையா? வெகு வேடிக்கையான வாய்ச்சண்டை செய்துக்கொண்டிருக்கிறீர்கள்.

வீரப்ரதாபன்:—சுவாமி! இது ஓர் கூடகிகாமணியின் ஆச்சர்யகாக்ஷி இது வெகு நேரமாய் நடக்கிறது. இன்னுஞ் சற்று தாமதித் திடில் கைச்சண்டையும் விளையும் போற்காண்கிறது.

ரிஷி:—ஆ! ஈதென்ன ஆச்சரியம்? இதனை யான் நன்குணர விபர மாய்ப் புகல்வீர்.

காமேந்திரன்:—சுவாமி! யாங்கள் நால்வரும் காஸ்மீகர்தேசத்தை விடுத்து ஸ்தலயாத்திரை புரிந்து வருவோமென்று கானக மார்க்கமாய் வருகையில் இவன் யாரோ வழிப்போக்கன் ஓடி வந்து சுவாமிகளே எனக்கு வரம் தருவீரென்று தொடர்வழக் காடுகிறான்.

வழிப்போக்கன்:—ஐயா! சந்யாசியே! இவர்கள் நம்மைப்போன்ற மனிதர்களல்ல, யான் வரும்போது இந்நால்வரும் இந்தக் குளத்தில் ஸ்திரீரூபமாயிருந்தனர். மறுபடியும் கரைமீது வந்த பிறகு புருஷரூபமா யிருக்கின்றனர்களே இவர்கள் தேவர்க ளன்றி மனிதரென சொல்ல முடியுமோ? தாங்களே ஆலோ சித்துப் பாரும்.

ரிஷி:—சரி! சரி!! அப்படியா! அடடா! இதில் ஆண்பிள்ளைகள் இறங் கி ஸ்நானஞ்செய்யலாமா? ஐயோ! அச்சமயம் தேவகன்னியர் கண்டால் சபித்துவிடுவார்களே!

நியாயகேசரி:—சுவாமி! ஈதென்ன அற்புதம்? இதன் மர்ம ரகஸ்ய மெங்களுக்கு நன்றாய்ப் புலப்படவில்லையே யாங்கள் இந்தடா கத்தி லிறங்கினவுடனே அகஸ்மாத்தாய் ஸ்திரீரூபமா யிருந் தோம் பிறகு கரைமீதேறின்பிறகு பழையபடியே புருஷரூப மாய் விளங்குவதாயினோம். ஆயினும், இதனுடைய சவிஸ்தார மின்னதென்றும் விளங்கவில்லை அருளிச் செய்வீர்.

ரிஷி :—அப்பா! அவ்விதமே தெரிவிக்கின்றேன், இந்த வழிப்போக்கன் சந்தேகத்தையும் தீர்க்கவேண்டும்; ஐயா! தாங்களும் இந்த குளத்திலிறங்கி மூழ்கி எழுவீர்.

என, நவின்றதை வினவிய வழிப்போக்கனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து தடாகத்தி லிறங்கி மூழ்கி யெழுந்தவுடனே தனது கிழரூபமாறி பனிரெண்டு வயதுடைய இராஜ கன்னி வடிவமாயினன். அச்சமயம் தன்ரூபத்தைத் தானேபார்த்து மஹா சந்தோஷமுடையவனாய் அம்மம்மா! இனி நமக்கு நற்காலந்தான், நாம் இவ்விதமே ஊருக்குப்போனால் தனவந்தர்வீட்டுப் பிள்ளைகளெல்லாம் நம்மீது மோகங்கொண்டு ஏராளமாய்த் திரவியங்களைக் கொடுத்து நம்முடன் சுகித்திருப்பார்களென பேராசை யுடையவனாய்க் கரைமீதி லேறிவந்தனன். பழையபடியே நரைத்த மீசையும் விகாரரூபமாகிய தனது கிழரூபமாய்க் காணப்பட்டு, சீச்சீ! ஈதென்ன மோசடியென்று நாணத்துடன் தலைகுனிந்து விசனமாயிருந்தனன். இந்த வேடிக்கையைப்பார்த்த நால்வரும் நகைத்து ஏனையா, இப்போதென்ன சொல்கிறீரென்று பரிகாசித்தனர், அச்சமயம், ரிஷியானவர் அந்த நால்வரையும் பார்த்து யாம் இங்கு தாமதிக்கலாகாது தேவகன்னியர் வந்துவிட்டால் சபித்திடுவாரென்று அழைத்துக் கொண்டுசிலதூரஞ் சென்று அருகிலிருக்கும் நந்தவனத்தின் வசந்த மண்டபத்திற்போயுட்கார்ந்து இவர்கள் ஸ்நானஞ்செய்த தடாகத்தின் மகத்வத்தைச் சொல்லுவதாயினர்.

ரிஷி:—அப்பா! இல்லறவாசிகளே! நீங்கள் ஸ்நானஞ்செய்த தடாகத்தின் மகிமையையுங்களுக்குப் புகலுதும் கவனமாய்க்கேண்மின் அஃதென்னவெனின், முற்காலத்தில் தேவகன்னியர் பூலோகத்தைக்காணவேணுமெனும் பேராவலுடன் அந்தந்த க்ஷேத்திரத்திற் சென்று அந்தர்யாமியாயிருந்து பார்க்குமளவில் எங்கும் சம்மதியின்றி அந்த நந்தவனத்திற் சென்று தமக்கிஷ்டமான திவ்ய ஸ்தலமிதுதானெனமதித்து, அங்ஙனமேழுநாள்வரையிலுமிருந்து மனோல்லாசமாய் ஆடிப்பாடி ஆனந்தசாகரத்தில் மூழ்கியவராயிருக்கையில் தேவலோகத்திற்குச் செல்லவேண்டுமெனும் நினைவுவந்து போவதும் வருவதுமாயிருக்கிறார்கள்.

காமேந்திரன்:—சுவாமி! அந்ததேவகன்னியர் போனதென்ன? இருந்தாலென்ன? அதைக்குறித்து யாங்கள் விசாரிக்கவில்லை சாதாரண தடாகத்தில் ஆண்பிள்ளைகள் இறங்கினால் ஸ்திரீரூபமாவதும், கரைமீது வந்தால் பழையபடியே புருஷரூபமாவதும் யாதுகாரணமோ? வென சந்தேகிக்கிறோம், அதனைமாத்திரம் எமக்குவிவரித்துரைப்பீரென வேண்டுகிறோம்.

ரிஷி:—அப்பா! அந்த அந்ததேவகன்னியர் தமது இஷ்டத்திற்கிசைந்த நந்தவனம் கிடைத்ததேயென, மனமகிழ்ந்தவராய் அந்நாதினமும் அங்குசென்று அந்த தாமரைப் பொய்கையிலிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்து அங்ஙனம்புஷ்பித்திருக்கும் நறுமணம் வீசும் மணமலர்களைப்பறித்துக்கொண்டு தேவலோகத்திற் சென்று பகவத்பக்தியானந்தராய் கவுரிபூஜைசெய்வதுமாயிருக்கையில், ஓர்நாள் தேவகன்னியர்பழையபடியே அந்நந்தவனத்தில்சென்று தடாகத்தி லிறங்கி ஸ்நானஞ்செய்யும் போது சில துஷ்டர்கள் ஸ்திரீகளிருக்கின்றனரே யென இச்சிறிதும் நாணமின்றி தாங்களும் தடாகத்திலிறங்கினார்கள். தேவகன்னியருக்குக் கோபம் பிறந்து இனிமேல் இத்ததடாகத்தில் எவர்கள் வந்து ஸ்நானஞ் செய்தாலும் எங்களைப்போலவே ஸ்திரீரூபமாய் விளங்கவேண்டுமென சபித்து விட்டுப்போயினர். அப்பால் அந்த ஆண்பிள்ளைகள் தேவகன்னியர்சபித்ததையும் தாங்கள் அகஸ்மாத்தாய் ஸ்திரீரூபமானதையும் பார்த்து, விசனமடைந்தவராய் "அடாதுசெய்தவர்படாது படுவர்" எனும் வாக்கியம் சரியாய் விட்டதென மதித்து, அவர்கள் அங்ஙனமே தேவகன்னியரைக் குறித்துத் தபம் புரியலாயினர். அப்போது தேவகன்னியருக்கு மனமிரங்கி அப்பா நீங்கள் புரியும் அருமையான தபத்திற்கு மனமிரங்கினோம். உமக்குவேண்டிய வரத்தைக் கேள் தருகிறோமென்றனர். அந்தத்துஷ்டர்கள் தமக்கு புத்திவந்ததென்று, அம்மணி யாங்கள் செய்த அபசாரத்தை மன்னித்துக்கொண்டு பழையபடியே புருஷரூபம் பெற்றுபோகும்படி வரங்கொடுத்தருளப்புவீரென பிரார்த்தித்ததும் தேவகன்னி

யர் அவ்விதமே அனுக்கிரகஞ்செய்து இனிமேல் யாவரேனும் இத்தடாகத்திலிறங்கினால் ஸ்திரீ ரூபமும் கரைமீது வந்தால் புருஷ ரூபமும் ஆகவேண்டுமென ஆக்ஞாபித்து விட்டுத் தமது வாஸஸ்தானத்திற்குத் தேவகன்னியர் போய்விட்டனர், அன்று முதற் கொண்டு இது வரையிலும் இவ்விதமே நடக்கிறது இதனாலே ரிஷிகளும் அந்தத்தடாகத்தி லிறங்குவதில்லை.

என, நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகன்று தமதிருப்பிடத்திற்குப்போய்விட்டனர், அப்பால் வழிப்போக்கன் அந்நால்வரையும் பார்த்து அப்பா! யான் மர்மமுணராமல் உங்களை பகவானெனமதித்து வரங்கேட்கலாயினேனேயென சிரித்துக்கொண்டு அவர்களிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தனது தேசத்திற்குப் போய்விட்டனன்.

அவன் போனபிறகு, காமேந்திரன், நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபனென்கிற நால்வரும் அங்கிருந்து பிரயாணமாகி மேற்றிசையை நாடிச்செல்வாராயினர். அவ்விதமாய்ச் சில தூரம் சென்று அங்ஙனம் படர்ந்திருக்கும் திகைப்பூண்டை நால்வரும் மிதித்துவிட்டபடியால் இவர்களுக்கு வந்த வழி தெரியாமல் வந்தவழியே வருவதும் போனவழியே போவதுமாயிருந்து நால்வரும் தனித்தனியே பிரிந்து ஒருவரையொருவர் தேடிக்கொண்டு காமேந்திரன் வடதிசையிலும், நியாயகேசரி மேற்றிசையிலும், வீரப்ரதாபன் தென்றிசையிலும், ஜெயப்ரதாபன் கீழ்த்திசையிலுமாக திகைதப்பிப்போயினர்.

Act 2. Scene 1.

இடம் ஞானபுரி

இராஜன்	ஞானேந்திரன்
மந்திரி	நித்தியானந்தன்
இராஜபத்தினி	சுந்தரவதனி
இராஜகுமாரத்தி	ஞானலோசனி

வைசியன், காமேந்திரன், வழிப்போக்கர்.

இவ்விதமாய் இராஜகுமாரனாகிய காமேந்திரனும், மந்திரிகுமாரனாகிய நியாயகேசரியும் பிரதானி குமாரனாகிய வீரப்பிரதாபனும் சேனாதிபதி குமாரனாகிய ஜெயபிரதாபனும் ஒன்றாய்ச்சேர்ந்து ஆரண்யத்தில் பிரிந்து நாலுபேரும் நாலுவழியாய்ப்பிரிந்து போயினர்.

காஸ்மீகர்தேசத்தரசபுத்திரனாகிய காமேந்திரன் தனது சிநேகிதரைவிட்டுப்பிரிந்துவடதிசையைநாடிச்செல்கையில் வழியிலேயிருந்த ஞானபுரியென்னும்தேசத்தைக்கண்ணுற்று, இனிநாம் இந்நகரிலிருப்போமாகில் நமது சிநேகிதரும் வந்து நம்மைக்காணுவார்கள், அப்பால் அவர்களுடனே நமது தேசத்திற்குப் போய் விடவேண்டும். நமது ஜாதகத்தின் நேர்மையும் ஜோசியன் சொன்னகணிதமும் தந்தைபுகன்ற புத்தியும் சபாரஞ்சிதன் சொன்ன உதாரணமும் யாம் அனுபவிக்கும் கஷ்டநிஷ்டூரமும் கிஞ்சிற்றும் பிசகில்லை. இனி இந்

தாலும் நமது நாட்டிலிறப்பதே கீர்த்தியாகும், அஃதன்றிமதியீனத்தினால் யாத்திரைவாசியாய் வந்து மதிமயங்கலாயிற்றேயென மனவிசாரமுற்றவனாயழுதுக்கொண்டிருந்தனன், என்னசெய்வான்? அரசபுத்திரனானமையால் யாதொருகைத்தொழிலுமுணராதவன் என்ன தொழில் புரிந்து ஜீவிப்பான்? அவன் சும்மாயிருந்தாலும் வயற்றுப்பசி சும்மாய் விடுமோ? பானையிற்சோறில்லாவிட்டால் பசி யதிகரிக்குமென்பதுபோல காமேந்திரன் பசிநோயினால் தவித்து வறுமைநோயிற் சிக்கித்தளித்து பிக்ஷையெடுப்பதற்கும் நாணமுற்றவனாய் மூன்றுநாள் வரையினும் பட்டினியாயிருந்து நாலாவது தினத்தில் ஆனகாரியம் ஆகுமென்று மனத்துணி அந்திப்பொழுது வரையினும் முகத்தில் வஸ்திரத்தை மூடிக்கொண்டு நித்திரைபுரிந்தும் இராக்காலத்திலெழுந்து வீடுகள் தோறும் சென்று தன திருகரமுமேந்தி பிக்ஷாந்தேகி மாதான்னபூர[illegible]ஸ்வரியென்று யாசித்தருந்தி ஜீவித்துக்கொண்டு காலங்கழித்[illegible]ந்தனன்.

இங்ஙனம் காஸ்மீர்தேசத் தரசபுத்திரனாகிய காமேந்திரன் கதி இரந்துண்டு பிழைக்கும் இழிவான ஜீவனமாயிருக்கையில் ஞானபுரியரசன் குமாரத்தியாகிய ஞானலோசனி பிறந்து வளர்ந்து பருவதிசையடைந்த பின்னர் தாய் தந்தையர் மனமகிழ்ந்து தமது புத்திரிக்கு மணஞ்செய்வற்கிசைந்து தாதிகளால் விசாரிக்க ஞானலோசனி கிஞ்சிற்றும் சம்மதியின்றியவளாய் உலகவாழ்வு பொய்யாகும் சரீரமோ நீர் மேற்குமிழி நிலையிலாவாழ்வு இவற்றிற்குஉதாரணம்.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

நிஷ்டையிலேபுரிந்துமனத் துறவடைந்த பெரியோர்கள்
  நிமலன்றனைக்
கிட்டையிலேதொடுத்துமுத்தி பெருமளவும் பெரியசுகம்
  கிடைக்கும் மாந்தர்
இஷ்டமதாய்த் தமதருமை மைந்தருக்கு மணம்பேசி
  விரும்பித்தாலி
கட்டியிலேதொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டும்
  கவலைதானே.

என்னுந்தன்மையாய் சிற்றின்பத்திறத் திஞ்சிற்றுஞ் சாரமில்லை எத்தீதியும் பேரின்பத்தையே நாடியிருந்திடில் ஜனனமரணமின்றி பேரானந்தமாயிருக்கலா மென்று சாஸ்திரபுராணங்களிலும் முறையிடுகின்றனவே, அவ்விதமிருக்க ஏனோ மணம் புரிந்துக்கொள்வவென்றுரைப்பது நன்கல்லவென்று தான் வசிப்பதற்காக ஓர் கன்னியாமடம் கட்டித்தரவேணுமெனக்கேட்டுக் கொண்டதினால் ஞானேந்திரனும் சம்மதித்து சிற்பசாஸ்திரிகளாற் பிரகாசப்பெருந்திய கன்னியாமடம் கட்டி தனது புத்திரியாகிய ஞானலோசனியை அந்த வாசஞ்செய்யும்படியாய் ஆக்ஞாபித்து, சிலதாதிகளையும் துணையாயனுப்பினான்.

இவ்விதமாய் [illegible] சென்றபின்னர், இராஜகுமாரத்தியாகிய ஞானலோசனியானவள் புருஷர்களின் நிழல்படாத வண்ணமாயிருப்பதற்கிசைந்ததாய் சேவக சிப்பந்திகளும் பெண்சேனையாயிருக்கும்படி திட்டஞ்செய்துவைத்துக்கொண்டாள். ஆனால் அரசனுக்குமாத்திரம் தனது குமாரத்தி விவாகமின்றி வெறுத்திருப்பதற்காக மஹா விசனமடைந்தவனாயிருந்தனன், மஹாராணியும் சில சமயம் தாதிகளினால் தனது புத்திரியாகிய ஞானலோசனிக்கு சிற்றின்பமே சிறந்ததெனமதிபுகட்டி யாதாவொரு புருஷனை மணந்து சுகானந்தமாயிருத்தல் மேன்மையாகுமென ஆசை விளைவிக்கும்படி பாஷித்துக்கொண்டிருக்கும்படியாய்ச் சொல்லியனுப்புவள்.

அவர்களும் இராணியின் ஆக்ஞையின்படியே அடிக்கடி சமயோசிதமாய் ஞானலோசனிக்கு சிற்றின்பசாஸ்திரபுராண மனைத்தும் கொடுத்து அம்மணி இதை வாசித்தால் யாங்கள் செவிகுளிரக் கேட்டு மனமகிழ்வோமென்று தந்திரோபாயமாய்ப் புகன்றிடினும் அந்த உத்தமியாகிய ஞானலோசனி வாசிக்கும் புத்தகமனைத்தும் கேட்போர்மனதை அங்கஜன் கணையாலடிபடச்செய்து மோகவெறியால் மதிமயக்கி மையலாற் றிகைத்து மயங்கும்படி செய்யினும் ஞானலோசனி மாத்திரம் தனதுளத்தை சிற்றின்பத்திற் செல்லவிடாமல் ஒவ்வொரு பதத்திற்கும் பேரின்பவழி காண்பிக்கும் ஞானார்த்த உதாரணங்காட்டி உலகியல்பு வெளிமயக்கமென்று அறிவானந்தத்தை விளைவிப்பாள். இவ்விதமே பருவதிசையடைந்த ஒரு வருஷம் வரையினும் தானே கற்றுணர்ந்த வித்யாசாமர்த்தியத்தால் மணம் புரிதற்கிடங்கொடாதிருந்தனள்.

இங்ஙனம் ஞானலோசனியின் மனது இத்தகையதா யிருக்கையில் அந்நகரில் யாசித்துண்ணும் காமேந்திரன் தனது காலவித்தியாசத்தை நினைந்தழுதுக்கொண்டு, அடடா! யாமென்ன கற்றறி மோழையைப்போல் கஞ்சிக்குக்காற்றாய்ப் பறக்கலாயிற்றேயென மனவிசாரமடைந்து சோம்பலென்னும் சுழல்காற்றி லகப்பட்ட சருகுபோற்றினகத்து, பிழைக்கும் மார்க்கம் யாதொன்றும் தோற்றாமல் அந்திப்பொழு[து] வரையிலும் சத்திரத்திற்றானே செத்துக்கிடக்கும் விழுபிணம்போற் படுத்த படுக்கையிலிருந்து பசி யெடுக்கும்போது மெல்லென எழுந்து வீடுகள் தோறும் போய் பிக்ஷாந்தேகி மாதான்னபூரணேஸ்வரியென யாசித்துக்கொணர்ந்த சாதத்தைப் புசித்துவிட்டு சத்திரத்திற்றானே சயனித்துக்கொள்வான், இவ்விதமாய் சிலநாட்கழித்த பின்னர், ஓர் நாள் தன்னுடைய சிநேகிதரை நினைந்துக்கொண்டு அவர்கள் மூவரும் எத்திசையில் சிதறித்திகைத்திருக்கின்றாரோவென மனஞ்சலித்து, நாம் இந்நகரில் அனுதினமும், பசியாவிரப்பதிலும் கானகவாசியாய்ச் சென்று நமது நேயரைத்தேடிப் பார்ப்போம், அவர்கள் அகப்படாவிட்டால் அவ்வனத்திற்றானே திரிந்து வனமிருகங்களாற் சாவதேமேன்மையென்று மனந்துணிந்து மெல்லெனவெழுந்துட்கார்ந்து ஆலோசனைபுரியும்போது அவனுடைய கிரகசாரபலனுக்கிசைந்த சோம்பலானது அவன் மனதைச்சிக்குப்படுத்திக் கலவரப்படச்செய்தன. ஆனல் தனது காலத்தின் விபரீதமென்றிருந்தனன். அச்சமயம் அருகிலிருந்த வழிப்போக்கனாகிய ஓர் பிரயாணி அவனைப்பார்த்து சொல்லலாயினன்.

வழிப்போக்கன்:—அப்பா! உன்னைக்காணில் அரசகுமாரனைப்போன்ற அழகும், எதிர்த்தோரை வெல்லும் வீரப்ரதாபமும் பொருந்தியிருக்கின்றனவே, நீயாது மனவருத்தத்தை முன்னிட்டு எழுந்திருக்கச் சக்தியற்ற விழுபிணம்போல மதிமயங்கி அழுதுக்கொண்டு, அந்திப்பொழுதானல் யாசித்துண்பதும் பகற்பொழுதினைத்தும் சித்திராதேவியின் புத்திரனைப் சயனித்திருப்பதுமாயிருக்கின்றனை?

காமேந்திரன்:—ஐயா! என்னைப்போற் கஷ்டஜீவனும் உலகிலுளரோ அப்பப்பா! யான் பட்ட[illegible]னுபவிக்கில் ஆவியொழிந்து எமலோகமணுகுவர் யானோ தைரிய சாலியாகையால் சாவதற்கஞ்சி இன்னும் உயிருடனே இருக்கிறேன்.

வழிபோக்கன்:—ஐயா! நீர்புகல்வது எனக்குச்சிரிப்புவருகிறது. அஃதேனெனின் எழுந்திருக்கச் சக்தியற்ற விழுபிணம்போல யாதொரு கைத்தொழிலும் புரியாமல் படுத்தபடுக்கையிற்றானே இருந்துக்கொண்டு அந்திப்பொழுதானால் ஒரேவேளை உணவு சம்பாதித்துச் சாப்பிடுகிறாயே உனக்கென்ன கஷ்டம்? இவையனைத்தும் தாய்தந்தையர் குற்றமேயன்றி மற்றவரை வெறுப்பதற்கியலாது.

காமேந்திரன்:—ஈதென்ன ஆச்சரியம்?

வெண்பா.

மாலைப்பொழுதன்று மஞ்சளரைத்தேகுளித்து
வேலையினுக்கிட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தனானாலென்செய்வாள் பின்.

என்னுந் தன்மையாய் தாய்தந்தையர் பெற்று வளர்த்திடினும் அவரவர் கர்மானுசார விதிப்படியே சுகதுக்கமடையுமல்லாமல் தாய்தந்தையரை வெறுப்பது மதியீன மல்லவோ?

வழிப்போக்கன்:—அப்பா! அவனியில் வசித்துலாவும் மாந்தர்கள் பிள்ளைகளைப்பெற்றால் பெரியவர்களாயினோமென கர்வித்து, அவர்களை அதட்டிமிரட்டி வளர்க்காமல் அவர்களிஷ்டப்படியே விட்டுவிட்டால் உன்னைப்போலவே யாதொருகைத்தொழிலேனும் புரிந்து ஜீவிக்கச் சக்தியின்றி வறுமையாளராயலைந்து,

கட்டளைக்கலித்துறை.

அள்ளிக்கொடுத்திடும் செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும்பட்ட கடனுக்குமென்னைக் குறித்த தல்லால்
அள்ளித்திரிகின்ற நாளையிலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்குவைத்திலனே தந்தையாகிய பாதகனே.

என விசனமடைந்திடுவாரல்லவோ? ஆகையால், முறுக்கிவளர்க்காத மீசையும், மிரட்டி வளர்க்காத பிள்ளையும் வழிக்குவாராதென்பதுபோல தாய்தந்தையர் பிள்ளைகளைச் சிறுவயதில் கல்வி யேனும் கைத்தொழிலேனும் கற்று காசு சம்பாதிக்கும் மார்க்கத்தை கல

ணிக்கும்படியாய்ச் [illegible]வாராயின் தாமும் பிழைத்துத் தாய் தந்தையரையும் காப்பாற்றுவர். அத்தன்மையாகவே உன்னைப்பெற்றோர் உன்னை சிறுவயதிலிருந்தே அதட்டி மிரட்டி வளர்த்தால் இவ்வளவு கஷ்டமடைய மாட்டாய். ஆயினும் பெரிதல்ல. நீயோ ஆண்பிள்ளை தெருவழியே சென்றால் விறகுவெட்டி விற்றாயினும் ஜீவிக்கலாமல்லவோ? வென, நன்மதி [illegible]என்று காமேந்திரனுக்கு ரோஷம் வரும்படியான விதமாய்ப் பாஷித்துத் தன திருப்பிடம் போயினன்,

அப்பால், அவன் யோசித்துப் பார்த்து, சரி! சரி!! இதுவும் நல்ல ஆலோசனையே ஆகும். கைகாலை மடக்கிவைத்துக்கொண்டு மூலையிற் சயனித்திருந்தால் நமது சிநேகிதரைக் காண்பதெவ்விதம்? சோம்பரென்பவர் தேம்பித்திரிவரென்பதற்கிசைந்தவிதமா யிருந்தால் நன்கல்லவென்று தன்மனதைத் தானே திடப்படுத்திக்கொண்டு நாம் இந்நகரில் யாதேனும் ஓர் தொழில் புரிந்துக்கொண்டிருந்தால் நமது சிநேகிதரைக்காணலாமென்று அங்கிருந்து பிரயாணமாகி பிர்ம, க்ஷத்ரிய வைசிய, சூத்திரர் வீதிகள்தோறும் சென்று யாம் என்னதொழிற்புரிவோமென்று யோசித்திருக்கையில் தன் மனதிற்கு யாதொன்றும் தோற்றாமல், வித்யாசாலை வைத்துக் கொண்டால் பெரியமனுஷாள் யாவரும் வருவதும் போவதுமாயிருப்பார்கள். அச்சமயம் நமது சிநேகிதரிருப்பிடத்தைக் கவனித்துக் கொண்டு அவர்கள் துணைப்பற்றி நமது தேசத்திற்குப்போய் விடுவோமென்றெண்ணியவனாய் அவ்வீதியிலிருக்கும் வைசியனைப்பார்த்து ஐயா! யான் சிறுவர்களுக்கு வித்தியாப்பியாசஞ் செய்துவைப்பதில் மிகவும் தேர்ச்சியடைந்தவன். ஆகையால் எனக்கு ஒருவித்தியாசாலை ஏற்படுத்தி கல்வியுணரும் சிறுபிள்ளைகளையும் சேகரித்துக் கொடுப்பீரென்று வேண்டிக்கொள்ளவும் அவ்வன் விசாரிப்பதாயினன்.

வைசியன்:—ஐயா! நீர் யார்? நீர்வசிப்பது எந்நகர்? யாதுகாரணமாய் இத்தேசத்தில் வருகலாயினை?

காமேந்திரன்:—ஐயா! யான் வசிப்பது பலதேசம்?

வெண்பா.

மன்னனுமாசறக்கற்[illegible]னுஞ் சீர்தூக்கின்
மன்னனிலுங்கற்றோன் [illegible]றப்புடையோன் — மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பி[illegible]லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாம் சிறப்[illegible]

என்னுந்தன்மையாய் யான்பிறந்ததேச[illegible]வோ அறிகிலேன் யான் சிறுவயதிலிருந்தேசர்வதேசசஞ்சாரியாய் ஆங்காங்கு வித்தியாசாலைவைத்து சிறுவர்களுக்குக்கல்வி கற்பித்து ஜீவிக்கவேண்டுமென ஆவலுற்றுவந்தேன்.

வைசியன்:—மஹாசந்தோஷம் தமது பெயரென்னதெரிப்பீர்.

காமேந்திரன்:—கல்விக்கரசாகிய காமேந்திரனென்றுணர்வீர்.

வைசியன்:—அப்பா! காமேந்திரா! உனது இஷ்டத்தின் படியே இவ்வீதியிலிருக்கும் வைசியர்கட்கெல்லாம் தெரிவித்து அவர்களுடையபிள்ளைகளையெல்லாம் சேர்த்து விடுகிறோம்.

என, நவின்று அவ்வைசியன் தமது இனத்தினர்களையெல்லாம் வரவழைத்து ஓர் சுபதினத்தில் காமேந்திரனுக்கு வித்தியாசாலை ஏற்படுத்தி தமது இனத்தினராகிய வைசிய பிள்ளைகட்கெல்லாம் வித்தியாப்பியாசம் செய்யும் படியாய் ஆக்ஞாபித்து காமேந்திரனுக்கு சாப்பாட்டு செலவிற்காக சம்பளமும் ஏற்படுத்தினர், இவ்விதமாய் நாளுக்குநாள் காமேந்திரன் அந்நகரவாசிகளின் பிள்ளைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்வதும் அவர்களாற் கிடைக்கும் சம்பளத்தை வாங்கி செலவு செய்து நாவிற்கினியநல்லுணவுகள் சமைத்துப் புசித்துக்கொண்டிருக்கையில் தான் அனுபவித்த கஷ்டத்தையெல்லாம் மறந்து தாசிகவீட்டுமாப்பிள்ளைபோல உடை ஆபரண சிங்கார அலங்கிர்தனாயிருக்கும்போதுகையிற்காசிருந்தால் தாசிகட்குப்பஞ்சமா வென்பதற்கிணங்கவிதமாய் மனதிற் கிசைந்த வேசிகளிடத்தில் நேசித்து மனோல்லாசமாய் தனது சிநேகிதரையும் மறந்திருந்தனன்.

இங்ஙனம் காமேந்தி[illegible]லை இத்தகையதாயிருக்கையில் ஓர் நாள் அந்நகரத்தரசகுமாரத்தியாகிய ஞானலோசனியானவள் தனது தோழியருடனே நந்தவனத்திற்குப் போகும்போது காமேந்திரன்

கண்டுமதிமயக்கமுற்றவனாய் அடடா! இத்தகையபெண்ணையல்லவோ மணம்புரிந்து மருவிசுகித்திடவேண்டுமென காதலுற்று. அன்றைய தினம் வித்தியாசாலையிலிருக்கும் பிள்ளைகளுக்கு விடுமுறையென வீட்டுக்கு அனுப்பிவிட்டு தனக்கிஷ்டமானபடியே ஆடை ஆபரணங்களை சிங்காரித்துக் கொண்டு நெற்றியில் திலதப்பொட்டணிந்து வெற்றிலைச் சுருள் கையிற்பிடித்துக் கொண்டு வேடிக்கையாய் யாதொருதுணையுமின்றி தனியாக வேகந்தவனத்தை நாடிச்சென்றனன். அச்சமயம் ஞானலோசனி தனது தாதியருடனே பூங்காவனத்திற் புட்பித்திருக்கும் நறுமணம் வீசும் மணமலர்களைப்பறித்து செண்டாகட்டியணிந்து ஒருவர் மீதொருவ ரெறிந்து பலஉல்லாசகேளி விலாசமாய் விளையாடிக் கொண்டிருந்தனர். காமேந்திரன் அவர்களருகில் நெருங்கினவுடனே மனமயங்கி ஞானலோசனியின் வடிவழகை உற்றுற்றுப் பார்த்து பெருமூச்செறிந்து அடடா! இத்தகைய ரூபசுந்தரியும் உலகிலிருக்கின்றனளல்லவா? என்னசுந்தரம் என்ன சிங்காரம் என்ன அழகு, ஆ! ஹா!! அப்சரசமாதர்களென்று சொல்லக்கேட்டிருந்தும் காணவில்லை. யென்றாலும் மேலான இன்பந்தரக்கூடியவளென்றே மதிப்பிடக் கூடும் இவளுடையதிருமேனி பசுந்தங்கமயமாகவே இருப்பதற்கிசைந்தவிதமாய் போர்வையாகிய வஸ்திரமோ இந்திரவர்ணப்பட்டினுஞ் சிறந்து பளப்பளப்பா யிருக்கின்றனவே. இவளைநான்முகனாகியபிரம்மதேவன் சிருஷ்டித்தபடியினால்தான் அவனுக்குசதுர்முகனெனப்பெயரமைந்தனவென தனக்குத்தானேசொல்லிக்கொண்டு அவர்களருகில் ஒன்றும் தெரியாதவன் போல கடைக்கண்பார்வையாய்ப்பார்த்துக்கொண்டே அவ்வனத்திற் படர்ந்திருக்கும் மணமலர்களைப்பறித்துக்கொண்டிருந்தனன்.

அச்சமயம் தனது தாதியருடனே உலாவிக்கொண்டிருந்த ஞானலோசனியானவள் காமேந்திரனைப்பார்த்திடினும் கவனியாதவள்போல் தனது தாதியருடனே அரண்மனைக்குப்போய்விட்டனள். அப்பால் காமேந்திரன் யோசித்து நமதுகாதல் தணிவதெவ்விதம் அவளோ இந்நகரத்தரசப்புத்திரியாச்சுதே பலவந்தமாய் அவளைவசப்படுத்தவும் முடியாது அன்றி, நாம் நேராக அரசனைக்கண்டு பெண் விசாரிப்பதற்கும் இயலாது. யாவரையேனும் தூதனுப்புவோமென்றாலும் அரசனுக்குத் தெரிந்தால் ஆபத்தாய்விடுவதுடன் முதலுக்கே மோசமாய்த் தலையே போய்விடுமேயென்று மனவிசாரமடைந்தவனாய் தனது வாசஸ்தானத்திற்குவந்துவிட்டனன், அன்

திரவு முழுதும் நித்திரையின்றியவனாய் மதன் சரத்தினால் மதிமயங்கி காமநோய் பிடித்து மஹாதுயரடைந்தவன்போற் படுத்தபடுக்கையிற்றானே புரண்டுருண்டு பித்தனைப்போற் பிதற்றிக்கொண்டிருந்தனன்,

மறுதினம் வித்தியாசாலைக்கு சிறுவர்கள்வந்து வாத்தியாருக்கு திரேகசவுக்கியமில்லையென்று வீட்டுக்குத் திரும்பிப்போயினர். காமேந்திரனுடையசிநேகிதனாகிய வைசியன் மாத்திரஞ்சிநேகிதவாஞ்சையினால் அவனருகிற்சென்று விசாரிப்பதாயினன்.

வைசியன்:—மித்திரா! இத்தினம் தமது திரேக அசௌக்யமுற்ற காரணம் யாது?

காமேந்திரன்:—நண்பா! யான் யாதென்றுரைப்பேன் உலகின் மாந்தர்கட்கு சமயோசிதவாழ்வுதானே.

வைசியன்:—சரி! யான் வைத்தியனை அழைத்துக்கொண்டு வருகிறேன் கவலையுறாதீர்.

காமேந்திரன்:—ஐயா! எனக்கு மனவியாதியேயன்றி மற்றவையல்ல, அவற்றிற்குத் தகுந்த மருந்து இந்நகரத்தின் அரசபுத்திரியின் அதரபானமே எனது மையலென்னும் வியாதியைத் தீர்ப்பதற்குகந்தவையன்றி மற்றவையால் மனமயக்கந் தீராது.

வைசியன்:—(சிரித்துக்கொண்டு) சபாஷ் நன்மொழி பகர்ந்தீர் சரி! சரி!! தலைமாட்டுக்கொள்ளி தானே வைத்துக்கொள்வது போல் ஆவிக்கு அபாயந்தேடிக்கொள்வதற்காகவா அந்தப்பெண்ணை இச்சித்தாய்? உலகிற்ஜனித்த ஆண்பிள்ளைகட்குத் துணையாய் அநேக பெண்பிள்ளைகள் ஜனித்திருக்கின்றாரே உமக்குதானோ ஸ்திரிகள் கிடையார். கிஞ்சிற்றும் முன்பின் ஆலோசனையின்றி பேசகின்றீரே.

காமேந்திரன்:—ஐயா! உலகிற் ஜனித்தவரெல்லாம் ஸ்திரிகள் தானோ? கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ என்பதற் கிசைந்தவிதமாய்யாவரும் ஒரேவிதமான ஸ்திரீகளென்றெண்ணுவது பிறவிக்குருடர் யானையைத் தடவிப்பார்த்து உண்மையுணராத சங்கதிபோலாகும், அடடா! உலகில் ஜனித்திருக்கும் ஸ்திரீகளில் அவளுக் கவளே இணையன்றி மற்றவரை இணைசொல்லுவதற் கியலுமோ? அடடா! கதாசாரத்திலும் புராணங்களிலும் அப

சரசமாதர்களாகிய மேனகை, ரம்பை, திலோத்தமை ஊர்வசி யெனும் ஸ்திரீகள் தான் அழகானந்த முகவசீகர தேஜஸமைந்தவர்களென வாசித்திருக்கிறோம், அவர்களனைவரும் இவளுக்கு நிகரல்லவென்றிடின் அத்தகைய ரூபசவுந்தரிய மாதைக் கண்டு எவ்விதமாய் மனஞ்சகித்திருப்பது, யான் சும்மாயிருந்திடினும் மனது பற்பலவிதமாய்,

தரு இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

அடங்க... கொண்டு அலையுதேயென்செய்வேன்
ஆர்தீர்ப்பாரென்கவலை

அநுபல்லவி.

திடமு... சாதுக்கள் காணினும் காதலுற்று
சித்தந்திகைப்பரெனின் ... மோயென்மோகம் (அடங்)

சரணங்கள்.

(1) மேகநிறமமைந்த கூந்தலுகிணையிந்த
மேதினி தனிலுண்டோ
பாகுசேர்மொழியாளின் பல்வரிசையைக்காண
பஞ்சபாணன்கணைகள் நெஞ்சைவருத்துதையோ (அ)

(2) நாழிகையோருகமாய் நிகழ்ந்திடினுமெந்தன்
நாவுலர்ந்து காதல்பெருகுதே
ஆழிபெருக்கெடுத்து அவனிமூழ்கினும்
அவளுடன்சுகிக்காமல் ஆவியும் நீங்காது (அடங்)

(3) மாரன்விடுங்கணையால் மனமிகசோருதே
மையலதிகரித்து
தாரணியிலவள்போற் றையலரைக் காண்கிலேன்
தவிக்குதேயென்றிேகம் தணலாயெரியுதே. (அடங்)

ஐயா! யாம் உலகிற் ஜனித்து அநேககன்னியரைக் கண்டிருக்கிறோம் ஆனாலும் அவளுடைய ரூபசவுந்தரியத்தைவர்ணித்துரைப்பதற்கு என்னாலுமாகாது எங்களப்பனாலு மாகாது அடடா! என்ன ரூபசவுந்தரியம்?

வைசியன்:—அப்பா! உமக்கென்ன பித்தமதிகரித்து பைத்தியம் நேரிடுவதில் இதுதான் இளம்பைத்தியமோ? ஆனாலும்யாசகன்இராஜஸ்திரீயைமோகித்து ஏக்கமுற்றது போல நீயோ கைவரண்ட ஏழை. அவளோ இராஜகுமாரத்தி. அத்தகைய கன்னிகையை இச்சிப்பதெனின் கேட்போர் பரிகசிப்பர். அன்றியும் ஸ்திரீகளோவெனின் யாவரும் ஒன்றுதானே அவ்விதமிருக்க உன்சக்தியனுசாரமாய் மற்றொருமாதைமணந்து சுகித்திடலாகாதா?

காமேந்திரன்:—ஐயா! இத்தரணியிலுதித்தமாதரில் எத்தகையோரும் அவளுக்குச் சமானமாவர்களோ! அடா! என்ன அழகு! என்னசுந்தரம்! யான நந்தவனத்திற் [illegible] உல்லாசமாய்ச் சென்றிருந்தேன். அங்ஙனம் சிலசேடியருடன் வனமயில் [illegible] பிரகாசித்திருந்தனள், அத்தருணம் சற்று உற்றுப்பார்த்தேன் அச்சமயமே எனது மனமானது அவளுடைய மோகவலையிற்சிக்கிய கிளியைப் போல சிக்கிய மாய்விட்டது; அஃதேதெனின் சாதாரணபெண்களாயின் ச்சீ! இவள் கெட்டாளென திரும்பி விடுவேன். அந்தரூபசவுந்திரியின் அழகோவெனின் அவ்விதமாய்மதிப் பதற்கியலாது அவளுடைய கூந்தலானது காளமேகத்திற்கும் உவமை சொல்வதற்கியலாது என்றாலும் அதனை வாரி முடித்து நறுமணம் வீசும் மணமலர் களுடன் வானத்திற் கலங்காரமாய் ரவிமதி பிரகாசிப்பது போலசந்திரபிறை சூரியபிறை சூடியிருக்கும் விநோதமேகாண்பதற்காயிரம்கண் வேண்டும் பூரணச்சந்திரோதயம்போன்ற அவளுடைய நெற்றிக்கு அலங்காரமாயணிந்திருக்கும் திலதப் பொட்டணிந்து வள்ளைக்கொடியில் மின்மினிப்பூச்சு பிரகாசிக்கும் தன்மையாய் இருசெவியிலும் நவரத்ன கசிதமயமாயணிந்திருக்கும் ஆபரணாதிகளும், சேல்கண்டை போன்ற இருவிழிகளிலும் மையெழுதியிருக்கும் விநோதமே பார்க்கபார்க்க பரமானந்தமாய் விளங்கும். முல்லையரும்பெனத் துலங்கும் பல்வரிசைகளோ முனிவர் தபத்தையழித்து மோகானந்த சாகரத்திலாழ்ந்திடச் செய்யுமென்பதற்குக் கிஞ்சிற்றும் ஐயமில்லை, அவளுடைய சரீரகாந்தியோ ஆபிரத்தெட்டுமாற்றுடைய அபரஞ்சி சிலைக்குச் சமானமாயிருப்பதுடன் அணிந்திருக்கும் இந்திரவர்ணப்பட்டு இந்திராணியும் உடுத்திபிராள். பொற்கலசம்போன்ற தனத்திலணிந்திருக்கும் ரவிக்கையின் பிரகாசமே சந்திரோதயமான

தென்றமர் புகழ்ந்துரைத்திடு [illegible]ம் ஆலிலைக்குச்சமானமாகிய வயறும், சிங்கத்திடைபோன்ற இடையும் அவற்றிற் கலங்காரமாய் அணிந்திருக்கும் சிலங்கைக்கட்டிய பொன் ஒட்டியாணமும் செங்கிரைத்தண்டுபோன்ற தொடையும் பார்க்க பார்க்க பஞ்சபாணன் கணையானது தைத்திடா[illegible]ல் விடுமோ? என்றுலும் யான் சென்ற வேளை அந்தி[illegible]பொழுதாகையினால் அவனும் நேரிட்டான் மன்மதனும் தன[illegible] சேனைவீரராகிய வசந்தனுடனே தென்றற்றேரேறி க[illegible]மபுவில்லைக் கரத்திலேந்தி அருஞ்சமர் புரிபவன்போல வ[illegible]த்திரு[illegible]துக்கொண்ட விரகத்தினால் என[illegible]ம் பலவிதமு[illegible] [illegible]ைகப்படதாயின.

என[illegible] [illegible]மோ[illegible] வெறியால் பிதற்றிக்கொ[illegible]ண்டிருந்தனன். வைசியனோவெனின் சீச்[illegible] இவன் கெட்டான் முழுமூடன்கேவடுரும்போதுமதிகெட்டு வருமெ[illegible]ன்பதற்கிசைந்த விதமாய் இவனிருக்கும் நிலைமைக்கு இராஜகுமாரத்[illegible]தி மீது காதலுற்றது வேடிக்கை யல்லவோ? இவனுடையதுர்க்கா[illegible]லத்தினால் தான் விட்டிற் பூச்சி விளக்கொளியில் வீழ்ந்துமடியும் ப[illegible]வனைபாக ஆவிக்கபாயத்தைத் தானே தேடிக்கொள்வதாயினன். இவன் இவ்விதமே உளறிக்கொண்டிருந்தால் யாவரேனும் சேள்வியுற்று அரசனுக்குத்தெரிவித்தால்அப்பால் இவன்கதிமயானவழிதானென நிர்மானித்துத் தன நிருட்பிடம் போய்விட்டனன்.

இங்ஙனம் காமேந்திரன் நினைவு காமசாகரத்திலாழ்ந்த கவலையா யிருக்கையில் இவனுடன் ஸ்தலயாத்திரையாய் வந்த மந்திரிகுமாரனாகிய நியாயகேசரியானவன் தன் நேயநடனே வனத்திற்பிரிந்து மேற்றிசையெல்லாந் தேடி வடதிசையாகிய ஞானபுரியில் வந்து தனது சிநேகிதனிருக்கும் சத்திரத்தில் வந்து மஹாவிசனமடைந்தவனாய் உட்கார்ந்தனன் அச்சமயம் காமேந்திரன் எங்ஙனமோ சென்றிருந்து வந்தவனாகையாலும் ஞானலோசனிமீதுற்றமையலாலும் அவன் பக்கத்திலுட்கார்ந்து, ஆ! விதிவசமே கைக்கெட்டினகனி வாய்க்கெட்டாமற் றட்டுண்டுபோனதுபோலாயிற்றே அவள். வனத்திற்கிடைத்தபோதே சுகித்து காதற்றணியாமல் கவலைப்படுவது மதியீனமல்லவோவென பல பல விதமாய் மனவிசாரமடைந்திருந்தனன். இவையனைத்தும் வினவிய நியாயகேசரிதனது நேயனாகிய காமேந்திரன்தானென மதித்து வினவுதலாயினன்.

நியாயகேசரி:—மித்திரா! யாது விசேஷம்? என்னென்னமோ சொல்லிக்கொண்டிருக்கின்றனையே.

காமேந்திரன்:—ஐயா! என்னுடைய மனக்கவலை பலவுளதெனினும் இந்நகரத்தரச குமாரத்தி வனத்தில் வந்திருந்தனள், அவளுடன் அங்ஙனமே சுகித்து காதற்றணியாமல் வந்துவிட்டேன். இச்சமயம் அதைக்குறித்து மனவிசார மடைந்தவனாயிருக்கின்றேன்.

நியாயகேசரி:—அரசே! எத்த[illegible]யும் சிநேகிதவாஞ்சையை மறக்கலாகாது. நாம் நால்வரும் நகரைவிடுத்து தேசசஞ்சாரியாய் வந்து வனத்திற் பிரிந்துபோன[illegible]ததியா[illegible]னவரும் ஒன்றாய்ச்சேருவோமென்றும் மதித்திடாமல் சிற்றின்பசாகரத்தில் மூழ்கியவராம் எனையும் கவனியாமல் உமது மனம்போனபோக்குக்கு வழி யொன்றில்லை யென்னும் தன்மையாய் பாவிக்கின்றீரே.

காமேந்திரன்:—நீர் யாரையா! இன்னாரென்றும் எனக்குத் தெரியவில்லையே.

நியாயகேசரி:—அரசே! கருணாகர மந்திரியின் குமாரனாகிய நியாயகேசரியானல்லவோ? ஒன்றும் தெரியாதவர்போற் பாஷிக்கின்றீரே.

காமேந்திரன்:—ஆ! அப்படியா! (உற்றுப்பார்த்து) மித்ரா! நீ அநேகநாளாய் எனைவிட்டுப் பிரிந்திருந்தமையாலும் க்ஷவரம் செய்துக்கொள்ளாமல் தாடி மீசையும் அதிகமாம் வளர்த்திருப்பதினாலும் அடையாளம் தெரியாமல் யாரோ எவரோ வென்றிருந்தேன். சரி! நல்லதிருக்கட்டும் இவையனைத்தும் பின்னால் விசாரித்துக்கொள்ளுவோம், நமது நேயர்களாகிய ஜெயப்பிரதாபனும், வீரப்ரதாபனும் எங்கிருக்கின்றனர்.

நியாயகேசரி:—நேயா! யானென்னவென்றுரைப்பேன் உன்னைப்போலவேயானும் அவர்களைவிட்டுப்பிரிந்து வந்தேன் அன்றியும், உங்கள் மூவரையும் யான் கானகமெங்கும் தேடியலைந்துங்காலங்கழித்து இந்நகரில் வந்து உன்னைக்கண்டேன், ஆனால் அவ்விருவரும் போன வழிதெரியவில்லை, என்றாலும்; நீர் அரசகுமாரனாகையால் அதிர்ஷ்டானுகூலத்திற் கிசைந்த விதமாய் கஷ்டகாலத்திலும் சுகஜீவியாயிருக்கின்றீர்.

காமேந்திரன்:—அப்பப்பா! யானனுபவித்த கஷ்டநிஷ்டூரம் நாயும் படாதே, நீங்களாகிலும் காய்கனிகளையாகிலும் புசித்துக் காலங்கழித் திருக்கீர்கள், யானோ வயிற்றுப்பசியால் களைத்திளைத்து சத்திரத்திற்றானே சயனித்திருந்து பசிவேளைக்கு ஐயமென்றுண்டு வயறுவளர்த்திருந்தேன்.

நியாயகேசரி:—அரசே! என்ன செய்வோம்? இடம்விட்டு இடம் பெயர்ந்தால் இத்தகைய ஆபத்துதான்; பஞ்சரத்திலிருக்கும் கிளிப்பிள்ளை பறந்துபோய் கஷ்டநிஷ்டூரத்திற் சிக்கியலைந்தது போலாயிற்று தாங்கள் இராஜபுத்திரராயிருந்தும் இரந்துண்டேனென்றுரைப்பது எனது சித்தத்தைப் பலவிதமாய்த்திகைத்திடச் செய்தனவே.

காமேந்திரன்:—மித்ரா! நீ புகன்றவை யுண்மையே ஆயினும் பஞ்சரத்திலிருந்த கிளிப்பிள்ளைக்கு எத்தகையதாய் ஆபத்து நேரிட்டன, அவற்றை யான் கவனித்துணர்கவிருப்புற்றேன் விவரித்துக் கூறுமின்.

நியாயகேசரி:—இராஜபுத்ரா! ஓர் தனவந்தன் தனக்கு மைந்தனில்லா மனக்குறையால் மனமெலிந்திருக்கையில், ஓர்நாள் தனது வீட்டினருகிலிருந்த விருக்ஷத்தின் கிளையிலிருக்கும் கூண்டிலிருந்து ஓர் கிளிப்பிள்ளை முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடனே தவறி திட்டென பூமியில்விழுந்தது, அச்சமயம் அருகிலிருந்த தனவான் அதனை மெதுவாயெடுத்து ஜலந்தெளித்துப் பக்குவமாய் தீனிகொடுத்துக் காப்பாற்றினன். அவ்விதமே சிலநாள்வரையினும் வளர்த்து தனது தாய் தனவந்தன் மனைவியென மதித்திருந்ததேயன்றி தான் பக்ஷியென மதியாமல் வளர்ந்தது, இவ்விதமே சிலநாளிருந்தபிறகு இறகு முளைத்தன. தனவந்தன் அதற்கு தங்கத்தினால் பஞ்சரமொன்று செய்து அதில்விடுத்து தாங்கள் புசிக்கும் அன்னபதார்த்தத்தைக் கொடுத்து வளர்த்துக்கொண்டிருந்தனன். ஓர்நாள் யாதோ ஓர் விஷயமாய் கிளிப்பிள்ளையைக் கரத்திலேந்தி தெருவீதியே போய்க்கொண்டிருக்கையில், சிலகிளிகள் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து போய்க்கொண்டிருக்கையில் தனவந்தன் கரத்திலிருந்த கிளிப்பிள்ளையும் ஜிவ்வென்றெழும்பி பறந்துபோனது. அச்சமயம் தனவந்தன் மனமெலிந்து, அடடா! தானீன்ற பிள்ளைதான்

தனக்குதவிஅஃதன்றி கிளிப்பிள்ளையைவளர்த்துக் கிலேசமுற யிற்றேயென் மனவிசாரமடைந்தவனுய்ப்போயினன். அப்பால், அந்தக்கிளிப்பிள்ளை கானகவாசியாய்பறந்து அநேகநாள்வரை யினும் அலைந்து தனது வழக்கத்திற்கிசைந்த அன்னபதார்த் தம் கிடையாமலும் வெய்யலிலும் மழையிலும் குளிரிலும் திகைத்து பலவித துயருற் றலைந்திருந்தன. அத்தன்மையாய் யாம் அன்னவஸ்திரங் குறையின்றி சதாசுகியாய் அரண்மனை யிலிருப்பதைவிடுத்து அறிவீனத்தால் ஆரண்யவாசியாய் வந்து அலைச்சற்படலாயிற்று, இனி நாம் தேசத்திற்சேருவதுதான் நன்மையாகும்.

காமேந்திரன்:—மித்திரா! யான் இந்நகரத்தின் இராஜகுமாரத்தியை மணம் புரிந்துக்கொண்டு வருவேனே யல்லாமல் தனியாய்வரு 1 வேனென்று மதிக்கவேண்டாம்.

நியாயகேசரி:—ஈதென்ன ஆச்சரியம்! நாம் இருக்கும் ஸ்தானத்திலி ருந்தால் தானே சகல நன்மையும் கிடைக்கும் அஃதன்றி,

கலிவிருத்தம்.

யானையைச்சலர்தனி லிழுத்தவக்கர
பூனையக்கரைதனில் பிடிக்கலாகுமோ
யானையும் சேனையும் ஸ்தலம் விட்டேகினல்
சேனையும் செல்வமும் தியங்குவார்களே.

என்னும் தன்மையாய் தாங்கள் உமது காஸ்மீகர் தேசத்திலிருந் தால் சகல தேசத்தரச புத்திரிகளின் திருவுருவப்படங்களை வரவழை த்து அவர்களில் உமக்கிசைந்தகன்னிகையை மணஞ்செய்திடுவர். அஃத ன்றி, நாமிருப்பதோ பரதேசம். இங்கு நமது சாமார்த்தியம் யாதொ ன்றும் செல்லாது தாங்கள் வீண் விசாரணை புரிவதாலாயபயனென் இனி நமது நகர்க்கேருவோம் புறப்படு வீரென்று தன்ஞ்லானவரை யினும் புகன்றும் காமேந்திரன் கிஞ்சிற்றும் செவியிற் கொள்ளாமல் ஞானலோசனியின் மையலிற் சிக்கியவனுய்ச் சொல்வதாயினன்,

காமேந்திரன்:—மித்திரா! இத்தருதி எனதுளம் அக்கன்னியின் மைய லென்னும் வலையிலகப்பட்டுத் தத்தளிக்கின்றன. அதனை அவ ளுடைய அதரபானமென்னும் அமிர்தத்தினல் தீர்த்து எனது காதலைத் தணித்து மையலென்னும் வலையிருந்து தப்பித்து

விடுவது உமது சகாயமாகும். ஆகையால், நீ எவ்விதமாயினும் அந்தப்பெண்ணிருக்குமிடத்திற்குத் தூதாகச் சென்று எனை மருவிசுகிக்கும்படி செய்யவேண்டும், இல்லாவிடில் எனது பிராணனை இங்ஙனமே போக்கிக்கொள்வேன்,

நியாயகேசரி:—அப்பப்பா! ஈதென்ன பெருமோசமா யிருக்கின்றனவே, அவளோ இராஜகுமாரத்தி யாச்சுதே அவளிடத்தில் எத்தனையோ பெண்சேனைகளாகிய தாதிகள் நிறைந்திருப்பார்களோ? அன்றியும் எத்தனையோ காவலாளிகள் கையில் வாளாயுதமேந்தி காவலிருப்பார்களோ? அந்தகைய பயங்கரமான காவலில் யான் எவ்விதமாய்ப் போய் எனது சிநேகிதனிடத்தில் வருவாயென்று அழைப்பது? சரி! சரி!! உயிருக்கே எமனைவந்துவிட்டனையே இதற்காகவா நீ எனை அழைத்துவந்தாய்,

காமேந்திரன்:—என தன்பிற்கிசைந்த நண்பா! நீ மனம்வைத்தால் எத்தகையகாரியமும் சித்தியாகுமே அவ்விதமிருக்க நீ அஞ்சுவதெனின் நம்பத்தகுமோ உன்னுடைய தந்தையின் சகாயத்தினுல் என்னுடைய தந்தை இராஜரீகம்புரிகின்றார், அவருடைய வயற்றில் பிறந்த உமக்கு எவ்வளவோ தந்திரோபாய மனைத்தும் தெரியுமே, நீயா இந்த அற்பகாரியத்திற்கு பயப்படுகிறது இனிகாலதாமதம் புரியாமல் எவ்விதத்திலேனும் அவளை என்முன் அழைத்துக்கொண்டு வந்து எனது காதற்றவிர்க்கவேணும் மறுத்திடில் என்னுயிர் நீங்கிவிடும். ஆகையால் இத்ததி எனதுயிர்பிக்ஷை யளித்தருளல் வேண்டும்.

நியாயகேசரி:—ஈதென்ன தர்மசங்கடம்? திரேதாயுகத்தில் இராவணன் சீதையை அபகரிக்கும் பொருட்டு மாரீசனை மாயமானுயனுப்பியதால் அவன் முதற்களபலியாகி பின்னல் இராவணுதியர் மரணமடைந்ததுபோல இச்சமயத்தில் நீர் இராஜகன்னிக்கு எனை தூதனுப்பி காவலாளிகளிடம் யான் அகப்பட்டு விசாரணையாயின் பின் என்னையும் உன்னையும் சேர்த்துகொல்வதற்காகவா இந்த துர்ரெண்ணத்தைத் துணிவுகொண்டனை? இராஜபுத்ரா! இத்ததியே நமது தேசத்திற்கு வருவீராகில் உமது தந்தையால் அந்தப்பெண்ணின் தந்தையினிடம் கிருபமூலமாய்தெரிவித்து தாங்களே அவளை மணம்புரிந்து சுகமுற்றிருப்பீர்.

காமேந்திரன்:—நேயா! நீ புகல்வதெவ்விதமெனின் "பசிவேதனையா லுயிர் நீங்குபவனுக்கு வருகிறமாதம் அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனந்தருகிறேனென்று தைரியம் சொல்லுவதுபோல" யான் காமநோயினால் காலன்பதியணுகுவது இன்றைக்கோ நாளைக்கோவென்னுஞ் சற்றுநேரமோவென்று நினைத்திருக்கையில்நீர் எனதிஷ்டத்தை நிறைவேற்றாமல்நகரில்வந்தபிறகுஎன் தந்தையால் இந்நகரத்தரசனுக்குத் திருகிருபமெழுதிய பிறகு எனதுமனதிற்கிசைந்த கன்னியைத் திருமணம்புரிவதெனின்நம்பத்தக்கதோ? யாம் எந்தகாலத்தில் நகரிற்சேருவது அதற்குள் என்னென்ன இடையூறுகள் நேரிடுமதனைத்தும் உணராமல்பாஷிப்பது சரியல்ல. எவ்விதத்திலேனும் அந்தக்கன்னியை யான் மருவி சுகிக்கும்படியாய்ச் சகாயம் புரிதல்வேண்டும்.

என, பலவிதமாய் காமேந்திரன் வினவுதலும் அவற்றிற் கிசைந்த விதமாய் நியாயகேசரியும் சமாதானஞ்சொல்லியும் கேளாமலிருக்கும்போது, இவர்களுடனே [illegible]தலயாத்திரை செய்வதற்காக வனவாசியாய் வந்து ஆரண்யத்திற்பிரிந்து தென்றிசையை நாடிச்சென்ற வீரப்ரதாபனும் இவர்களிருக்கும் ஞானபுரியில் வந்து அங்கிருக்கும் தர்மசத்திரத்தில் போயிருக்கையில் காமேந்திரனும் நியாயகேசரியுமோர்புரத்தில் உட்கார்ந்துசம்பாஷித்துக்கொண்டிருக்குங்குரலொலியைக்கேட்டு அவர்களருகிற்சென்று விசாரிப்பதாயினன்.

வீரப்ரதாபன்:—ஆ! எனது நண்பர்காள்! என்னைப்பிரிந்து எவ்விதமாய் வந்துவிட்டீர்கள்.

நியாயகேசரி.—ஆ! வீரப்ரதாபா! ஜெயப்ரதான் எங்கிருக்கின்றனன்.

வீரப்ரதாபன்:—ஐயோ! யான் உங்களைப்பிரிந்து வனமெங்குந்தேடியலைந்து பலவித துன்பமனுபவித்து என் தாயார் குடல் செய்த பாக்கியத்தினால் உயிர் நீங்காமல் ஓடிவந்து உமது முகதரிசனங் கண்டேன், ஆயினும், ஜெயப்ரதாபன் போனவழி தெரியவேயில்லை,

காமேந்திரன்:—நேயா! நாம் வீட்டிலிருந்து புறப்படும்போதே பலவித அவசகுனம் நேரிட்டது அதற்கேற்றாப்போல யாமனைவரும் பலவித துன்பமனுபவித்தோம். ஆயினும் பெரிதல்ல இனி நமக்கு நற்காலந்தான். ஜெயப்ரதாபன் விஷயத்தில்

எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை, அவன் நம்மைக் கொஞ்ச நேரம் வரையினும் ஆரண்யத்திற் தேடிப்பார்த்து அகப்படவில்லையென்றுமதித்து அரண்மனைக்குப் போய்விட்டான் போலிருக்கின்றது.

வீரப்ரதாபன்:—சரி! அப்படியானால் நமது நகரிற்கேகுவோம் வருவீர்கள்.

காமேந்திரன்:—நேயர்காள்! நீங்களிருவரும் எனக்கு இரண்டு கைகளைப்போல துணையாயிருப்பதால் உங்களால் எனக்கு ஓர் காரியம் ஆகவேண்டும்.

என, புகன்றவை வினவிய மர்மமுணரா வீரப்ரதாபன் மஹாவீராவேசத்துடனே புஜத்தைத் தட்டிக்கொண்டு அரசே இத்ததியே சொல்லுவீராகில் யான் முடித்திடுவேனென்று முன்பின் யோசியாமல் பிரமாணிக்கஞ் செய்துவிட்டனன், இவ்விபரீத சத்தியத்தைக் கேள்வியுற்ற நியாயகேசரி கலகலவென சிரித்து சபாஷ்! சபாஷென் சொல்வதாயினன்.

நியாயகேசரி:—அப்பா! வீரப்ரதாபா! நீ பிரதானியின் குமாரனானையால் உன் தந்தை எவ்விதமாய் யாதொன்றும் முன்பின்யோசியாமல் செய்துவிடுகின்றாரோ அத்தன்மையாய் நீயும் ஆழமறியாமல் காலிட்டுக்கொண்டு அலைச்சற்படுபவர்போல ஆலோசனையின்றி பிரமாணிக்கஞ் செய்துவிட்டீரே அரசகுமாரனாகிய காமேந்திரன் மனக்குறிப்பை யுணர்ந்தீரா?

வீரப்ரதாபன்:—ஆ! ஈதோர் பெரியகாரியமா? உயிரைக்கேட்டாலும் தருவேனேயல்லாமல் யான் பின்னிடைவேனென்று மாத்திரம் மனதில் வகித்திடாதீர்.

காமேந்திரன்:—சரி! இதுதான் சிநேகிதரியல்பு நேயர்கட்கு ஆபத்துவரின் ஆவியைத்தந்தாவது காப்பாற்றுவதுதான் நட்பிற்கியன்றவையாகும், அப்பா! வீரப்ரதாபா! அவ்விதமாய் உன்னைகொன்று யான் வாழ்வது சிலாக்யமாகுமா? அவ்விதமாய் யாதொன்று மதித்திடவேண்டாம், யான் இந்நகரத்தரச குமாரத்தியின்மீது மோகங்கொண்டேன் அவளை என் முன் அழைத்துவந்துவிடவேண்டும். அவ்வளவு சகாயம் புரிந்திடில் யான் அவளை மருவி சுகித்து வையற்றணிவேன்,

நியாயகேசரி.—ஐயா! வீரப்ரதாபரே உம்மாலாகுமா? அரைவீட்டிலிருக்கும் பெண்ணை * அம்பலத்தில் அழைத்துக்கொண்டு வருவதற்கு. எத்தகைய சுத்தவீரனாயிருந்திடினும் நேரிலிருந்து சண்டைசெய்தால் அமர்க்களத்தில்தோர்த்தாலும்சரிஜெயித்தாலும் சரியேயென்று ஒருகை பார்த்துவிடலாம். அஃதன்றி பருவதிசையடைந்து கன்னியாமடத்திலிருக்கும் பெண்ணை எவ்விதத்தில் உயிருடன் கொண்டுவருவது அந்தக்கோட்டையைச் சுற்றிலும் எத்தனையோ வீரப்ரதாப ரணரங்கசூரர்கள் உருவினகத்தியுடனே காவல் புரிகின்றனரே அத்தகைய பயங்கரமான காவலில் புகுந்து இராஜபுத்திரியை அழைத்துக்கொண்டு வருவதற்கு யாவராலாகும், சில சமயம் வெளியில் வந்தபின் கைப்பற்றுவோமென்றிடினும் தாதியர் காவலிருக்கின்றனரே, இவ்விதமெல்லாம் கூரும் பயங்கரமான காவலிலிருக்கும் இராஜகுமாரத்தியை அழைத்துக்கொண்டு வரும்படியாய் அரசகுமாரன் சொன்னால் ஒப்புக்கொண்டு பிரமாணிக்கஞ் செய்தல் புத்தியீனமல்லவா? எத்ததியும் அரசர்கட்கு மோகமே பெரிதாயிருக்கும், மந்திரிகள் அதற்கிசைந்த நன்மதி புகட்டி விலக்குவது வழக்கம் அவ்விதமாகவே யான் காமேந்திரனுக்குப் பற்பலவிதமாய் நியாய நுட்பமனைத்தும் புகன்று மறுக்கும் சமயத்தில்நீர் ஓடி வந்து "சாகப்போகிறவனுக்கு சமுத்திரம் முழங்கால் ஜலமென்று சொல்வதுபோல" பேசிவிட்டீரே,

என, மனவருத்தமாய்ப் புகன்றவை வினவிய வீரப்ரதாபனுக்கு யாதொன்றும் தோற்றாமல்தனது முழங்காலின்மீது தலையைவைத்து இருகையாலும் பிடித்துக்கொண்டு இதற்கென்செய்வதென ஆலோசித்துக்கொண்டிருக்கையில் தனக்கு தபமுனிவன் கொடுத்த வரப்ரசாதத்தை நினைந்து, இனியென்றோமென மனதிடங்கொண்டவனாய் சிரித்த முகத்துடனே சொல்வதாயினன்,

வீரப்ரதாபன்.—நேயர்காள்! இனி அந்த இராஜகுமாரத்திஎத்தகைய சுத்தவீரர் காவலிலிருந்தாலும் கொண்டு வருவேன்.

நியாயகேசரி:—அஃதெவ்விதமோ யான் நன்குணர விவரித்துக் கூறுமின்,

* அம்பலம்—சபை.

வீரப்பிரதீர்பன்.—மித்ரர்! யான் உங்களை விடுத்துத் தனியாய் அலைந்துக் கொண்டிருக்கையில் ஓர் மாமரத்தின் அருகில் போய் உட்கார்ந்தேன் அங்ஙனம் ஓர் அழகிய மாங்கனி ஒன்று என்னெதிரில் வீழ்ந்தது அதனை யான் புசியாமல் நமது தேசத்திற்குக் கொண்டுபோவோமென அதனை மடியில் வைத்துக்கொண்டு எழுந்தேன். அச்சமயம் ஓர் தபமுனிவர் ஓடிவந்து ஐயோ கனியைக் காண்கிலனே இனி எவ்விதமாய் இவ்வருஷத்தில் பசியின்றி தபம் புரிவேனென்றழுதனர், அந்த பரிதாபத்தைக் கவனித்த என்மனம் தாளாமல் ஐயா! பெரியவரே எனழுகிறீரென்றேன். இம்மரத்தின் மாங்கனியைக் காண்கிலேனென்றழுதனர். யான் சிரித்துக்கொண்டு ஐயா! இந்த வனத்தில் எத்தனையோ விருக்ஷங்க ளிருக்கின்றனவே மாம்பழத்திற்கென்ன குறைச்சலென்றேன், அவர் மிகவும் விசனத்துடன் அப்பா! இந்தவிருக்ஷத்தில் வருஷத்திற்கொருதரம் ஓர் மாங்கனி மாத்திரம் பழுத்து விழும் அதனைப் புசித்தால் ஒருவருஷம் வரையிலும் பசி, தாக, நித்திரையின்றியிருக்கலாம், இவ்விதமே யான் அநேக காலம் வரையினும் இவ்விருக்ஷத்தின் மாங்கனியைப் புசித்து பசிதாக நித்திரையின்றி தபம் புரியலாயினேன், இன்றையதினத்துடனே வருஷம் முடிவானதினால் கனியும் பழுத்து வீழ்ந்தது யாவரோ எடுத்துக்கொண்டு போய்விட்டனர். அதை அவர்கள் புசித்தால் சாகாவரம்பெற்றவர்போ லிருப்பாரென்றனர். யான் அந்தக்கனியை அவரிடம் கொடுத்து அவர் திருவடியில் வீழ்ந்து பணிந்து சுவாமி! அடியேன் எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இதை தாங்களே புசித்து மனமகிழ்வீரென்றேன். அவர் என்னை ஆசிர்வதித்து அப்பா! நீ பரோபகாரியானதால் உனக்கு என்னவரம் வேண்டும் கேளென்றார், யான் அவரைப்பார்த்து சுவாமி யான் எந்த ரூபம் எடுக்கவேண்டுமென்று யோசிக்கின்றேனோ அந்த ரூபமனைத்தும் யானெடுக்கும்படி யருள்புரியவேண்டுமென்றேன். அவர் யோசித்து அப்பா! உன்னிஷ்டப்படியே யாகும் ஆனால் இந்த மூலிகையை மாத்திரம் பத்திரமாய் வஸ்திரத்தில் முடிந்து வைத்துக்கொள் உனக்கு இச்சையான ரூபத்தின் பெயரை மனதில் நினைந்து இந்த மூலிகையில் கொஞ்சம் கிள்ளி வாயி லடக்கிவைத்துக் கொண்டு மூன்றே முக்கால் நாழிகையிருந்தா

ல் நீ நினைந்த ரூபமாயிருப்பாய் அப்பால் அதனை உமிழ்ந்துவிட்டாலும் நிலைத்தரூபம் மாறாமல் அதே ரூபமாயிருப்பாய். உனது சுயரூபம் வேண்டியதாயிருந்தாலும் இவ்விதமே செய்யவேண்டுமென்று அனுக்கிரகஞ் செய்திருக்கின்றனர்.

நியாயகேசரி:—ஆ! அப்படியா! அதனை சோதித்திருக்கின்றீரா?

வீரப்பிரதாபன்:—எத்தனையோதடவை சோதித்திருக்கின்றேன் தபமுனிவன் சொன்னபடியே பலித்தது அதனாலே தான் ஜீவித்திருந்தேன், இஷ்டமானபெண்களிடத்திலும் சுகித்து சுகானுபவங்களை யனுபவித்தேன்.

காமேந்திரன்:—ஈதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது அவற்றைவிவரித்துக் கூறுமின்.

வீரப்பிரதாபன்:—நேயர்காள்! யான்வனசஞ்சாரியாய் வருகையில்வழியிலெதிருற்ற தேசத்தின் நந்தவனமார்க்கமாய் வருகையில் அந்நகரத்தரசன்மகள் காணப்பட்டாள் அவளைப்பார்த்தபோதே எனதுளம்பலவிதமாய்மயக்கமெய்தின. அந்ததிகாமநோயுடன் வயிற்றுப்பசியும் அதிகரித்து விட்டது அச்சமயத்தில் கற்றவித்தையைச்சோதிப்போமென்று முனிவன்தந்தருளிகையிற்கொஞ்சம்கிள்ளிவாயிலடக்கி வைத்துக்கொண்டு ஸ்திரிரூபம்வரவேணுமென்றுநினைத்தேன், அச்சமயமே திடீரென சுயரூபமாகிய ஆண்ரூபமாறி பெண்ரூபமாயினேன். அச்சமயமே யான் அங்ஙனமிருக்கும் ஸ்திரீகளுடன் யானுமொரு ஸ்திரீயாய்ப்போய்க் கலந்துகொண்டேன். அவர்களென்னைப்பார்த்து அம்மா நீ யாரென்றுவினவினர். யான் ஓர் ஏழைப்பெண்ஜீவிக்கச்சக்தியின்றி கானகவாசியாய்ச்சென்று வனமிருகங்களின் வாய்க்கிரையாவது நன்கெனமதித்துவந்துவிட்டேன். ஆனால் வயிற்றுப் பசியதிகரித்து வருத்துகின்றமையால் உமது சமுகத்தை நாடிவந்தேனென்றேன். அச்சமயத்தில் அவர்களென்மேற் கிருபைகூர்ந்து பலகார பக்ஷணம் தந்து பசியாற்றி தமது இராஜகுமாரத்தியினிடம் என்விஷயத்தைக் குறித்துப் பரிதாபமாய்ப் புகன்றனர். அந்த ரூபசுந்தரியும் மர்மமுணராமல் என்னை இறுகத் தழுவி அம்மா! நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே இந்த தோழிப்பெண்களுடன் நீயும் ஒருத்தியாயிருப்பாயென்றுசொல்லி

தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய் வைத்திருந்தனள். அச்சமயம் யான் சில நாள் வரையினும் ஸ்திரீரூபமாகவே யிருந்து இராஜகுமாரத்தியுடன் இரவும் பகலும் இன்பசுகானந்த இந்திரபோகமாய்விளையாடிக் கொண்டிருந்து எனது காதல் தவிர்த்துக்கொண்டேன். ஆனால் ஒவ்வொரு சமயம் புருஷரூபமாய்விளங்கி சுகித்திருப்போமென நினைந்திடில் அபாயம் நேரிடுமோவென்று பயந்திருந்தேன், இவ்விதமாகவே வெகுநாட்சென்ற பின்பு உமது கியாபகம் வந்தது உம்மைதேடிக் கொண்டு வருகலாயினேன். யான்கானகமார்க்கமாய் வருகிற படியால் புருஷரூபமாகவே விளங்கவேண்டு மென மூலிகையின் மகத்வத்தால் சுயரூபமாய் வந்திருக்கின்றேன். ஆகையால்யான் ஸ்திரீரூபமெடுத்து இந்நகரத் தரண்மனையிற் சென்று இராணி வசத்தில் தோழியாயிருந்து இராஜகுமாரத்தியை நேசித்து உம்முடைய இஷ்டத்தை தெரிவிக்கின்றேன். அவள் மாத்திரம் சம்மதிப்பாளாகில் தகுந்தவிதமாய் முயற்சிசெய்துக் கொள்ளலாம்.

என,நவின்று தபமுனிவன் தந்த வனமூலிகையைவாயிலடக்கிவைத்துக்கொண்டு ஸ்திரீரூபம் வரவேணுமென நினைந்தவுடனே தனது சுயரூபம்மாறி ஸ்திரீரூபமாய்விளங்கினன்,இந்த அற்புதத்தைக் கண்ணுற்ற இராஜகுமாரனாகிய காமேந்திரனும் மந்திரிகுமாரனாகிய கியாயகேசரியும் ஆச்சரியமடைந்து அப்பா! வீரப்ரதாபா நீமெத்த சமர்த்தன் உன்னுடைய உபகாரத்வகுணத்திற் கிசைந்தபடியே தபமுனிவன் அனுக்கிரகம் புரிந்தனர், ஆனால், நீ, அரண்மனையிற் சென்றிடினும் அங்குநிகழும் சமாச்சாரங்களை தினம் தோறும் எங்களுக்கு வந்து சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்றனர்.வீரப்ரதாபனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, தனது நேயர்களாகிய அவ்விருவரையும் சத்திரத்திற்றானே இருக்கும்படி சொல்லிவிட்டுதான் மாத்திரம் அரண்மனையை நாடிவருகலாயினன்.

அரண்மனைபாங்கியரில் ஒருத்தி பெண்வேஷமாய் வருகின்றவீரப்ரதாபனைப்பார்த்து நீ ஆரம்மா அரண்மனைக்கு வருகின்றாயென்று கேட்க அவன் மிகவும் பரிதாபமாய் அம்மணி யானோர் ஏழை தாய் தந்தையர் சிறுவயதிற்றானே விடுத்து மரணமடைந்தனர் எனை ஆதரிப்பவரில்லாமல் தனவந்தர் வீட்டில் தாதிவேலைசெய்துக் கொண்டிருந்தேன் தற்சமயம் எனக்கு எங்கும் பிழைப்பில்லாதபடியால் இங்

ஙனம் வந்தேன் உமது இராஜகுமாரத்தியிடம் போய் தெரிவிப்பீரென்று அவள்காலில்விழுந்து பாசாங்கு தனமாய் அழுதனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற தாதியானவள் அழாதேயம்மாவென்று கைலாகு கொடுத்து அழைத்துச்சென்று ஞானலோசனியின் முன்பாக விடுத்தனள். அவள் தாதியைப்பார்த்து இவள் யாரென்று வினவுதலும் மர்மமுணரா பாங்கி அம்மணி இவள் யாரோ பரதேசி ஜீவிக்கச் சக்தியற்றவளாய் வந்திருக்கின்றனளென்று சொன்னதைக் கேட்டு ஸ்திரீரூபமாய் வந்திருக்கும் வீரப்ரதாபனை விசாரிப்பதாயினள்.

இங்ஙனம் வீரப்ரதாபன் ஸ்திரீரூபமானதினால் அவனென்னும் பதத்திற்கு அவளென்பதாகவும் வீரப்ரதாபனென்பதற்கு வீராயி எனவும் தொகுத்தெழுதப்பட்டது இந்நூலாசிரியரின் கருத்தென்றுணர்வீர்.

ஞானலோசனி:—அம்மா! நீயார்? நீவசிப்பது எந்நகர்? உனக்கு யாதொருவரும் துணையில்லையோ?

வீராயி:—அம்மணி! யான் வசிப்பது தென்தேசம் என்பெயர் வீராயி எனது தாய் இறந்து போனபடியால் என் தந்தை என்னையழைத்துக்கொண்டு தேசசஞ்சாரியாய் வந்து பலதேசங்களிலும் திரிந்து தனவந்தர் வீடுகளில் சுயம்பாகி வேலை செய்துக் கொண்டிருந்தனர். யானும் தோழிவேலை செய்துக் கொண்டிருந்தேன் அவ்விதமாயிருக்கையில் தந்தை உயிர் விடுத்தனர். யான் அதே மனவிசாரமாய் வந்து விட்டேன்.

ஞானலோசனி:—அம்மா! நீ உலகியல்பிற்குச்சம்மதித்த ஸ்திரீயாச்சுதே யாதாமொருவனை நீ மணம் புரிந்துக் கொண்டு வாழ்ந்துக் கொண்டிருக்கலாகாதா

வீராயி:—(புன்சிரிப்புடனே) அம்மா! தாங்கள் சொல்லும்போதே எனது நாவில் நந்நீர் சுரக்கின்றது. எனக்குயார் அவ்விதமாய் பிரயாசை யெடுத்துக்கொள்வார்கள். தங்களைப்போன்ற இராஜகுமாரத்தியானால் எவர்களாகிலும் வந்து மணம் புரிவார். ஆனால் இன்னொருசங்கதிமறந்து விட்டேன் அதனை நாம் சாவகாசமாயிருக்கும்போது பேசிக்கொள்வோம்.

என, தந்திரோபாயமாய்ப்புகன்று அன்றையதினம்தாதிகளுடன் தானும் அமுதருந்தி ஞானலோசனியுடனே விளையாடிக்கொண்டிருந்தனன். இப்படியிருக்கையில் மறுநாள் ஞானலோசனியானவள் மர்மமுணராதவளானதால் விஸ்வாச பூனைபோல மாறு வேஷமாய் வந்திருப்பவளை விசாரிப்பதாயினள்.

ஞானலோசனி:—அம்மா! யாதாமொன்றையும் ஒருவர் தெரிவிக்கிறேனென்பதை மற்றவர் விசாரிப்பதற்கு ஆவற்கொள்ளுவது உலகியல்பாகையால் நேற்றையதினம் நீ எதையோ மறந்துவிட்டதாகவும் புகன்றனையே அவையென்ன சங்கதியோ தெரிவிப்பாய்.

வீராயி:—அம்மா! தாங்கள் எனை ஓர்புருஷனை மணம் புரிவதற்கிசைந்தவையென மதித்துச் சொல்வதாயினேன். ஆனால், இந்நகரத்தில் ஓர்வாலிபனிருக்கின்றான் அவனே அழகில் மன்மதனைப் போன்றவன் அவனிடத்தில சரசசல்லாப மனோல்லாசமாய் விளையாடிக்கொண்டிருப்பது தான் இந்திரபோகமெனப்படும், அவர் தங்களைப்போன்ற இராஜகன்னியரை இச்சிப்பாரன்றி எங்களைப் போன்றவர்களை இச்சியார். யானும் அவரைவெகுவாய் வருந்திக்கேட்டேன் இன்னும் அநேகம்பெண்களும் அவரை பலவந்தமாய் அழைத்து என்னென்னவிதமாய் வேண்டிக்கொண்டாலும் சம்மதப்படாமல் புலிபசித்தாலும் புல்லைத்தின்னுமா யான் இராஜகுமாரத்தியையன்றி மற்றவரை கனவிலும் கண்ணெ[illegible]னென்கிறார், தமக்குச்சம்மதமானால் வரவழைத்துவிசாரித்தால் நலமாயிருக்கும்.

ஞானலோசனி:—சிச்சீ! துஷ்டி எட்டி நில் யானென்ன உம்மைப்போன்ற அற்பஸ்திரீயா? நீங்களென்றால் ஜீவிக்கமுடியாமல் ஆண்பிள்ளை சகவாசத்துடன் பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக்கொண்டு பழிபாபத்திலகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருப்பீர் யான் அப்படியல்ல சதாசுகியாய் பகவத் பக்தியானந்தமாயிருந்து நித்யானந்தவாழ்வெய்தி பேரின்பத்தை நாடி சிதாகாசமாயிருப்பேன்.

வீராயி:—அம்மணி! புத்தி! புத்தி!! என்மீது கோபித்திடவேண்டாம் தங்களைப் போன்ற ஞானிகளிர்தயத்தை யார் சோதிக்கவல்ல

வர். என்னமோ ஓர் விதமாய் உளறினேன் மன்னித்துக்கொள் வீர்தாயே.

என, நவின்று தன்னாலானவரையிலும் தந்திரோபமாய்த் தப்பித்துக்கொண்டு அங்ஙனமே சிலநாளிருந்து எவ்வெவ்விதமாய்ச் சோதித்திடினும். ஞானலோசனிமனது சிற்றின்பத்தை நாடாமல் பேரின்பத்தையே நாடியிருக்கையில் வீராயிக்கு மனம் வேறாகி சீச்சீ! இவள் மஹாவைராக்கியமுற்றவளா யிருக்கின்றாள் இனி இவளை சமயம் பார்த்துதான் தட்டிக்கொண்டு போகவேணுமென்று மதித்து, ஓர் நாள் அந்திப்பொழுதில் மறைவாய் வெளியே வந்து தபமுனிவன் தனக்குத்தந்த மூலிகையிற் கொஞ்சம் கிள்ளி மென்று தனது சுயரூபமாகிய புருஷரூபம் வரவேணு மென்று நினைந்தவுடனே பழையபடியே ரூபமாறினன். அச்சமயம் தனது சிநேகிதராகிய நியாயகேசரியும் காமேந்திரனுமிருக்கும் சத்திரத்தில் வந்துசேர்ந்தனன். அவ்விருவரும் அவனைக்கண்டு சந்தோஷமாய் க்ஷேமலாபம் விசாரித்தபிறகு இராஜகுமாரன் சொல்வதாயினன்.

காமேந்திரன்:—எனதன்பிற்கிசைந்த நண்பா நீபோனகாரியம் ஜெய [illegible]

வீரப்பிரதாபன்:—அப்பா! [illegible]ந்த விபரீதத்தை என்கேட்கிறாய்யான் தப்பித்துக் கொண்டு வந்ததே தெய்வானுகூலமாகும், அவளை மணம் புரிந்து கொள்வதற்கியலாது ஆனால் யான் ஓர் தந்திரம் சொல்லுகிறேன். அவ்விதம் மனந்துணிந்து செய்து விட்டால் கிடைத்தாலும் பெண்கிடைப்பாள். அகப்பட்டுக் கொண்டாலும் ஆவிக்கபாயமாய் தலை வெட்டுண்டு போகும். இதற்குச் சம்மதமானால் யானே முன்னால் துணிந்து விடுகிறேன்.

நியாயகேசரி:—ஏதப்பா! உங்களுடன் வந்தது கலகத்தில்தலையிட்டுக் கொண்டு கஷ்டகிஷ்டோத்திடன் தலைதுணிந்திறந்த மதனரூபன் கதியைப் போலிருக்கின்றதே.

காமேந்திரன்:—மந்திரி! நீ என்ன கிஞ்சிற்றும் தைரிய மில்லாதவனாய்க்காணப்படுகின்றனையே உனது நியாயத்தைசற்று நிறுத்திவையும்எனதன்பிற்கினிய நண்பா! நீ எனக்காக முயற்சியெடுத்துக்கொள்ளும் துணிகரத்திற்கு யான் வந்தனம் புரிகின்றேன். எவ்விதமானாலும் அந்த இராஜகுமாரத்தியென்னுடன் சுகித்து விளையாடி காதற்றவிர்த்திடில் போதுமானது.

நியாயகேசரி:—அரசே! சாகப் போகிறவனுக்குச் சமுத்திரமும் முழங்கால்ஜலமென்பது போல முறட்டுத்தனமாய்ப்பேசுவது நன்கல்லவென்றுணர்வீர்.

வீரப்பிரதாபன்:—நேயர்காள், யாதாமொன்றையும் துணிகரமாய்ச் செய்யவேண்டும். அஃதன்றி பயந்து பயந்து என்னமோ ஏதோ வென்று மனம்பிரளுவது வீரர்கட்கிசைந்தவையல்ல. துணிந்தவனுக்குத் துக்கமில்லை யென்னும் தன்மையாய் நடத்திவிடுவதே ஆண்மையாகு மென்று, தான் கோரிய எண்ணத்தைப் பூர்த்தி செய்த காங்கேயன்போற் சரிப்படுத்திவிடுவோம் யாதும் தடை சொல்லாதீர்.

நியாயகேசரி:—சரி! அவ்விதமானால் அந்த காங்கேயன் என்ன காரியத்தைத் துணிகரமாய் நடத்தி ஜெயம்பெற்றான்? அதைவிபரமாய்த்தெரிவிப்பீராகில் அதற்குமேல் யாமும் தகுந்தயோசனைசெய்வோம்.

காமேந்திரன்:—யோசனை யொன்றுமில்லை நடக்கிறது நடக்கட்டும் அவரவர்தலையில் அன்றெழுதினபிர்மா அழித்தெழுதப்போகிறதில்லை.

வீரப்பிரதாபன்:—ஈதென்ன ஆச்சரியம் ஓர்காரியத்தை நடத்தத் துணிந்தால் எல்லோரும் ஒரேமனதாயிருந்தால்தானே நிறைவேறும். அஃதன்றி, அவரோர் விதமாய் நாங்களோர் விதமாய்ப்பாவித்துக்கொண்டிருந்தால் காரியம் சித்தியாகுமா? ஓர் சிற்றூரில் நவரத்னவியாபாரம் செய்யும் ஓர் தனவானுக்கு ஆண் குழந்தையில்லாமல் பெண் குழந்தைமாத்திரம்பிறந்திருந்தமையால் அதை தினமொருமேனியும் நாளொருவர்ணமுமாய் வளர்த்துக் கொண்டிருக்கையில் அந்தப் பெண் பருவதிசையடைந்தனள்; பெண்ணின்தாயார் மனோல்லாசமெய்தியவளாய் மங்களஸ்நானஞ் செய்வித்து தனது புத்திரியின் அழகிற் கிசைந்த நவரத்னகசித மயமாய்த்துலங்கும் ஆடை ஆபரணாதிகளாற்சிங்காரித்துவைத்திருந்தனள், வர்த்தகனோவெனின் தன்னினும் விசேஷதனவந்தனுடையபிள்ளைக்குக் கொடுத்து கண்காக்ஷியாய்ப்பார்க்கவேணுமெனும் இஷ்டமிருந்ததினால் அவன் மனையாட்கும்அவ்விதமே பேராசை துணையாயிருந்தது, ஆனால் அவனுடையசகோதரியின் புத்திரனோ மிகுந்த ஏழையானாலும் மாடு

போற்கஷ்டப்பட்டு காசு சம்பாதிப்பதில்லைதேர்ந்தவன். அழகோ அங்கஜனும் கண்டதிசயிக்கும்படியாய் முகவசீகரதேஜஸமைந்தவன் அவனுக்கும் மாமன்மகள்மீது இஷ்ட மிருப்பது போல பெண்ணுக்கும் அத்தைமகன்மீது இஷ்டமாகவே யிருந்தன, என்றாலும், தனது தாய்தந்தையரின் இஷ்டப்படியே இருந்தால் இவனிலும் ரூபசுந்தரனைத் தேடிகலியாணம் செய்துவைப்பார்களெனும் ஆசை மாத்திரம் அவள்மனதை விட்டு நீங்கவில்லை. ஆனால் அவளுடைய அத்தை மகனாகிய காங்கேயனுக்கு மாத்திரம் அம்மான் மகள் சும்மாய்க்கிடைப்பாளென்று மதித்திடினும் மாமனும், மாமியும் காசுமேலாசையுள்ளவரெனத்தெரிந்து தினந்தோறும் அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்துக் கொண்டிருந்தும், வீட்டிலுள்ள காசெல்லாம் காற்றிலகப்பட்ட பஞ்சிபோல பறக்கவிடுத்ததுமன்றி நாலாபக்கமும் கடன்பட்டு கொடுக்கச் சக்தியற்றவனாய் திகைத்திருந்தனன். இவன் இத்தகைய கஷ்ட நிஷ்டூரமடைந்து கலியாணஞ் செய்துக் கொள்வதற்கு அதிர்ஷ்ட மில்லாதவனாயிருந்ததனால் ஓர் நாள் இவன் ஓர் தனி அறையில் உட்கார்ந்து இவனாலானவரையினும் ஆலோசனை செய்து அணிந்துகொள்ள வஸ்திரமில்லாவிடினும் சமயோசிதவேடமாய் ஏமாற்றிபெண்ணை வசப்படுத்துவதுதான் ஆண்மையென மதித்து அன்றையதினம் ஓர் சிநேகிதனிடம் நாலுவிராகன் கடன் வாங்கி இடுப்பிற் சொருகிக்கொண்டு மாமன் வீட்டில் வந்து மரியாதையாய் உட்கார்ந்தனன், மர்மமுணரா மாமனும்மாமியும் என்னடா மருமகனே இடுப்பிற் சொருகியிருக்கின்றாயென பரிகாசமாய் வினவினர். இன்றையதினம் யாம் நால்வரும் வனபோஜனம் செய்வதற்கு நந்தவனத்திற்குப்போக வேண்டுமெனும் ஆசையால் வந்தேனென்றனன், அவர்களும் சரி! அவ்விதமேபோய் வருவோமென்று, தனவந்தராகையால் பலகாரபக்ஷணதிகளை சித்தப்படுத்தி, மூட்டையைக்காங்கேயன்கையிற் கொடுத்து பெண்ணையும் அழைத்துக்கொண்டு நந்தவனத்திற் சென்றார்கள். அங்ஙனும் தாயும் தந்தையும் யாதோ ஓர் விஷயமாய் பாஷித்துக்கொண்டிருக்கையில் அந்தப்பெண் அறியாச்சிறுமி யாதலால் நந்தவனத்திற் படர்ந்திருக்கும் மணமலர்களின் விநோதத்தைப்பார்த்துக்கொண்டே நடந்தனள். காங்கேயனும் இதுதான்சமயமென்று அவளுக்குப்பின்தொடர்ந்துசெல்பவன்போலசதென்ன இங்

ஙனம் விதவிதமான மலர்களெல்லாம்விநோதமாயிருக்கின்றதேயெனபேசிக்கொண்டேசெடிமறைவாக அரைமயில்தூரம் அழைத்துச்சென்று தனதிருகரத்தினாலும் அவளைத்தூக்கித் தோள்மீதுவைத்துக்கொண்டு காற்றை நிகர்த்தவேகத்துடனேமூன்றுமைல் தூரத்திலுள்ளசந்தனச்சோலைக்குள்கொண்டுபோய்விடுத்தனன், அவள் மனமிரண்டு என்னைக் கொல்வதற்காகவா மோசமாய் அழைத்துவந்தீர் என்னைக்கொல்லவேண்டாம் என்மீது அணிந்திருக்கும் ஆபரணாதிகளையெல்லாம்கழட்டித்தருகிறேன் எனை விட்டிடுவீரென அவன்காலில்வீழ்ந்து பணிந்தனள், காங்கேயன்சிரித்து பெண்மணி விண்மணியினுஞ் சிறந்த கண்மணி நன்மணி நவமணியே யானுன் அத்தைமகன் நீ எனது மாமன் மகளாச்சுதே உன்னை துரோகஞ் செய்ய மாட்டேனென்று அவள் கண்ணைத்துடைத்து மடிமீதிருத்தி முத்தங்கொடுத்து மதனரதிபோற்சுகித்து காதல்தவிர்த்தனன், அவளும் மோகானந்தமாய் சரசசல்லாப லீலா விநோத மிதுதானோவென்றுணர்ந்து மனமகிழ்வெய்தினள் மறுபடியும் மருவிசுகித்தனன். அவளும் இசைந்து இனியமணாளா யாம் காந்தர்வமனம் புரியலாயினோம் இன்னொருதடவையும் சுகித்து மையற்றணியவேண்டுமென்னலும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து ஆவற்றணியமருவி சுகித்து மனோல்லாச மாயிருந்தனர், அச்சமயம் வர்த்தகன் தனது புத்திரியைக் காண்கிலமே யென மனையாளுடனே தேடிக்கொண்டு வருகையில் மாமன் வருவதைக் கண்ட காங்கேயன் பயந்து வீட்டுக்கு ஓட்டம் பிடித்தனன், அப்பால் அவர்கள் பெண்ணை விசாரிக்க அவள் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்று எனது கற்பழித்தவனே கணவனன்றி மற்றவரை விரும்பேனென்றனள் அவளுடைய தாய் தந்தையும் சரிதானென் றொப்புக்கொண்டு வெளியிற்சொன்னால் வெட்கக்கேடென்று வீட்டிற்குவந்து தனது ஜனவர்க்கத்துடன் ஓர் சுபதினமேற்படுத்தி காங்கேயனுக்குத் தமது புத்திரியைக் கலியாணஞ்செய்துவைத்து தனது வீட்டிலேயேவைத்துக்கொண்டனர், அவ்விதமே நாம் இராஜபுத்திரியைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டால் அரசன் வெட்கத்திற்கஞ்சி காமேந்திரனுக்குக் கலியாணஞ் செய்துவிடுவான், நாமும் இந்நகரத்தில் பெருமையுற்று ஜீவிக்கலாம். இதுதான் தகுந்த யோசனை.

காமேந்திரன்:—ஆம்! ஆம்!! இதுதான் சரியான ஆலோசனை இத்தரி யே யாம் மூவரும் போகலாம் புறப்படுவீர்.

நியாயகேசரி:—நேயர்காள்! நீங்கள் சொல்லுவது எனக்குக் கிஞ்சிற் றும் சம்மதியில்லை, யாதேனுமொரு திருட்டு பொருள் கிடைப் பதாயிருந்தால், அது வருமுன் அறிவான் வேளாளன், வந்த பின் அறிவான் செட்டி. அதையும் அறியான் பள்ளி, அகப் பட்டு விழிப்பான் கம்மாளன் என்னுந்தன்மையாய் அறிவே பொதுவானது மனதோ பேய்க் குச்சமானம் பலவிதகாரியத்தி லும் பிரவேசிக்கும், ஆனல் அதை அறிவினல் அடக்குவதே ஆண்மையாகும்.

வீரப்ரதாபன்:—சரி! நல்லதிருக்கட்டும் இவையனைத்தும் பின்னல் யோசிப்போம், தாங்கள் சொன்ன பழமொழிக்கு உதாரணம் கூறுமின்.

நியாயகேசரி:—யாவரேனுமொரு திருட்டுபொருள் கொண்டுவரும் போதே வேளாளனனவன் அகத்திற் குறிமுகத்திற் றெரியுமெ ன்பதுபோல அவனுடைய முகலக்ஷணங்கண்டுவேண்டியதில்லை யென்று சொல்லி விடுவான், செட்டி அதை வாங்கி விலைவிசாரி க்கையில் ஒன்றுக்குபாதியாய்ச்சொன்னல் தெரிந்துக்கொள்ளு வான், பள்ளிகளுக்குயாதொன்றும் தோற்றுமல் தாளுமோதா ளாதோநாலுபேர் மதிப்பிட வேண்டுமென்பார், கம்மாளனை வன் உடனே கவனித்து ஒன்றுபாதியாய் வாங்கி உருக்கிப் பொன்னாக்கிவிட்டு திருடன் அகப்பட்டுக்கொண்டால் தானும் திண்டாட்டப்பட்டு ஐயோதெரியாமல் வாங்கினேனேயென்று ஆபத்திற்சிக்கி அலைச்சறப்படுவான், ஆகையால் மனிதராய்ஜனித் தோர்வேளாளன்போற்கூர்மையான புத்தியாயிருக்கவேண்டும், பொன்பொருளைத்திருடினுஞ்சத்தமிடாமல் ஓடிவந்து நாலைந் துதினத்திற்குப்பின் அகப்பட்டு அடி உதை அபிஷேகாதிபெற் றுபினும் தப்பித்துக்கொள்வார்கள், பெண்ணைத்திருடுவோர் பிராணனைஇழப்பது நிக்ஷயமல்லவோ? காங்கேயனென்றால் மா மன்மகளை திருடினன், சொந்தத்தில் கூத்தாடினல் வந்தமட் டும் லாபந்தானே, யென்பது போலதப்பித்துக்கொண்டனன். இவளோ இராஜபுத்திரியாச்சுதே அவளுக்கு எத்தனையோதாதி கள் காவலிருக்கின்றார்களே, அவர்களுடனிருக்கும் பெண்

ணை யாம்போய் தூக்கிக்கொண்டுவருவதென்றால் வெறியனும் பரிகாசித்திடானே? அன்றியும் அவளிருக்கும் கன்னியாமடத்திற்கு எத்தனையோபோர்வீரர் உருவினகத்தியுடனேகாவலிருக்கின்றனரே யாம் போகும்போதே தலைவேறு முண்டம்வேறாய் முதலுக்கே மோசமாய்விடுமே. அப்பால் நாம் எப்படி பெண்ணைத்திருடிக்கொண்டு வருவது நீங்கள் செய்யும் குருட்டுயுக்தியெல்லாம் கண்ணில்லாதவன் இருட்டில் திருடுவோ மென்று சொல்லும் தன்மையாயிருக்கின்றதே அந்த ஆசையை விட்டுவிடும், என்சொல்லைத் தட்டிப்போனால் மதனரூபனுக்கு நேர்ந்ததைபோலாகும்.

வீரப்ரதாபன்:—ஆமாம் இதுவும் சரியான ஆலோசனையேயாகும். "தனக்கு வெகுபுத்தியுண்டாயினும் வேறொருவர் தன் புத்திகேட்கவேண்டு"மென்னுந் தன்மையாய், இத்தகைய பயங்கரமான அபாகாரியத்தைத் துணிகரமுடன் செய்வதெனின் முன்பின் ஆலோசனையே செய்ய வேண்டும் சரி! மதனரூபனுக்கு நேரிட்ட ஆபத்தின் குரூரத்தைப்புகலுவீர்.

நியாயகேசரி:—என் சித்தத்திற்கிசைந்த மித்திரா! அஸ்தினபுரியருகிலுள்ள ஓர் சிற்றூரில் ரூபசுந்தரி யென்னும் ஓர் வைசியப்பெண் பருவதிசையடைந்தபின்னர் அழகுள்ளவளுக்கு ஆபரணமென்னத்திற்கென்று அலங்காரமாய் அந்திப்பொழுதில் தனதுவீட்டிற்றுனே உலாவிக் கொண்டிருக்கையில் அந்நகரத்திலிருக்கும் நவகோடி நாராயணனென்ன பெயர்வகித்த தனவந்தனுடைய மகனாகிய மதனரூபனென்பவன் தின்று கொழுத்த திமிராலும் ரூபசுந்தரியின் அழகென்னும் சிற்றின்பசாகர மோகவலையாலும் மையலுற்றவனாய், அடாது செய்பவர் படாது படுவாரெனும் நீதி வாக்கியத்தையும் துறந்து தனக்கு இன்னும் ஒரு மாதத்தில் அழகானந்த முகவசீகர தேஜஸமைந்த அத்தைமகளைக் கலியாணஞ் செய்வதற்காக நிச்சயதார்த்தம் செய்திருப்பதையும் மறந்து, மரணம் சமீபித்துவிட்ட தற்காக காலபாசம் கழுத்தைப்பிடித்திழுப்பது போல; அன்றைக்கு சமைக்க ஆழாக்கரிசிக்கும் வழியில்லாமல் அழகுமாத்திரம் ஆளைமிரட்டுது வயற்றுக்கு சோறில்லையேயென்று கஷ்டஜீவனாய்க்காலங் கழித்து வறுமைநோயினால் திகைத்திருக்கும் ரூபசுந்தரியின்மீது மனதை செலுத்தி, அவள் வீட்டுத்திண்ணை மீதே உட்கார்ந்து கண்ணை

சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனன். அவ்வீட்டாரும் தனவந்தன் வீட்டுப் பிள்ளையாச்சுதேயென கவனியாமலிருந்து விட்டனர். மதனரூபன் இராத்திரியானவுடனே தனது வீட்டில் வந்து தாய்தந்தையிடமாயினும் தெரிவித்தால் அவனுடைய இஷ்டத்திற்குக் கஷ்டமில்லாமல் எவ்விதமாயினும் சரிப்படுத்தி விடுவார்கள். விநாசகாலே விபரீதபுத்தியென்பதுபோல இவன் யாருடனும் புகலாமல் இன்றிரவு பதினைந்து நாழிகைக்குமேல் சந்தடிசெய்யாமல் வைசியன் வீட்டில் புகுந்து ரூபசுந்தரியை மருவிசுகித்து மையற்றணிவோம் யாவரேனும் வழிமறித்திருந்தெதிர்த்திடின் வாளாயுதத்தால்வீசியெறிந்திடுவோமெனும் வீராவேச பேராசையுடனே வைசியன் வீட்டில் நுழைந்தனன், அன்றிரவு அவர்கள் வீட்டில் குப்பத்தில் சனியிருந்து வம்புசெய்வதுபோல அடுப்பில் பூனை தூங்கவும், அனைவரும் நித்திராதேவி வசத்திலகப் பட்டு தூங்கிக்கொண்டிருந்தனர். ஆனால் நகர் சோதனைத்தலையாரிகள் மாத்திரம் அன்றிரவு வைசியன் வீட்டுத்திண்ணைமேல் சயனித்திருந்தனர், அச்சமயம் ரூபசுந்தரன் தனது கரத்திலேந்தியவாளாயுதத்தை வஸ்திரத்தில் மறைத்துக்கொண்டு குரலொலி காட்டாமல் மெல்லமாய் மாமா! மாமா!! வெனக் கதவைத்தட்டினன். அவ்விதமான திருட்டு யுக்திசெய்தால் யாவனோ சொந்த மனுஷாளென வைசியன் ஓடி வந்து கதவைத்திறப்பான், யாம் முரட்டுத்தனமாய் உள் நுழைந்து சரிப்படுத்திக்கொண்டு போவோமென்றெண்ணி, எத்தனை தடவை கதவைத்தட்டினாலும் மூதேவி வசத்தில் அகப்பட்டவர் மீளாரென்னும் தன்மையாய் யாவரும் முழுநித்திரையாய்த்தூங்கிவிட்டனர். ஆனால் நகர்சோதனைப்புரிவோமென்று சம்பளம் வாங்கி தின்று, திண்ணைத்தூங்கிகளாய்சயனித்திருக்கும்தலையாரிகள் மாத்திரம்விழித்தெழுந்து மர்மமுணராமல் அடே யாரையா நடுராத்திரியில் வந்து நல்ல தூக்கத்தைக்கெடுத்துவிட்டாயே யென்றுமெல்லென எழுந்துட்கார்ந்து விசாரிக்கையில் மதனரூபன் உண்மையை உரைத்தால் வந்தகாரியம் கெட்டுப் போகுமேயென மறைத்து ஐயா! யான் தூரதேசத்திலிருந்து வந்தேன். செட்டியாருடைய மருமகனென்று சொல்லிக் கொண்டே கதவைத்தட்டிக் கொண்டிருந்தனன். அச்சமயம் தலையாரிகளனைவரும் சந்தேகித்து, அவனிருக்

கும் கோலத்தையும் கையிலிருக்கும் வாளாயுதத்தையும், கண்டு இவனைப்பார்த்தால் திருடனைப் போலிருக்கின்றதென மதித்து, ஆடா! நீயார் உண்மையைச்சொல்லென்று அதட்டவே மதனரூபன் இனிதாமதித்தால் ஆபத்தாகுமென்றெண்ணி தனது கரத்திற்றுங்கிய வாளாயுதத்தால் ஒருவனை வெட்டியெறிந்தனன். உடனே மற்றவரனைவரும் மதனரூபனை கன்னக்கோல் திருடனென மதித்து, தமது பார்வைக்குத் திருடனாயிருந்தாலும் உயிர் நீங்கும் படிசெய்வது நியாய விரோதமாகுமென்று மதனரூபன் காலையும் கையையும் வெட்டி அவன் கூச்சலிட்டழுதிடும்படியாய்த் தூக்கிக்கொண்டு அரண்மனைக்குப் போயினர். அரசன் தீரவிசாரிக்கையில் மதனரூபன் உண்மையைப்புகன்று பிராணனை விடுத்தனன். இவன் வாக்குமூலத்தை யாவரும் கேள்வியுற்று பரிதாபமடைந்தனர், அரசன் சிரித்து அடடா! உலகின் மாந்தருக்குக் காமமே கழுத்தறுக்கும் கத்தியாகுமென வரைந்துள்ளதாய நீதிசாஸ்திரம் உண்மையேயென்றெண்ணி பிரேதத்தைப்புதைத்துவிடும் படியாய் ஆக்ஞாபித்து விட்டனன் ஆகையால் பெண்ணாசையால், நீங்கள் செய்யும் குருட்டுயுக்தி இந்நகரிற் செல்லாது. வீணாக உரலில் தலையைமாட்டிக்கொண்டு விசனப்படுவது போல ஆபத்திற்சிக்கி அலைச்சற்படவேண்டாம்.

காமேந்திரன்:—சீச்சீ! அவன் கெட்டான் முட்டாள் பயல். நீலன், விஜயனென்னும் இரண்டு சிநேகிதரைப்போன்ற சாமார்த்திய மிருந்திடில்தான் மனிதனெனப்படும், ஆனால், யானும் வீரப்ரதாபனுமாத்திரம் தைரியசாலிகள் * நீ சபைக் கோழை.

நியாயகேசரி:—சரி! அவ்விதமே இருக்கட்டும், நீலன் விஜயனென்பவர் மாத்திர மென்ன சாமார்த்தியம் செய்தனர் விவரித்துக் கூறுமின்

காமேந்திரன்:—கலிங்கதேசத்தில் வசித்திருக்கும் நீலன் விஜயனென்னும் இரண்டு சிநேகிதர் இணைபிரியாமலிருந்தனர் ஓர் நாள் அவர்கள் அதிகாலையில் குளத்தின் கரைமீது உட்கார்ந்து பல் துலக்கிக்கொண்டிருக்கையில் லீலாவென்னும் பெயரமைந்து அழகுசவுந்தரியமுடைய ஓர் பெண் தண்ணீர் குடமெடுத்துக்

* சபைக் கோழை—பயங்கரமுடையவன்.

கொண்டு குளத்தருகில் வந்தனள். அவளைக்கண்ட வுடனே
நீலனுக்கு சர்ப்பம்தீண்டியவர்க்கு தலைமண்டையில் விஷமேறு
வதுபோல மோகமதிகரித்து திடமான அந்தப் பெண்ணினரு
கிற் சென்று கட்டியணைந்து முத்தமிட்டனன். அதிகாலையான
தால் அங்ஙனம் இவர்களைத்தவிற மற்றவர்களில்லை யாதலால்
அவளும் சம்மதப்பட்டு அவனிஷ்டம்போலிருந்து விட்டனள்
அப்பால் அவர்களின் சந்தோஷம் அளவிட்டுச் சொல்வதற்
கியலுமோ? லீலாவும், நீலனும் அந்த குளத்திலிருக்கும் ஓர்சோ
லையிற்சென்று தமது மனதிற் கிசைந்தபடி சுகித்து விளையாடி
காதற்றணிந்தனர். இன்னும் சற்று தாமதித்திடில் எவர்களா
யினும் வந்து விட்டால் மோசம் நேரிடுமே யென லீலா மன
மிரண்டவளாய் பிராணபதி! இத்தினம் யான் விழித்தமுகம்
இந்திரபோகத்தையனுபவிக்கச்செய்தன. இனிதாமதித்தாலாசா
து நாளையதினத்திலிருந்துஇஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளு
வோ மெனபுகன்று ஒன்றுமறியாத உத்தமா பத்தினி போல
குடத்தில் ஜலமெடுத்துக்கொண்டு தனது வீட்டுக்குப் போயி
னள். ருசிகண்டபூனை உருயைதாவுவது போல நீலனும் பின்
தொடர்ந்து சென்று அவள் வீட்டைக்குறிப்பாய் அடையா
ளத்துடன் பார்த்துக் கொண்டுபோயினன், இந்த சங்கதி நீல
னுக்கும் விஜயனுக்கும் மாத்திரம் தெரியும் மற்றவர்கட்குத்
தெரியாது நீலனும், லீலாவும் தமது வழக்கப்படியே அதி கா
லையில் நந்தவனத்தின் அருகிலிருக்கும் குளத்திற்கு அருகாமை
யிற்சென்று மதனரதி போற்சுகித்துக் காதல் தணிந்துக்கொ
ண்டு போவதே தமக்குரிய வழக்கமாயிருந்தனர். இச்சங்கதி
எவ்விதமாகவோ லீலாவின் புருஷனுக்குத் தெரியலாயிற்று,
அன்று முதற்கொண்டு அவன் தனது மனைவியை ஜலத்திற்குப்
போக ஒட்டாமல் தடுத்து விட்டனன்.

நியாயகேசரி:—நேயர்காள்! இவ்விதமிருக்கின்றதே உலகியல்பு. தப்
பித்தவறி அகப்பட்டுக் கொண்டால் ஆபத்துதானே.

காமேந்திரன்:—ஆபத்தென்ன ஆசையும் அன்பு மிருந்தால் யார்த
டுத்தாலும் முடியுமா அவளுடைய கணவனும் அவளை வெளி
யிற் போகவிடாமல் தடுத்துக்காவல் புரிந்தும் முடி யாமற்
போனதினால் தூரதேசத்திலிருக்கும் தனது மாமியார் வீட்டிற்

களைழத்துக்கொண்டு போக உத்தேசித்திருந்தனன். இச்சங்கதி யறிந்த அந்தப்பெண் இனிதாமதித்தால் மோசமென் றெண்ணி யாருமின்றிய தருணத்தில் நீலனுடன் சென்று ஊரைவிட்டோடிப்போயினள், ஆகையால் வீரப்ரதாபன் சொல்வதுபோல் நாம் மூவரும் அரண்மனையிற் சென்று சமயம் பார்த்து அழைத்துக் கொண்டு போய் விடுவோம்.

வீரப்ரதாபன்:—(சிரித்து)அரசபுத்திரா! அப்படியல்ல,யான் ஸ்திரீரூபமாகவே யிருந்து நாளையதினம் தாதியர்களுடனே இராஜகுமாரத்தியை நந்தவனத்திற் களைழத்து வந்து அவர்களுடன் சமயோசிதமாய் பேசிக்கொண்டு தாதிகள் கவனியாதபடியே தனியாய் அழைத்துக் கொண்டு வருகிறேன். அச்சமயம் நீங்களிருவரும் எங்களுடனே வழிப்போக்கர்போல வந்திருந்து "இராவணனுனவன் சீதையை பூமியுடனே பெயர்த்தெடுத்து தூக்கிக்கொண்டுபோனதுபோல" இராஜகுமாரத்தியை எடுத்துக்கொண்டு போய்விடுவீராகில் யானும் உங்களுடனே வந்து விடுகிறேன்.

என, புகன்றவை வினவிய காமேந்திரன் அவ்விதமே செய்வோமென்றனன். நியாயகேசரிக்குமாத்திரம் கிஞ்சிற்றும் சம்மத மில்லாமல் ஈதென்ன விபரீதம்?

வெண்பா.

சந்தனத்தைச்சார் தருவும் தக்கமணங்கமழும்
சந்தனத்தைச்சார்வேய் தழல் பற்ற—அந்தவனம்
தானுமந்தச்சந்தனமும் தன்னினமும் மாள்வதன்றி
தானும் கெடச்சுடுதான்.

என்னுந்தன்மையாய் நல்லவருடன் சிநேகித்தால் நமக்கும் நற்பேர்கிடைப்பதுடன் சதா சுகியாயிருக்கலாம். துஷ்டசிநேகிதம்பிராணசங்கட மென்பது போல அற்பருடன்நேசித்தால் ஆபத்துதானே விளையுமென்று வருவதெல்லாம் வரட்டும்.

கவி.

வருவது வந்தே தீரும் வையகந்தனிலுள்ளோர்க்கு
வருகாத தென்றும் வாரா வாய்மையும் பொய்த்திடாதே

என்னுந்தன்மையாய் யாதொன்றும் வினைசம்பந்தத்தால் வருவதெல்லாம் வந்தேதீருமென்று தன்மனதைதிடப் படுத்திக் கொண்டு யாதொன்றும் சொல்லாமல் சும்மாயிருந்து விட்டனன்.

இங்ஙனம் நிற்க, வீரப்பாதர்பனானவன் முனிவன் தந்த குளிகையினால் ஸ்திரீபமாய் விளங்கி பழயபடியே வீராயியெனும் பெயரமைந்து அரண்மனைக்குப்போயினன். அச்சமயம் இராஜகுமாரத்தியானவள் விசாரிப்பதாயினள்.

ஞானலோசனி:—எனம்மா! வீராயி! நேற்றையதினம் எங்கு சென்றிருந்தனை?

வீராயி:—அம்மணி! யான் முன்பிருந்தவீட்டில் ஓர் கிழவி யிருந்தனள், அவள் எனை விசாரித்தனள், யான் அரண்மனையில் தாதியாயிருக்கிறேனென்றேன், அந்தக்கிழவி மஹா சந்தோஷமடைந்து நேற்றையதினம் எனக்கு நாவிற்கினிய நல்லுணவாதிகளுடன் விருந்தளித்தனள். யான் உமது புண்ணியத்தால் வயிறுற அன்னம் புசித்து நேற்றிரவு அங்ஙனமே யிருந்து இன்றைய அருணோதயத்திலெழுந்து வந்தேன்

என, தந்திரோபாயமாய் புகன்று சமயம் எப்போது நேரிடுமோவென பார்த்திருந்தனன், மர்மமுணராத ஞானலோசனியும் சரிதானென்று சும்மா விருந்தனள், தாதிகளும் அவரவர் தொழிலினைசெய்துக்கொண்டிருந்தனர். அன்றைய பகற்பொழுதும் ஓர்விதமாய்க் கழிந்தன யாவரும் இராப்போஜனம் புசித்து அவரவர்க்கிசைந்த மலரணைமஞ்சத்திற்போய் சயனித்து நித்திரை புரிவதாயினர்.

Scene. 2.

இடம். ஆரண்யம்.

கதாநாயகர்.

இராக்ஷதன், ஞானலோசனி, காமேந்திரன்,
நியாயகேசரி, வீரப்ரதாபன்,
ஞானேந்திரன், சுந்தரவதனி, ஜெயப்ரதாபன்.

அப்பால் அருணோதயமாயினபின் ஞானலோசனி முதலாகிய பெண்கூட்டத்தினரனைவருமெழுந்து காவலாளிகளுடனே அரண்மனையை விடுத்து பிரயாணமாகி ஸ்நானபானஞ்செய்வதற்காக நந்தவனத்தை நாடி வருகலாயினர். முன்னமே வீரப்ரதாபன் தெரிவித்தபடியே காமேந்திரனும் நியாயகேசரியும் இவர்கள் போகும் வழியிற் காவலிருப்பவர்போல காத்துக்கொண்டிருந்தவ ராகையால் பெண்கூட்டத்திற்குக் கொஞ்சந்தூரமாய்ப் போய்க்கொண்டிருந்து ஓர் விருக்ஷத்தடியில்போய் உட்கார்ந்திருந்தனர், அச்சமயம் இராஜகுமாரத்தியாகிய ஞானலோசனி தாதிகளுடனே ஸ்நானபானஞ்செய்து நேமநிஷ்டை முடித்துக்கொண்டு பகவத்பக்தியானந்தமாய் சிவத்யானஞ்செய்துக்கொண்டு ஆடை ஆபரண சிங்கார அலங்கிர்தமாய் நின்றிருந்தனள். அச்சமயம் மாறுவேஷமாய் வந்திருக்கும் வீராயியானவள் ஞானலோசனிக்குச் சொல்வதாயினள்.

வீராயி — அம்மணி! அதோபார்த்தீரா? பாரிஜாதமலர் புஷ்பித்திருக்கிறது.

ஞானலோசனி:— ஆம்! ஆம்!! இவைகளைப் பறித்துக்கொண்டுபோக வேண்டும்

என, ஞானலோசனி பாரிஜாதமலரைப் பறித்துக்கொண்டுவருவதற்குப்போகையில் வீராயி பின்தொடர்ந்து சென்று அதோ நந்தியாவட்டையிருக்கிறது நாகலிங்கமா மலரிருக்கின்றதென பேசிக்கொண்டே அழைத்துக்கொண்டு வருகையில் காவலாளிகளும் தாதிகளும் கவனியாமலிருந்தனர். ஞானலோசனியும், அவர்கள் பார்வைக்குத் தோற்றாமல் வெகுதூரம் போய்விட்டனள். அச்சம

யம் காமேந்திரனும் நியாயகேசரியும் அருகில்நெருங்கினார்கள். காவலாளிகளும் தாதிகளும் ஞானலோசனியைத் தேடிக்கொண்டுவந்துவிட்டார்கள். இத்தகைய ஆச்சரியகாக்ஷியாயிருக்கையில் சிவந்த கண்களும், கோரைப்பற்களும், விகாரமான சரீரமும் வாய்ந்து பயங்கரமாகிய திடகாத்திர சரீரமுடைய ஓர் மாயராக்ஷதன் அம்மார்க்கமே போய்க்கொண்டிருக்கையில் ஞானலோசனியின் அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த ரூபசவுந்தரியத்தைக்கண்டு மையலுற்றவனாய் தன இருகரத்தினாலும் தூக்கிக்கொண்டு தனது வாசஸ்தானத்தை நாடி ஓடிப்போயினன், இங்ஙனம் வாளாயுதத்துடனே காவலாய்வந்த வீரர்களெல்லாம் மனமிரண்டு ஐயையோ இனி இராஜனுக்கு யாதுரைப்போமென்று வாயிலடித்துக்கொண்டு வந்தவழியே திரும்பிப்போய் அரண்மனையிற்சென்று அரசனுக்குத் தெரியப்படுத்தினர், தாதிகளோடிவந்து இராணியின்பாற் சொல்வதற்கஞ்சி மனமிரண்டவராய் அழுதுக்கொண்டிருக்கையில், அவள் யாதென்று வினவுதலும் அம்மணி ஞானலோசனியை விகாரரூபமுள்ள இராக்ஷதன் தூக்கிக்கொண்டு போய்விட்டானென்று சொல்லி நயப்படலாயினர், ஆ! அப்படியாவென்று இராணி மனந்துடித்துக் கண்ணீர்த் ததும்பக் கதறியழுது அரண்மனையில்வந்து தனது பர்த்தாவிடம் சொல்லுமுன்னமே மன்னனும் மஹாதுயரடைந்து விசன சாகரத்திலாழ்ந்தவனாய் மனந்துடித்தழுது, பெண்ணே யாமென்ன செய்யலாம். கிளியைவளர்த்து பூனைவாய்க்கிரையாய்க் கொடுத்ததுபோல பெண்ணைப்பெற்று வளர்த்து இராக்ஷதன் வாய்க்கிரையாகச் செய்துவிட்டோமென மனவிசாரமாயிருந்தனன்.

இங்ஙனம், இவர்கள் கிலே இத்தகையபயங்கரமான அழுதால் வேடிக்கையான ஆச்சரிய காக்ஷியாயிருக்கையில் மாயராக்ஷதனான் ஞானலோசனியை எடுத்துக்கொண்டுபோய் தான் வசிக்கும் பயங்கரமானகுகையில்வைத்து தனது இஷ்டத்தைத்தெரிவித்தனன். அவள் கிஞ்சிற்றும் சம்மதியின்றி சொல்வதாயினள்.

ஞானலோசனி:—ஐயா! அசுரேந்திரா! யான் இருக்கும் கோலத்தைப் பார்த்தீரல்லவோ? யான் தவவேட மணிந்திருக்கின்றேனே என்னைத்தொடாமல் தூரநிற்பீர்.

மாயராக்ஷதன்:—மாதே! யானென்ன பிழைசெய்தேன்? யாதொரு குற்றமும்புரிந்திலாத யானுன் திருமேனியைத்தீண்டலாகாதெ

ன்றுரைப்பது நியாயமாகுமா கண்மணி! விண்மணியினுஞ் சிறந்தபெண்மணி !

ஞானலோசனி:—ஐயா லௌகிகமார்க்கத்தை யனுசரித்து உலக இன்பத்திற்சிக்கியவர்களாயிருந்தால் ஒற்றுமையாகும் யானோதெய்வீகமார்கத்தை நாடி கற்புத நிலை காத்தல் கன்னியர்க்கழகென்னும் விரதானுஷ்டான விதிமுறை வழுவுறாமற் பகவத் பிரீதியானந்தமாயிருக்கின்றேன். தாங்களெனைத் தீண்டுவீராகில் வேதவதியால் இராவணனழிந்து போனதுபோலாகும்.

மாயராக்ஷதன்:—ஈ தென்ன நூதன புதுமையா யிருக்கின்றனவே வேதவதியென்னும் கன்னியால் என்னைப் போன்ற ராஷதன் மரணமடைந்தா னென்றால் யாவரேனும் நம்பத்தக்கதோ? அதையான் கவனித்துணர்க விபரமாய்க் கூறுமின்.

ஞானலோசனி:—அசுரேந்திரா! திரேதாயுகத்தில் வேதவதி யெனும் பெண் ஸ்ரீமந்நாராயணரை மனப்பூர்த்தியாய்த் துதித்து தபஞ்செய்துக்கொண்டிருக்கையில் இராவணன் முரட்டுத்தனமாய் அதட்டி மிரட்டி பயங்கரப்படுத்த அந்தவேதவதிமனந்துடித்து நீஸ்திரீமாய்கையால் புத்திரமித்திரகளத்திராதியருடன் போர்க்களத்தில் மரணமடைவாயென்று சபித்ததினால் சீதைபிறந்தவுடனே தென்னிலங்கையழிந்ததென ராவணனும் மடிந்தான்.

என, பற்பலவிதமாய் ஞானலோசனிமாயராக்ஷதனுக்குமதியுரைத்திடினும் கேளாமல் தனது இஷ்டத்திற்கிணங்கும்படி வேண்டினன் என்ன செய்வாள்பெண்பிள்ளை. தனியாய் அகப்பட்டுக்கொண்டனள். தப்பித்துக் கொள்வதற்கும் முடியாது அதற்காக தான் ஓர்விதமாகி யதந்திரோபாயமாய்ப் புகல்வ தாயினள்.

ஞானலோசனி:—ஐயா! தாங்கள் எனது இஷ்டத்தைப்போற் சம்மதிப்பீராகில் யானும் உமது இஷ்டப்படியே சம்மதிப்பேன்.

மாயராக்ஷதன்:—பெண்மணி! யானும் உனது அழகிய வாயினால் இவ்விதம் புகல்வாயென்றுதான் காத்திருந்தேன் என்றாலும் உனது திருவாக்குக் கெதிர்வாக்குண்டோ இனி உன் மனம்போற் சம்மதித்தேன் உனது இஷ்டத்தைத் தெரிவிப்பாய் கண்மணி.

ஞானலோசனி:—அசுரேந்திரா! யான் எமது குலதெய்வமாகிய கவுரி நோன்பியற்றுதற்கு ஆரம்பித்து ஐந்து நாளாகிறது அது முடிந்தவுடனே உமது இஷ்டம் போற் சம்மதிக்கின்றேன்.

மாயராக்ஷதன்:—சரி! அப்படியே உன் இஷ்டம் அடியேன்பாக்கியம். அது முடிவுபெற எத்தனை நாள் செல்லும்.

ஞானலோசனி:—ஒருவருஷம் சரியானபின் விரதம் முடிந்துபோகும் அப்பால் உமது இஷ்டம் போற் சம்மதிக்கின்றேன். அதற்கிசைந்த சாமான்களும் சேகரிக்கவேண்டும்.

மாயராக்ஷதன்:—கண்மணி! அவையனைத்தும் எனக்கு விபரமாய்ப்புகன்றிடில் இப்போதே வரவழைக்கின்றேன்.

ஞானலோசனி:—அசுரேந்திரா! நாற்பது புதியமண்கலயம், ஒருமணங்கு நெய், நாலுமரக்கால் அரிசி அதற்குதகுந்த மிளகாமசாலே, எண்ணெ, பிட்டை, விறட்டி, காய்கறி தினுசுகளும் வேண்டியதாயிருக்கிறது, கலசத்திற்காக, தினந்தோறும் மஞ்சள்குங்குமம், வெற்றிலே, பாக்கு, பருத்திநூல், தேங்காய், பழம், கர்ப்பூரம், சாம்பிராணி முதலானவைகளும் வேண்டும்.

மாயராக்ஷதன்:—கண்மணி! இதோ அப்படியே கொண்டு வருகிறேன்.

என, ஞானலோசனி தந்திரோபாயமாய்ப் புகன்றவையனைத்தும் உண்மையென்றே மதித்து பிர்ம்மாகினைந்தால் ஆயுசுக்குக்குறையேதென்னுந்தன்மையாய் அச்சமயமே நகரிற்பிரவேசித்து அங்ஙனம் வியாபாரம் நிகழும் கடைகள் தோறும் புகுந்து, தனக்கு வேண்டியவையனைத்தும் எடுத்துக் கொண்டுவருகையில் அவர்களனைவரும் மனமிரண்டு இதென்னகண்காக்ஷியென திகைத்திருந்தனர்களேயன்றி தடைசெய்பவரொருவருமில்லாதிருந்தனர். மாயராக்ஷதன் வந்த காசுக்கு வட்டமில்லையென்னும் தன்மையாய் அகப்பட்ட மட்டும் வாரிக்கொண்டு தனது வாசஸ்தானத்திலிருக்கும் ஞானலோசனியின் முன் கொண்டு போய் வைத்து, பெண்ணே! யானுன்மனம்போற் சகலமும் தயார் செய்துவிட்டேன் இனி உன் இஷ்டப்படியே விரதாரம்பம் செய்து சம்பூரணமாயினபின் என்னுடன் சுகித்திருக்க வேண்டுமென புகன்றனன். ஞானலோசனியும் சம்மதித்தவள் போல அபிநயித்து, இன்னும் ஒருவருஷத்திற்குள் நமது தந்தை நம்மைத்தே

டிக்கொண்டு வருவாரென்னும் மனதைரியத்துடனே யிருந்திடினும் விரதானுஷ்டானம் துயரை யொழிக்குமென்பதாய் தான்கற்றுணர்ந்தமந்திரிரோச்சாடன முறைவழுவுறாமல் மந்திரபூர்வகமாய்க் கலசம் நிறுத்தி கவுரி விரதானுஷ்டானம் செய்துக் கொண்டிருந்தனள்.

இங்ஙனம் இத்தகைய அற்புதானந்த ஆச்சரியகாக்ஷியா யிருக்கையில் ஞானபுரி மன்னனாகிய ஞானேந்திரன்புத்திரி பிரிந்த மனவிசாரத்தினால் சித்தந்திகைத்திருக்கையில் மகாராணியும் மகளை உயிருடனிழந்தேனே யென்று மனத்துயரடைந்து அழுதுக் கொண்டிருந்தனள். அச்சமயம் அமைச்சராதியோர் பரிதாபமடைந்து அரண்மனை ஜோதிடனால் ஞானலோசனியின் ஜாதகநேர்மையைக் கணித்துரைக்கும்படி வினவுதலும், அன்னோன் அரசன்மனவியாகூலம் தணியும்படியாய் ஆருடகணிதத்திற்கிணங்க இராஜகுமாரத்தியாகிய ஞானலோசனியின் ஜாதகவிலக்ஷணத்தை ஆராய்ச்சி செய்துமன்னன் பாற்புகலலாயினன், வேந்தே! நும்புத்திரிக்கு ஆவிக்கபாயமணுகிடாது அசுரனாற் சிறையுற்றனளென்றிடினும் தனது பக்தியினால் கவுரிவிரதானுஷ்டானம் புரிதலாயினள். ஆயினும் இன்னும் சிலநாட்சென்ற பின்னர் உங்களில் யாவரேனும் சென்று அவளை அழைத்து வரலாகுமென்று ஆருடகணிதத்தில் குறிப்பிடுகின்றன வெனப்புகன்றதைக் கேள்வியுற்ற ஞானேந்திரராஜன் வீராவேசத்துடனெழுந்து, மந்திரிபிரதானியர்காள்! இத்ததியே யாம் ஜோடன் குறிப்பித்தபடியே வனசஞ்சாரியாய்ச் சென்று பாபியாகிய இராக்ஷதனை உயிருடன் பிடித்துக்கொண்டு வந்து நமது அரண்மனையின் எதிரிலிருக்கும் விருக்ஷத்தில் கட்டிவைத்து அன்னந்தண்ணீருங்காட்டாமல் அவனை சித்திரவதைசெய்யவேண்டுமென்று கர்ஜ்ஜித்துப் புகன்றெழுந்தனன். மந்திரிபிரதானியரும் அவ்விதமே புரிகுதுமென வீராவேசத்துடன் தைரியவார்த்தைபுகன்று, அரசே! நின் சுபுத்திரியின் பகலத்பக்தியானந்தமென்னும் அக்கினியால் அவ்வசுரனென்னும் சருகுதீய்ந்தெரியுமென்றெண்ணுவீர் யாம் அனைவரும் இத்ததியே ஆயுதபாணிகளாய் ஆரண்யமணுகி அசுரனைத்தேடிப் பிடித்துக் கொன்று இராஜகுமாரத்தியை அழைத்துக்கொண்டு வருகுவோமென்று புறப்படலாயினர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகைய அற்புதானந்த ஆச்சரியகாக்ஷியாயிருக்கையில் ஞானேந்திர ராஜன் கரத்திற்றனுசேந்தி அம்புறாத்தூணியை முதுகிலணிந்து யுத்தகோலத்துடனே மாளிகையிற் சென்று தனது காதலியைப்பார்த்து, நமது புத்திரியாகிய ஞான

லோசனியின் ஆவிக்குயாதொரு ஆபத்துமின்றி அசுரனல் சிறையி ருக்கிறற்போல ஆருடகணிதசாஸ்திரத்தில் குறிப்பிடுகின்றமையால் யான் சில சேனுவீரரைத் துணைவகித்து அரண்யமார்க்கமாய்ச்சென் று அசுரனைத்தேடிப்பிடித்துக் கொன்று நமது புத்திரியை அழைத் துவருகிறேனென்னனும், சுந்தரவதனியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, பிராணேஸா யானும் வருகிறேன் புத்திரியை யிழந்தும் மணுளனையும் பிரிந்திருப்பதற்குமனம்வருமோயானும் தங்களுடனே வருகிறேனென்று பிரயாணமாயினள், அரசன் சிரித்து. பெண்ணே! போர்முகத்தில் பெண்கள்வரின் அஸ்திரங்கள் பிரயோகமாகும் சமயத்தில் மனமிரண்டுபிராணனை விடுவார். அத்தநி பகைஞர் பக்ஷ மேஜயமாகும். ஆதலின் எத்கதியும் ஸ்திரீகளைத்துணைகொண்டு அம ர்க்களம் செல்வது சரியல்லவென்றனன்.இராணியாகிய சுந்தரவதனி கிஞ்சிற்றும் சம்மதியாமல் தானும் பிரயாணமாயினள். அச்சமயம். அரசன்சற்றுயோசித்து, யாம்வனமேகில் அரண்மனையில் காவல்யா ரென ஆலோசனை புரிந்தருணம் நற்குணத்திற்சிறந்த நித்யானந்த னிடம் செங்கோலைத்தந்து, மந்திரி! யான் வருகிறவரையினும் இந் நகரிற்கோர் பழுதுமின்றி துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்ய் அர சுரிமையைப் பாதுகார்த்து வருவாயென் றுக்ஞாபித்து, இரதகஜ துரகபதாதிகளுடனே தனது பத்தினிசகிதமாய் அரண்மனை விடு த்து ஆரண்யமார்க்கமாய்ப் பிரயாணமாயினர்.

இங்ஙனம் நிற்க, காமேந்திரனும், நியாயகேசரியும், வீரப்ரதா பனும் ஞானலோசனியை மாயராக்ஷதன் எடுத்துச்சென்றதால் மன வருத்த முற்றவராயிருக்கையில் நியாயகேசரி மிகவும் பரிதாப மாய்ப் புகலலாயினன்.

நியாயகேசரி:—நேயர்காள்! உலகிற் ஜனித்தகே பாபபுண்ணியத்தை யனுபவிக்கும் கடமையாயிற்றே; அவ்விதமிருக்க, நீங்களிருவ ரும் சேர்ந்து பெண்பழி தேடிக்கொண்டீரே இது நீதியாகு மோ?

வீரப்பிரதாபன்:—ஆம், தாங்கள் புகன்றவையும் உண்மையே. யான் தானே பஞ்சரத்திலிருக்கும் கிளிப்பிள்ளையை எடுத்து பூனைக் குக் கொடுத்தாற்போற் செய்தேன். இப்பழிபாதகத்திற் கென் செய்வது?

என, வீரப்ரதாபன் விசனசாகரத்தி லாழ்ந்தவனாய் அழுதனன், இவர்கள் பாபம் நேரிட்டதேயென பரிதாபமுற் றழுகையில் காமேந்திரன் கைக்கெட்டினகனி வாய்க்கெட்டாமற் றட்டுண்டு போச்சுதேயென விசனப்படுவதாயினன். இம்மூவரும் இத்தகையதாய் மனசஞ்சலமுற் றிருக்கையில் ஞானலோசனியை காமேந்திரன் மணம்புரிந்து சுகித்திருப்பானென்பது யாவருக்கேனும் நம்புந்தன்மையாகுமோ யென்றும், காமேந்திரன் ஞானலோசனியை எவ்விதத்திலேனும் மணம் புரியாவிடில் அக்கினிப்ரவேசமாவதே உண்மையெனவும் தீர்மானித்துவிட்டனன். வீரப்ரதாபனும் தான் கற்ற இந்திரஜால மஹேந்திரஜால மாயவித்தையாலும் முடியவில்லையேயென மனம் வெறுத்தனன். நியாயகேசரியோவெனின் அரசகுமாரனுடனே துணையாய்வந்து அவனை அழைத்தேகாமல் தனியாய் விடுத்துப்போவது சரியல்லவென்று பலவிதமாகிய நயபயத்தினால் நீதிவாக்கியங்க ளநேகமாகப் புகன்றும், காமேந்திரன் கவனியாமல் ஞானலோசனியின் மையலால் மனந்திகைத்திருக்கையில் இவர்கள் போகும்வழி யெவ்விதம்? இம்மூவரும் இத்தகையதாய்ச் சித்தந்திகைத்திருக்கையில், ஞானேந்திரன் தனது பத்தினி சகிதமாய் இரதகஜதுரகபதாதிகளுடனே பிரயாணமாகி ஆரண்யமார்க்கமாய் வருகையில் ஒற்றைப்பார்ப்பா னெதிர்க்கவும், ஓரி ஊளையிடவும், சாணான் ஏணியைக் காத்திலேந்திக்கொண்டு வரவும், கணக்கன் சுருளோலை எடுத்துக்கொண்டு எதிரில் வரவும், ஓர்கானகவேடுவச்சி மனம்பதறி திடீரென விழுந்து தனது மணத்துயரை நினைந்து ஒற்றைக்குரலிட்டு ஓங்கியழுதிடவும், சேனாவீரர் நடக்கும்போதே காலிடறி கவிழ்ந்து வீழ்ந்திடவும் அரசனுக்கும் ராணிக்கும் மனது படபடவென்று துடிக்கவும் இத்தகையதாய்ப் பற்பலவிதமாகிய அவசகுனமனைத்துங் கண்டு ஈதென்ன காலவிபரீதமென்று யோசிக்கும்போதே மூதேவிவசத்திற் சிக்கியவராய் நித்திரையை இச்சிக்கும் மனோன்மத்தராய் ஒன்றுந் தோற்றாமல் போய்க்கொண்டிருக்கையில், வழியிலோர்திருந்த நந்தவனத்தைக் கண்ணுற்று இங்கு சற்று தாமதிப்போமென அரசன் தெரிவித்திடவும் சேனாவீரர் கூடாரமடித்து அவரவர்கட்குத் தகுதியான இடமமைத்துக்கொண்டு யாவரும் மனக்களிப்புடனே வீற்றிருப்பதாயினர்.

இங்ஙனமிருக்க, சேனாவீரர்களிற் சிலர் தமது காத்திற்றூங்கிய தனுசிற் கணைதொடுத்து வனத்திற் பிரவேசித்து மான், கடம்பை,

ழ்பலினம் முதலாகியவை யனைத்தும் கொண்டுவந்து சமைத்து அரசன் முதலானோருடன் விருந்தமுதுண்டு மனோல்லாசமாய் அவரவர் விடுதியிற் சென்று சயனித்துக்கொண்டனர். இராஜனும் இராணியும் தமது புத்திரியை எத்ததி காண்போமென சித்தசிந்தைத்தியுடனும் நித்ராதேவியின்பாற் சிக்கியவர்களாய் உறங்கிவிட்டனர். அத்தி மஹாராணி திடுக்கிட்டெழுந்து ஆ! பிராணபதி! யென்றலறி கூச்சலிடவும் அரசன் விழித்து வினவுதலாயினன்.

ஞானேந்திரன்:—காதலி! ஈதென்ன இத்தகையதாய் மனமிரளுவதாயினையே?

சுந்தரவதனி:—பிராணேஸா! யான் நித்திரை புரியுந்தருணம் ஓர் துர்க்கினவு கண்டெழுந்தேன். அதனை நினைக்குந்தோறும் பயங்கரமாகவே விளங்குகின்றன.

ஞானேந்திரன்:—காதலி! ஈதென்ன ஆச்சரியம்? அத்தகைய பயங்கரமான கனவின் காக்ஷியை யான் கவனித்துணர்க விவரித்துக்கூறுமின்.

சுந்தரவதனி:—பிராணேஸா! யான் கண்ணயர்ந்து நித்திரை புரியுந்தருணம் நமது சேனைகளுடனே நாம் நமது புத்திரியைத் தேடிக்கொண்டு போவதுபோலும்; வழியிலெதிருற்ற கானகத்தில் ஓர் குகை தோற்றவும் அங்ஙனம் நமது அருந்தவப் புத்திரியாகிய ஞானலோசனியும் ஓர் விகாரரூபமுற்ற மாயாக்ஷதனும் தோற்றக்கண்ணுற்று, அவனுடன் தாங்கள் எதிர்த்து சண்டை செய்வதுபோலும், அகஸ்மாத்தாய் நமது சேனைசைன்யமனைத்தும் சிலையுருவாய் நின்றுவிட்டதுபோலும் கனவு கண்டு திடுக்கிட்டெழுந்தேன் இத்ததியாதொன் அய்தோற்றுவிருக்கின்றது.

ஞானேந்திரன்:—மாதே! பேதமையென்பது மாதர்க்கணிகலமென்னுந்தன்மையாய் நீ ஸ்திரீயாகையால் மனமிரளுகின்றனை; ஆகையால், நீ இத்ததியே அரண்மனைக்குப் போய்விடுகிறதாயிருந்தாலும் இப்போதே யான் சேனைகளனைவரையும் இங்ஙனம் நிறுத்திவிட்டு உனைமாத்திரம் அழைத்துக்கொண்டுபோய் அரண்மனையில் விடுத்துவருகிறேன் வருகின்றனையா?

சுந்தரவதனி:—பிராணேஸா! தாங்கள் புகல்வதை வினவிய எனதுளம் கிஞ்சிற்றும் சம்மதியில்லை, அஃதேனெனின், சதிபதி மனமுவந்து யாதேனும் ஓர் காரியத்தை செய்வதற்குத் துணிந்தால் நிறைவேறுமன்றி தனியாய்ச் செய்வதற்கு முடியாது. ஆகையால் தாங்கள் நமது புத்திரியின் சிறை மீட்பதற்காக இராக்ஷதனுடனே தனியாய்த் தாங்கள் சமர்புரிந்திடினும் யானும் துணையாயிருந்திடில் மேன்மையன்றோ?

ஞானேந்திரன்:—ஈதென்ன ஆச்சரியம்? பெண்களைத் துணைகொண்டுதானா பகைஞனிடம் சண்டைதொடுப்பது,

சுந்தரவதனி:—பிராணபதி! தாங்கள் பெண்துணையின்றி சமர்புரிதற்கு போவதிலும், பெண்துணையோடு அமர்க்களத்திற் சென்றிடில் ஒருவேளை களைத்திடினும், அருகிலிருக்கும் பெண்கரத்திற் றனுசேர்த்திநின்றால் வீரர்களானவர் பெண்மேற் கணைதொடுப்பதற்கஞ்சி நிற்பர். துவாபரயுகத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர் நரகாசுரன்மீது சண்டை செய்யும்போது அசுரன்விடும் அஸ்திரத்தினால் களைத்திளைத்து மூர்ச்சையாக வீழ்ந்திடவும், அருகிலிருந்த சத்தியபாமை அசுரனுடனெதிர்த்து அஸ்திரப்பிரயோகஞ்செய்துக்கொண்டிருக்கையில் அவனுடையகழுத்திலணிந்திருந்த முத்துமாலை அறுபட்டு வீழ்ந்திடவும் அதற்குள் களைத்து வீழ்ந்திருந்த கிருஷ்ணபகவான் மூர்ச்சை தெளிந்தெழுந்து நரகாசுரனுடன் சண்டைசெய்துக் கொன்றுவிடவில்லையா! ஆனால், அச்சமயம் சத்தியபாமையில்லாவிடின் கிருஷ்ணமூர்த்தியால் அசுரனை ஜெயிப்பதற்கியலுமோ?

ஞானேந்திரன்:—மாதே! நீ சாஸ்திரபுராணசாராம்ஸ மர்மரகஸ்யமுணராமல் பாஷிப்பது வேடிக்கையாயிருக்கின்றனவே ஆதியில் மஹாவிஷ்ணுவின் வெயர்வைபூமியிற்சிந்த அதனை உட்கொண்டபூமிதேவி கர்ப்பவதியாகி ஓர் ஆண்குழந்தையை ஈன்றனள், அது இராக்ஷதசொருபமாய் விளங்கி இருந்ததினால் நரகாசுரனெனபெயரிட்டு அவன்கழுத்தில் முத்துமாலையணிந்து எனது அன்பிற்கினிய மைந்தா! இந்த முத்துமாலையானது அறுபட்டபின்புதான் உன் உயிர்போகும், இதனை யானன்றிமற்றவரால் அறுக்கமுடியாதென நல்ல வரந்தந்து வளர்த்து பிராக்ஜிஜோ

ஷ்டபுரத்தை பரிபாலனஞ்செய்யும்படி ஆக்ஞாபித்தனன். அவன் மஹாகர்வியாய் தேவர்களை யெல்லாம் அதஞ்செய்துக்கொண் டிருக்கையில் இவனை வெல்வதற்கு யாவராலும் முடியாம லிருக்கையில் மஹாவிஷ்ணு கிருஷ்ணனாகவும், பூமிதேவி சத்திய பாமையாகவும் பிறந்து மணம்புரிந்து சமயம்பார்த்துக்கொண் டே யிருந்து சமயோசித கலகம் நேரிட்டபோது சதிபதி யிரு வரும் சென்று அசுரனைவென்று ஜெயம்பெற்றார்களேயன்றி, நம்மைபோன்றவர்களாலாகுமோ? அன்றியும் உனக்கென்ன தனுசைப்பிடிக்கும் மார்க்கமின்னதென்றுந் தெரியுமா?

சுந்தரவதனி:—யானென்ன சாமான்ய ஸ்திரீதானே யென்று நினைக் கிறீர்போலுமிருக்கிறது, யான் கரத்திற் றனுசேந்தி அமர்க் களத்திற்சென்று நின்றால், எத்தகைய சுத்தவீரனும் நிர்வகிக்க மாட்டானென்றால் எனது சாமர்த்தியம் யாதொருவராலும் கவனிக்கமுடியுமா?

எனநவின்று அரசன் கரத்திலிருக்கும் தனுசைவாங்கி அம்புறாத் தூணியை முதுகிலணிந்து வீராவேசத்துடனே தமது சேனாவீரர் மனந்திடுக்கிடும்படியாய், ஆகாயமார்க்கத்திற்றானே பார்வைசெலு த்தி அக்கினியாஸ்திரம் விடுத்து வருணாஸ்திராஸ்திரத்தால் தடுத்து, இருளாஸ்திரம்விடுத்து சூரியாஸ்திரத்தினால் தடுத்தும் பிரமாஸ்திரம் விடுத்து, நாராயணாஸ்திரத்தால் தடுத்தும், இன்னும் பற்பலவிதமா கிய அஸ்திர சஸ்திரவேடிக்கை யனைத்தும் வெகு விமரிசையாய்ச் செய்துக்கொண்டிருக்கையில் கண்ணுற்றதிசயித்த சேனாவீரர்கள் ஆச்சரியமுற்றவரா யிருந்தனர்,

ஞானேந்திரமஹாராஜன் தனது பத்தினியின் சமர்த்தைக் கவ னித்து ஆச்சரியமுற்றவனாய் வினவுதலாயினன்,

ஞானேந்திரன்:—மாதே! யானுனது சமர்த்தினை இதுவரையினுங் கவ த்திலேன். ஆனால், நீயோ பெண்பிள்ளையாச்சுதே நீ எவ்வித மாய் இத்தியாதிசமர்த்துடன் வில்வித்தை கற்றுணர்ந்தனை?

சுந்தரவதனி:—யான்! இளம்பருவத்தில் யாவரும் ஆச்சரிய மெய்தும் படியானவித்தியாசாலையில் வாசித்திருக்கையில் எனது தாய

னும் யானும் ஓர் ஆசானிடத்தில் கற்றுணர்ந்தோம் ஆனால் யான் மாத்திரம்,

வெண்பா.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப்பட்டாலும்
முத்தர்மன திருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

என்னுந்தன்மையாய் யான் வித்தைவிரும்பெனும் வாக்கியத்தை யனுசரித்து, விளையாட்டு விஷயத்தில் மனதை செலுத்தாமல் எனது கல்வியின் மீது என்மனதைசெலுத்திக் கொண்டுவில்வித்தையைக்கற்றுணர்ந்தே னென்றனள். மனையாளின் சமர்த்தைக் கவனித்த மணாளன் மனமகிழ்ந்து இனி நமக்கு யாதொரு பயமுமில்லை யெனமதித்திருந்தனன்.

அப்பால் சேனாவீரர்களனைவரும் கானகமெங்கும் திரிந்தலைந்து தமது கூடாரங்களில்வசித்திருந்தனர். அரசன் அருகிலிருக்கும் ஜோதிடனால் அசுரனிருக்கும் ஸ்தானத்தின் ஆருடத்தைகேள்வியுற்று சேனா வீரர்களை எச்சரித்துபிரயாணமாயினன். இத்தகையதாய்வெகுதூரம் சென்று மாயாராக்ஷதன் வாசஸ்தானத்தில்வந்து, அங்ஙனமிருக்கும் குகையருகில் ஞானலோசனி ஓமகுண்டம் வளர்த்திக் கொண்டு கலசம் நிறுத்தி யாகஞ்செய்துக் கொண்டிருப்பதையும், அருகில்விகார ரூபமாகிய ஓர் இராக்ஷதன் உட்கார்ந்திருப்பதையும் பார்த்து ஞானேந்திரராஜனும், சுந்தரவதனியும் மகாகோப தீப்தராய்க் காலாக்னிருத்திரன்போற் சினந்து இருவரும் கரத்திற்றனு சேந்தியுத்தசன்னத்தராயிருக்கவும் சேனா வீரர்களும் வில்லைக் கரத்திலேந்தி ஏககாலத்தில் அஸ்திரங்களை விடுத்து அசுரனைக்கொன்று விடுவோமென்று முனைந்துநிற்பதையுங்கண்ணுற்ற மாயாராக்ஷதன் அப்பப்பா! இனிதாமதித்திடில் ஆபத்தாகுமென திடீரென்றெழுந்து தனதுமாயஜாலவித்தையினால் அவர்களனைவரையுங்கல்லாய்ச்சபித்து விட்டனன். ஆனால், சாமான்ய அசுரர்களாயிருந்தால் சுந்தரவதனியின் அஸ்திரத்தால் இறந்து விடுவார்கள். அன்றியும், அசுரன் தனியாயிருந்தால் அவர்களாலானவரையினும், அசுரனை சித்ரவதைசெய்து விடுவார்கள். இராஜகுமாரத்தியாகிய ஞானலோசனியும் அருகிலிருந்தமையால் அசுரன மீது விடுக்கும் அஸ்திரம் தப்பித்தவறி

ஞானலோசனியின் மீதுவீழ்ந்திடில் முதலுக்கே மோசமாய் விடுமே யென்று மதித்து சமயம் பார்த்திருக்கையில் மாயாராக்ஷதன் "மோசமாய்" வந்தெதிர்த்த வீரருடன் சண்டை செய்து சமர்த்தைக்காட்டாமல் தனது மாய்கையினால் கல்லாய்ச்சபித்தனன்.

இங்ஙனம், இத்தகையதாய் நேரிடவே ஞானலோசனி அலறித்துடித்து அழுது ஆ! விதிவசமே யான் வீட்டிலிருந்து புறப்பட்டவேளையில் என்னென்ன அவசகுனம் நேரிட்டதோ வென்று மனவிசாரமடைந்து இனி நாம் விசன மெய்தலாகாது, விரதானுஷ்டானத்தை மாத்திரம் விடாமல் நடத்திக்கொண்டிருப்போமானால், எவ்விதமாயினும் கவுரியம்மன் கிருபையால் நமது சிறை மீளும்படி கிருபைசெய்வாளென்று தான்புரியும் விரதத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்தனள்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகையதா யிருக்கையில், கானகத்தில் திகைத்திருக்கும்காமேந்திரனுடனே நியாயகேசரியும் வீரப்ரதாபனும் ஆலோசனையாயிருக்கையில், கிழக்குதிசையிற்போயிருந்த ஜெயப்ரதாபனும் தனது நேயர் மூவரும் சென்ற மார்க்கத்தைநாடி தேடிச்சென்று பலவித கஷ்ட நிஷ்டூரமடைந்து உயிரகலாமல் பிராணன் மீதியானதே போதுமென்று கானகவாசியா யலைந்து திரிந்து வருகையில், வழியிலெதிருற்ற நந்தவனத்திற்சென்று தாமரைப் பொய்கையிலிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டை முடித்துக்கொண்டு அங்ஙனம் அடர்ந்து செழிப்புற்றிருக்கும் விருக்ஷங்களிற் பழுத்துளதாகிய மா, பலா, வாழை, அன்னாசி, கிச்சிலி, மாதுளைமுதலாகிய இனிமைசேர்கனிவர்க்கங்களைப் பறித்துப்பசித்துப்புசிதணிந்து, நன்னீரருந்திக்களைதெளிந்து, வசந்தமண்டபத்திற்சற்றுநேரம் சயனித்துநித்திரைதெளிந்தெழுந்து. மெதுவாய்ப் போய்க்கொண்டிருக்கையில் தனது நேயர்களாகிய காமேந்திரன், வீரப்ரதாபன், நியாயகேசரி யென்னும் மூவரும் தோற்றக்கண்ணுற்று தாய்தந்தையரைக்கண்டு ஆனந்தபரவசமடையும் சேய்போல அதிவேகமாய் ஓடிவந்துதனது இருகரத்தினாலும் அம்மூவரையும் ஒன்றுய்ச்சேர்த்துக் கட்டிக் கொண்டு ஆனந்தக்கண்ணீர்த் ததும்ப சொல்வதாயினன்.

ஜெயப்பிரதாபன்:—ஆ! எனது அன்பிற்கினிய நண்பர்காள்! யானுங்களைப் பிரிந்த பிறகு வெகுவிததுன்பமடைந்தேன், அதனை சொல்வதெலினும் பயங்கரமாயிருக்கின்றனவே.

நியாயகேசரி:—யாமென்ன செய்வோம்? அரசகுமாரன் பிறந்த ஜாதகநேர்மை பலவித துன்பமனுபவிக்கவேணு மென்றிருக்கிறதெனமுன்னோர்கள் சொல்வதைக் கேள்வியுற்றிருந்தும் நமது மதியீனத்தினால் துணைபற்றி, யாம் அரண்மனையைவிடுத்துபுறப்படும்போதும்பலவிதஅவசகுணமனைத்தும்நேரிட்டது அதனையும் கவனியாமல்வந்துவிட்டோம், அதனாலே பயங்கரமாகிய ஆபத்தும் பழிபாபமும் நேரிடலாயிற்று இனிவிசனப்படுவதாற்பிரயோசனமில்லை. உரலில்தலைவைத்துக்கொண்டபிறகுஉலக்கைக்குப்பயந்தால் உயிர் தப்புமா? இது வரையினும் நாம் ஒவ்வொருவரும்தனித்தனியே பிரிந்துபலவிதகஷ்ட சிஷ்ரமடைந்தோமென்றாலும் இப்போதுயாம்நால்வரும்கூடியனுபவிக்கும் கஷ்டமோ உயிர் நிலைக்குமோ? போகுமோ வெனசந்தேகப்படுகிறேன்,

வீரப்ரதாபன்:—ஐயா! நியாயகேசரி தாங்கள் புகன்றவை வினவிய எனதுளம் பலவிதமாய்ச் சந்தேகிக்கின்றனவே, அஃதேனெனின் "பிடாவிற்றேள்கொட்ட, கையில் நெறிகட்டியதுபோல" அரசகுமாரன் ஜாதகநேர்மை கஷ்டமுடைய தாயிருந்தால் நாமேன்சஞ்சல மெய்தலாயிற்று?

நியாயகேசரி:—அப்பா!வீரப்தாபா!ஆயிரம்கொக்குத்திரளில் ஓர் ஓரி கொக்கிருந்ததினால் எவ்விதமாய் அந்த கொக்குத்திரள்களுக்குப்பக்ஷணமகப்படாமற் பாதவித்ததோ அதைப்போலவே வறுமைலக்ஷணம் அமைந்த அரசகுமாரனுடனே சேர்ந்த யாமும் இறுமையாற் கலங்கும் விதமாய் நேரிடலாயிற்று.

ஜெயப்பிரதாபன்:—ஆ! அப்படியா அந்த கொக்குத்திரள்களுக்கு யாதுகாரணத்தினால் பக்ஷணம் கிடைக்கவில்லையோ அதைச்சற்றுவிவரித்துக்கூறுமின்.

நியாயகேசரி:—வெகு நாள் வரையினும் இணைபிரியாதிருந் கொக்குத்திரள்கள் ஒன்றாய்ப்பறந்துபலதேசங்களிலும்திரிந்து இரைதேடிப்புசித்து யாதொரு ஆபத்திலும் சிக்காமலும் உயிர்சேதமில்லாமலும் வேடர்வலையிலும் அகப்படாமலும் வெகுபக்குவமாய்த்தப்பிழைத்துக் கொண்டிருக்கையில் இவைகளின் கஷ்டகாலகிரகசாரபலனுக்கிசைந்தாற்போல ஈனஸ்திதியுடைய ஓர் ஓரிகொக்குவந்து அந்த கொக்குத்திரளிற் கலந்து கொண்

டது அன்றையதினத்திலிருந்து அந்த கொக்குகள் எந்திசைபோனாலும் யாதொரு பக்ஷணமும் கிடையாமல் பசியாற்களைத்திளைத்து அந்திப்பொழுதான உடனே தமதுவாசஸ்தானமாகிய ஆலவிருக்ஷத்தில்வந்திருப்பதும் அருணோதயமாயினபின்பறந்து போய் இரைதேடினாலும் அகப்படாமல் மனமயக்கமாய் வருகிறதும் இவ்விதமாய் நாலுதினம் வரையிலும் பசியாற்களைத்திளைத்துக் கொண்டிருந்தன. ஐந்தாவதுதினம் இவைகளெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து, யாம் இத்தனை நாளாய் எவ்வளவோசமர்த்தாய் பக்ஷணம் புசித்து பசியில்லாமல் ஜீவித்துக் கொண்டிருந்தோம். தற்சமயமோ இரையகப்படாமல் தத்தளிக்கின்றோமே ஈதென்ன அநியாயமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் நம்முடன் யாதோ ஓர் கொக்கு ஓரியாயிருப்பதினால் கஷ்டப்படுகிறோம். அதனை துரத்தவிட்டால்யாமனைவரும் சுகமாயிருப்போமென்று அதிகாரகொக்கு சொன்னவுடனே, அருகிலிருந்தவையனைத்தும் அதனை எவ்விதமாய்க் கவனிப்பதென்று கேட்க, அச்சமயமே அந்தக் கூட்டத்தை இருவகுப்பாய்ப்பிரித்து விடவும் ஒன்றாயிருந்தகொக்குத்திரள்இரண்டாய்ப்பிரிந்து போகையில் ஒரேபக்கத்தில் தானே ஓரிகொக்கும் இருக்கும் ஆனபடியால் அதனுடன் சேர்ந்துபோன பறவைகளுக்கு வழக்கப்படியே அன்றையதினமும் யாதொரு உணவாதிகளும் அகப்படாமல்பசிவேதனையால்களைத்துவந்தன ஆனால் ஓரி கொக்கில்லாதமற்றொருவகுப்பாகிய கொக்குத்திரள்களுக்குமாத்திரம் அன்றையதினம் அகஸ்மாத்தாய் ஓர் மடுவுதோற்றக்கண்டு அதில் வெகுவிதமான மச்சங்களிப்பதைப்பார்த்து மனோல்லாசமாய்க் காஞ்சமாடு சம்புக் கொல்லையிற் புகுந்தது போல ஜலத்தில் மூழ்கி மூழ்கி முரட்டுத்தனமாய் பெரிய பெரிய மச்சங்களாய்ப்பிடித்துத்தின்று பசிதணிந்துசந்தோஷத்துடனே தமதுவாசஸ்தானத்திற்கு வந்துவிட்டதுகள். அப்பால்.ஓரி கொக்கிருக்கும்வகுப்பையே *பிரித்துப் பிரித்து அனுப்பிக்கொ

* கொக்குத்திரள்களின்மொத்தம் ஆயிரத்தில் பிரித்தகணக்கு.

1-வது	500	500	5-வது	32	31
2 ,,	250	250	6 ,,	16	15
3 ,,	125	125	7 ,,	8	7
4 ,,	62	63	8 ,,	4	3
			9 ,,	2	1

கடைசியில் நின்றது ஓரிக்கொக்கு ஒன்றுதான்.

ண்டிருக்கையில் அந்த ஓரி கொக்கிருக்கும் பக்கத்தில்யாதொரு உணவாதிகளும் புசிப்பதற்கியலாமல் கடைசியினால் தனியாகின துஅதனை கவனிளித்து அதை எங்கும் அழைத்துச் செல்லாம லிருந்தனுகள். அப்பால் அந்தக் கொக்குப் பசியால் களைத்துப் போயினது.

வீரப்ரதாபன்:—ஈதென்ன ஆச்சரியம்?

வெண்பா.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் ஈசன்—உருப்பெற்றால்
ஊட்டிவளர்க்கானோ ஓகெடுவாய் நெஞ்சமே
வாட்ட முனக்கேன் மகிழ்.

என்னுந் தன்மையாய் சாஸ்திர புராணங்களினும் முறையிடுகின்றனவே, அன்றியும் சீவர்களை சிருஷ்டித்த ஜெகரா‌ஷகனனவர், "விருஷத்தை வைத்தவன் தண்ணீர்வார்த்து வளர்ப்பதுபோல" தன்னால் சிருஷ்டியாகிய ஜீவர்களைக்காப்பற்ற வேண்டியதாயிருக்க, தொண்ணூற்றொன்பதுகொக்குகளுக்குப்பசியில்லா உணவுகிடைக்கும்படி செய்தவர் ஒருகொக்குக்குமாத்திரம் உணவுகிடையாமல் செய்துவிட்டது வஞ்சனையல்லவோ? ஆனால்,உலகின் மாந்தர்கள் மாத்திரம், காமம்,குரோதம், லோபம், மோகம், மதம் மாச்சரியம், இடம்பை, வேட்கையென்னும் அஷ்டவிததுர்க்குணத்திலும் சிக்கி மனதை செலுத்தி அலைகாற்றுரும்புபோற் பறக்கவிடுத்து மனப்போன போக்குக் கோர் வழியே யில்லையெனும் பழிபாபத்திற் சிக்கித்துயரப் படுவார்கள். ஜெகதீஸன் அப்படியல்ல வென்று சாஸ்திர புராணங்களினும் முறையிடுகின்றனவன்றோ?

நியாயகேசரி:—ஆம்! அஃதுண்மையே யெனினும் முன் ஜனனத்தில் அவரவர் புரிந்த கர்மானுசார விதிப்படியே அமையுமன்றி பகவானென் செய்குவர்?

வீரப்ரதாபன்:—சரி! அப்படியா! யாவும் பகவத்செயலெனப் புகல்வது உண்மையன்றோ?

நியாயகேசரி:—உண்மையன்றெனபுகல்வதுகியாயவிரோதமே. ஆனால் பகவான் ஜீவர்களை சிருஷ்டித்து,பாபபுண்ணியத் தியல்பினைக்கவனிக்கும்படியாய் அறிவையும் கொடுத்திருக்கின்றனர். ஜீவர்

கள் அறிவானந்தமாய் விளங்குவதன்றி மாயாசம்பந்தமான மனதின்படியே சிக்குண்டு நடந்தால் பழிபாபத்திற் சிக்கி அலையும்படியாய் நேரிடும்.

வீரப்ரதாபன்:—ஐயா! தாங்கள் புகல்வது எனக்கு நன்றாய் விளங்கவில்லை அவற்றை விவரித்துக் கூறுமின்.

நியாயகேசரி:—சரி! அப்படியே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர் பகவான் ஜீவர்களை சிருஷ்டித்தபோதே அறிவையும் கொடுத்திருக்கின்றனர். ஆனால் மாயாசம்பந்த லௌகிக மார்க்கத்திற்காக மனதும் அமைத்திருக்கின்றனர். மனமில்லாவிடில் உலகமில்லை மனதினாற்றான் உலகியல்பு நிகழ்த்தலாகும் அஸ்வமிருந்தால் ஆரோகணித்து செல்வதற் கியலுமென்பதுபோல மனமிருந்தால் ஜீவர்கள் சம்ஸாரமெனும் சாகரத்தில் மூழ்கிய ஜலராசிகளைப்போல உலாவித் திரிகின்றனர். மனமில்லாவிடில் நித்யானந்தப்ரம்ம சொரூபிகளாயிருந்திடினும் ஜடமின்றிய அரூபியைபோற்றோற்றுவர், ஆகையால் ஜீவர்கள் இல்லறமார்க்கத்தினை யநுசரித்து சதிபதி மனமுவந்து மைந்தரையீன்று மனக்களிப் புற்றிருப்பதற்காகவே பகவான் மனதையும் சிருஷ்டித்தன ரென்றாலும் * அஸ்வத்தைப்போன்ற மனதிற்கு சித்தமென்னும் கடிவாளமிட்டு பஞ்சேந்திரியமென்னும் சேணந்தொகுத்து அறிவானந்தனிட மொப்பித்து வெகு ஜாக்கிரதையாய் புண்ணியமென்னும் நன்மார்க்வழியே சென்று அஞ்ஞான மென்னும் சாகரத்தில் மூழ்காமல் ஞானமென்னும் கரையேறி மோக்ஷமென்னும் வீட்டிற் சென்று காண்டல், உரை, அனுபவமெனும் மூன்றையும் கடந்த முமுக்ஷுவாய்த் தன்னை மறந்து தலைவனிற்கலந்து சிதாகாசமா யிருப்பாயென்று ஆக்ஞாபித்திருக்கையில், அறிவானந்தனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துக் கருணாகரன் ஆக்கையின்படியே காற்றை நிகர்த்த வேகத் தன்மையையுடைய மனமென்னும் அஸ்வத்திற்கு பஞ்சேந்திரமென்னும் சேணக் தொகுத்து சித்தமென்னுங்கடிவாளமிட்டு வைராக்கியமென்னும் கொறடாவினால் எத்தகைய ஜாக்கிரதையாய்த் தட்டி மெதுவாய் நடத்திக்கொண்டு போனாலும் ‡ அலகையை

* அஸ்வம்—குதிரை

‡ அலகை—பேய்

நிகர்த்த மனமானது தோற்றபனைத்தும் மறைவென்பதை யுணராமல் கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென்னும் தன்மையாய்க் கும்மாளம் போட்டுக்கொண்டு செல்லுந்தருணம் மாயா சம்பந்தமான அஞ்ஞான விருட்சூழ்ந்திடில் அக்கினிப்புகையில்கப்பட்டவர்கள் திக்குமுக்காடிட்டுத் திகைப்பது போல அறிவானந்தனுக்கு வழிதெரியாமல் மதிமயங்கி தான் பிடித்திருந்த பஞ்சேந்திரியமெனும் சேணத்தைக் கைநழுவ விடுத்திட்டால் சித்தமென்னும் கடிவாளம் தளர்ந்துபோகும் வைராக்கிய மென்னும் கொறடாவும் சிதறிப்போகும் அச்சபயம் மனமென்னும் புரவிக்கு மனோல்லாசம் பெரிதாகி அறிவானந்தனை குப்புறவிழும்படி அப்புறப்படுத்தி துர்க்குணத்தைத் துணைவகித்து அக்கிரம சாலையிற் பிரவேசித்து காமம், குரோதம் லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கையை சொந்தபந்தத்வம்போற் சினேகித்து, துன்ப மென்னும் பாபவழியில் பிரவேசித்துப் பலவிதமாகிய பழிபாப மேற்று மறுஜனத்திற்குக் கஷ்டத்தைத் தேடிக்கொள்கின்றது. அவ்விதமாகிய தீயவழியிற்சென்று பாப சொருபமாயிருக்கும் ஜீவர்கள் வாழ்நாட்குறுகி ஆவியகன்று மறுஜன்ன மெடுக்கும் போது பூர்வீக வினைக் கிசைந்தபடியாய் நவக்கிரகங்களால் சுகதுக்க மனுபவிக்கச் செய்கின்றனர்.

வீரப்பிரதாபன்:—ஈதென்ன நூதனம்? சிருஷ்டி கர்த்தா ஜெகரக்ஷகனாயிருக்க ஜீவர்கள் குற்றம் புரிந்திடில் அவர்தானே தண்டிக்க வேண்டும். நவக்கிரகங்களால் ஏன் சுகதுக்க மடைவது?

நியாயகேசரி:—பகவானால் சிருஷ்டித்த ஜீவர்களை அவரே தண்டிப்பதற்கிசையார். தாய் தந்தையர் தாம் ஈன்றபிள்ளைகளை அந்நிய வித்தியாசாலையில்விடுத்தால் அந்த ஆசானால் அடி உதையேற்றாயினும் கல்விகற்றுணர்வாரென்பதுபோல பகவான் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களைத் தானே தண்டிப்பதற்கு இசையாமல் நவக்கிரகங்களால் சுகதுக்கமடையும்படி செய்கின்றனர்.

வீரப்பிரதாபன்:—ஈதென்ன ஆச்சரியம்? கடவுள் ஒருவர்தானே மனிதர்கள் மாத்திரம் தமதுபிள்ளைகளை தாமே அடித்து மிரட்டலாகாதென்று அந்நியருடைய வித்தியசாலையில் விடுத்து கல்விகற்பிக்கச்செய்கின்றனர். ஆனால் பகவான் தம்மால் சிருஷ்டியான

ஜீவர்களை நவக்கிரகங்களிடமொப்பித்து சுகாசுக மனுபவிக்கச்செய்யும் காரணமென்ன அதன்விபரம் யாதொன்றும் தெள்ளியதாய்ப் புலப்படவில்லையே.

நியாயகேசரி:—ஜீவர்கள் செய்த பழிபாபத்தினால் மறுஜனனமெடுக்கையில், அவரவர் ஊழ்வினைக்கிசைந்த விதமாய் கதிர், மதி, குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேதுவெனும் ஒன்பதுபேரும், மேஷம் ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு ராசிவீடுகளிலு மிருந்து ஜீவர்களை சுகாசுக மனுபவிக்கச் செய்கின்றனர். இவற்றை கவனியாத மாந்தர்கள் பகவானை வீணில் நிந்தித்து பழியேற்றுக் கொள்ளுதல் பாபமல்லவோ? அஃதெவ்விதமெனின் யாதாமொருவனும் குற்றம் புரித்திடில் தலையாரிகள் அவன் புரிந்த குற்றத்திற்காக அவனைப் பிடித்துக்கட்டி இழுத்துக்கொண்டுபோய் அரசன் முன்விடுத்திட்டால், அவன் குற்றத்திற்கியன்ற தண்டனை செய்வீர்களென்று அதிகாரிகட்கு அரசன் ஆக்ஞாபித்திடில், குற்றவாளி தன்குற்றத்தை நினைந்து விசனப்பட வேண்டுமன்றி அரசனை நிந்தித்தால், அருகிலிருக்கும் அதிகாரிகள் சும்மாயிருப்பார்களா? பின்னும் விசேஷமாய் துன்புறச் செய்வார்களன்றோ ஆகையால் தாம் தாமே செய்தவினை தாமே யனுபவிப்பரெனுந் தன்மையாய் அந்த ஓரி கொக்கானது முன்ஜனனத்தில் எந்த ஜீவர்களை அநியாயம் செய்ததோ அதினாலே தான் தொண்ணூற்றொன்பது பறவைக்கும் பக்ஷணங்கிடைத்தால் அந்த ஓரி கொக்கு ஒன்றுக்கு மாத்திரம் புசிப்பு துஜ்பமாய்விட்டது. அதற்கு யாவரென்ன செய்வார்கள் அவ்விதமே நமது இராஜகுமாரனாகிய காமேந்திரன், முன்ஜனனத்தில் வெகு விதபுண்ணியஞ் செய்து அரசனாய்ப் பிறந்திடினும் இல்லறமார்க்கத்தில் கீர்த்திப் பிரகாசமாய் ஜீவித்திருக்கும் சாதுக்களை பழித்துப் பரிகாசம் செய்த பாபத்தினால் அவருக்கு காமமே கழுத்தறுக்கும் கத்தியாக ஞானபுரி மன்னன் புத்திரியை இச்சித்து மனமயக்கம் கொள்வதாயினர். இவையனைத்தும் கவனியாமல் யாமும் அவருடனே கூடிக்கொண்டு கூத்தாடினால் அவருடன் யாமும் அனுபவிக்க வேண்டியதாய் நேரிடுமல்லவோ?

என, நியாயகேசரி சாஸ்திரோக்த நீதிப்ரகாசமாய் பாஷித்துக் கொண்டிருக்கையில் காமேந்திரன் யாவரெவ்விதம் புகன்றிடினும் யான் கோரியபெண்ணை எவ்விதத்திலேனும் மணம் செய்துக் கொண்டு வருவேனன்றி, யான் நகருக்கு வருகேனென்று உறுதியாய் சொல்வதைக்கேள்வியுற்ற நியாயகேசரியும், வீரப்ரதாபனும் ஜெயப்ரதாபனும் தமது கருத்திற் கிசைந்தவை புகலலாயினர்.

வீரப்பிரதாபன்:—நேயர்காள்! யாம் இவரைத்தடுத்திடினும் இவர் மனதிற் கிஞ்சிற்றும் பொருந்த வில்லை. யென்றாலும் இவற்றிற் கிசைந்த யாதேனும் ஓர் மார்க்கத்தையநுசரித்திடில்தான் உத்தமமாகும்.

நியாயகேசரி:—உத்தமமாவதென்ன? சீதையை இச்சித்த ராவணனுக் குத்துணையாய் மாரீசன் மாயமானைச்சென்று ஸ்ரீராம லக்ஷ்மணனை வனத்திற் றூரத்திவிட்டு? சீதையைத் தனியாகச் செய்தது போல, நீர் காமேந்திரன் வார்த்தைக் கிணங்க அவரை வீட்டிலிருந்த இராஜகுமாரத்தியை அம்பலத்திலிழுத்துவந்து அவன் கையிற்சிக்கவைத்தாய். இனியாங்களிருவரும் இராவணன் சேனைகள் வானரவீரரிடம் சிக்கி உயிரிழந்ததுபோல பெற்றோர் மனது பத்தியெரியும் படி செய்து விட்டு உலகாசையை மறந்து பிராணனை இழக்கவேண்டியதுதான் காமேந்திரனுடனே வந்த கண்காக்ஷியாகும்.

காமேந்திரன்:—மித்திரா! இந்த அற்பகாரியத்திற்குப் பயப்பட்டால் நமது ஆண்மையென்ன? கிஞ்சிற்றேனும் க்ஷத்திரியமில்லாமல் சாஸ்திரபுராணத்தையெல்லால் வலித்துப்போடுகின்றீரே. இதனை கவனித்தால் பாடத்தெரியாதவன் மத்தளத்தைப்பழித்தவேடிக்கையாயிருக்கின்றதே. இதுதானுவீரத்தன்மை?

ஜெயப்பிரதாபன்:—சரி! இவையனைத்தும் பின்னால் யோசிப்போம். இனி நடக்கும் காரியத்தைத் தெரியப்படுத்துவீராகில் நம்மாலான வரையினும் சாமர்த்தியம் செய்து முடிப்போம்.

என, இவர்கள் பாஷித்துக் கொண்டிருக்கையில் நால்வரும் ஒரு மனதாயமைந்து இராக்ஷசனிருக்கும் வாசஸ்தானத்தைக் கவனிக்க நால்வரும் ஆரண்யவாசியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் ஓர் கிளைவழி தோன்றியது. இந்நால்வரும் அம்மார்க்கமே சென்று, கடற்கரைதோற்றக்கண்ணுற்று மஹா சந்தோஷமடைந்தவராய் இனி நமது காஸ்மீகர்தேசத்திற்குக் கப்பல் மார்க்கமாய் போய்விடுவோமென்று சந்தோஷித்திருந்தனர்.

Scene 3.

இடம். கடல்.

கதா நாயகர்.

காமேந்திரன், நியாயகேசரி,
வீரப்ரதாபன், ஜெயப்ரதாபன்
மாலுமி, கள்வர்கள்,

கடலின்கொந்தளிப்பினால் அலைகள்புரண்டு, இரைச்சலிடும் சப்தத்தினாலும், காற்றுவாடைவீசம்படியான இனிமையாலும், காமேந்திரன் நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபன்முதலானநண்பர்கள்நால்வரும்சந்தோஷித்தாய்கடலில்வருகிறகப்பலைபார்த்துக்கொண்டிருந்தனர். அது கடலோரமாக வருகையில் இந்நால்வரும் தமதுகரத்திற்றுங்கிய வஸ்திரங்களினால் விசிரிக்கொண்டு கப்பல் வரும்படியான சைகையைக்காட்டினர். மாலுமி அதிசயித்து, ஈதென்ன இங்கு வெகுதூரம் வரையிலும் மனிதசஞ்சாரமின்றிய இருள் சூழ்ந்தகானகமாயிருக்கின்றதே இங்ஙனம் எவ்விதமாய் இந்நால்வரும் வருகலாயினரென்று ஆலோசித்துக் கொண்டிருக்கையில், யாவும் அருகிற் சென்று விசாரிப்போமென்று * மரக்கலத்தை கடற்கரையில் கொண்டு வருகலாயினன். சிநேகிதர்நால்வரும் அருகிலிருந்தவிருக்ஷத்தின்கிளைகளை யொடித்து தெப்பலாகக்கட்டி அவைமீதாரோகணித்துக்கொண்டுபோய் கப்பலில் ஏறிக்கொண்டனர். மாலுமி அவர்களை நீங்கள் யாவரென வினவுதலும் காமேந்திரன் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப்புகன்று, ஐயா! மாலுமியே தாங்களெங்களை காஸ்மீகர் தேசத்திற்கொண்டு போய்விட்டால் அந்நகரத்தரசனாகிய என் தந்தையின்பாற் றெரிவித்து உமக்குவேண்டிய திரவியசகாயம் செய்கிறேனென்று மிகவும் பரிதாபமாய்ப் புகன்றனன். மாலுமியும் மனமகிழ்ந்து சரி! சரி! நாமோ யாதொரு சாமானுமின்றி தனியாய்தானே போகின்றோம் இவர்களை வழித்துணையா யேற்றிச் செல்வோமென்றிடினும் காஸ்மீகர் தேசத்திற் கொண்டுபோய் விடுத்தால் அரசனிடம் தெரிவித்து வேணபொருள் வாங்கித்தருகிறேனென்று சொல்லுகிறானே இதுவும் ஓர் அதிர்ஷ்டானுகூலந்தானே யென்று

* மரக்கலம்—கப்பல்

பின்னால் நேரிடும் ஆபத்தை யினையாமல் அதிக சந்தோஷமடைந்த வனாய் புகல்வதாயினன்.

மர்லுமி:—அப்பா! உங்களைப்பார்த்தால் சிறுபிள்ளைகளாய்க் காணப் படுகின்றீரே நீங்கள் இவ்விதமாய் வருகலாமா? என்னைப்போ ன்றவர்த்தகராயிருந்திடில் மனைவிமைந்தர்கட்கு ஆஸ்திபூஸ்திதி வேண்டுமே யென்று "திரைகடலோடியும் திரவியந்தேடு" யெ ன்னும் வாக்கியப்படியே பலதேசங்களிலும் திரிந்து காசு சம் பாதிக்கவேண்டும் நீர் அரசபுத்திரனாயிருந்தும், இவர்கள் அரண் மனை உத்தியோகஸ்தரின் பிள்ளைகளாயிருந்தும் நீங்கள் இத்த கையதாய் வரத்தகுமோ?

நியாயகேசரி:—ஐயா! எத்தகைய சுத்த வீரனாயிருந்திடினும் ஊழ்வி னைப்பயனை யெய்தும் உடலிதற் கமைந்தவாறே அனுபவிக்க வேண்டுமன்றி தடுப்பதற் கியலுமோ? சரீரமெடுத்தபோதே சஞ்சலமும் துணையாய் வந்திருக்கையில் யாதாமொருவனும் சதா சுகியா யிருப்பதற் கியலுமோ? அன்றியும், பிராரத்வகர் மானுசாரத்தினால் சஞ்சிதத்திற் சரீரமெடுத்து கஷ்ட நிஷ்டூ ரமெய்துவதைக்கண்ணுற் கண்டும் சரீரத்தால் அனுபவித்தும் கிஞ்சிற்றுங்கவனியாமல் ஆசாமியத்திற்கு ஆஸ்தியாக பழிபா பம் தேடிக்கொண்டு பாதகிக்கின்றனரே. இவ்விதமாய் உலகிய ல்பிருக்கின்றதே யாங்களெம்மாத்திரம் அறியாச்சிறுவர்கள்.

மர்லுமி:—அப்பா! அறியாச்சிறுவரெனின் சாஸ்திர புராணந்தெரிந் துக்கொள்ளாத மதியினராகுமன்றி உன்னைப் போன்ற விவே கிகளை அறியாச்சிறுவரென புகல்வதற்கியலாது, ஆகையால் யாம் காஸ்மீகர் தேசத்திற்குப் போகும் வரையினும் சிலசாஸ் திர மர்ம ரகஸ்யமனைத்தும் தெரிந்துக்கொள்வதேசிலாக்ய மா கையால் நீர்முன்தெரிவித்தபடியே பிராரத்வத்தின் உதாரணங் கூறுமின்.

நியாயகேசரி:—ஐயா! பகவானால் சிருஷ்டியான ஜீவர்கள் அலகையை நிகர்த்த மனதின்படியே யலைந்து அறிவானந்தனை அப்புறப் படுத்தி, பழிபாபத்தைத் தேடிக்கொள்வதுதான் பிராரத்வம்.

மர்லுமி:—சஞ்சிதமாவதுயென்ன?

நியாயகேசரி:—பிராரத்வத்தாற்செய்த பழிபாபத்தினால் நேர்ந்த சரீர மெடுத்து சுகாசுகமடைவதுதான் சஞ்சிதமாகும்,

மாலுமி:—சரி! ஆகாமியமாவது என்ன?

நியாயகேசரி:—சஞ்சித்ததினலெடுத்த சரீரத்துடனே எத்தகைய கஷ்டநிஷ்டூரமெய்திடினும் கண்ணிருந்துங் கேணியில் வீழுந்தன்மையாய் மறுஜனனத்திற்கு ஆதாரவாகபழிபாபமேற்றுக்கொள்வதுதான் ஆகாமியமாகும்.

மாலுமி:—சரி! உலகிற் சிறியோர் பெரியோரெனும் சந்தேகமிருக்கின்றதே. அஃதுண்மை யாதோ விபரமாய்ப் புகல்வீர்.

நியாயகேசரி:—ஜீவர்களின் மனதிற்கிசைந்தபடி பாபபுண்ணியஞ்செய்து சரீரமெடுத் துழல்வதினல் கொஞ்சமும் அதிகமாகவுமிருக்கின்றது. அவற்றில் கொஞ்சமாயிருந்தால் சீக்கிரத்தில் சரீரமிழுந்து மறுபடியும் சஞ்சிதத்தில்செய்த பாபபுண்ணியத்தால்சரீரமெடுத்துழல்வார். ஆனல் முன்னல் அதிகமாய்பாபபுண்ணியஞ்செய்தவர் வெகுகால மிருப்பார். அவர்களைத்தான் வேதாந்தசாரத்தின் மர்மரகஸ்யமுணரா அறிவிலியர் பெரியமனுஷரென்று சொல்வது, அவையனைத்தும் மதியீனமே யாகும். தன்னைத்தானறியும் அறிவுடையோரே பெரியோரெனப்படும்.

மாலுமி:—ஜீவர்கள் இத்தகையதாய் இறப்பதும் பிறப்பதுமாயிருந்தால் முடிவு எத்தகையதாயமையும்.

நியாயகேசரி:—ஜீவர்களின் ஜனனமரணத்திற்கு மாத்திரம் முடிவுகிடையாது மனமிருக்கும் போதே மாயாசம்பந்தம் விடாது. மாய்கையிருக்கும் போது அஷ்டவிததுர்க்குணமும் அகலாது. * காமத்தினல்தான் கர்மங்கள் சேரிடுகிறது. அவற்றில் இருவகை நற்செய்கை, துற்செய்கை. நற்கையால்செய்யும் கர்மமாவது தானம்தர்மம் பரோபகாரம், இவற்றில் நற்செய்கையால் ஜீவர்கள் சஞ்சிதத்திற் சரீரமெடுத்து தனதான்ய சம்பத்துடன் மனைவிமைந்தருடன் பெருமையாய் வாழ்ந்திருப்பர், துற்செய்கையாவது வஞ்சகம் மோசம். அடுத்துக்கெடுத்தல் உபகாரஞ்செய்பவர்கட்டு அபகாரம் விளைத்தல்பொறாமைமுதலாகியஅநியாயங்களாகும், இவற்றால் ஜீவர்கள் சஞ்சிதத்திற் சரீரமெடுத்துழல்வதற் கிசைந்தவிதமாய் பாபசொரூபிகளாயலைந்துகஞ்சிக்குக்காற்றாய்ப்பறக்கும் வறுமையாளராகிய தாய் தந்தையர்வயி

* காமம்—ஆசை.

ற்றிற்பிறந்த கல்வியேனும் கைத்தொழிலேனுங்கற்றுணராமல் தன்னைப்போன்ற மனிதரிடம் அடிமைத்தொழிற்புரிந்து ஜீவித திடினும் ஆயுள் வரையிலும் அன்னதரித்திரச்சிக்கியவராய்திகைத்து மூன்று அவதிப்படுவர். இவர்கட்குஅஷ்டலக்ஷ்மீகடாக்ஷமின்றிமூதேவிவாசம்பொருந்தி யிருக்கும். அத்தகையவறுமையாளரிடத்தில்தான் மமதை மனோகர்வமனைத்தும் சூழ்ந்திருக்கும் ஆனால்பிராரத்வபுண்யவசத்தினால் ஜனித்து அஷ்ட ஐஸ்வரியத்துடனே சுகஜீவியாயிருக்கும் ஜீவர்கள்மாத்திரம பொறுமை, தயாளம், அடக்கத்துடன் அவனியோர்புகழுந்தன்மையாயிருப்பார்கள்.

மாலுமி:—அறிவுடையோரென்பவர் யாவர்?

நியாயகேசரி:—அறிவுடையோரெனின் வேதாந்தரகஸ்யங்களை யுணர்ந்து ஜனனங்கள் தோறும் பாபபுண்ணியம் செய்யாமல்தன்னாலொரு ஜீவனுக்கும் லாப நஷ்ட மில்லாமல் தன்வரைக்கும் தானேகவனித்துத் கொண்டு பகவத்பக்தியானந்த மாயிருந்து காரணகுருவின் அருள்பெற்று தன்னைத்தானே யறிந்து தலைவனிற்கலந்து முமுக்ஷுவாய் மோக்ஷசாம்பிராஜ்ய மடைவார்கள். அத்தகைய சுத்தஞானிகளைத்தான் அறிவுடையோரெனப்படும். மற்றவர்களை மதியிலா மாந்தரென்றே மதிக்கலாகும்.

என, மந்திரிகுமாரனாகிய நியாயகேசரியானவன் வேதாந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கையில் மாலுமியும் மற்ற மூவரும் சந்தோஷமாய்க்கேட்டுக் கொண்டிருக்கையில் கடலில் காற்று மழையும் விசேஷமாய்ப் பொழிந்து அலைகளுடன் கொந்தளிப் புண்டாகி கப்பலை நடுகடலில் இழுத்துக்கொண்டு போய் பயங்கரமாகிய ஓர் தீவில் கொண்டுபோய் ஒதுக்கிவிட்டது அங்ஙனம் சில திருடர்கள் கானகத்திற் சிக்கினவர்களை யெல்லாம் அடித்து மிரட்டி பயங்கரப்படுத்தி கப்பலில் ஏற்றிக்கொண்டுபோய் தமக்கிஷ்டமான தீவுகளில் விற்கிரயம் செய்யும் வழக்கமாகையால் அவர்களுடைய கப்பலும் இந்தகப்பலுக்குச் சமீபமாய் வந்துவிட்டது. அச்சமம் கள்வர்தலைவன் மாலுமியின் கப்பலைமடக்கி ஆரடா நீங்களென்று மிரட்டவும், மாலுமி கள்வர்க்கப்பலென்று கவனித்துக்கொண்டு இனி இவனிடம் தந்திரமாய்நான் தப்பித்துக்கொண்டு போகவேணுமென மதித்தவனைப் புகலாயினன்.

மாலுமி:—தாங்கள்! யாரையா! கிஞ்சிற்றேனும் மரியாதையின்றியவராய் பாஷிக்கின்றீர். யானே கப்பலோட்டும் மாலுமி, ஜனங்களை ஏற்றிக்கொண்டு வருகிறவனென்று உமக்குத் தெரியாதோ?

கள்வன்:—சரி! சரி!! மஹாசந்தோஷம், இன்னம் உமது வசமெத்தனை பேரிருக்கின்றனர்.

மாலுமி:—இன்னம் ஆயிரம்பேருக்கு அதிகமாயிருப்பார்கள்.

கள்வன்:—ஆனல் தற்சமயமேன் நால்வரைமாத்திரம் அழைத்துக் கொண்டுவந்தனை?

மாலுமி:—கடலில் அலைகள் கொந்தளிப்பா யிருந்ததினல் அவர்களனைவரும் மனமிரளுவதாயினர். ஆனல், இவர்கள் வீரப்ரதாபமுடைய தைரிய சாலிகளானபடியால் இவர்களைமாத்திரம்அழைத்துக்கொண்டுவந்தேன்.

கள்வர்:—சரி! அப்படியானல் அவர்களை எப்போது அழைத்துக் கொண்டு வருவாய்.

மாலுமி:—யான் போனபிறகுதான் அவர்களை இந்தக் கப்பலில்ஏற்றிக்கொண்டு வரவேண்டும்.

கள்வன்:—நல்லது! அவர்களை அழைத்துக்கொண்டு இம்மார்க்கமாய் வருவாயாகில் யான் உனக்கு பதினயிரம் விராகன் கொடுக்கிறேன். ஆனல் தற்சமயம் இதோ உனக்கு நூறுவிராகன்முன் பணமாய் கொடுக்கிறேன் பெற்றுக்கொண்டு போவாய்.

என, நவின்றமைவினவிய மாலுமி மஹா சந்தோஷமடைந்து அபாயம் வருங்காலத்தில் அதிர்ஷ்டானுகூலம் வந்ததுபோல நூறு விராகன் கிடைத்ததே போதுமானது, நமது கப்பல் திருடருலாவும் தீவில் வந்தபோதே யாமும் இவர்களிடம் சிக்கி கப்பலையு மிழந்து அடிமையாய்ப் போகவேண்டியதாய் நேரிடுமென்று நமக்குத் தெரிந்திருந்தும் காற்றின் வேகத்தினலும் இந்த அரசகுமாரன் கிரகசார பலத்தினலும் நமது கப்பல் இந்தத் தீவில்திசைதப்பி வந்தும் நமது அதிர்ஷ்டத்தினல் தப்பித்துக் கொள்வதற் காயிற்றென்று சந்தோஷமாய் புன்நகைபுரிந்து உண்மைக்கு பாடுபடுவன்போல திருடர்கட்கு கரங்குவித்து கும்பிட்டு ஐயா யான் எவ்விதமாயினும் அந்த

ஆயிரம் பேரையும் அழைத்துக்கொண்டு வருகிறேன் மற்றதொகை யையும் செலுத்தி விடுவீராவென்று தந்திரமாய் கேழ்க்க அந்த திரு டர்களும் வஞ்சகமாய் மற்ற ஆயிரம் பேரையும் அழைத்துக்கொண் டுவந்த பிறகு இவனுடன் சேர்த்து ஆயிரத்தொருவரையும் இவனு டைய கப்பலையும அபகரித்துக் கொள்வோமென்றுமனதில் நினைந் துவஞ்சகமாய் சொல்வதாயினர்.

கள்ளன்:—சரி! சரி!! அப்படியே உன்னிஷ்டம்போல்கொடுக்கிறோம் சீக்கிரம் அவர்களை அழைத்துக் கொண்டுவருவாய்.

என. மோசமாயாய்ச்சொன்னதைக் கவனித்தமாலுமியும்யானோ இவர்களுடைய தந்திரோபாயமனைத்தும் தெரிந்தவனாயிருக்க நம்மி டத்திலேயே இவர்கள் சாமார்த்தியங் காட்டுகிறாரே யெனமதித்து சரி! சரி!! அதற்கென்ன லாபத்திற்குதானே பாடுபடவேண்டும்ஐயா இதோபோய் அவர்கள் ஆயிரம்பேரையும் ஏற்றிக்கொண்டு வரு கிறேனென்று தனதுகப்பலிலிருந்த காமேந்திரன் நியாயகேசரி வீர ப்ரதாபன் ஜெயப்பிரதாபன் முதலானோரைதிருடர்கப்பலிலிறக்கி வி ட்டு அவர்களாற்கிடைத்த நூறுவிராகன்களையும் பெற்றுக் கொண்டு தனது நகரிற்கேகிதனது மனைவிமைந்தர் சுற்றத்தார்களுடன் நடந்த சங்கதியை ஆதியோடந்தமாய்ப் புகன்று அப்பப்பா! வென்றேன் வி தியையென்று சந்தோஷித்திருந்தனன்.

இங்ஙனம் இவ்விதமாயிருக்கையில் திருடர்கள் மாலுமியால் அகப்பட்டகாமேந்திரன், நியாயகேசரி,வீரப்ரதாபன் ஜெயப்பிரதா பன் நால்வரையும் தமது கப்பலிலேற்றிக் கொண்டுபோகையில் இந் நால்வரும் ஆச்சரியமடைந்து. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு ஈதென்னமோசடியாயிருக்கின்றதே? அந்தமாலுமியும் இவ ர்களும் என்னென்னமோ பேசிக்கொண்டு நம்மை இந்தக்கப்பலிலே ற்றிவிட்டுப்போய் விட்டானே யென மன மிரண்டு,திகிலுற்றவராயிரு க்கையில் திருடர்தமது கபபலை ஓட்டிக்கொண்டு தாம் ஆளைவிற்கும் தீவிற்சென்று இந்நால் வரையும் இறக்கி, அத்தீவிலிருக்கும் தனவந் தர் கட்கு ஆளொன்றுக்குநூறுவிராகன் விழுக்காடு விற்கிரயம்செய்

து விற்று விட்டுப்போயினர். இவையனைத்துங்கவனித்த மந்திரிகுமாரனாகிய நியாயகேசரி தனதுநண்பர்கள் மூவரையும் பார்த்து அழுது, அப்பா! மித்திரர்களே பார்த்தீரா வேடிக்கையை நம்மை மாறுபி மோசமாய் அழைத்துக்கொண்டு வந்து இவனிடம் விற்கிரயம் செய்துவிட்டனன், இவர்களைப்பார்த்தால் விகாரரூபமாகவும் ஆளைத்தின்னும் அலகைவாயராகவு மிருக்கின்றனரே இவர்கள் பாஷையும் நமக்குத் தெரியவில்லையே! ஐயையோ இனிநாம் இவர்கள் வாய்க்கிரையாவது நிச்சயந்தானோவென மனமிரண்டு அழுவதற்கும் பயந்து நடு நடுங்கி கைசோர்ந்து மெய்சோர்ந்து பூமியில் வீழ்ந்திடவும், மற்ற மூவரும் அப்படியே திகிலுற்றனர். ஆனால் விலைக்கு வாங்கியகாப்பிரிகள் சும்மாய் விடுவாரா? இந்நால்வரின்கைகளில் கயிற்றைக்கட்டி இடையன் எருதுகளை இழுத்துக்கொண்டு போவது போல தமது தோட்டங்களில் இழுத்துச் சென்று அங்ஙனமிருக்கும் கரும் பாலைகளில் வேலைசெய்துக்கொண்டிருக்கும்படியாய் திட்டஞ் செய்துவிட்டுத்தமது வீட்டிற்குப்போயினர்.

தம்மைப்போன்ற மனிதரின்றிய கானகத்தில்தனியாய் அகப்பட்டுக் கொண்டால் யென்ன செய்வார்கள்? இவர்களுக்கு யாதொன்றும் தோற்றாமல் ஓடிப்போகலாமென்றாலும் சுற்றிலும் கடலாகவேயிருக்கின்றது. அச்சமயம் மந்திரிகுமாரனாகிய நியாயகேசரி ஓர் உபாயம் சொல்வதாயினன்.

நியாயகேசரி:—நேயர்காள்! தற்சமயம் நமக்கு நேர்ந்த ஆபத்தைக்கவனித்தீரன்றோ? ஈதனைத்தும் நம்மால் நேர்ந்ததையல்ல ஊழ்வினைப் பயனாலெய்திய கர்ம வினையாகும். ஆயினும் பெரிதல்ல. யாம் இவர்களிடத்திற்றேனு சிலநாள் அடிமைத்தொழிற்புரிந்து ஜீவித்துக் கொண்டிருந்தபடியே இவர்கள் எத்தகையோரென கண்டுணர்ந்த பிறகு, நாம் எவ்விதமாயினும் இவர்களிடமிருந் துதப்பித்துக் கொண்டு ஓடிப்போவோம் அஃதன்றி, யாம் மனவிசாரமாயிருந்தால் நன்கல்ல, சிலவேளையாம்தொழிற் புரியாவிடில் துன்பம் நேரிடும்.

என, பகர்ந்தவைவினவிய மூவரும் சரிதானென்று ஓடிப்போவதற்குசமயம் பார்த்துக் கொண்டேயிருக்கையில், அந்த காப்பிரிகள் இந்நால்வரையும் வெகுவித கஷ்டப்படுத்தி, வேலைசெய்யும்படியாய் அதிகாரம் செய்துக் கொண்டிருந்தனர். காமேந்திரன் அரசகுமாரனாகையால் கைத்தொழிற் புரிய முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கையில், காபிரிகள் அடித்தும் மிரட்டியும் பயமுறுத்தியும் தொந்தரைசெய்துக்கொண்டிருக்கையில், மற்ற மூவரும் பார்த்து அடடா! ஈதென்ன அநியாயம் நமது முன்னால் நமது அரச புத்திரனை இத்தகைய துன்பஞ்செய்வதைக் கண்ணுற்றும் நாம் மனஞ்சகித்திருப்பது நியாயமாகுமா? நமது கரத்தில் தனுசங் கணைகளுமிருந்தால் இவர்களனைவரையும் இன்றையதினமே கொன்றுவிட்டுப்போய்விடுவோமல்லவோவென்று யோசித்துக் கொண்டிருந்தனரேயன்றி மற்றவை புகல்வதற்கியலாமல் மர்மமாகவே யிருந்தனர். இவ்விதமாய்ச் சில காலம் வரையினும் அந்நால்வரும் அந்தக் காப்பிரிகளிடம் அடிமைத் தொழிற்புரிந்தும், அவர்களாற் கொடுக்கும் கூலியைப்பெற்று ஜீவித்துக்கொண்டுமிருக்கையில், ஓர் நாள் இவர்களுடைய நற்காலத்திற்கிசைந்தவைபோல காபிரிகளுக்கு ஓர்நாள் கொண்டாட்டதினம் வந்துவிட்டது. அச்சமயம் தொழிலாளிகட்கு யாதொருவேலையும் இல்லாததினால் அவரவர் இஷ்டப்படியே திரியும்படியாய் விட்டுவிட்டார்கள். அச்சமயம் நியாயகேசரியானவன் தனது சிநேகிதரைப் பார்த்து, நண்பர்காள்! இன்றையதினம் காபிரிகளின் கொண்டாட்டதினமாகையால் நம்மை கவனியாமலிருக்கின்றனர். ஆகையால் யாம் நால்வரும் இச்சமயமே இவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் ஓடிப்போவதே சிரேஷ்டமாகுமென்றனன். அம்மூவரும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து "வரும்பொருளுரைத்தல் மந்திரிக்கழகெனும் தன்மையாய்" நியாயகேசரி புகல்வதற்கிசைந்தவிதமே யாம் இந்த தீவை விடுத்து ஓடிப்போவதே சிரேஷ்டமென மதித்து அம்மூவரும் நியாய்கேசரியுடனே சேர்ந்து காபிரிகளின் கண்ணுக்குப் புலப்படாமல் கானகமார்க்கமாய் ஓடிப்போயினர்.

———

Act 3. **Scene 1.**

இடம். ஆரண்யம்.

கதாநாயகர்.

காமேந்திரன், நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபன் தபசிரேஷ்டன், மாயராக்ஷதன், ஞானலோசனி, ஞானேந்திரன், சுந்தரவதனி, பஞ்சவர்னக்கிளி.

காமிரிகளிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிய காமேந்திரன் நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபனெனும் நால்வரும் கானகமார்க்கமாய் வருகையில் எதிரிலிருக்கும் நந்தவனங்களைக் காணிலும் தங்குவதற்கு மனமின்றி தங்களை அடிமைகொண்ட காமிரிகள் வந்துவிட்டால் மோசமாகுமேயென்று பயந்து இரவும் பகலுமாய் வழி நடந்து பசிவேளைக்கு வழியிலெதிருற்ற விருக்ஷங்களின் கிளைகளிலிருக்கும் காய்கனிகளைப் பறித்துப் புசித்து ஜலீண நீரருந்திக்கொண்டு பசிதணிந்தவராய் வெகுதூரம் போகையில் வழியிலெதிருற்ற கிளைவழி மார்க்கமாய்ச் சென்றனர், அங்ஙனம் யாதொருபாதையும் தோன்றாமல் விருக்ஷங்களே நெருக்கமாயிருந்தன என்றும் முன்வைத்தகாலே பின்வைத்துச் செல்வதற்கும் காமிரிகளின் பயம் மனதை திகிலுறச்செய்தன, என்ன செய்வார்கள்? வருவதெல்லாம் ஆபத்தாகவே யிருந்தன. அப்பால் அந்நால்வரும் அந்த கானகத்தின் விநோதங்களைப் பார்த்துகொண்டே போகையில் அங்ஙனம் விதவிதமான விருக்ஷங்களும் அநேகவிதமான கனிவர்க்கங்களுமாய் காணப்பட்டன. நறுமணம் வீசும் மணமலர்களின் விநோதமோ? பார்க்க பார்க்க வெகு உன்னதமாயிருக்கின்ற காக்ஷியையும் பார்த்துக்கொண்டே போகையில் அங்கு ஓர் நீரோடை தோன்றியது அந்த ஜலத்தைக் கையினால் அள்ளிப் புசித்தால் பன்னீரின் மணம் போலிருந்தன வென்றுலும் குடித்தது முதல் வயற்றில், குளிர்ச்சியாகவும் திகிலனைத்தும் பறந்து மனோல்லாசமும் தைரியமும் வாய்ந்தவராய் நால்வரும் ஒரேமனதாய் அந்தவனத்திற் சிலகாலம் வசித்திருக்கவேண்டுமென மதித்தவராய் அங்ஙனமே இருப்பதாயினர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகையதா யிருக்கையில், மாய ராக்ஷதனிடம் அகப்பட்டு மஹா துயரடைந்தவளாய் என்றைக்கு என் மனசஞ்சல மகலுமோ கர்த்தவ்யமேயென கவுரியம்மன் விரதானுஷ்டானம் புரியும் ஞானலோசனியானவள் மனந்திகைத்தவளாய் ஐயையோ ஈதென்ன ஆச்சரியம்? யான் அசுரனிடம் சொல்லிய வாக்குதத்தம் முடிவுபெற இன்னும் ஒருபாதந்தானே இருக்கிறது. இதற்குள்ளாக நம்மை யாவர்வந்து அழைத்தேகுவர்? தாய் தந்தையரும் தனது சேனை சைன்யத்துடன் இந்த தீவில்வந்து அசுரனை ஜெயித்து நம்மை அழைத்தேகவந்து நம்மால் இத்தகைய கஷ்டநிஷ்டூர மடைந்தவராய் கல்லுருவாயினர். இனி நம்மையார் அழைத்துச் செல்வார்கள். நாம் இந்த ஜனனத்தில் சற்புசிறை வழுவுறுமலிருந்து கர்த்தவ்யத்தின் கிருபையால் சொர்க்கபதவி யணுகி மறுஜனனமில்லாமல் பிரமானந்த சுகஜீவியாயிருக்கவேணுமென, நினைந்தும், தற்சமயமோ "குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல" ஞானானந்தமாயிருந்து சனிதிசையடையலாச்சுதேயென, மனமெலிந்து தன்னைத் தேற்றுவாரில்லாமல் மனவிசாரமா யழுதுக்கொண்டிருக்கையில், அசுரனும் அருகிலில்லாமையால் அந்தக் குகை யருகிலிருக்கும் ஓர் ஆலவிருக்ஷத்தின் கிளையிலிருந்த ஓர் பஞ்சவர்ணக்கிளியானது கண்ணுற்று மஹா பரிதாபமடைந்து ஞானலோசனியின்முன்வந்து வினவுதலாயின.

பஞ்சவர்ணக்கிளி:—அம்மணி! நீயார்? நீ வசிப்பது எங்கர்? யாது காரணத்தினால் இத்தகைய பயங்கரமான இருட்சூழ்ந்த கானகத்தில்வந்து தனியாய்த் தத்தளிக்கின்றனை?

எனவினவுதலும் ஞானலோசனி திடுக்கிட்டு, ஈதென்ன இந்தக்கிளியானது மனிதரைப்போற் பாஷிக்கின்றனவேயென ஆச்சரியமடைந்தவளாய் அதனைத் தனது கரத்தினால் தடவி பக்ஷிநாயகமே நீயார்? எமது குலதெய்வமோ? இவ் வனதேவதையோ அறிகிலேனே. ஆதலின் எனக்கு உண்மையைப் புகலவேண்டுமென்றனள். பஞ்சவர்ணக்கிளியானது தனது அழகிய வாயைத் திறந்து, அம்மா யான் வனதேவதையுமல்ல, நின் குலதெய்வமுமல்ல யான் உண்மையான பக்ஷியே யாகும். எமது வம்சத்தினர் பஞ்சவர்ணக்கிளிகளாயிருந்திடினும் சகல ஜீவர்களின் பாஷைகளனைத்தும் எமக்குந் தெளிவாய்த்தெரியும். ஆதலால் யானும் உன்னை வினவினேன். ஆகையால்,

உனது சவிஸ்தாரமனைத்தும் எனக்குத் தெரிவித்தால் யான் அவற்றிற்கிசைந்த ஓர் நன்மார்க்கத்தை தேடுகிறேனென்னலும், ஞானலோசனி சந்தோஷமடைந்து, நமது விரதானுஷ்டானத்தின் பெருமையே நமக்குத் துணையாய் வந்தெய்தினவென்று, மனமகிழ்ந்து மனோல்லாசமாய்ப் புகலாயினள்.

ஞானலோசனி:—கிள்ளைநாயகமே! யான் ஞானபுரிமன்னன் புத்திரியாகிய ஞானலோசனி எனது துர்க்காலநிமித்யத்தினால் சேடியருடன் நந்தவனத்தில் வருகையில், ஓர்இராக்ஷதன் என்னை அகஸ்மாத்தாய் தூக்கிக்கொண்டு வந்து இங்ஙனம் சிறைவைத்தனன். அந்நாளிந்நாள் வரையினும் யான் எனது சிறை நீங்கும்படியாய் கவுரிவிரதானுஷ்டானம் புரிந்துக்கொண்டிருக்கின்றேன். யான் இத்தகையசித்தப்ரம்மை புற்றநிலையிலிருக்கையில் எனது தாய்தந்தை மனந்தாளாமல் என்னைத் தேடிக்கொண்டு இங்ஙனம் வந்த உடனே இந்த மாயாராக்ஷதன் அவர்களனைவரையும் கல்லாய்சபித்து விட்டனன். இனியாதுசெய்வேன்?

என, தனது காலவித்தியாசத்தினாலுற்ற அபாயகரமான பயங்கர கஷ்ட நிஷ்டூரமனைத்தும் புகன்று துயரப்படுகையில் பஞ்சவர்ணகிளி தேறுதலுரைத்து அம்மா! நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே இன்னுஞ் சிலநாளைக்குள் உனது கஷ்ட நிஷ்டூரமனைத்தும் பறந்து சுகமடைவாயென்று தைரியவார்த்தை புகன்று சிலநேரம் வரையினும் அங்ஙனமேயிருந்து தனது வழக்கப்படியே பறந்து போய்விட்டது. அப்பால் ஞானலோசனி தன்விதியை நினைந்தழுதுக்கொண்டு மஹாவிசனமடைந்தவளாயிருந்தனள்.

இங்ஙனம் இவ்விதமாயிருக்க தேசசஞ்சாரமாய்ச் சென்ற சிநேகிதராகிய காமேந்திரன் நியாயகேசரி, ஜெயப்ரதாபன், வீரப்ரதாபன் முதலாகிய நால்வரும் தாங்கள் வந்திருக்கும் நந்தவனத்தில் அடர்ந்து செழிப்புளதாகிய விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் பழதினுசுகளைப் பறித்துக் கொணர்ந்து வசந்தமண்டபத்தில் வந்து உட்கார்ந்து புசித்துக்கொண்டிருக்கையில் ஞானலோசனியிடமிருந்து வந்த பஞ்சவர்ணக்கிளியானது அருகில்வந்துட் கார்ந்தது, அதனைப்பார்த்தக் காமேந்திரன் தனது சிநேகிதரைப்பார்த்து சொல்வதாயினன்.

காமேந்திரன்:—நேயர்காள்! இந்த பஞ்சவர்ணக்கிளியின் ரூபலக்ஷணத்தைக் கவனித்தீரா! ஆ! ஹா!! என்ன ஆச்சரியம்? இவ்வளவு அழகமைந்தபக்ஷியும் இவ்வனத்தில் பார்க்கலாயிற்றே என்ன சிங்காரம்? இதனைநாம் பிடித்துக்கொண்டால் நாம் வளர்த்துக் கொள்வோம்.

நியாயகேசரி—அரசகுமாரா! நாம் இருப்பதோபயங்கரகிலை இத்தகையமான கஷ்ட காலத்தில்தானா கிளிப்பிள்ளை வளர்ப்பது அந்நாளில் உன் வார்த்தையினால் வீரப்ரதாபன் அரைவீட்டிலிருந்த பெண்ணை அம்பலத்திலிழுத்துவந்து அசுரனிடம் சிக்கவிடுத்தனன். இச்சமயமோ தனக்கிஷ்டமானபடி கானகமெங்கும் சுற்றித்திரிந்து கனிவர்க்கங்களைப்பறித்துப் புசித்து மனமகிழும் பக்ஷியைப்பிடித்து சிறைப்படுத்துவதுபாபமல்லவோ?

காமேந்திரன்:—யாம் அதனை பட்டினியா யிருக்கச்செய்வோமோ? நாம் பறிக்கும் காய்கனிகளில் இனிமையானதாய் முதலில் அதற்குக் கொடுத்துப் பசியாறினபிறகு யாம் புசிப்போம். அதுவும் நம்முடனே யிருந்தால் பஞ்சபூதம்போல ஐவரா யிருப்போம்.

நியாயகேசரி:—அரசே! நாம் நமது நகரிற் சென்ற பிறகு கிளிவளர்த்தால் நலமாயிருக்கும், அச்சமயத்தில், அன்னபதார்த்தத்துடன் நெய்யும் பருப்பும் பலகாரதினுசுகளும் கொடுத்து அன்பாய் வளர்த்துக்கொண்டிருக்கலாம். அஃதன்றி, நாமோ ஊழ்வினைப்பயனால் தாழ்வுவந்தலையும் தரித்திர ஈனராயிருக்கின்றோமே இச்சமயத்திலா கிளிவளர்ப்பது சபாஷ் நல்ல யோசனை செய்கின்றீரே.

பஞ்சவர்ணக் கிளி:—ஐயா! உலகில் வசித்துலாவும் ஜீவர்கள் ஒவ்வொருவரும் தமது ஊழ்வினைக்கேற்ப சுகாசுகமனுபவிப்பதுலகியற்கையென்றாலும் தர்மசொரூபியெனும் ஜீவகாருண்யமாயிருப்பதே சிரேஷ்டமாகும்.

வீரப்ரதாபன்:—ஆ! ஹா!! நேயர்காள்! ஈதென்ன பக்ஷியா யிருந்தும் நம்மைப்போற் பாஷிக்கின்றதே.

காமேந்திரன்:—ஆம்! ஆம்!! மனிதரைப்போற் பேசுவதிலும் நியாயகேசரியைப் போல சாஸ்திரோக்தமாகவும் பாஷிக்கின்றதே ஈதென்னகண்காக்ஷி?

ஜேயப்ரதாபன்:—மித்திரா! இது உண்மையானபக்ஷியல்ல ஏதேதோ சூதாயிருக்கின்றது. யாம் இத்தனை நாளாய் எத்தனையோ தீவுகளிலும் வனாந்திரங்களிலும் தீவாந்திரங்களிலும் சுற்றியலைந்து திரிந்து, அநேக அற்புதானந்த ஆச்சரிய காக்ஷியனைத்தும் பார்த்து வந்தோம். ஆனால், மனிதரைப்போல நீதிசாஸ்திர ஒழுங்காய் பேசுகிற பக்ஷியைப் பார்த்திலோம். ஏதேதேகாலவிபரீதமாருக்கின்றது, ஆயினும் இது உண்மையானபக்ஷியல்ல யாம் வந்திருக்கும் ஸ்தானம் மனிதர் சஞ்சாரமின்றிபயங்கரமான கானகமாயிருப்பதினால் அசுரமாய்கையோவென்று சந்தேகிக்கின்றேன். திரேதாயுகத்தில் மாரீசனென்னும் ராக்ஷதனொருவன் மாயமானாக வந்து ஸ்ரீராம லக்ஷ்மணனை ஏமாற்றினன். அவனும் இவ்விதமாய் பாஷித்திலன். இதென்ன புதுமையோ? கிளிப்பிள்ளையாயிருந்தும் மனிதரைப்போற் பேசுகின்றது. இனி நாம் நால்வரும் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

பஞ்சவர்ணக்கிளி:—ஏனையா நீங்கள் இத்தகையதாய் சித்தம் ரம்மையுற்று மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பதுபோல வாயில்வந்தபடி உளறுகின்றீர் யானென்ன பேயா? பிசாசா? பூதமா? இராக்ஷதனா நீங்கள் என்னைத் தீண்டுவதிருக்கட்டும். யானுங்களைத்தீண்டினால் கங்காதீர்த்த ஸ்நானஞ் செய்ய வேண்டுமே அதறியாமல் ஏதேதோ உளறுகின்றீர். யான் அவ்விதமான இராக்ஷதனல்ல யான் பக்ஷிதான். உமது தேசத்திலிருக்கும் சாதாரணகிளியல்ல யான் தேவலோகத்தின் பஞ்சவர்ணக்கிளியாகும். ஆகையால் நீங்களேன் மனமிரளுகின்றீர்.

நியாயகேசரி:—ஆ! அப்படியா! மித்திரர்காள்! யாம் தாய் வயற்றிற் ஜனித்தவேளையின் லக்ஷணமிக வித்தகையதாய்த் தோற்றுது. சரி! இன்னம் என்னென்ன ஆச்சர்யகாக்ஷியனைத்தும்கண்ணுற வேண்டுமோ? அஃதன்றி சும்மாயிருப்பதற்கியலுமோ?

பஞ்சவர்ணக்கிளி:—ஏனையா! இவ்விதமாய் மனஞ்சலித்துக்கொள்ளுகிறீர். நீங்களென்ன காக்ஷியைக் கண்ணுற்றீர். யான்பாராதகாக்ஷியா நீங்கள் கண்டீர்?

நியாயகேசரி:—பக்ஷிநாயகமே! கோபித்துக் கொள்ளாதீர். யாங்கள் அனுபவித்தகஷ்ட நிஷ்டூரத்தைச் சொன்னால் மண்ணும்மரமுங் கண்ணீர் விடுத்துக் கதறியழுதிடுமெனின் அனுபவித்த எங்கட்கு எத்தகையதாயிருக்கும், அஃதன்மையாதெனின். இவர் அரசகுமாரன், அவர் சேனாபதிகுமாரன், இவர் பிரதானி குமாரன் யான் மந்திரிகுமாரன்யாங்கள் நால்வரும் எமது வாசஸ்தானமாகிய காஸ்மீகர்தேசத்தை விடுத்து யாத்திரை வாசியாய் வருகையில் வழியிலெதிருற்ற நந்த வனத்தில் வந்து தாமரைப் பொய்கையில் ஸ்நானஞ்செய்யவும் அகஸ்மாத்தாய் ஸ்திரீரூபமாயினோம், கரைமீது வந்தவுடனே வழிப்போக்கனொருவன் எங்களை சுவாமியெனமதித்து வரங்கொடுப்பீரென்று வழக்காடினான். அத்ததி ஓர் மஹான் வந்து அந்தப் பொய்கையின் மகத்வ மர்மத்தை எங்களுக்குத்தெரிவித்து சந்தேகந்தீர்த்தனர். அப்பால் வருகையில் நான்குபேரும் ஒருவரையொருவர் பிரிந்து வழிதெரியாமல் ஞானபுரியில் வந்து ஒன்றாய்ச்சேர்ந்து, இந்த அரசகுமாரனுடைய துர்ப்போதனையால், இவர் அரையிலிருந்த அரசகுமாரத்தியை அம்பலத்திலிழுத்து வந்து ஆபத்தடையச்செய்தனர். அப்பால் யாங்கள் வரும் வழியில் கடல் தோற்றக்கண்டோம் ஆழிசஞ்சாரியாய்ச் செல்லும் மாலுமியானவன் எங்களை மோச எண்ணத்துடன் சப்பல் மீதேற்றிக் கொண்டுபோய் ஓர் தீவிலிருப்பவரிடம் விற்கிரயம் செய்து விட்டனன். யாங்கள் அவர்களிடம் பட்டகஷ்ட நிஷ்டூரத்தைச் சொல்வதற்கும் முடியுமோ? அத்தகையதாய்க் கஷ்ட நிஷ்டூர பயங்கரத்திற் சிக்கியவர்களாயிருந்தபடியினால் உன்னைக்கண்டு மனமிரளுவதாயினோம்.

பஞ்சவர்ணக்கிளி:—ஐயா! நீங்களாயினும் ஆண்பிள்ளைகள் எவ்விதத்திலேனும் தப்பிப்பிழைத்துக் கொள்ளுவீர். இவ்வனத்தின்தென்பாரிசத்தில் ஓர் அசுரனால் சிறை பட்டிருக்கும் ஓர் கன்னிகை யாதொரு ஆதரவுமின்றி இருக்கின்றனளே. அவளுடைய மனமெவ்விதமாயிருக்கும்?

காமேந்திரன்:—ஆ! அப்படியா! நேயர்காள்! யாம் நாடிச் செல்லும் இராஜகுமாரியாகிய ஞானலோசனிதானோ? அசுரனிடம் சிக்கித் துயரப்படுகின்றனள், பக்ஷிநாயகமே! அவள் இன்னும் உயிருடனிருக்கின்றனளா?

பஞ்சவர்ணக்கிளி:—ஐயா! அவளை இராக்ஷதன் புசிக்கப்பட்டவனல்ல தன்னுடன் சுகித்திருக்கும்படியாய் வேண்டினன். அவள் கற்பு நிறைந்த உத்தமியான தினால் அசுரன் தன்னைத் தீண்டாதவிதமாய் கவுரி பிரதானுஷ்டானம் புரிந்துக்கொண்டு காலங்கழிக்கின்றனள். ஆனால் அவளைத் தேடிக் கொண்டுவந்த அவளுடைய தந்தையின் சேனாசைன்ய மனைத்தும் அந்த மாயராக்ஷதன் மந்திரோச்சாடணத்தால் சிலையுருவாய்ப்போயினர்.

நியாயகேசரி:—சபாஷ்! காமேந்திரா! கவனித்தனையா! அத்தகைய மாயராக்ஷதனிடத்திலிருக்கிற கன்னியை இச்சிப்பது எவ்வாறுளதெனின் பாம்பின் சிரசிலிருக்கும் மாணிக்கத்தைத் தங்கின உடனே எடுத்துக்கொண்டு வருவோமென்று வீணெண்ணங்கொள்ளும் அறிவீனனைப் போற்பாவிக்கின்றீரே. ஈதென்ன கண்காக்ஷி? அந்த அசுரனோ இலேசானவனல்ல. ஞானபுரி மன்னன் சேனாசைன்ய மனைத்தும் கல்லாய்ச்சமைத்தவனுக்கு யாம் எவ்வளவு மலைவிழுங்கும் மாயிக்கு கதவுசுண்டாங்கி யென்பது போல, நம்மை விழுங்கிவிடுவானே அப்பால், நீ எவ்விதமாய் ஞானலோசனியுடன் சுகித்திருப்பது? யாங்களெவ்விதமாய் நகரிற்சென்று தாய்தந்தையரைக் காண்பது? அப்பப்பா உன்னுடன் சேர்ந்து வந்தது எமது உயிருக்கு எமனைத்தேடிக் கொண்டதுபோலிருக்கின்றனவே.

பஞ்சவர்ணக்கிளி:—ஐயா! நீரேன் மனமிரளுகிறீர்? இன்னாருக்கின்னபடியென ஈசன் அவரவர் தலையிலெழுதியது போலவே அமையும். அந்த ஞானலோசனியை இந்தகாமேந்திரன் மணந்து சுகித்திருக்கவேண்டுமாயின் யாவர் தடுத்திடினும் முடியுமோ?

நியாயகேசரி:—பக்ஷிநாயகமே! நீபுகன்றவை வினவியதைக் கேள்வியுற்றால் புலிப்பால் புசித்தால் தேகபுஷ்டியாகுமென்று அருகிற்சென்றால் அச்சமயமே அதன் வாய் பக்ஷணமாய் விடுவது போல; தன்பலம், எதிரிபலம், காலபலம் மூன்றையும் அனுசரித்தல்லலோ யாதொருகாரியமும் செய்யவேண்டும். அஃதன்றி, வயற்று சோற்றுக்குபஞ்சமுற்றவறுமையாளன் இராஜகுமாரத்தியை மணஞ்செய்துக் கொள்வதெனின் முடியுமா? இவையனைத்தும் யோசனை செய்யாமல் வீணெண்ணங்கொள்கின்றாரே.

யாதேனுந்தன்னால் முடியுமானதாயிருந்தால் எவ்விதமாயினும் பிரயாசைப்படலாம், கிட்டாதாயின் வெட்டெனமறந்திடவேண்டியதல்லவா? அஃதன்றி வறுமையான் வீணெண்ணத்தினுல் இராஜபுத்திரியைக் கலியாணஞ்செய்துக் கொண்டு காளைஞைதப்போமென்று வீணெண்ணங் கொண்டு விதியை நினைத்தழுத கதையாறுலென்ன செய்வது?

ஜெயப்ரதாபன்:—நேயா! நீஇத்ததிபுகன்ற சரிதையை கவனித்திடில் வெகுவித ஆச்சரியகண்காக்ஷியாய்த் தோற்றுமென்றே நினைக்கின்றேன். ஆதலின், அதனைவிவரித்துக் கூறுமின்.

நியாயசேகரி:—சரி! அவ்விதமே புகலுதும் கவனமாய்க்கேண்மின்.

———

வீணெண்ணங்கொண்ட வறுமையாளன் கதை.

ஓர் தேசத்தில் ஏழையானவனொருவன் நெடுநாட்களாய் வறுமையைத் துணைபற்றி வயற்றுசோற்றுக்குப் பஞ்சமுற்றிருந்து ஓர் கைத்தொழிலாயினும் கிடைத்தால் யாம் சுகமாய் ஜீவித்திடுவோமேயென்று காலையிலெழுந்து கடைவீதியிற்போயினன், அங்கொரு வாணியன் தான் வாங்கிய எண்ணைக்குடத்தை எடுத்துச் செல்வதற்கு கூலிஆள் தேடுகையில் சனியனெதிர் வந்ததுபோல இந்த வறுமையாளன் குறுக்கேவந்துவிட்டனன். அவனைக்கண்ட வாணியன் அடா கூலி ஆளே இந்த எண்ணைக்குடத்தை சிரசின் மேல் எடுத்துக் கொண்டு எனது வீட்டுக்கு வருவாயாகில் உனக்கு இரண்டுபணம் கூலி கொடுப்பேனென்றனன். அவனும் சம்மதித்து, மஹாசந்தோஷமடைந்தவனாய் எண்ணைக்குடத்தை தலைமீதெடுத்துக்கொண்டு இனி தனக்கு நற்காலம் வாய்த்ததென்று வியாபாரவிஷயத்தில் மனதை செலுத்திவிட்டனன்.

அஃதெவ்விதமெனின் தன் தலைமீதிருக்கும் எண்ணைக்குடத்தைக் குறித்த இடத்தில் இறக்கிவிட்டால், வாணியன் இரண்டுபணம் கொடுப்பான் அந்த பணத்திற்கு ஒருகோழிவாங்கி வளர்த்தால் அது எவ்விதமாயினும் ஐந்துமுட்டையிடும் அந்த ஐந்து கோழிமுட்டையையும் அதுஅடைகாத்து குஞ்சுபொரித்தால் ஐந்து கோழியாகும். அந்த கோழிகளைப் பெரிதாய் வளர்த்து ஐந்துரூபாய்க்குவிற்று ஆணும் பெண்ணுமாகிய இரண்டு ஆடுகள்வாங்கி அதனை பக்குவமாய் மேய்த்திடில் அவைகள் நன்றாய்க்கொழுத்து திமிருண்டாகி குட்

டிகளை யீன்றால் அவைகளையெல்லாம் விற்று மாடுகள்வாங்கி அவைகளையும் இவ்விதமாய் மேய்த்திடில் அவைகளனைத்தும் வெகு கன்றுகளையும் அதனைவெளிதேசத்தில் விற்கிரயம்செய்து ஆயிரம் விராகன் சேர்த்து இருநூறு விராகனில் வண்டிகுதிரை வாங்கி மூந்நூறு விராகனில் இராஜ உடுபாவனையாகிய ஆடை ஆபரணங்கள் வாங்கிக்கொண்டு ஓர் குளத்தருகில் சென்று க்ஷவரம் செய்துக்கொண்டு திரேகத்தை சுத்திசெய்து ஐம்பது விராகனில் இராஜாக்கள் அணிந்துகொள்ளும் அத்தர் பன்னீர் ஜவ்வாதுகளைவாங்கி திரேகமெங்கும்பூசி நாம் வாங்கிக்கொண்டு வந்திருக்கும் ஆடை ஆபரணங்களினாற் சிங்காரித்துக்கொண்டு மீதிதொகையை மூட்டைகட்டிக்கொண்டுபோய் இந்த நகரத்தரசனுக்குக் காணிக்கையாய்க் கொடுத்தால் அவன் நம்மை இன்னானென்றும் நினையாமல் யாவனோ இராஜகுமாரனென மதித்து மரியாதைசெய்வான். அந்த சமயத்தில் யாம் அவனை பக்குவப்படுத்திக்கொண்டு அந்தஇராஜனுடைய மகளையே கலியாணஞ் செய்துக்கொண்டால், நாம் இராஜனாகவே யிருப்போம். இந்தவூரில் நம்முடன் பிக்ஷை எடுத்துக்கொண்டிருந்தவரை யெல்லாம் தமாஷாய் வரவழைத்து யான் ஆர்தெரியுமாவென்றால் அவர்களுக்கென்ன தெரியும்? யாவனோ இராஜனென்றே யிருப்பார்களென தனக்குள் தானே யோசிப்பதும் சிரிப்பதுமாய் தலையிலேந்திய எண்ணை குடத்துடனே வாணியன் கடைக்குச் சமீபமாய் வந்துவிட்டனன்.

அச்சமயம் அவனுடைய மனமானது இராஜகுமாரத்தி விஷயத்தில் கிஞ்சித்து பிரவேசித்தது. அஃதெவ்வித மெனின் யாம் இராஜகுமாரத்தியைக்கலியாணஞ்செய்துக்கொண்டு சரசசல்லாபமாயிருந்தால் அவள் ஒருவருஷத்திற்குள் ஓர் ஆண்குழந்தையைப் பெறுவாள். அது நம்மைப்பார்த்து நயினாவென்றழுதால், நாம் எட்டி குழந்தையையென்று இடுப்பில் எட்டி உதைத்துக் கன்னத்தில் அறைவோமென்று ஓர் காலை தூக்கி ஓர் கையை ஓங்கினன் இவனும் பூமியில்விழுந்து தலைமீதிருந்த எண்ணைக்குடமும் திடீரென தவறிவிழுந்து உடைந்துபோயிற்று வாணியனுக்குக் கோபம் பெருகி அடா பாவி உனக்கென்னகேடுகாலமடா வென்று அவன் இடுப்பின்மேலே எட்டி எட்டி உதைத்தனன். வேடிக்கைப்பார்த்திருந்த வீதியிற்போவோரனைவரும் விழுந்துவிழுந்து குலுங்ககுலுங்கநகைத்துக்கொண்டு போயினர். வீணெண்ணங்கொண்ட வறுமையாளன் ஐயோ அரசகுமாரத்தியை அடிக்க நினைந்து யான் அடைந்த அடி உதை போதும்

போதும். வழக்கத்தைப்போல பிக்ஷையெடுத்து சாப்பிட்டாலும் நன்றாயிருக்குமே இராஜ்யினைவுகொண்டதனு விடுப்பு நகர்ந்ததேயென அழுதுக்கொண்டுபோயினன்.

இவ்வித மிருக்கின்றனவே உலகியல்பு, இதனை கவனியாமல் காமேந்திரன் யோசிப்பதும் நீங்கள் மர்மமுணராமல் பாஷிப்பதும், யான் உங்களுடன் கஷ்ட கிஷ்டேரத்தை அனுபவிப்பதும் வேடிக்கையல்லவோ? வென்றனன். இதனை கேள்வியுற்ற சிநேகிதரிருவரும் விடாநகைப்பாய்ச் சிரித்துக்கொண்டிருந்தனர். காமேந்திரனுக்கு மாத்திரம் கொஞ்சமும் மனதிலுறுத்தவில்லை, என்றாலும் பஞ்சவர்ணக்கிளி இந்நால்வரின் குணத்தைப் பரீக்ஷித்து இவர்களில் இந்த அரசகுமாரன் கிஞ்சிற்றும் மதியில்லாதவனானபடியால் இவர்களனைவருக்கும் இத்தகையதாய்க் கஷ்டகிஷ்டே மெய்தலாயிற்று. ஆயினும், இவர்களை ஓர்விதமாய்ச் சமாதானஞ் செய்திடவேண்டுமென்றெண்ணி, ஐயா! நீங்கள் மூவரும் என்னென்ன விதமாகவோ ஆலோசிக்கின்றீர். ஆனால் இன்னானுக்கின்னாள் மனைவியென பிர்மதேவன் நியமித்திருக்கும் விதமே யன்றியுமன்றி மற்றவரெவர் தடுத்திடினும் ஆவது ஆகாமலிருக்குமோ? ஆகாதது ஆகுமோ? அன்றியும், நீங்கள் அரண்மனையிலிருக்கும்போது யாத்திரைவாசியாய்ச் சென்று சந்தோஷமாய் வருவோமென்று நினைந்தீரேயன்றி இவ்விதமாய்க் கும் கஷ்டகிஷ்டே மெய்துவீரென தெரியுமா? இத்தகையதாகவே தாய்தந்தையின் தொடுவழக்கினால் சேர்ந்த சச்சரவினால் தனவந்தன் மகளாயிருந்தும் காலவித்தியாசத்திற்கிணங்க யாசகனை மணந்த சரிதையைக் கவனித்துணர்கிலீரோ?

காமேந்திரன்:—ஆ! அப்படியா? பக்ஷிநாயகமே இத்தனைநாளாய் இந்த வீரப்ரதாபனும், ஜெயப்ரதாபனும் எனக்கு இரண்டுகைகளைப்போலிருந்தனர். ஆனால், இந்த நியாயகேசரியும் எனது உயிர்த்தோழன்தானென்றிடினும் கிஞ்சிற்றும் பயங்கரமடைந்தவனாயிருக்கின்றனன், தற்சமயமோ உனது தைரியத்தினால் அந்த ஞானலோசனி எவ்விதத்திலேனும் எனக்குக்கிடைப்பாளென்பதற்குச்சந்தேகமில்லை, என்றாலும் அதற்குதாரணமாக தற்சமயம் நீர் புகன்ற திருஷ்டாந்த சரிதையைச் சற்று விவரித்துக்கூறுமின்,

பஞ்சவர்ணக்கிளி:—அவ்விதமே புகலுதும் கவனிப்பீர்கள்.

வறுமையாளனைமணந்த வைசியப்பெண் சரிதை.

ஓர் தேசத்தில் மிகவும் கீர்த்தி வந்தனாய் வியாபாரஞ்செய்திருந்த ஓர் தனவந்தனுக்கு வெகுநாள் வரையினும் புத்ரபாக்கியமின்றியவனாயிருந்து தெய்வானுகூலத்தினால் தனது பத்தினி கர்ப்பவதியாயிருப்பதைக் கவனித்து மகாசந்தோஷமடைந்தவனாயிருக்கையில் அவன் மனைவி தசமதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் பூரணச் சந்திரோதய முகவசீகரதேஜஸமைந்த ஓர் குழந்தையை ஈன்றனள். அதனைக்கண்ணுற்றோரனைவரும் ஆச்சரியமடைந்து ஈதென்ன மனிதர்களின் வயற்றில் தங்கநிறமமைந்த குழந்தை பிறந்திருக்கின்றதே இது தேவாம்ஸமோவென சந்தேகித்திருந்தனர்.

வைசியன் தேவி குழந்தையின்மீது அன்புவைத்து பாலூட்டி, சீராட்டி வெகு மேன்மையாய் வளர்த்துவருகையில், அவள் அழகிற்கிசைந்தவிதமாய் ஜெகன்மோகினியென பெயரிட்டு அழகிற்கிசைந்த ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்து சித்திரமெழுதிய பொற்பதுமைபோல் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்விதமாயிருக்கையில் ஜெகன்மோகினிக்கு பனிரெண்டுவயதான பிறகு பருவதிசையடைந்தனள். அச்சமயம் பெண்ணின் தாய் தனது சகோதரனுக்கு தன் மகளைக் கலியாணஞ்செய்து விட்டால் வெகு மேன்மையாயிருக்குமென்று தன் மணாளனிடத்திற் சொன்னாள். அந்தவைசியன் கிஞ்சிற்றும் சம்மதியாமல், அடி! போடி! போ! எனது தங்கையின் புத்திரனுக்கு என்மகளைக் கொடுப்பேனன்றி மற்றவருக்கு கொடுக்க மனந்துணிவேனோ? வென்று, எதிர் வழக்காடிக்கொண்டிருக்கையில் அக்கம்பக்கத்திலிருப்பவரனைவரும் இவ்விருவர் வழக்கை தினந்தோறும் தீர்ப்பதுமாயிருந்தாலும் பெண்விஷயத்திலே அவர்களுக்குச் சதாகாலமும் பலவித கலவரமாயிருந்தன. ஆனால் அந்த ஜெகன்மோகினிக்கு மாத்திரம் தனது தாயின் இஷ்டப்படியே அம்மான்மீது ஆசையாயிருந்தனள். அத்தைமகனையும், மற்றவர்களையும் மணம்புரிவதற்கு வெறுப்பாயிருந்தனள். அவர்களிவ்விதமாயிருக்கையில், அந்நகரில் சதா ஏழையாயிருந்த ஓர் யாசகன் தினந்தோறும் வீடுவீடாய்ச்சென்று பிக்ஷை எடுத்துக்கொண்டுவந்து அந்த வைசியன் வீட்டின் திண்ணைமீது உட்கார்ந்து சாப்பிடுவான், அச்சமயம் வைசியப்பெண்ணாகிய ஜெகன்மோகினி யாசகன்மீது பரிதாபமடைந்து தமது வீட்டில் மீதியாயிருக்கும் அன்னபதார்த்

துங்களும் கொண்டுவந்து யாசகனுக்கு தந்து ஜலங்கொடுப்பதுமா
யிருப்பாள்,

அவன் அமுதருந்தியபிறகு அந்த ரூபசுந்தரியின் அழகானந்த
முகவஜீகரத்தைக்கண்டு ஆ! ஹா! இவ்வளவு ரூபசுந்தரியும் உலகிற்
பிறந்திருக்கின்றனளே. இத்தகைய வடிவலங்காரியுடன் சுகித்திருக்க
அதிர்ஷ்டமுடையவனும் ஜனித்திருப்பானல்லவோ? அவன் முன்
ஜனனத்தில் எவ்வளவோ புண்ணியஞ்செய்திருந்திடினும் தேவாம்ஸ
மாகவே தோற்றுவானென தன் மனதிற்றானே நினைந்துக்கொண்டு
பெருமூச்ச விடுத்துக்கொண்டிருப்பான்.

இங்ஙனம் இவனுடைய நினைவு இத்தகையதாயிருக்கையில், அந்
தப் பெண்ணின் தாய்தந்தையர்கிஞ்சிற்றேனும் ஆசாபாசமின்றியவ
ராயும் ஒருவரையொருவர் தூஷித்துக் கலகம்விளைவித்துக்கொண்டு
தாய் தன் சகோதரனுக்குக் கொடுப்பதாகவும், தந்தை தனது சகோ
தரியின் புத்திரனுக்குக் கொடுப்பதாகவும் சச்சரவுசெய்து வழக்கா
டிக்கொண்டிருப்பதும் தமது உறவினர் தினந்தோறும் வந்து பல
விதமான நியாயவசனம் புகன்று இருவரையும சமாதானஞ்செய்துக்
கொண்டிருப்பதுமாயிருக்கையில் திரிலோகசஞ்சாரியாகிய நாரதபக
வான் ஓர் நாள் தனது வழக்கம்போல பூலோகத்தை நாடிச்சென்று
வைசியன் வீட்டின் திண்ணைமீபின்மீது பிராமணரூபமாய்வந்துட்
கார்ந்து அங்கு நிகழும் கலகத்தையெல்லாம் கவனித்து இந்தவழக்
கை எவ்விதமாய் தீர்ப்பதென யோசித்துக்கொண்டிருந்தனரேயன்
றி தனக்கே யாதொன்றும் தோன்றாமலிருந்தன.

அப்பால், தனது வழக்கப்படியே திரிலோகசஞ்சாரியாய் திரிந்
துக்கொண்டு கைலாசத்திற்குப்போயினர். அச்சமயம் யாதோ ஓர்
காரணத்தினால் பிர்மாவும் விஷ்ணுவும் கைலையில் வந்தனர். தேவர்க
ளும் சித்தர்களும் யோகிகளும் வந்து பக்தியானந்தமாய் சூழ்ந்திருந்
தனர் அச்சமயத்தில் நாரதர் அங்ஙனம் வந்து திரிமூர்த்திகளை வணங்
கி சுவாமி பூலோகத்தில் ஓர்வித ஆச்சரியகண்காக்ஷி நிகழ்வதாயின.
அஃதென்னவெனின் ஓர் வைசியப் பெண்ணின்தாய் தனது சகோ
தரனுக்குத் தரவேணுமென்றும், தந்தை தனது சகோதரி மைந்த
னுக்குத் தரவேணுமென்றும் வழக்காடுகின்றனர். அவர்களின்
இனத்தினர்களும் வந்து தமது மனதிற்கிசைந்தபடியே பலபலவித
மாய்ப் பஞ்சாயத்து செய்கிறார்களேயல்லாமல் அந்தப் பெண்ணை

ஒருவனுக்குமாத்திரம் கலியாணஞ்செய்யும்படியாய்த் தீர்ப்பு செய்தவரில்லையே அவ்விதமிருக்க அவளை எவன் மணஞ்செய்வனென்று யானும் யோசித்துப்பார்த்தேன். எனக்கும் அவ் விவகாரத்தின் உண்மை தெரியவில்லையென்றனர்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பிர்மா புன்னகைபுரிந்து, ஐயா! நாரதரே! பிர்மா கட்டளையைமீறி நடப்பதற்கு யாவராலுமாகாதே அவ்விதமிருக்க பூலோகமாந்தர்களால் தடுக்கமுடியுமோ வென்றனர். அருகிலிருந்த நாரதர் சரி! அவ்விதமானால் அந்தப்பெண் யாரை மணம்புரிவள்? இஃதுண்மையை யான் நன்குணர விவரித்துரைப்பீரென வேண்டுதலும், பிர்ம்மா சொல்லுகிறார், கேளும் நாரதரே அந்தவைசியப்பெண் தனது தாயின் சகோதரனையும் மணம்புரியாள். தகப்பன் சகோதரி மைந்தனையும் மணம்புரியாள் அவ்வீதியிலிருக்கும் யாசகனாகிய வறுமையாளனை நாளையதினம் பகல் இருபது நாழிகைக்குமேல் கலியாணஞ்செய்துக் களிப்புற்றிருப்பாள். இதனை ஹரி ஹரிஹரனாலும் தவிர்க்கமுடியாதென்றனர். அருகிலிருந்த மஹாவிஷ்ணு கலகலவென சிரித்து பிர்ம்மதேவா! உன்னுடைய சமர்த்தை யான் வெளிப்படுத்துகிறேன் காண்பாயென்று கருடனை அழைத்து நீபோய் அந்தவைசியப்பெண்ணின் வீட்டுத் திண்ணையின்மீது சயனித்திருக்கும் வறுமையாளனை எடுத்துக்கொண்டுபோய்இமாலய பர்வதகுகையில் வைத்துவிட்டு வருவாயென்று ஆக்ஞாபித்தனர். கருடனும் அவ்விதமே நன்றெனச்சம்மதித்து ஜிவ்வென்றெகிறி பறந்துபோய் அந்த வறுமையாளனைத் தூக்கிக்கொண்டுபோய் இமாலயபர்வதத்தின் குகையில் வைத்தவுடனே அவன் கதறியழுது ஐயோ! பக்ஷியே யான் இருக்கும் ஸ்தானத்திலிருந்தாலும் இரந்துண்டு ஜீவிப்பேன் என்னை இவ்விதமாய் மனிதசஞ்சாரமில்லாத குகையில் கொண்டுவந்துவிட்டாயே இனி யானெவ்விதமாய் ஜீவிப்பது வயறு பசிக்கின்றதேயென்றழுதனன், கருடன் பரிதாபமடைந்து, இனி இவனுக்குப் பலகாரபக்ஷணம் யாதேனும் கொண்டுவந்து கொடுப்போமெனும் நல்லெண்ணத்துடன் தான் வந்தவழியே பறந்துவருகலாயின.

இங்ஙனம். இத்தகைய அற்புதானந்த ஆச்சரியகாக்ஷியாயிருக்கையில், அந்தவைசியப்பெண்ணின் தகப்பன் நாளையதினம் தனது சகோதரியின் புத்திரனுக்குத் தனது புத்திரியை விவாகஞ்செய்திட

வேண்டுமெனும் எண்ணத்துடன் தாலி கூறை முதலானவையுடன் கலியாணவிஷயத்திற்குரிய சாமான்களும் தயாராய்ச் சித்தப்படுத்தி வைத்துவிட்டு தனது சகோதரியின் வீட்டுக்குப் போயிருந்தனன். இங்ஙனம் வைசியன் நினைவு இவ்விதமாயிருக்கையில், அவனுடைய மனைவியானவள் தனது கணவனுக்குத் தெரியாமல் தன்னுடைய புத்திரியைத் தனது சகோதரனுக்குக் கலியாணஞ் செய்துவிடவேணுமெனும் கருத்தமைந்தவளாய் தனது வீட்டிலிருந்த ஆறடி நீளமும் இரண்டடி அகலமுமுள்ள ஓர் பெட்டியில் தனது குமாரத்தியை நவரத்ன கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்துப் பெட்டியில் உட்காரவைத்து அம்மா! இதோ இந்த மாங்கிலியத்தை உன்னுடைய கையில் பத்திரமாய் பிடித்துக்கொண்டிருப்பாயாகில் எனது சகோதரன் இந்தப் பெட்டியைத் திறந்தவுடனே அவன் கையில் இந்த மாங்கிலியத்தைக்கொடுத்து அணிந்துகொள்வாயாகில், மறுதினம் நமது இனத்தினரனைவர் முன்பாக உங்களிருவருக்கும் விமரிசையாய்க் கலியாணஞ்செய்து வைத்திடுவதற்கியலுமென்று சொல்லி பெண்ணை பெட்டியிலிட்டு தாளிட்டுப்பூட்டி திரவுகோலை பெட்டியில் தொங்கவிட்டு தனது வீட்டிலிருக்கும் வேலைக்காரர்களின் தலைமீது தூக்கிவைத்து இதனைக்கொண்டுபோய் எனது தாய்வீட்டிலிறக்கி எனது சகோதரனிடம் பெட்டியைத் திறக்கும்படி சொல்லுவீரென்றனுப்பினள். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துப் பெண்ணிருக்கும் பெட்டியைத் தலைமீது தூக்கிக்கொண்டு போகும்போது கருடப்பக்ஷியானது பறந்துவந்து பெட்டியைத் தனது இருகாலினாலும் கவ்விக்கொண்டுபோய் இமாலயபர்வதத்தின் குகையிலிருக்கும் வறுமையாளன்முன் கொண்டுவந்து வைத்துவிட்டு தனது இருப்பிடமாகிய வைகுந்தத்திற்குப் பறந்துபோய்விட்டது.

அப்பால், வறுமையாளன் அதிசயித்து ஈதென்ன ஆச்சரியம் இந்த கருடப்பக்ஷி நம்மை இந்தக்குகையில் கொண்டுவந்துவிட்டதுமல்லாமல் இந்தப்பெட்டியையும் எடுத்துக்கொண்டு வந்த காரணமென்ன இதில் திரவுகோலுமிருக்கிறதே இதை திறந்துபார்ப்போமென்று திரவு கோலினால் பெட்டியைத் திறந்தனன். அச்சமயம் மர்மமின்னதென்றுங் கவனியாத வைசியப்பெண் தனது தாயின் சகோதரனாகிய அம்மானென மதித்து தலைகுனிந்தவண்ணமே தாலியை யாசகன்கையில் கொடுத்து சீக்கிரமாய் கழுத்திற் சூடுவீரென்றனள். அத்தயாசகன் நகைத்துக்கொண்டிட வைசியப்பெண்

காழத்தில் மங்கிலியஞ் சூடி மனமகிழ்ந்தனன். அத்தகி அவள்
ஈதென்ன இருட்டறையாயிருக்கின்றதே யென தலை நிமிர்ந்து பார்க்
கையில் அது ஓர் பயங்கரமான குகையாகவும் அங்கிருந்து தனக்கு
மங்கிலியமணிந்தவன் தமது தேசத்தின் யாசகனுச்சுதே இவனுக்கு
யாம் மனைவியானகாரணத்தைக் கவனித்துப்பார்க்கில் கோட்டையி
லே பெண்ணாபிறந்தும் போட்டவிதி தப்பாது யெனுந் தன்மையாயிரு
க்குமெனபதத்கிணங்க காமித்தகைய தனவந்தனுடைய மகளாயிருந்
[illegible] ஜனத்திரள் நிறைந்த குடும்பத்தில் பிறந்திருந்தும் ஆருமற்ற
பரதேசியைப்போல ஆரண்யத்தின் குகையில் வந்து யாசகனை மணம்
புரியலாயிற்றே. இதுதான் நமது தலையிலெழுதிய பிரம்மதேவன்
அமைப்பென்று கல்லானாலுங் கணவனே தெய்வம் புல்லானாலும்
புருஷனே தெய்வமெனும் பதிவிரதா நிலையைக் கைப்பற்றி யாசகன்
மீது வாஞ்சையாயிருந்தனள். அவனும் தனது கருத்திற்கிசைந்த
காதலியுடன் காந்தர்வமணம்புரிந்து மதனரதிபோற் சுகித்துச் சுகா
னந்தமாயிருந்தனன்,

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகையதாயிருக்கையில் வைசியப்
பெண்ணைப் பெட்டியில் வைத்துத் தூக்கிக்கொண்டு போன கூலி
யாட்கள் கருடன் பெட்டியைப் பறித்துக்கொண்டு போய்விட்ட
தினுல் மனமெலிந்து குய்யோ முறையோவென கூச்சலிட்டழுதுக்
கொண்டு வைசியன் வீட்டிற்போய் நிகழ்ந்தவை யனைத்தும்
விபரமாய்ப்புகன்றனர். அந்தப்பெண்ணின் தாய் மனவருத்தமடை
ந்து, ஐயோ விதிவசமே யாதென்று நினைக்கத்தானென்றும் முடிந்
ததே இனியாது செய்வதென வயிற்றிலும் வாயிலும் அடித்துக்
கொண்டு கூச்சலிட்டழுதனள், அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓடி
வந்து ஈதென்ன அகஸ்மாத்தாய் அழுகுரல் வேடிக்கைக்கிளம்பினவே
யென விசாரிக்கையில் பெண்ணின் தாய் நிகழ்ந்தவையனைத்தும்
விபரமாய்ப்புகன்று அனலிற்பட்ட புழுவைப்போற் றுடித்து பூமி
யிற்புரண்டழுதனள், அச்சமயம் வெளியிற்போயிருந்த வைசியன்
வீட்டுக்குவந்து விசாரித்து, தன் மனைவியின்மீது கோபித்து அடீ
துஷ்டீ உன்னுடைய சூதுமார்க்கத்தினல் அருமையான பெண்ணை
உயிருடனே கொன்றாயே யென விசனப்படுவதாயினன். அருகி
லிருப்போர் இவர்களுக்குள் நேர்ந்த தொடுவழக்கை ஒருவிதமாய்
தீர்த்து இப்போது யாருக்கும் உதவாமற்போயிற்றே இனி இதைக்
குறித்து விசனப்படுவதினாற் பிரயோசனமென்னவென்று சமாதா

ணஞ்செய்திடினும் வைசியன் மனந்தாளாமல் ஐயோ எவ்விடத்திலாகிலும் உயிருடனிருந்திடில் அப்போதைக் கப்போது போய்பார்த்துக்கொண்டிருக்கலாம், அஃதன்றி பெட்டியிலிட்டு கருடனுக்கு பறிகொடுத்தால் அது எந்தக்கானகத்தில் கொண்டுபோய் போட்டுவிட்டதோ அந்த ஆரண்யங்களில் எந்த துஷ்டமிருகங்கள் கொன்றுதின்று புசித்துவிட்டதோவென வயறெரிந்து அழுதுகொண்டிருந்தனன்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகையதான அழுகுரல்வேடி[illegible]யாயிருக்கையில், கருடன் பெட்டியைக்கொண்டுபோய் குகையில் வைத்துவிட்டு வைகுந்தத்தில் வந்து தான்செய்த சமர்த்தைப்புகன்றன. விஷ்ணு மஹாசந்தோஷமெய்தியவராய் ஏனையா பிர்மதேவரே இன்றையபகல் பதினைந்து நாழிகைக்கு மேல் வைசியப்பெண் அந்நகரில் யாசிக்கும் வறுமையாளனைக் கலியாணஞ்செய்துக்கொண்டனளா? பிர்மதேவன் விதியைவிலக்க யாவராலு மாகாதென்றீரே இப்போது என்னசொல்கிறீரென்னலும் நான்முகன் ஞானதிருஷ்டியாலுணர்ந்து அகஸ்மாத்தாய் விளைந்த ஆச்சரியகாக்ஷியை நினைந்து புன்சிரிப்புடன் ஐயா நாரணரே உம்மாலான சாமார்த்தியம் செய்தும் என் பந்தயந்தான் ஜெயித்தது வந்து பாருமென்று தன்னுடன் அழைத்துக்கொண்டு அருகிலிருந்த தேவர்களுடனே இமோற்பர்வதத்தின் குகையின் அருகில்வந்து பார்த்தவுடனே தேவர்களும் விஷ்ணுவும் சதிபதியாயிருக்கும் வைசியப்பெண்ணையும் வறுமையாளனையும்பார்த்து ஆச்சரியமடைந்தவர்களாயிருந்தனர். பிர்மதேவர் மனமகிழ்ந்தவராய் ஏனையா நாரணரே இப்போதென்ன சொல்கிறீரென்று கேட்டனர், மஹாவிஷ்ணு மனமகிழ்ந்து அவ்விருவரையும் ஆசீர்வதித்து, கருடனைநோக்கி இதற்குதானோ உன்னை அனுப்பினேனென்று வினவ, கலுழன் மனஞ்சலித்து சுவாமி! யான் மர்மமுணராமல் உமது சொற்படியே இந்த யாசகனை இந்தக்குகையில் கொண்டு வந்து வைத்துவிட்டேன் இவன் மனவருத்தமடைந்து எனை இந்த பயங்கரமான குகையில் கொண்டுவந்து விட்டீரே இது நீதியாகுமோ யான் மனிதர்வாழும் தேசத்திலிருந்தாலும் யாசித்தாவது ஜீவித்திருப்பேன். இத்ததி என் வயற்றை வளர்ப்பதெவ்விதமென்று அழுதனன். யான் மனந்தாளாமல் இவனுக்கு யாதேனும் பக்ஷணம்கொண்டுவந்து கொடுக்கலாமென ஆலோசனைசெய்து நகரிற் பிரவேசிக்கையில், கூலியாள்கள் தலையின்மீது இந்தப்பெட்டி

யைத் தூக்கிக்கொண்டு போயினர். யான் இதில் பலகாரபக்ஷணம் இருக்கிறதென மதித்து, யான் இதனை காலினாற் கவ்வி பறந்துக்கொண்டுவந்து இவன் முன்பாக வைத்துவிட்டுப் போயினேன். அப்பால் இவ்விதமாய் நேர்ந்ததென்றது, இவ்விசேஷத்தை யுணர்ந்த தேவர்கள் வைசியப்பெண்ணைப் பார்த்து இந்தப் பெட்டியில் யார் உன்னை வைத்தனரென்று கேட்கையில் அவ்வைசியப்பெண் தனது தாய் தந்தைகட்குள் நேர்ந்த தொடுவழக்கை விபரமாய்ப் புகன்று, இன்றையதினம் என் தந்தை தனது சகோதரனுக்கு என்னைக் கலியாணஞ்செய்துக்கொடுக்கவேணுமென்று சகலவித காரியமும் சித்தப்படுத்திவிட்டு அவர் தனது சகோதரியின் வீட்டுக்குப்போயிருந்தனர். அச்சமயத்தில் என் தாய் என்னை இந்தப் பெட்டியில் உட்காரவைத்து கையில் இந்த மங்கிலியத்தைக் கொடுத்து, இந்தப்பெட்டியை என் தாய்வீட்டுக்கு அனுப்புகிறேன் அங்கிருக்கும் எனது சகோதரன் பெட்டியைத் திறப்பான். அச்சமயம் அவன் கையில் இந்த மங்கிலியத்தைக்கொடுத்தால் அவன் உன் கழுத்தில் மங்கிலியத்தை அணிந்துவிட்டு உன்னையே கலியாணஞ்செய்துக்கொள்வானென்று சொன்னாள் யானும் உண்மைதானென தீர்மானித்து அவ்விதமே நன்கெனச் சம்மதித்தேன் என் தாய் பெட்டியைமூடி தாளிட்டுதிறவுகோலையும் பெட்டியில் தொங்கவிட்டு கூலியாள் தலைமீது தூக்கிவிட்டனள் அவர்களும் அதை எடுத்துக் கொண்டுவந்தனர். அப்பால் யான்இந்த குகையிலிருக்கும் இவருக்கே மனைவியாயினே னென்றுசொன்னாள்,

இவையனைத்தும் கவனித்த தேவர்களனைவரும் ஆச்சரியமடைந்து இன்னருக்கு இன்னவரென்று விதித்த பிர்மதேவன் கட்டளையை விலக்க யாதொருவராலுமாகாதென்றனர் மஹாவிஷ்ணு சதிபதியாகிய அவ்விருவரையும் பெட்டியில் உட்காரவைத்து கருடனை எடுத்துக்கொண்டுபோய் வைசியப்பெண் வீட்டில் கொண்டுபோய் விடும்படி ஆக்ஞாபித்துவிட்டு யாவரும் தேவலோகத்திற்குப் போயினர். கருடனும் அவ்விதமே நன்கென பெட்டியைக்கொண்டு போய்வைசியன்வீட்டில் வைத்தது, அங்கிருப்பவரனைவரும் ஆச்சரியமடைந்து பெட்டியைத் திறக்க அதனுள் வைசியப்பெண்ணும் வறுமையாளனுமிருக்கக்கண்டு அதிசயித்தவர்களாய் விசாரிக்க அவர்கள் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகன்றனர். அசரீரியும் இவையனைத்தும் உண்மையேயென புகன்றன. அங்கிருந்த வைசிய

ரனைவரும், சந்தோஷமடைந்தவராய் அந்த வைசியப்பெண்ணுக்கும் யாசகனுக்கும் கலியாணஞ்செய்து வைத்தனர்.

அப்பால், வைசியப்பெண்ணாகிய ஜெகன்மோகினியை வறுமையாளன் மணம்புரிந்து மதனரதிபோல் சுகானந்தவாய் புத்திரரையீன்று சித்தமகிழ்ந்தவனாயிருந்தனன். இவ்விதமே இந்த காமேந்திரனும் ஞானலோசனியைக் கலியாணஞ் செய்துக்கொண்டு களிப்புற்றிருப்பானென்று மனதைரியமாய்ப்புகன்றன.

இவ்விதமாய்ப் பஞ்சவர்ணக்கிளிப்பிள்ளை புகன்றனவை வினவிய காமேந்திரன் மஹா சந்தோஷமடைந்தவனாய் ஆனந்தசாகரத்தில் மூழ்கிய விதமாய் களித்து, நேயர்காள் இந்தக் கிளிப்பிள்ளை பக்ஷியாயிருந்தும் மஹா தைரியசாலியென அதனைத்தனது கரத்திலேந்தி முத்தங்கொடுத்து மனோல்லாசமாய்ச் சொல்வதாயினன்,

காமேந்திரன்:—நேயர்காள்! இனி நாம் பலவிதமாய் ஆலோசிப்பதினாற் பயனில்லை, யான் அந்தக் கன்னிகையை மணந்து சுகிப்பதற்கிருந்ததினாலேதான் யாம் நகரை விடுத்துக் கானகமார்க்கமாய் வருகலாயினோம், ஆகையால், இனி இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

நியாயகோரி:—ஏற்பாடுசெய்வதெனின் எவ்விதம்? அவனோ! மாயஜாலங்கற்றவனாயிருக்கின்றானே, அத்தகைய சுத்தவீரன் முன்பாக எவ்விதமாய்ச் சென்று அவனது வசத்திலிருக்கின்ற பெண்ணைக்கொண்டு வருவது இதை கவனிக்கில் வனசிங்கத்தின் பல்லைக்கொண்டு வருவதுபோலல்லவோ? இவையனைத்துங் கவனித்திடாமல், பேசுவது ஆச்சரியமல்லவோ? அன்றியும், கிளிப்பிள்ளையின் பேச்சைக்கேட்டு புலியின்வாய்க் கிரையான கதையாய் முடிந்தாலென்ன செய்கிறது?

பஞ்சவர்ணக்கிளி:—ஆ! ஈதென்ன ஆச்சரியம்? கிளிப்பிள்ளைகள் மனிதர்கட்கு அபாயம் விளைவிப்பதெனின் யாவர் நம்புவர். அன்றியும், அநேக மனிதர்கள் எங்களைப்போன்ற கிளிகளை பிள்ளையைப்போல வளர்த்து வருவதினால் கிளிப்பிள்ளைகளென பெயரிட்டு அவைகளுடன் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்கின்றனரே அவ்விதமிருக்க தாங்கள் அவ்விதமாய் இழிவுபடுத்திப் பேசுவது நீதியாகுமோ? அத்தகைய தாயினும் உமது சித்

தத்திற்கு சந்தேகமுளதெனின் விபரமாய்த் தெரிவித்திடல்நன்காகும்,

நியாயகேசரி:—பக்ஷிநாயகமே நின் விருப்பத்தின்படியே புகலுதும் கவனிப்பாய் வடதேசத்திலிருக்கும் ஓர் சிற்றூரில் விஜயப்ரதாபனென்னொருவர்த்தகன் நெடுநாளாய் தீவு தீவாந்திரங்களெங்ஙனும் திரிந்து பல சரக்கு வியாபாரஞ் செய்துகொண்டிருந்தனன். அச்சமயத்தில் அவன் ஓர் கிளிப்பிள்ளை வளர்த்தனன். அது எத்தகையதெனின் அவனிடம் வளர்ந்திருந்திடினும் சில சமயங்களில் தனக்கிஷ்டமானபடி ககனமெங்ஙனும் திரிந்து சகல தேசங்களையும் பார்த்துக்கொண்டு வருகிறவழக்கம், அவ்விதமாயிருக்கையில் ஓர் நாள் விஜயப்ரதாபன் கிளியைப் பார்த்து பக்ஷிநாயகமே! நீ சென்ற தேசங்களில் எவ்விடத்திலேனும் வியாபாரிகளுக்கு லாபங்கிடைக்கக் கூடுமானதாயிருந்தால் புகலுமென வினவினன்,, கிளிப்பிள்ளை ஆலோசித்து ஐயா! எனது அன்பிற்கினிய எஜமானே மேற்றிசையில், ஓர் தீவிருக்கின்றன. அங்ஙனம் விதவிதமான பழதினுசுகளும் அநேகவிதமான விருக்ஷங்களும் சோலைகளும் நிறைந்து சந்ததமும் தேவதாசியர்வந்து நடனம் செய்து பாடும் இனிமையும் கேட்கில் மனமானது பிரமானந்தமெய்தும், அங்ஙனம், அநேக விதவிதமான பக்ஷிகளும் நிறைந்திருக்கின்றன. யான் இத்தனை நாளாய் பலதீவிலும் சஞ்சரித்திருந்தும், அத்தகைய அலங்காரவனத்தைக்காண்கிலேன், ஆனால், அங்ஙனம், புலி, சிறுத்தை, கரடி, சிங்கம் முதலாகிய மிருகாதிகளும் வாசஞ் செய்திருப்பதினாலே, மனிதசஞ்சாரமே கிடையாதென்று, தான் கண்ணுற்றவரையிலும் உண்மையைப் புகன்றன, அவ்வார்த்தையைக் கேள்வியுற்று "சூர்ப்பநகையின் சொற்கேட்டு துர்ப்புத்தியடைந்தழிந்த இராவணனைப்போல" கிளிப்பிள்ளை சொன்ன வனத்திலிருக்கும் தெய்வகன்னிகைகளைக்கண்ணுற்று அவர்களில் ஒருத்தியைக் கைப்பற்றி, காந்தர்வமணம்புரிந்து சுகித்திருக்கவேண்டுமென போகவுற்றவனாயிருந்தனன். இவ்விதமாயிருக்கையில் ஓர் நாள் வைசியனாகிய விஜயப்ரதாபன் கிளிப்பிள்ளையை எடுத்துத் தோளின்மீது வைத்துக்கொண்டு அது குறிப்பித்தவனத்தை நாடிச்செல்கையில் அதுவும் இவனுக்கு வழிகாட்டிக்கொண்டே தான் குறிப்பித்த வனத்திற்கு

அழைத்துக்கொண்டு வருகையில், அந்தக்கானின் சமீபத்தில் ஓர் குகை தோன்றியது அங்ஙனமிருந்த ஓர் வேங்கையானது திடீரென்று ஜெயப்ரதாபன் மீது பாய்ந்து கழுத்தைப்பிடித்த வுடனே தோளின்மீதிருந்த கிளிப்பிள்ளை ஜிவ்வென்றெகிரி பறந்துபோய்விட்டது, அப்பால் வைசியன்பாடு ஆபத்தாய் விட்டதுடன் ஆவியகன்று யாக்கை புலியின்வாய் பக்ஷணமாய் விட்டது. இவ்விதமாய் உனது சொற்கேட்டு இராக்ஷதன் கையிற் சிக்கிய பெண்ணைத் தேடிக்கொண்டு சென்றால் இராக்ஷதன் வாய் பக்ஷணமாகுமென்ன செய்கிறது?

என,பாஷித்துக்கொண்டிருக்கையில், அம்மார்க்கமாய் ஓர்சந்நியாசியானவர் வந்தனர். அவரைக் கண்ணுற்ற இந்நால்வரும் அவர் மலரடியில் வீழ்ந்து பணிந்து, தயாநிதி! இந்நதி எங்கள்முன் தோன்றி காக்ஷி தந்தருளியதுபோலவே எமது மனக்குறையையும் தீர்த்து இரக்ஷித்தருளல் வேண்டுமென்றனர். அம்மஹான் கருணைகூர்ந்து அப்பா! நீங்கள் யாவர்? இத்தகைய பயங்கரமான கானகத்தில் யாது காரியார்த்தமாய் வந்தீரென்று வினவுதலும், அந்நால்வரும் தமது காலவித்தியாசத்தினால் நேர்ந்த கொடுமை யனைத்தும் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்றனர். அச்சமயம் காமேந்திரன் தபசியின் திருவடியில் வீழ்ந்து பணிந்து சொல்வதாயினன்,

காமேந்திரன்:—சுவாமி! தங்களைக்கண்ணுற்ற யான் கர்த்தவ்யத்தைக் கண்ணுற்ற விதமாய் அகமகிழ்ந்தேன். ஆகையால் தமது கிருபாவீக்ஷண்யத்தால் யான் நாடியபெண்ணை எனக்குக் கலியாணஞ்செய்து வைப்பது தமது கிருபாவீக்ஷண்யமாகும்,

சந்நியாசி:—அப்பா! நீ என்னைக்கண்டு நின்மனக் குறையைத் தெரிவித்தமையால் யான் உனது மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆனால், அந்த ராக்ஷதனோ மகா குரூரகுண மமைந்தவன், அவனை ஜெயிப்பதற்கு யாவராலு மாகாது. அஃதேனெனில், அந்த ராக்ஷதன் மாயஜாலத்தைதையிற் சிறந்தவன், அவனெதிரில் யாவரேனும் போய் அமர்பொருத நினைப்பாராகில் அச்சமயம் அவர்களை கல்லாய்ச் சபித்திடுவான். ஆகையால் அவனைத் தந்திரமாய்க் கொல்லவேண்டும்.

காமேந்திரன்:—சுவாமி! அவனை எவ்விதத்திற் கொல்லுகிறதோ அதனை யான் நன்குணர விவரித்துரைப்பீராகில் யான் எளிதில்

அவனைக் கொன்றுவிட்டு யான் கோரிய பெண்ணைக் கைப்பற்றுவேன்.

சந்நியாசி:—சரி! அப்படியானால் யான் உனக்கு ஓர் உபாயம் சொல்கிறேன். அவ்விதமே செய்தால் உன்மனம்போல் காரியசித்தியாகும் அஃதெவ்விதமெனில் நீ அந்த அசுரனிருக்குமிடத்தில் போவதே பயங்கரநிலையாகும், ஆனாலும் அவன் கண்ணுக்குத் தெரியாமல் அவனில்லாத சமயத்திற்சென்று அவனால் சிறைபட்டிருக்கு அந்தப்பெண்ணைக்கண்டு அசுரனுடைய உயிர் நிலை இருக்கும் ஸ்தானத்தைக்கண்டு அவனைக் கொல்லவேண்டும்? இவ்வளவு பயங்கர நிலையிலிருக்கும் பெண்ணைக்கொண்டு வருவதற்கு ஆசைப்பட்டால் அதற்கிசைந்தாற்போல சாமர்த்தியம் செய்யவேண்டும். அப்படியில்லாவிட்டால் கிட்டாதாயின்வெட்டெனமற வென்னுந் தன்மையாய் அந்த ஆசையை விட்டுவிடவேண்டியது,

நியாயகேசரி:—சரி! இவ்வளவு பிரயாசைப்படுவதிலும் திரும்பிவிடுவதே சிரேஷ்டமாகும்.

காமேந்திரன்:—அப்பப்பா! என் [illegible]லாசர்து. நீங்களனைவரும் போனாலும் போய்விடுவீர். யான் மாத்திரம் அந்த ஞானலோசனியை எவ்விதத்திலேனும் மணந்து சுகித்திருப்பேன்.

வீரப்ரதாபன்:—சரி! அவ்விதமாயின் யாம் நால்வரும் போய் அசுரனை எதிர்த்து அமர் பொருதிபார்ப்போம்,

ஜெயப்ரதாபன்:—நண்பர்காள்! இனிமேல் யாதொன்றும் முன்பின் யோசிப்பதற் பிரயோசனமில்லை. சகலத்திற்கும் மனதேகாரணமாகையால், மனதைரியத்துடனே அசுரனை எதிர்த்து அமர் பொருதுவோம், இறந்தாலும் வீரசொர்க்கம் ஜெயித்தாலும் ஜெயப்ரதாபம். ஆனகையால் இத்ததியே பிரயாணமாவீர்?

காமேந்திரன்:—நல்லது வருவீர் போவோம்,

நியாயகேசரி:—நண்பர்காள்! ஏன் இவ்விதமாய் அவசரப்படுகிறீர். யாதொரு காரியமும் தீரவிசாரித்து தன்பலம், எதிரிபலம், காலபலம் இம்மூன்றையும் அனுசரித் திருக்கவேண்டுமல்லவோ? அஃதன்றி முரட்டுத்தனம் செய்தால், மரத்திற் கடாவின ஆப்பைபிடுங்கிய வானரத்தைப்போல” அழிந்துபோகும்படி

யாய் நேரிடுமே இவையனைத்தும் கவனியாமல் பேசுவது தகுதியாகுமா?

வீரப்பிரதாபன்:—(நகைத்து) மித்ர! ஈதென்ன கண்காக்ஷி இரும்படிக்கிற இடத்தில் ஈய்க்கென்னவேலை யென்பதுபோல தச்சனால் மரத்திற் கடாவிய ஆப்பை வானரம் பிடுங்கின காரணமென்ன அவற்றை யாங்கள் கவனிக்க விருப்புற்றோம் விவரித்துக் கூறுமின்.

நியாயகேசரி:—ஓர் சிற்றூரிலிருந்தஓர் தச்சனானவன் தனது தொழிற்குரிய விதமாய் கானிற்சென்று அங்ஙனமிருந்த ஓர் மரத்தை அறுத்துப் பாதியானவுடனே அந்த அறுப்புண்டவெடிப்பில் ஓர் ஆப்பைவைத்துக் கடாவிவிட்டுத் தனது வீட்டிற்குப் போய் சாப்பிட்டு வரப்போனான், அச்சமயம் அருகிலிருந்த ஆலவிருக்ஷத்தில் உட்கார்ந்துக்கொண்டிருந்த ஓர் தடிக்குரங்கு குடுகுடுவென்றோடிவந்து, அந்த தச்சன் வருவதற்குள் இந்த ஆப்பைப் பிடுங்கி எறிந்துவிட்டால் அவன் வந்து பார்த்து வருத்தப்படுவான், யாம் பக்கத்திலிருந்து பரிகாசித்து தமாஷாய்ச்சிரித்துக்கொண்டிருக்கலாமென்னும் மனோகர்வத்தைத்துணைவகித்து, திடீரென்று அறுப்புண்ட மரவெடிப்பில் போயுட்கார்ந்து, அதில் கடாவியிருந்த ஆப்பை மெதுவாய் அசக்கி அசக்கி முரட்டுத்தனமாய் பிடுங்கி விட்டது, மரப்பிளவு ஜில்லென்று மூடிக்கொண்டது அச்சமயம், மனோகர்வத்தை துணைவகித்த வானமானது மரப்பிளவில் மாட்டிக்கொண்டு கண்விழி பிதுங்க நசுங்கி விட்டது, அவ்விதமாய் காமேந்திரன் அசுரனிடத்திலிருக்கும் பெண்ணைக் கொண்டுவருவதற்குப்போய் ஆபத்தடைந்தால் என்னசெய்கிறது?

பஞ்சவர்ணக்கிளி:—ஐயா! நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம், நீங்களனைவரும் இங்ஙனமே வீற்றிரும் யான் ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோய் அசுரனில்லா சமயமறிந்து, அந்தப்பெண்ணைக்கண்டு அசுரனுடைய உயிர்நிலையிருக்கும் ஸ்தானத்தைக்கண்டுணர்ந்து வருகிறேன். அதன்பின் அவனை எவ்விதத்திலேனும் கொன்றுவிட்டு, அந்தக்கன்னியை அழைத்து வருவீர்.

சந்நியாசி:—ஆம், இதுதான் தகுந்தயோசனை அவ்விதம் புரிவீராகில் உமது காரியம் சித்தியாகும்.

என! ஆசிர்வதித்துவிட்டுத் தமது வாசஸ்தானத்திற்குப் போய்விட்டனர், அப்பால் பஞ்சவர்ணக்கிளியானது அந்நால்வரும் மனமகிழுந்தன்மையாய் ஜிவ்வென்றெகிரி பறந்து ஞானலோசனியிருக்கும் கானகத்திற்சென்று அவள்கையில் போயுட்கார்ந்தது அதனைக் கண்ணுற்ற ஞானலோசனி மனமகிழ்ந்து வினவுதலாயினள்.

ஞானலோசனி:—என தன்பிற்கிசைந்த கிள்ளை நாயகமே! நீ இத்தனை நாளாய் எங்கெங்கு சென்றிருந்தனை?

பஞ்சவர்ணக்கிளி:—அம்மணி! யான் உனக்காகவும் உனது தாய் தந்தை சேனைசன்பத்திற்காகவும் மனமிரங்கி, வெகு பிரயாசை எடுத்துக்கொண்டு யாவரையேனும் தகுதியான அரசனை அழைத்துக்கொண்டு வரலாமெனும் ஆவலாய்ச் சென்றேன். அச்சமயம், ஓர் அரசகுமாரன் தனது நேயர்களுடன் வந்திருந்தனன். அவன் அழகில் மதனசொரூபனும் வல்லமையில் அருச்சுனனையும் நிகர்த்தவனாகையால் அவனால் அசுரனை ஜெயிக்கக்கூடும். ஆனால் அவன் உயிர்நிலை ஸ்தானத்தைமாத்திரம் கவனித்துக்கொண்டால் எளிதில் ஜெயித்துவிடலாம். அன்றியும், உனது தாய் தந்தையரை எழுப்பும் விதம் அசுரனாலேயே கவனிக்கவேண்டும். ஆகையால், அவன் உன்னிடத்தில் வந்தால் அவனுடைய உயிர்நிலையையும் கேட்டுத் தெரிந்துகொள்வதுடன் கல்லாயிருப்பவரை எழுப்பும் விதமும் விசாரித்துக்கொண்டு என்னிடம் தெரிவிப்பாயாகில், யான் அந்த அரசகுமாரனிடம் தெரிவித்து, உனது மனக்குறையைத் தவிர்ப்பேன்.

ஞானலோசனி:—கிள்ளைநாயகமே! நீ புகன்றவை கவனிக்கில், என் மனதில் மஹாசந்தோஷமெய்தின. என்றாலும், அந்த அசுரனை யான் எவ்விதமாய் கேட்பேன்? கேட்டாலும் தனது உயிர்நிலையிருக்கும் ஸ்தானத்தைச் சொல்வானோ?

பஞ்சவர்ணக்கிளி:—அம்மணி! யான் சொல்வதைக் கவனிப்பாய். அஃதியாதெனின்! அசுரன் வந்தவுடனே மனவெறுப்பாயிருப்பாயாகில் அவன் உன்னை விசாரிப்பான், அச்சமயம் நீமிகவும் பரி

தாபமடைந்தவள்போலிருந்து, ஐயா தாங்களென்னை இத்தகைய பயங்கரமான கானகத்திற்கொண்டுவந்து விட்டீரே யான் எவ்விதமாய் மனஞ்சகித்திருப்பேன். எனது தாய்தந்தையரும் கல்லுருவாய்ச் சமைந்திருக்கின்றனர். ஆனால் தாங்கள் மாத்திரம் உயிருடனுலாவித்திரிகின்றீர். ஒருசமயம் நீங்களும் இறந்துவிட்டால் எனக்கு யார்துணை? ஆகையால் என் மனது சஞ்சலந்தீரும்படியாய் தைரியவார்த்தை சொல்வீரென்றுவேண்டிக்கொண்டால் உண்மையனைத்தும் விபரமாய்ச் சொல்வான். அதைஎனக்குத் தெரியப்படுத்தினால்யான் தகுந்த முயற்சிகள் செய்வேன்.

என, புகன்றவை வினவிய ஞானலோசனியும் அவ்விதமே செய்வோமென்று கிளிப்பிள்ளையைக் கரத்திலேந்தி முத்தமிட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு போய்வருவாய் பக்ஷிநாயகமே யென்றனள். கிளிப்பிள்ளை மனமகிழ்ந்து ஜிவ்வென்றெகிறி பறந்துசென்று அருகிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் இலை மறைவில்போய். மறைந்திருந்தது. அச்சமயம் அசுரனும் வந்துவிட்டனன். ஞானலோசனியானவள் கிளிப்பிள்ளை சொன்னபோல மஹா விசனமடைந்தவளாய் தனது அநுஷ்டானம் ஜெபதப முதலாகிய விரதங்களையும் புரியாமல், மதிமயக்கமுற்றவள்போல மஞ்சமீதிற் படுத்திருந்தனள், இத்தியாதி விசனக்குறிப்பை யுணர்ந்த மாயாராக்ஷதன் தனது வாழ்நாள் குறுகியதினாலும் மர்மரகஸ்ய மின்னதென்றுங் கவனியாதவனாகையாலும், என்னமோ ஏதோ எனிவ்விதமாய் மனவிசாரப்படுவதாயினளெனும் சந்தேகத்தினால் ஞானலோசனியை வினவுதலாயினன்.

இராக்ஷதன்:—ஆ! எனது அன்பிற்கிசைந்த சுந்தரவதனி! நீ யாது காரணார்த்தமாய் இத்தியாதி மனவருத்தமாய் மண்மேற் சயனித்திருக்கின்றனை. அன்றியும், உனது விரதானுஷ்டானமனைத்தும் இன்றைத்தினம் புரியாமலிருக்கும் காரணமென்ன? நீ கெடுவிட்டபடியே கவனித்திடினும் இன்னும் ஒருமாதமிருக்கிறதே இதற்குள் யாது காரணத்தினால் மனவெறுப்புற்றவளாய் விசனப்படுவதாயினை?

ஞானலோசனி:—ஐயா! என் மனக்குறையை உன்னிடத்திற் புகலாமல் மற்றோரிடத்திற் புகல்வதற்கியலுமோ? என்றாலுந் தெரிவிக்கின்றேன், கவனிப்பீர், அஃதியாதெனின் உலகிற் ஜனித்த

ஜீவர்களில் புருஷாளுக்கு மாத்திரம் யாதொரு பயமுமில்லை,
ஆனால்,ஸ்திரீகளுக்கு அவ்விதமில்லை,பேதைமையென்பது மாதர்க்
கணிகலமென்னுந்தன்மையாய் அச்சம், மடம், நாணம் பயிற்
பென்னும் நால்வகை மூடத்தன்மையைத் துணைவகித்து சாலை
வழியிற் செல்வதற்கு மனமிரண்டு மூலைவீட்டிற் பதுங்கியிருக்
கும் அற்பஜீவனாகிய ஸ்திரீகளுக்கு ஆயுள் முடிவுவரையிலும்
ஆதரித்திரக்ஷிப்பதற்கு துணைவரிருக்கவேண்டும், இல்லாவிட்
டால், அவர்கட்கு ஆபத்துதானே.

இராக்ஷதன் :—ஆம் ! ஆம் !! அதற்கென்ன சந்தேகமா ? பெண்க
ளுக்கு சாகும்வரையினும் ஆதரிக்கும் துணைவர் அருகிலிருந்
தால் ஜீவிப்பர். இல்லாவிடில், மானமும் மதியுங்கெட்டு சோற்
றுக்குத் திண்டாட்டப்படுவார்கள்.

ஞானலோசனி :—அவ்விதமிருக்கின்றனவே உலகியல்பு. யான் இத்த
கைய பயங்கரமான ஆரண்யத்தில் தாய்தந்தை உற்றார் உற
வின்முறையார் யாவரும் கல்லுருவாய்ச் சமைந்திருக்கவும் நீங்
களும் ஒருநாளைக்கு வெளியேபோனால் இரண்டுமூன்றுநாள்
வரையிலும் வருகிறதில்லையே. அ[illegible]னக்கு வெகுவித
பயங்கரமாயிருக்கின்றது. அஃதேனெனில் தாங்கள் தனி
யாய் செல்லுந்தருணம் யாவரேனும் பகைஞ ரெதிருற்று உம்
மைக் கொன்றுவிட்டால் அப்பாலென்கதி எவ்விதமாகிறது.
என் தாய் தந்தை உற்றார் உறவின்முறையா ரனைவரும் கல்லுரு
வாய் சமைந்திருக்கின்றனரே, அப்பால் எனக்கு யார் துணை
யென்று நினைத்திருக்கின்றேன்.

இராக்ஷதன் :—பெண்ணே ! நீ அவ்விதமாய் யாதொன்றும் சந்தே
கப்படவேண்டாம். உனது தாய்தந்தையர் உற்றார் உறவின்
முறையா ரனைவரும் இறந்துவிடவில்லை. அவர்களை யான் இன்
னும் சிறிதுநாளையில் எழுப்பிவிடுவேன் அஞ்சாதே. யாராலும்
ஒருவரால் இறந்துவிடுவேனென்றும் மனமயங்காதே. எத்
தகைய சுத்தவீரரானாலும் என்னெதிரில் வந்து அமர்பொருத
லாகாது, யான் திரிலோகமும் ஜயம்பெறத்தக்க வல்லவனுச்
சுதே நீயேன் பயப்படுகிறாய் ?

ஞானலோசனி :—ஆ! ஈதென்ன ஆச்சரியம்?-உயிரற்ற சவம்போற் கல்
லாய்ச் சமைந்தவர்கள் உயிர்பெறுவார்களெனின் யார்தான்

நம்புவார்கள்? நீங்கள்தான் எப்படி எழுப்பிவிடுவீர்? நீர் சொல்வது எவ்விதமிருக்கிறதெனின் விசனப்படுகிறவர் கண்ணைத் துடைப்பதுபோற் காண்கிறதே.

இராக்ஷதன்:—அவ்விதமாய்ச் சந்தேகப்படாதே.

ஞானலோசனி:—சரி! சரி!! இதை எவர்கள்தான் நம்புவார்கள் கல்லாய்ச் சமைந்திருக்கும் இவர்கள் உயிர்பெற்றெழுந்திருப்பரென்பதை யான் நம்புவதற்கியலாது.

என, நவின்றமை வினவிய இராக்ஷதன் கலகலவென சிரித்து தனது குகையில் வைத்திருந்த செப்புக்குடத்தையெடுத்து அதைத் தனது விரலினால் திறந்தனன். அச்சமயம் கல்லுருவாயிருந்தவரனைவரும் சுயசரீரம்வாய்ந்து உயிர்பெறும்விதமாய் கைகாலசைத்து கண்களைத்திறந்து பார்க்கும்போது கரத்திலேந்திய தனுசிற் கணை தொடுத்து, இராக்ஷதனை இத்ததியே சித்ரவதை செய்துவிடுவோமென்று கத்திக் கதறி கூச்சலிடுகையில், இராக்ஷதன் திடீரென அவர்கள் ஆவியனைத்தும் மறுபடியும் செப்புக்குடத்தி லடைத்து மூடிவிட்டனன். அச்சமயம் ஞானலோசனி ஆச்சரியமடைந்து, இனி நமது தாய் தந்தையை எவ்விதமாயினும் எழுப்பிவிடுவோமெனும் பேராசையால் மனமகிழ்ந்திருந்தனள், என்றாலும், பஞ்சவர்ணக்கிளி சொன்னதுபோல இந்தஇராக்ஷதனுடைய உயிர்நிலை யிருக்கும் ஸ்தானத்தைக் கவனிக்கவேண்டியதென்னும் யோசனையினால் விசாரணை செய்வதாயினள்.

ஞானலோசனி:—ஐயா? தாங்கள் புரிந்த சாமார்த்தியம் மெச்சத்தகுந்ததே ஆனாலும், அவர்களை என் மறுபடியும் கல்லுருவாய்ச சமைத்திட்டாயினீர்?

இராக்ஷதன்:—பெண்ணே! அவர்களை எழுப்பிவிடுவதற்கு சம்மதித்தவுடனே அவர்களெனைக் கொல்வதற்கெழுந்தனரே. அவர்களை இனி எழுப்பலாமா? நீயே ஆலோசித்துப்பார்? இவ்வளவு சாமர்த்தியமுடைய மருமகன் கிடைத்தது நன்மையோ? தீதோ? நீயே யோசித்துச்சொல்வாய்.

ஞானலோசனி:—தாங்கள் யாவராலும் சாகாவரம் பெற்றவரென்று முன்னமே தெரிவித்திருக்கின்றீரே இப்போது ஏன் அவர்களுக்குப் பயப்படுகிறீர்?

இராக்ஷதன் :—அவ்விதமாய் நினையாதே யான் அஸ்திரத்தினுலும் சத்தியினுலும் மற்றெந்தவிதத்தினுலும் சாகேன், ஆனல் இவர்களையெல்லாம் எழுப்பிவிட்டால், இவர்கள் கரத்திற்ருங்கிய அஸ்திரங்களினுல் என்னை சித்ரவதை செய்வார்கள் அத்ததி எனது ஜீவன்போகாது சரீரபாதையுண்டாகும். அதற்காகவே யான் பயப்படுகிறேன்.

ஞானலோசனி :—சரி! சரி! நீங்கள் சொல்லும்போதே எனக்கு பெரிய சந்தேகம் நேர்ந்துவிட்டது. அஃதெவ்விதமெனின் முன்னம் சாகாமலிருப்பேன், யான் யாருக்கும் அஞ்சேனென்றும் புகன்றீரே, தற்சமயம் எனது தாய்தந்தையர் சுற்றத்தாரனைவரையும் எழுப்பிவிட்டால் கொல்லத்துணிவாரென்றுசொல்வது பயங்கரத்தை விளைவிக்கத்தக்கதல்லவோ?

இராக்ஷதன் :—பெண்ணே! அவ்விதமாய்யாதொன்றும் பயங்கரசந்தேக மெய்தாதே என்னை யாதொருவரும் கொல்வதற் கியலாது ஆனல், இவர்களை எழுப்பிவிட்டால், அஸ்திரங்களை விடுத்து சரீரத்தைத்துளைத்து, உயிருடனே சித்திரவதை யடையச் செய்வார்களன்றி, என்னைக் கொல்வதற்கியலாது.

ஞானலோசனி :—சரி! அவ்விதமாயின் உம்மை யாதொருவராலும் கொல்வதற்கியலாது என்று சொல்லுகின்றீரே, வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டென்னுந் தன்மையாய் ஒருவனை யொருவர் கொன்று எமபுரிக்கு ஆவியை அனுப்புவார்களே அவ்விதமாயிருக்க உம்மை யாதொருவரும் கொல்லமாட்டார்களென்றால்யாவரேனும் நம்பத்தக்கதோ எத்தகைய சுத்த வீரனும் ஓர்நாளைக்கு பகைஞரெதிருற்ருல் மரணமடைவான். சாகாத மனிதரும் உலகிலிருப்பார்களோ? இரணியன், இரணியாக்ஷசன், இராவணன், கும்பகர்ணன், சிசுபாலன், தந்தவக்ரன், சராசந்தன் முதலானோரனைவரும் பகைஞர் ஆயுதத்தினுல் இறந்துவிட்டாரே, அவ்விதமிருக்க தாங்கள் பகைஞர் அஸ்திரத்தினுல் மரணமடையாமலிருப்பிரென்றிடில் யாவரேனும் நம்பத்தக்கதோ?

இராக்ஷதன் :—கண்மணி! விண்மணியினுஞ் சிறந்த பெண்மணி! நன்மணி! நவமணியே! நீ புகன்றமொழியனைத்தும் உண்மையே

அவர்களனைவரும் உயிரைத் தமது சரீரத்திலேயே வைத்துக்
கொண்டிருந்தனர். அதனாலே அவர்கள் மரணமடைந்தனர்.
யான் அவ்விதமாய் உயிரைச் சரீரத்திற் சுமந்திருப்பவனல்ல
எனது உயிரை யாதொருவரும் காணாத கானகத்தில் மறைத்து
வைத்திருக்கிறேன். ஆகையால், பகைஞரெதிருற்று சண்டை
செய்தாலும் பயப்படேன். பகைஞர்களின் வாளினால் என்னை
சின்னாபின்னமாய்ச் சக்கைச்சக்கையாய் வெட்டிவெட்டி அம்மி
யில்வைத்து அரைத்து ஆற்றின் ஜலத்தில் கரைத்துவிட்டாலும்
அச்சமயமே எனது சரீரம் வீணாகாமல் ஒன்றுடன் ஒன்றாய்ச்
சேர்ந்து சரீரம் அமைந்து பழையபடியே உயிர்பெற்றெழுந்து
பகைஞர் எங்கிருந்தபோதிலும் தேடிக்கண்டுபிடித்துக் கொன்
றுதின்றுவிடுவேன். காதலி! என்னுடைய சமர்த்தை ஒருவித
மாய்ச் சொல்வதற்கும் முடியுமோ? தேவர்களும் அசுரர்களும்
திகைத்து பயங்கரமெய்துவார்களெனின் எனைக் கொல்வதற்கு
எதிராளியும் அருகில் நெருங்குவார்களோ ?

ஞானலோசனி:—ஈதென்ன ஆச்சரியம்? பொய்சொன்னாலும் பொருந்
தும்படி சொல்லவேணும் அஃதன்றி, நம்பத்தகாத பொய்
சொன்னால் யார்தான் சம்மதிப்பார்கள். யாதாமொரு ஜீவ
னும் சரீரத்தில் புகுந்திருந்தால்தானே சரீரமானது நடக்கவும்,
உலாவுவதும், உண்பதும், உறங்குவதுமாயிருக்கின்றன.
அஃதன்றி உயிரற்ற சவம் உலாவுவதற்காகுமா? தாங்களென்னை
என்னென்னவிதமாய் ஏமாற்றி தைரியவார்த்தை புகன்றிடி
னும் என் மனதிலிருக்கும் சந்தேகம் நீங்குமோ? தாங்களும்
பற்பல தீவுகளிலும் சஞ்சரிக்கின்றீரே. அங்ஙனம் யாவரே
னும் உமது பகைஞரெதிருற்றா லென்னசெய்கிறது? ஆகை
யால் தாங்கள் என்னைவிட்டுப்பிரியாமல் இங்ஙனமே வீற்றிரும்
யானும் இன்னும் ஒரு மாதத்திற்குள் விரதந்தீர்த்தபிறகு
உம்முடனே வருகிறேன். அச்சமயம் உம்மை யாவரேனும்
கொல்லவந்தெதிர்த்திடினும் யான் அவர்களின் காலில் விழு
ந்து பணிந்து சமாதானஞ் செய்துவிடுகிறேன். இனிமேல் நீங்
கள் எனைவிட்டு நீங்காதீர்.

என, பாசாங்கு வார்த்தையாய்ச் சொன்னதை அவன் உண்மை
யென்றே மதித்து, பார்பாகஸ்ய முணராதவனாகையால், அடடா

இவள் நம்மீது வெகு ஆசையாயிருக்கிறாள். ஆனால், நாம் இறந்து விடுவோமென்று பரிதாபப்படுகிறாளென புன்னகை புரிந்தவனாய் சொல்வதாயினன்.

இராக்ஷதன் :—காதலி! யான் உனக்கு உண்மையைப் புகன்றேனன்றி பொய்யல்ல.

ஞானலோசனி :—பொய்யல்லவெனின், சரீரத்தில்தானே உயிரிருக்கும். அஃதன்றி, சரீரம் ஒருபுறமும், உயிர் ஒருபுறமும் இருக்குமெனின் உம்முடைய உயிர் எங்ஙனமிருக்கும். இஃதுண்மை எனக்கு விவரமாய்த் தெரிவித்திடல்வேண்டும், அப்போது தான் என் மனச்சஞ்சலந் தீரும்.

இராக்ஷதன்:—எனதன்பிற் கினிய காதலி! யான் ஆதியில் பிர்மாவை நோக்கித் தபம் புரிந்து வைராக்கியத்துடன் யாகம்புரிந்துக் கொண்டிருக்கையில் நான்முகன் வந்து உனக்கென்னவரம் வேண்டுங் கேளென்றார். அச்சமயம் யான் அவரைப்பணிந்து, சுவாமி எனது ஜீவ நாயகமாகிய உயிரை யான் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டு சரீரத்துடனே உலாவிக்கொண்டிருக்கும்படி யாகவும், அச்சமயத்தில் யாவரேனும் புகைஞர் என்னை வெட்டி எறிந்தாலும் மறுபடியும் சரீரம் ஒன்றாய் ஒட்டிக்கொண்டிருக்கும்படியாய் வரந்தரல்வேண்டு மென்றேன். அவரும் அவ்விதமே நன்றெனச சம்மதித்து யான் கேட்டுக் கொண்டபடி நல்வர மளித்தனர், அப்பொழுதே யானெழுந்து தபமிலை விடுத்து இந்தக் குகை யருகில்வந்து இங்ஙனம் இறந்து கிடந்த ஓர் கிளிப்பிள்ளையின் சரீரத்தில் எனது ஜீவநாயகமாகிய உயிரை விடுத்தேன், அது அதனுடலிற் பிரவேசித்த உடனே கிளிப்பிள்ளை உயிர்பெற்றெழுந்தது அதற்கு யான் பொன் கூடு செய்து இந்தக் குகையின் அருகாமை ஒருமைல் தூரத்திற் கப்பாலிருக்கும் புதரில்வைத்து வளர்த்துக்கொண்டிருந்தேன். அதற்கு ஆயுள் முடிவான பிறகு இறந்து விட்டது அந்த ஜீவநாயகமாகிய உயிர் போகும்போது எனக்கு மரணம் நேரிடுவது போலிருந்தது, அச்சமயமே யானதைப்பிடித்து அதோ நமக்கெதிரி லிருக்கும் மடுவின் மத்தியிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் விழுதில் ஒன்றாகிய சிவப்புநிற விழுதின் பக்கத்திலுள்ள புதரில் ஒளித்துவைத்திருக்கின்றேன். அது யாதொருவர்கண்ணுக்குந் தெரியாது,

ஞானலோசனி;—ஐயா! தாங்கள் சொல்வதை யாவரேனும் நம்புவதற்கியலுமோ முன்புதான் கிளிப்பிள்ளையின் சரீரத்தில் பொருந்தி வைத்திருக்தேனென்றீர், அப்பால் மரப்பொந்தில் வைத்திருக்கின்றேனென்றீரே, அதென்னவிதமாய் வைத்திருக்கின்றீர்.

இராக்ஷதன்:—பெண்ணே! எனது ஜீவநாயகத்தை ஓர் எலுமிச்சம்பழம்போற் செய்து அந்த மரப்பொந்தில் ஒளித்து வைத்துவிட்டுயான் சகலதேசங்களிலும் சென்று வெகுபேரைக்கொன்று தின்று வருகிறேன், அன்றியும் எத்தகைய பயங்கரமான தீவுகளிற் சென்றாலும எதிருற்ற இராக்ஷதரை யெல்லாம் அடித்துக்கொன்று ஜெயம் பெற்று வந்திருக்கின்றேன், சிலர் என்னிலும் சமர்த்தரா யிருந்திடில் என்னைக்கொன்று விட்டுத் தலைவேறு உடல் வேறாகச் செய்துவிட்டாலும் மறுபடியும் சரீரம் ஒன்றாய்சேர்ந்து உயிர்பெற்றெழுந்தவன்போல் ஆக்ரமித்து ஓடிவந்து அவர்களை யெல்லாம் கொன்று ஜெயம்பெறுவேன். ஆனால் அந்த மரப்பொந்திலிருக்கும் எனது ஜீவநாயகமாகிய எலுமிச்சம்பழத்தை எவனாகிலும் எடுத்துக்கொண்டு வந்து தனது உள்ளங்கையில்வைத்து நசுக்கினால் அப்போது தான் எனது ஜீவநாயகமாகிய உயிர் பிரியும் யானும் இறப்பே னல்லாமல் என்னை யாதொருவரும் கொல்வதற்கு முடியாது.

என, உண்மையனைத்தும் ஒழுங்காய்ப் புகன்றனன், இவையனைத்தும் ஒன்றேனும் விடாமல் ஞாபகமாய்க் கேட்டுக்கொண்டிருந்து அப்படியாவென பெருமூச்சு விடுத்தனள். இராக்ஷதனானவன் ஞானலோசனியின் மனக்குறிப்பை கவனியாமல் இவள் நமது பெருமைகைக் கேள்வியுற்று சந்தோஷப்படுகிறாளென மதித்திருக்கையில் விசாரிப்பதாயினள்.

ஞானலோசனி:—அசுரேந்திரா! நீர்! கண்காணு தீவுகளிளெல்லாம் சுற்றித்திரிந்துக் கொண்டிருக்கின்றீரே அச்சமயம் யாவராயினும் அந்த ஆலமரப்பொந்திலிருக்கும் உமது ஜீவரத்தினமாகிய உயிரிருக்கும் எலுமிச்சங்கனியை எடுத்துக்கொண்டு போய்விட்டா லென்னசெய்வீர்? அப்போதாகிலும் இறந்து விடுவீரல்லவோ?

இராட்க்ஷதன்:—பெண்ணே! நீ இவ்விதமெல்லாம் சந்தேகக்கலவரமெய்தாதே, யானுன்னைத் தனிமையாய்க் காட்டில் விட்டு இறந்துபோகமாட்டேன். என்னுடைய் உயிர்நிலையிருக்கும் பத்திரத்தையும் உனக்குச் சொல்லியும் கிஞ்சிற்றும் கவனியாமல் பயப்படுகின்றாயே ஈதென்ன பேதமை?

ஞானலோசனி:—ஐயா! பேதமை யென்பது மாதர்க்கணிகல மென்னும் தன்மையாய் பெண்களுக்கு பயமே மனதிற் குடியிருக்கு மென்றாலும், தமது உயிர்நிலை வெகு பத்திரத்தி லிருக்கிறதென்றீரே. ஆலவிருக்ஷத்தின் பொந்திலிருக்கும் எலுமிச்சங்கனியை யாவரேனு மெடுத்து இது உம்முடைய உயிர்நிலையென்றும் கருதாமல் இது ஓர் எலுமிச்சங்கனிதானே யென்று எடுத்துக் கடித்துப் புசித்துவிட மாட்டார்களோ?

இராக்ஷதன்:—பெண்ணே இந்த மடுவில் இறங்கி நீந்தினால்தானே அந்த அலுமிச்சங்கனியை எடுக்கக்கூடும். எப்படிப்பட்ட வீராதி வீரனானாலும் இந்த மடுவில் இறங்கினால் இதில் வாசஞ்செய்யும் முதலைகள் சந்தடி செய்யாமல் விழுங்கிவிடுமே அவர் எவ்விதமாய் நீந்திக்கொண்டுபோய் எலுமிச்சங்கனியை யெடுத்துக்கொண்டு வருவது? இவையனைத்துங் கிஞ்சிற்றும் கவனியாமல் என்னென்னமோ விதமாய் உளறுகின்றாயே ஈதென்ன மூடமதி,

ஞானலோசனி:—அசுரேந்திரா! இப்போதுதான் என மனதிலிருந்த சந்தேகம் தீர்ந்தது, இனி தாங்கள் நாலைந்து நாள் வரையிலும் வராமலிருந்தாலும் விசனித்திடேன்,

என தந்திரோபாயமாய்ப் புகன்றனள் மர்மரகஸ்ய மின்னதென்றும் கவனித்திடாத அசுரன் தனது வழக்கப்படியே இரைதேடப் போயினன். உடனே பஞ்சவர்ணக்கிளி ஜிவ்வென்றெகிறி பறந்து ஞானலோசனி முன்னால் வந்து வினவுதலாயின,

பஞ்சவர்ணக்கிளி:—அம்மணி! அசுரன உயிர் நிலையைக் கேள்வியுற்றனையோ,

ஞானலோசனி:—ஆம்! விசாரித்தேன் அவனைக்கொல்வதற்கு யாவராலும் ஆகாது அவனுடைய உயிரும் அவனுடலிலில்லை அதையொரு எலுமிச்சங்கனியாய்ச்செய்து, அதோ நமக்கெதிரிலிருக்

கும் மரப்பொந்தில் வைத்திருக்கின்றான் அதை யெடுப்பதற்காக இந்த மடுவில் இறங்கினால் முதலைகள் விழுங்கிவிடுமாம்! இவ்வளவு ஜாக்கிரதையில் பத்திரப்படுத்தியிருக்கும் அவனுடைய உயிர் நிலையைக் கொண்டுவருவதற்கு யாராலும் முடியாதே இதற்கு யாவரென்ன செய்வது? அன்றியும் அந்த மடுவில் இறங்கினால் அதிலிருக்கும் முதலை அவர்களை உடனே விழுங்கிவிடுமே அச்சமயம் அந்த எலுமிச்சம்பழத்தை எவ்விதமாய்க்கொண்டுவருவது? ஆனால் எனது தாய்தந்தையரின் உயிர்நிலை இந்த செம்புக்குடத்திலிருக்கிறது இந்த மூடியைத் திறந்தால் அவர்களனைவரும் எழுந்திருப்பார்கள். அவ்விதமாய் அவர்கள் உயிர்பெற்றாலும் இராக்ஷதன் உடனே ஓடிவந்து யாவரையும் ஒருமிக்கக் கல்லாய்ச் சபித்துவிடுவதுடன் மறுபடியும் அவர்கள் உயிரை எந்தத் தீவிலாகிலும் கொண்டுபோய்வைத்து விட்டா லென்ன செய்கிறது, இவையனைத்து யோசித்தால் எனக்கே பயமாயிருக்கிறது, எத்தகைய சுத்தவீரனாயிருந்தாலும் அந்த அசுரனைக்கொல்வதற்கு முடியாதென்றும் அப்படி கொன்றுவிட்டாலும் மறுபடியும் உயிர்பெற்றெழுந்து பகைவரைக் கொல்லும் பலமுடையவனென்றும், தன்னுடைய உயிரை அந்த மடுவின் மத்தியிலிருக்கும் ஆலமரப்பொந்தின் வெடுப்பிலிருக்கும் எலுமிச்சம்பழத்தில் வைத்திருப்பதாகவும், அந்தப்பழத்தை எவர்களாகிலும் எடுத்துக்கொண்டு வந்து தமது உள்ளங்கையில் வைத்து நசுக்கினால் இறந்துவிடுவானென்றும் இல்லாவிட்டால் சாகமாட்டானென்றும் சொல்லுகிறானே. இத்தகைய குரூர பயங்கரநிலையிலிருக்கும் எனது கஷ்டத்தை யாவர் தீர்க்கவல்லவர்கள்.

என, அசுரன் தெரிவித்தவை யனைத்தும் விபரம் விபரமாய்ப் புகன்று கண்ணீர்த்ததும்பக் கதறியழுதனள். அச்சமயம் கிளிப்பிள்ளை அவளுக்கு தைரியவார்த்தை புகன்று அம்மணி நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். இன்னும் சற்றுநேரத்திற்குள் அரசகுமாரனாகிய காமேந்திரனை அழைத்துக்கொண்டு வருகிறேன், அவனால் அசுரனும் இறந்திடுவான் கல்லுருவாய்ச் சமைந்திருக்கும் உனது தாய்தந்தை உற்றார் உறவின்முறையாரனைவரும் உயிர்பெற்றெழுந்திருப்பார்கள் அஞ்சவேண்டாமென்று தைரியவார்த்தை புகன்று அங்கனமிருந்து ஜிவ்வென்றெகிரிப் பறந்து காமேர்திரன் முதலானோ ரிருக்

குமிடத்தில் வந்தது அச்சமயம் காமேந்திரன் தனது காரியத்திற்கு மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கும் கிளிப்பிள்ளையை விசாரிப்பதாயினன்.

காமேந்திரன்:—எனது அன்பிற்கினிய கிள்ளைநாயகமே நீபோய்வந்த காரியத்தின்முடிவு எத்தகையதாயிற்று அதை எனக்கு விவரித்துக்கூறுமின்,

பஞ்சவர்ணக்கிளி:—இராஜபுத்திரா! யான் ஞானலோசனியின் முன் சென்று அசுரன் உயிர் நிலையிருக்கும் ஸ்தானத்தை விசாரித்தேன் அவனுடைய உயிர் நிலையை ஓர் எலுமிச்சங்கனியாகச் செய்து, அருகிலிருக்கும் மடுவின் மத்தியில் விசாலமாய் ஓங்கி வளர்ந்திருக்கும் ஆலவிருக்ஷப் பொந்தில் வைத்திருக்கின்றான். அதனை யாவரேனுமெடுத்துத் தனது உள்ளங்கையில் வைத்து நசுக்கினால் இராக்ஷதன் உயிர் தானே பிரிந்துபோகும் அப்பால், அங்ஙனமிருக்கும் செப்புக்குடத்தை, திறந்தால் அங்ஙனம் கல்லாய்ச் சமைந்திருப்பவரனைவரும் உயிர்பெற்றெழுந்திருப்பார்கள், ஆனால் அந்த மடுவில் அநேகவிதமான முதலைகள் வசித்திருக்கின்றன. அதில் இறங்குபவர்களை உடனே விழுங்கிவிடுமென்றும் தெரிவித்தனள். இதுதான் நிகழ்ந்த சங்கதி இனி நாம் தாமதிக்கலாகாது சீக்கிரமாய் புறப்படுவீர்.

நியாயகேசரி:—நண்பர்காள்! கிளிப்பிள்ளை சொன்னதைக் கேள்வியுற்றீரன்றோ? சந்நியாசி தெரிவித்ததைப்போல் அந்த அசுரன் தனது உயிர்நிலையை எலுமிச்சம் கனியைப்போற் செய்து முதலைகள் வாசஞ்செய்யும் மடுவின் ஆலமரப் பொந்தில் மறைத்துவைத்திருக்கின்றானே அத்தகைய குரூரபயங்கர நிலையிலிருப்பதை எவ்விதமாய்க்கொண்டுவருவது? பிராணனைக் கொடுப்பவர்கட்கு பெண்ணைக்கொடுப்போமென்றால் யாவர்தான் சம்மதிப்பர்? முற்காலத்தில் இவ்விதமே ஓர் அறிவீனன் அரசகுமாரத்தியை இச்சித்து புலியின்வாய்க் கிரையானது போலாகுமென்னசெய்கிறது யாதொன்றும் தனக்குக் கிடைக்குமாயின் விரும்பலாம் "கிட்டாதாயின் வெட்டென மற" என்னுந் தன்மையாயன்றோ விட்டுவிடவேண்டும். அஃதன்றி வீணெண்ணங்கொள்வது விருதாவாகுமல்லவோ?

வீரப்ரதாபன்:—சரி! இவையனைத்தும் பின்னால் ஆலோசித்துக்கொள்வோம், முன்னம் நீர் தெரிவித்தபடியே அரசகுமாரத்தியை இச்சித்த அறிவீனன் புலியின்வாய்க் இரையானதை விபரமாய்க் கூறுமின் கவனிப்போம்.

நியாயகேசரி:—சரி! அவ்விதமே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர், மாளவதேசத்தரசனுடைய குமாரத்தி தமது குலாசாரப்படியே வித்யாசாலையில் வித்தை கற்றுக்கொண்டு வருகையில் பருவதிசையடைந்தனள். அந்த மர்மத்தையுணர்ந்த அறிவீனனாகிய உபாத்தியாயர் அவளுடைய ரூபலாவண்ணியத்திற்கு மனமகிழ்ந்து யாம் அந்தப்பெண்ணை மணந்து சுகித்திருப்பதற்கு முடியாதாகையால் ஓர் நாளைக்காகிலும் நமது காதல் தணிய சுகித்திருப்போமென ஆவலுற்றவனாயிருந்தனன் என்றாலும் சமயம் வாய்க்கும்தருண மெதிர் பார்த்திருந்தனன்.

காமேந்திரன்:—மந்திரி! எத்தகையமாந்தரையும் இச்சைவிடாதென்பதற்குத் திருஷ்டாந்தத்தைக் கவனித்தீரன்றோ? ஆகையால், எனக்கும் அந்த ஞானலோசனியின்மீது ஆசையதிகரித்திருக்கின்றன.

ஜெயப்ரதாபன்:—நல்லதிருக்கட்டும் உமது இஷ்டப்படியே நேரிடும் அப்பால் அந்த உபாத்தியாயரின் கதி எவ்விதமாயின ?

நியாயகேசரி:—அப்பால் அந்த அறிவீன உபாத்தியாயர் அந்தப்பெண்ணிருக்கும் [illegible]டிசையிற்சென்று பெண்ணே! யானுன்மீது காதலுற்றேன். தற்சமயமோ நீ தனியாயிருக்கின்றாய். நாளையதினம் உனக்கு ஸ்நானஞ்செய்வித்து வீட்டிற்கழைத்துக்கொள்வார்கள். ஆகையால் இன்றிரவு பதினைந்துநாழிகைக்குமேல் யான் இங்ஙனம் வருகிறேன் எனது காதலைத்தவிர்க்க வரந்தருவாய் கண்மணி பெண்மணியினுஞ் சிறந்த பெண்மணி! நன்னணி! நவமணியே யென்று வருந்திக்கேட்க, அந்த பெண் கோபித்து ஐயா! நீர் வித்யாகுருவாகையால் பொறுத்தேன், இல்லாவிடில் இச்சமயமே உனது சிரசை அறுத்துப்போடும்படியாய்ச்செய்துவிடுவேன். மறுதடவை இத்தகைய துர்வார்த்தை தெரிவிக்காதீரென்று சொல்லிவிட்டாள். அச்சமயம் அந்த அறிவீன வாத்தியார் மனம்பதறி, ஆ! ஹா! இந்தப்பெண்ணை நாமே கல்யாணஞ்செய்துக்கொள்ள வேண்டுமென்

று சபதஞ்செய்துக்கொண்டுபோயினன். அப்பால் மறுதினம் இராஜகுமாரத்திக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து சுபசடங்கனைத்தும் செய்து வீட்டுக்கழைத்துக்கொண்டனர்.

காமேந்திரன்:— ஆ! ஹா!! காதனுற்ற வாத்தியார் ஏமாறலாயிற்றே இனி எவ்விதமாய் அந்தப்பெண்ணை அவன் மணம் புரிவது? கண்ணைக்காட்டி அழைத்தால் வாராதவள் கையைப்பிடித்து இழுத்தாலும் வருவாளோவென்னுந் தன்மையாய் அரை வீட்டில் தனித்திருக்கும்போது சம்மதப்படாதவள் இனி அரண்மனையில் இராஜஸ்திரீகளுடன் தாதியர் சூழ்ந்திருக்கையில் வாத்தியார் இஷ்டத்திற்கு இசைவளா? ஒருக்காலும், முடியாது தான். ஆனல் யான் இச்சித்திருக்கும் ஞானலோசனி மாத்திரம் எப்போதும் தனியாகவே இருக்கின்றாள். சமயம் வாய்த்தால் வசப்படுத்திக்கொண்டு மணம் புரிந்து சுகித்திருப்பது தான் உண்மையாகும்.

ஜெயப்ரதாபன்:—(கலகலவெனசிரித்து) காமேந்திரனுக்கு ஞானலோசனியின் மீதே ஞாபகமாயிருக்கிறது, அதனுற்றான் எத்ததியும் அவருடைய சித்தம் பலவாறாய் பித்தம்பிடித்தது போலிருக்கிறது. அவையனைத்தும் பிறகு சரிப்படுத்திக்கொள்வோம். அப்பால் வாத்தியார் இராஜ புத்திரியை மணம் புரிந்து சுகித்திருப்பே னென்று சபதம் புரிந்த சங்கதி எவ்விதமாயிற்று விவரித்துரைப்பீர்.

நியாயகேசரி :—இராஜபுத்திரியை வீட்டிற்கழைத்துக்கொண்டு சுப சடங்கனைத்தும் நடத்தியபோது அரசன் இராஜகுமாரத்தியின் ஆசிரியனுகிய உபாத்தியாயரை யழைத்து, சுவாமி எனது குமாரத்தியின் ருது ஜாதகம் கணித்துரைப்பீரென்றனன், அதற்கு அந்த வஞ்சகன் வேறுவிதமாய் மறைத்து, அரசே! உமது புத்திரி ருதுவான லக்கினம் தீதாகையால் அவளால் உமது இராஜ்யத்திற்கு அழிவுகாலம் நேரிடும் ஆகையால், அவளை இச்சமயமே ஓர் பேழையில் வைத்து நகர்புரத்திலிருக்கும் காஞற்றில் தள்ளிவிடவேண்டியதென்று சொன்னன், அரசன் மஹா விசனமடைந்தவனய் அந்த வஞ்சகன் சொற்படியே பேழையிலிட்டு தனது நகர்புரத்திலிருக்கும் காஞற்றில் தள்ளி

விட்டனன். அச்சமயம், அந்நதியின் ஜலப்பெருக்கானது வெள்ளத்தினால் மிதந்துக்கொண்டு அந்திப்பொழுதில் ஆற்றின் கரையில் கொண்டுவந்து ஒதுக்கிவிட்டது, அச்சமயம், அந்தப் பெண்ணை மணம் புரிவதற்கு நிச்சயித்திருந்த இராஜகுமாரன் அன்றையதினத்தில் தான் வேட்டையாடி அகப்பட்ட புலியை போனிலடைத்துக்கொண்டு வருகையில், அப்ப லெதிருற்ற ஆற்றங்கரையில் ஓர் பேழை மிதந்துவரக்கண்டு ஈதென்ன ஆச்சரியமென்று அதனைத் திறந்துபார்க்க அதிலிருக்கும் பெண் தன்னை மணம்புரிவதற் கிசைந்தவளாகையால், மனந்திகைத்து பெண்ணே! ஈதென்ன கண்காக்ஷி! யாதுகாரணமாய் உன்னை இவ்விதமாய்ப் பெட்டியிலிட்டு ஆற்றிற் றள்ளினரென்று, வினவுதலும், அந்தப் பெண் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்றனள். அவ்விசேஷத்தைக் கவனித்த இராஜகுமாரன் கலகலவென சிரித்து, தான் வேட்டையாடி போனில் கொண்டுவந்திருக்கும் புலியை வெகு பக்குவமாய் அந்தப் பெட்டியில் விடுத்து நீடிரென கதவை மூடிவிட்டு அந்தப்பெட்டியை கழுத்தளவு ஜலம்வரையிலும் தள்ளிக்கொண்டுபோய் விடுத்துக் கரைமீது வந்து அந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டு தனது வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தனன்.

வீரப்ரதாபன்:—ஐயையா! ஈதென்ன ஆச்சரியம்! காத்திருந்தவன் பெண்டை நேற்றுவந்தவன் கொண்டுபோனதுபோலாயிற்றே அப்பாலெவ்விதமாயின?

நியாயகேசரி:—இராஜகுமாரன் தான் கொண்டுவந்த புலியை பெட்டியிலடைத்துவிட்டு, அதிலிருந்த பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டபிறகு இந்த மர்ம ரகஸ்யமுணராத வாத்தியார் தனது பள்ளிக்கூடத்திலிருக்கும் பிள்ளைகளில் பலசாலியாயிருக்கும் பதினைந்து பிள்ளைகளை அன்றைய இரவில் நகர்புறத்திலிருக்கும் காவேற்றின் கரைமீது அழைத்துக்கொண்டு வந்தனன், அச்சமயம் அந்த பெட்டி மிகவும் பளுவானபடியால் கரையில் வந்து ஒதுங்கியிருந்தது, அதனைக் கண்ணுற்ற வாத்தியார் சந்தோஷித்து, அப்பா அந்தப்பெட்டியை எல்லோருங் கூடி தலைமீது தூக்கிக்கொண்டு வருவீரென்றனன். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து தூக்கிக்கொண்டு வருகையில், உபாத்தியாயர் மஹா சந்தோஷமடைந்து, அவர்

களுக்கு அன்றையதினம் தேவையான பலகாரபக்ஷண மளித்து, அப்பா! மூன்று நாள்வரையிலும் உமக்கு விடுமுறை தந்தேன், உமது கஷ்டத்தை நிவர்த்திசெய்துக்கொள்வீரென்று உபசாரவார்த்தை சொல்லி பெட்டியை தனது படுக்கைவீட்டில் வைத்துவிட்டுப் போவீரென்றனன் அவர்களும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்துக்கொண்டு போயினர். அப்பால், வாத்தியார் மஹா சந்தோஷமடைந்தவனாய் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுபோஜனம் புசித்துவிட்டு இரவலாய் வாங்கிக்கொண்டுவந்த ஆடை ஆபரணங்களை அணிந்துக்கொண்டு கந்த கதம்ப கஸ்தூரி வாசனாதிகளை தேகத்தில் பூசிக்கொண்டு படுக்கையறைக் கலங்காரமாய் வால்சேட், குளோப்பு, லஸ்தர் முதலாகிய விதவிதமாக தீபங்களேற்றி மல்லிகை, முல்லை, இருவாக்ஷி செண்பக முதலாகிய வாசனை மலர்களாற் பஞ்சணையைச் சிங்காரித்து கதவைச் சாற்றித் தாளிட்டுக்கொண்டு, என தன்பிற்கிசைந்த சரசவதனி நேற்றையதினம் நீ என்னை இழிவாய்ப்பேசினையே! இன்றையதினம் யானுனக்கு நாயகனும் நீ எனக்கு நாயகியுமாவதற்கு நேர்ந்துவிட்டது பார்த்தனையாவென்று கதவைத்திறந்தனன்.

வீரப்ரதாபன்:—ஆ! ஹா!! அவனுடைய மனதில் எவ்வளவு ஆசையாயிருக்கும். அடடா! அவனொன்று நினைக்கத் தானொன்றாய் முடிந்ததே ஒன்றைநினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும் அன்றியதுவரினும் வந்தெய்துமென்னுமாப்போ லாயிற்றே அப்பா லவன்கதி எவ்விதமாயிற்று.

நியாயகேசரி:—அந்த அறிவீனனாகிய உபாத்தியாயர் பெண்ணேயென்று பெட்டியைத் திறந்தவுடனே பசிவேதனையால் பரதவித்திருந்த புலியானது திடீரென உபாத்தியாயரின் கழுத்தைக் கடித்தவுடனே அவன் வாய்குளறி புலிபுலியென்று கத்தினன் அவ்வீட்டிலிருப்போரனைவரும் திடீரென ஓடிவந்து கதவைத் திறக்க முடியாமல்; உட்புறம் தாளிட்டுக்கொண்டு இத்தகையதாய்க்கூச்சலிடும் காரணமென்னவென்று வீட்டின் மேற்கூரையைப்பிரித்துப்பார்க்கையில், புலியானது உபாத்தியாயரைக்கடித்துக் கொன்று புசித்துக்கொண்டிருந்தது அவர்களனைவரும் மனமிரண்டு அந்நகரத்தரசனுக்குத் தெரிவித்தனர், அரசனுடைய உத்திரவின்படியே சேனாவீரர் ஓடிவந்து பார்க்கையில்

புலியானது உபாத்தியாயர் எலும்பை நெறநெறவெனக் கடித்துத் தின்றுக்கொண்டிருந்தது, அச்சமயம் அவர்கள் அஸ்திரத்தை விடுத்துப் புலியைக் கொன்றுவிட்டு உட்புரம் குதித்து கதவின்தாளைத் திறந்து நிகழ்ந்ததென்னவென்று விசாரிக்கையில் பெட்டியைக் கொண்டுவந்த பிள்ளைகள் உண்மையனைத்தும் ஒழுங்காய்ப் புகன்றனர். இவ்விபரீதக்கதைக் கேள்வியுற்ற அரசன் முதலானோர் விடாநகைப்பாய்ச் சிரித்துக்கொண்டு பரிதாப மடைந்திருந்தனர். ஆகையால் யாதேனும் தன்னல் முடியுமானல் பிரவேசிக்கவேணும் கிட்டாதாயின் வெட்டென மறந்துவிடவேண்டும் ஆகையால் முதலையிருக்கும் மடுவிலிறங்கினல் ஆள்பாடு ஆபத்தாய்விடுமே அப்பால் ஆலமரப்பொந்திலிருக்கும் எலுமிச்சங்கனியை என்னமாய்க் கொண்டுவருவது? இவையனைத்தும் யோசித்தால் ஆச்சரியமன்றோ ?

என, நியாயகேசரி பலவிதமாய்த் தடுத்தும் காமேந்திரன் கிஞ்சிற்றும் சம்மதியாமல் யானே அந்த மடுவிலிறங்கி ஆலவிருக்ஷத்தின் புதறிலிருக்கும் எலுமிச்சங்கனியைக் கொண்டுவருகிறேன், ஆனல் முதலை என்னை விழுங்கிவிட்டாலும் அலகையாய்ச் சென்று அந்த ஞானலோசனியைப் பிடித்துக்கொள்ளுகிறேன் பஞ்சவர்ணக்கிளியே வழிகாட்டுவாயென்று வேண்டிக்கொண்டனன், அச்சமயம் மற்ற மூவரும் இனி யாம் பிருதாவாய் காமேந்திரனை நம்பலாகாது இவனுடைய கஷ்டகாலம் நம்மையும் பிடித்து தொந்தரை செய்கிறதேயென்று வருத்தப்பட்டனரேயன்றி, மற்றொன்றும் பதில்சொல்வதற்கிசையாமல் மவுனமாயிருந்துவிட்டனர். ஆனல் பஞ்சவர்ணக்கிளிமாத்திரம் அவர்களுக்கு தைரியம் சொல்லி நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் மனிதர்களானல் மடுவில் நீந்தவேண்டும், யானே பக்ஷியாயிருப்பதினல் யான் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து சென்று அந்த ஆலவிருக்ஷத்தில் உட்கார்ந்து அவனுடைய உயிர்நிலையாகிய எலுமிச்சம்பழத்தை காலால் கவ்விக்கொண்டு வருகிறேனென்று தைரியம் சொல்லி அவர்களனைவரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய் குகையருகில் நிறுத்தியது. அச்சமயம் காமேந்திரன் ஞானலோசனியைப்பார்த்து பெருமூச்சுவிடுத்து, கிள்ளை நாயகமே! சீக்கிரமாய்ப் பறந்துசென்று எலுமிச்சங்கனியை எடுத்துக்கொண்டு வருவாயென்றவுடனே கிளிப்பிள்ளை ஜிவ்வென்றெகிறிப் பறந்துசென்று மடுவின் மத்தியிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின்மீது உட்கார்

ந்து சோதித்துபார்க்கையில் மனிதர்கள் காண்பதற்கும் முடியாத ஆலமரத்தின் கிளை வெடுப்பில் எலுமிச்சம்பழம் மஞ்சள் நிறமாய் இருப்பதைக் கவனித்து மூச்சையடக்கி இறக்கையை யொடுக்கி திடீரென வெடுப்பிலிறங்கி தன்னிருகாலாலும் அசுரன் உயிர்நிலையாகிய எலுமிச்சங்கனியை கவ்விக்கொண்டு விருக்ஷத்தின்மீதில் வந்துட்கார்ந்து சற்றுநேரம் இளைப்பாறி மறுபடியும் பழத்தைக் காலால் கவ்விக்கொண்டு நதியின்மீது பறந்து சென்று கரையில்வந்து எலுமிச்சம்பழத்தைக் காலால் கவ்விக்கொண்டுபோய் காமேந்திரன் கையில் கொடுத்தது. அதனை வாங்கிப்பார்த்த காமேந்திரன் தனது சிநேகிதர்கட்குக் காண்பித்துக்கொண் டிருந்தானேயன்றி அதனை நசுக்க மனமில்லாமல் மதிமயக்கமா யிருந்தனன். அச்சமயம் கிளிப்பிள்ளை அவர்களைப்பார்த்து, ஐயா இன்னும் ஏன் தாமதிக்கின்றீர், அசுரன் வந்துவிட்டால் மோசமாகும், சீக்கிரமாய் நசுக்கிவிடுவீரென்றனன், அச்சமயம் வீரப்ரதாபனெனவன் அந்தப் பழத்தைத் தனது உள்ளங்கையில் வைத்துக் கரகரவென நசுக்கினான் அப்போது ஓர் பேரிடி முழக்கம் தோன்றியது. இவர்களனைவரும் திடுக்கிட்டனர், ஆனால் வீரப்ரதாபன் மாத்திரம் கிஞ்சிற்றும் தைரியம் விடாமல் எலுமிச்சம்பழத்தை நசுக்கையில் இரத்தப்ரவாகமாய் ஓடியது அத்தருணம் மாயராக்ஷதன் தனது குகையை நாடிவந்தவனாகையால் யாரோ உயிர்நிலையை பங்கப்படுத்தினாரென்றெண்ணி, அவர்களை உடனே சபித்திடவேண்டுமென்று குகையருகில் ஓடிவந்தவுடனே எலுமிச்சங்கனியை நசுக்கிப் பிழிந்துவிட்டனன், இராக்ஷதனும் இறந்துவிட்டனன். அப்பால் ஞானலோசனி சந்தோஷமடைந்து அந்நாள்வரையும் பஞ்சவர்ணக் கிளியையும் தனது தாய்தந்தை சேனைசன்யங்களின் உயிர்நிலை நிறைந்திருக்கும் செப்புக்குடத்தருகில் அழைத்துக்கொண்டுவந்து இந்த மேல்மூடியைத் திறப்பீரென்றனள்! அந[illegible]வரும் தமது முழுபலத்துடனும் செப்புக்குடத்தின் மேல்மூடியைத் தூக்கி எறிந்து விட்டார்கள். அச்சமயம் அதிலிருந்த சகல உயிர்களும் கல்லுருவாயிருந்த தமது சரீரத்தில் புகுந்து அவர்களனைவரும் உயிர்பெற்றெழுந்துக்கொண்டார்கள். அச்சமயம், ஞானலோசனி மனமகிழ்ந்து தனது தாய் தந்தையரின் பாதத்தில் வீழ்ந்து பணிந்து தாய்தந்தையர்கள் மனமகிழும் தன்மையாய்ப் புகலலாயினள்.

ஞானலோசனி:—என் தந்தையரே! யான் எனது [illegible]ல்வி[illegible]பாசத்தினால் காதக ராக்ஷதனிடத்தில் அகப்பட்டுக்கொண்டேன் நீங்களேன் என்னைத் தேடிக்கொண்டுவந்தீர்?

ஞானேந்திரன்:—எனது அருந்தவப்புத்திரியாகிய ஞானலோசனி! ஈதென்ன கானகமாயிருக்கின்றதே நீ ஏன் இங்ஙனம் வந்தனை! யாங்களும் இவ்விடம் வந்தகாரணம் யாதொன்றும் தோற்றவில்லையே.

என, நித்திரை புரிந்திருந்தவர் கனவு கண்டவிதமாய் யாதொன்றும் தோற்றாமல் உளறிக்கொண்டிருந்தனர். அருகிலிருந்த சேனைசைன்யங்களும் அவ்விதமே சந்தேகப்படுவதாயினர். மஹாராணியாகிய சுந்தரவதனி தனது அருந்தவப் புத்திரியாகிய ஞானலோசனியை பார்த்தவுடனே காணாமற்போன கன்றைக் கண்ட பசுவைப்போல மகிழ்வடைந்து ஆ! எனது அருந்தவப் புதல்வியே நீ ஆரண்யத்தில் வந்தவிதமென்னவென்று விசாரிப்பதாயினள்.

சுந்தரவதனி:—அம்மா! ஞானலோசனி! நீ அநேக பாங்கியர் சூழ அரண்மனையிலிருந்தனையே நீ யாது காரணமா யித்தகைய பயங்கரமான ஆரண்யத்தில் வருகலாயினை?

ஞானலோசனி:—அம்மணி! யானென்னவென்று சொல்லேன்? இன்னுருக் கின்னவிதமென்று ஈசன் விதித்த விதிப்படியே அமையுமன்றி, நம்மாலிசைந்தவையென் றெண்ணுவதற்காகுமோ? யான் எனது வழக்கம்போல சில தோழிப்பெண்களுடனே நந்தவனத்திற்குப் போயிருந்தேன் அச்சமயம் ஓர் இராக்ஷதன் என்னை எடுத்துக்கொண்டுவந்து இங்ஙனம் விடுத்துத் தனது இஷ்டத்திற் கிசையும்படி சொன்னான். யான் கிஞ்சிற்றும் சம்மதியாமல் எனக்கு ஓர் விரதமுண்டென்றும், அந்த விரதம் முடிவுபெற ஒரு வருஷம் செல்லுமென்றும் இந்த விரதம் முடியும்வரையில் தாங்களென்னைத் தொடக்கூடாதென்றும் சொல்லிவிட்டேன், அவனும் அப்படியே நல்லதென்று சம்மதித்து, விரதத்திற்கு வேண்டிய சாமான்களனைத்தும் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தனன். யானும் பக்தியானந்தமாய் விரதானுஷ்டானம் புரிந்துக்கொண்டிருந்தேன். இவ்விதமே பதினொருமாதமாயிற்று அச்சமயம் யான் மனவருத்தமாயிருந்

தேன். நீங்களனைவரும் என்னைத்தேடிக்கொண்டு இங்கு வந்தீர்கள் உங்களைக்கண்ணுற்ற இராக்ஷதன் உங்களனைவரையும் கல்லுருவாய்ச் சபித்துவிட்டான். அந்நாளில் யான் அதிக மனவருத்தமுற்றிருந்தேன். இந்த பஞ்சவர்ணக்கிளி என்னிடத்தில் வந்து என்னிட சவிஸ்தாரமும் பரிதாப நிலைமையுங்கண்டு மனந்தாளாமல் இந்நால்வரையும் அழைத்துக்கொண்டு வந்து அசுரனுடைய உயிர்நிலையாகிய எலுமிச்சங்கனியை நசுக்கிப் பிழிந்து இராக்ஷதனைக்கொன்று உங்களையும் உயிர்பெற்றுலாவும்படியாய்ச் செய்தன. இவ்வளவு பேருதவிபுரிந்த இந்த பஞ்சவர்ணக்கிளி நமது குலதெய்வமென்றே மதிக்கவேண்டும்.

என, தான் அரண்மனையிலிருந்து நந்தவனத்தில் வந்து அசுரனால் சிறையுற்றிருந்து மீட்சியாகும்வரையிலும் ஆதியோடந்தமாய்த் தெரிவித்தனள். இவ்வார்த்தையை யுணர்ந்த ஞானபுரி மன்னனாகிய ஞானேந்திரன் மிகவும சந்தோஷமடைந்து பஞ்சவர்ணக்கிளியைக் கரத்திலேந்தி முத்தமிட்டு பக்ஷிநாயகமே திரேதாயுகத்தில் ஆஞ்சநேயர் ஸ்ரீராமச்சந்திரனுக்குத் துணையாயிருந்து ஜானகியின் சிறையை மீட்பதற்கு பலவித கஷ்டமடைந்து காப்பாற்றியதுபோல எனது அருந்தவப்புத்திரியாகிய ஞானலோசனிக்குத் துணையாயிருந்து இராக்ஷதனைக்கொன்று எங்களையும் உயிர்பெற்றெழுந்திருக்கச் செய்தனையே இவ்வளவு பேருதவிபுரிந்த உனக்கு யான் எவ்விதமாய் பிரதியுபகாரஞ் செய்வேனென்று பஞ்சவர்ணக்கிளியைக் கண்களிலொற்றிக்கொண்டு மகிழ்ந்திருந்தான். அச்சமயம் அருகிலிருக்கும் காமேந்திரன், நியாயகேசரி, ஜெயப்ரதாபன் வீரப்ரதாபன் முதலான அந்நால்வரையும் பார்த்து ஐயா நீங்கள் யாவரென விசாரிக்குதலும், மந்திரிகுமாரனாகிய நியாயகேசரியானவன் அவர்களனைவரையும் பார்த்துத் தாங்கள் காஸ்மீகர் தேசத்திலிருந்து கானகமார்க்கமாய் வந்து கஷ்டநிஷ்டூரமடைந்த கண்காக்ஷியனைத்தும் ஆதியோடந்தமாய்ப் பகல்வதாயினன்.

நியாயகேசரி:—ஐயா! யாங்களிருப்பது காஸ்மீகர் தேசம் இவர் அந்நகரத்தின் மன்னனாகிய கமலாகரனுடைய குமாரனாகிய காமேந்திரன் யான் அந்நகரத்தின் மந்திரிகுமாரனாகிய ஜெயப்ரதாபன், இவர் பிரதானி குமாரனாகிய வீரப்ரதாபன் யாங்கள் நால்வரும் தேசசஞ்சாரம்செய்துக்கொண்டு வருவோமென்று பிரயாணப்பட்டுக் கானகமார்க்கமாய் வருகையில் அகஸ்மாத்

தாய் யாங்கள் நால்வரும் ஒருவரை யொருவர் பிரிந்து நாற்றி
சையிலும் தேடி அலைந்து திரிந்துக்கொண்டிருக்கையில் இராஜ
குமாரனாகிய காமேந்திரன் மாத்திரம் உமது ஞானபுரியில் வந்
திருந்தனர், அச்சமயம் உமது குமாரத்தியாகிய ஞானலோ
சனியைக் கண்ணுற்று மோகானந்தமடைந்தவனாய் அத்தேசத்
திற்றானே யிருந்தனர். யாங்கள் மூவரும் இவரைத்தேடிக்
கொண்டு ஞானபுரியில் வருகையில், இவர் மோகவெறியால்
மனமயங்கி பித்தனைப்போற் பிதற்றிக்கொண்டிருந்தார். அச்
சமயம் யாங்கள் இவரை யாதென்று விசாரிக்குதலும் நிகழ்ந்த
வை யனைத்தும் விபரமாய்ப் புகன்று எவ்விதமாயினும் அந்த
ஞானலோசனியை யான் மணம்புரிந்துக் கொண்டுதான் யான்
நகருக்கு வருவேனன்றி, தனியாய் வருகேனென்று பிடிவா
தஞ்செய்துக்கொண்டிருந்தனர். ஓர்நாள் இந்த ஞானலோ
சனி அந்திப்பொழுதில் ஆடை ஆபரண சிங்காரலங்கிர்தமாய்
தனது பாங்கியருடனே நந்தவனத்திற்குச் செல்லுந் தருணம்,
காமேந்திரன் பார்த்துவிட்டு முன்னிலும் விசேஷமாய் ஆசை
யதிகரித்துப பின் தொடர்ந்தனர். யாங்கள் இவருக்குப் பல
விதமாய் மதியுரைத்து, தன்னூருக்குயானை அயலூருக்குப்
பூனையென்னும் விதமாய் நமது தேசத்திலிருந்தால் யாவும
உத்தமமாய் நடக்கும், நாமோ அயலூரில் வந்து அடங்கியிரா
மல் அரசபுத்திரியைஇச்சித்திடில் ஆபத்தடைவதுடன் அவமா
னம் நேரிடுமெனபலவிதமாய்மதியுரைத்துக்கொண்டும் இவரை
தடுத்துக்கொண்டும் இவருடனே தொடர்ந்துசென்றோம், அச்சம
யம் ஞானலோசனியும் பாங்கியருடனே நந்தவனத்தில் வந்த
னள். யாங்களும் காமேந்திரனுடனே வருகும்போது இறந்து
கிடக்கும் இந்த மாயராக்ஷதன் ஓடிவந்து ஞானலோசனியைத்
தூக்கிக்கொண்டு ஓடினன். யாங்களனைவரும் மனமிரங்கி அரச
புத்ரா! இந்தப்பெண்ணரின் ஆசையைமறந்துவிடுவாயென்று
பலவிதமாய் தடுத்தும், இவர் கேளாமல் இராக்ஷதனைக்கொன்
று விட்டாகிலும் இந்த ஞானலோசனியைக் கலியாணஞ்செய்
துக்கொண்டுதான் வருவேனென்று கானகவாசியாய் வருகலா
யினர். யாங்களும் சிநேகிதவாஞ்சையால் கூடிப்பிரியேவென்
னும் வாக்கியத்தை அனுசரித்து இவருடன் கூடவே ஆரண்ய
வாசியாய் வந்து அநேகவித ஆபத்தடைந்து கடைசியில் இந்த

பஞ்சவர்ணக்கிளியின் சகாயத்தினால் அசுரனையுங்கொன்று கல்லுருவாயிருந்த உங்களையும் உயிர்பெற்றெழுதிருக்கச்செய்தோம், இவ்வளவு பிரயாசையடைந்த எங்கள் மனமகிழ உமது பெண்ணை எமது இராஜகுமாரனாகிய காமேந்திரனுக்குக் கொடுத்தாலும் சரி! இல்லாவிட்டால், நீங்கள் யார்? யாங்கள் யாரென்றும் வெறுத்துவிட்டாலும் சரியே.

என்று, தாங்கள் காஸ்மீகர் தேசம் விடுத்துக் கானில்வந்து ஞானலோசனியின் சிறைமீட்டவரையினும் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப்புகன்றனன். இவ்விசேஷத்தைக் கேள்வியுற்ற ஞானேந்திரராஜன் பரிதாபமடைந்து சொல்வதாயினன்.

ஞானேந்திரன்:—அப்பா! உமது அரசனாகிய கமலாகரனும் யானும் பிரியாநட்பினராயிருந்தோம். அன்றியும், யாங்களிருவரும் மைத்துனன் முறையாச்சுதே நீங்கள் வேணுமென்று கேட்டால் அப்போதே யாங்கள் சந்தோஷகமாய்ச் சகல தேசத்தரசர்கள் முன்னிலையில் சந்தோஷமாய்க் கலியாமுஞ்செய்து வைத்திருப்போமே அப்போது நீங்களும் இத்தகைய துன்பமனுபவித்திருக்கமாட்டீர்கள் யாங்களும் சஞ்சலமடையாமல் சந்தோஷமாயிருப்போமே.

நியாயகேசரி:—(புன்னகைபுரிந்து) அரசே! ஒருவர் மனதிலிருப்பது மற்றவர்கட்குத் தெரியுமா? ஆகையால், உமது நட்பினரும், மைத்துனன் முறையுமான கமலாகரனுடைய குமாரனும் உமக்கு மருமகனாயினன். இனி நீங்கள் காமேந்திரனை உமது நகருக்கு அழைத்துக்கொண்டுபோய் ஞானலோசனியைக் கலியாணஞ்செய்து வைத்து சுகமாய் இருப்பீர்கள். யாங்கள் எமது தேசத்திற்குப் போகிறோம்,

என, இவர்கள் மனதைச் சோதிக்கும்படியாய்ப் புகன்றனன், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஞானேந்திரராஜன் மனந்துடித்து, அப்பா! நீங்கள் மூவரும் பஞ்சவர்ணக்கிளியும் எமது குலதெய்வ

மென்றே மதித்திருக்க நீங்கள் இவ்விதமாய்ப் புகழ்வது நீதியாகுமோவென அவர்களுக்கு நன்மொழிபுகன்று, சந்தோஷமாயிருக்கையில் சேனாவீரர்கள் கானிலிருக்கும் இனிமையான கனிவர்க்கங்களைப்பறித்துக்கொண்டு வருகலாயினர். அச்சமயம் ஞானலோசனி தனக்காக அசுரன் கொண்டுவந்திருக்கும் அரிசிமூட்டை களையும் மசாலை வகைராக்களையும் சேனைகளிடமொப்பித்து சீக்கிரம் சமையல் செய்வீர்களென்று ஆக்ஞாபித்தவுடனே சிலர் வேட்டையாடி முயல், மான் முதலான மிருகவேட்டையாடிக்கொண்டு வந்தனர், மற்றவரனைவரும் புலவ், பிரிஞ்சி, கிச்சிடி முதலாகியவைய தயார் செய்தனர். அப்பால் யாவருமெழுந்து அங்ஙனமிருக்கும் மடுவிலிறங்கி ஸ்நானஞ்செய்வோமென்று இறங்கப்போகுந் தருணம் நியாயகேசரி தடுத்து, ஐயா! இந்த மடுவில் விசேஷமாய் மிகவும் பெரிய க்ரூர சரீரமடைந்த முதலைகள் இருக்கின்றன. இறங்கினவர்களனைவரும் முதலைவாய்க்கிரையாவரென தடுத்தனன், அவர்களும் அவ்விதமே சம்மதித்து அருகிலிருக்கும் காணாற்றில் ஸ்நானபான நேமநிஷ்டைமுடித்துக்கொண்டு வந்தனர், ஞானேந்திரராஜன் உத்திரவுபடியே யாவரும் வரிசைக்கிரமமாய் பந்திபந்தியாய் உட்கார்ந்தனர். அச்சமயம், ஞானேந்திரராஜன், காமேந்திரன், நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபன் முதலானோர் தனது இஷ்டர்களை பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டனன், மற்றவர்களனைவரும் அவரவர்க்கிஷ்டமானபடி உட்கார்ந்திருந்தனர் அச்சமயம் அவர்களில் சிலரெழுந்து யாவருக்கும், மதுமாம்ஸ பக்ஷணாதிகளுடன் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் படைத்தனர். யாவரும் அமுதருந்தியான பிறகு, இறந்து கிடக்கும் இராக்ஷதனை தகனம் செய்து விட்டு யாவரும் பிரயாணமாய்த் தமது நகரமாகிய ஞானபுரிக்கு வருகலாயினர்.

Scene. 2.

இடம்—ஞானபுரியின் அரண்மனை.

கதாநாயகர்.

ஞானேந்திரன், கமலாகரன், காமேந்திரன்,
நியாயகேசரி, வீரப்ரதாபன். ஜெயப்ரதாபன்
காந்திமதி ஞானலோசனி.

அப்பால், ஞானேந்திரன் முதலானோ ரனைவரும் கானகத்தை விடுத்து, ஞானபுரியில் வந்தனர், அச்சமயம் மந்திரியாகிய கருணாகரன் எதிர்கொண்டழைத்து வந்து அரண்மனையிலழைத்துச்சென்றனன், அச்சமயம் ஞானேந்திரன் முதலானோர் அரண்மனையிற்சென்று, சந்தோஷமாயிருக்கையில் ஞானேந்திரன், பழையபடியே சிம்மாசனத்தமர்ந்து அன்றையதினம் அருகிலிருந்த சேர்வைக்காரரிடம் காஸ்மீகர்தேசத்தரசனுக்குத் திருகிருபமெழுதி யனுப்பி வரவழைத்தனன், கமலாகரன், அங்கிருக்கும் தனதுமைந்தனாகிய காமேந்திரனைக்கண்ணுற்று மனஉல்லாசமெய்தியவனாய் சந்தோஷமெய்தி அப்பா! இத்தனைநாளாய் எங்குசென்றனையென்று வினவுதலும், அவன் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகன்றனன், அப்பால் ஞானேந்திரன் சகல தேசத்திராஜர்களையும் வரவழைத்து ஓர் சுபதினத்தில் நியாயகேசரி, வீரப்ரதாபன், ஜெயப்ரதாபனுக்கும் அழகமைந்த பெண்களைத்தேடி ஞானலோசனிக்கும் காமேந்திரனுக்கும் கலியாணஞ்செய்துவைப்பதுடன் அவர்களுக்கும்கலியாணஞ்செய்து வைத்துத் தனது இராஜரீகத்தையும், காமேந்திரனுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்து நியாயகேசரியை, மந்திரியாகவும் ஜெயப்ரதாபனை சேனாதிபதியாகவும், வீரப்ரதாபனை பிரதானியாகவும் நியமித்து இராஜரீகம் செய்யும்படியாய்ச் செய்து மனமகிழ்ந்திருந்தனன்,

அப்பால், காமேந்திரன் ஞானபுரியைப் பரிபாலனஞ்செய்துக்கொண்டு தனது நாயகியாகிய ஞானலோசனியுடன் சுகானந்தமாய் மருவிசுகித்து மதனரதிபோல மனமகிழ்ந்து வாழ்ந்துக்கொண்டிருந்தனன். சுபம்! சுபம்!! சுபம்!!

காமேந்திரன், ஞானலோசனி சரித்திரம்

சம்பூர்ணம்.

1761
22 11 87